
# பொருளியல் நோக்கு

ஜன. / பெப்.
1989

## ஒருங்கிணைக்கப்பட்ட [illegible] கிராமிய அபிவிருத்தி செய்திட்டம்




இரட்டை இதழ்


மக்கள் வங்கி வெளியீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[illegible]



[illegible]



[illegible]




# ஓ. கி. அ. திட்ட நடவடிக்கைகள்




செங்கல் தயாரிப்பு




[illegible]



[illegible]



[illegible]



[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பளிப்பு:
சென். ஜேக்ஸ் உழைப்பாளர் உயர்வாக்கம்
யாழ்ப்பாணம்.

# பொருளியல் நோக்கு

மலர் 14 இதழ் 10/11 ஜனவரி/பெப்ரவரி 1989

மக்கள் வங்கியின்
ஆராய்ச்சிப்பகுதி வெளியீடு:
தலைமைக்காரியாலயம்,
11 வது மாடி,
கொழும்பு 2,
இலங்கை

## சிறப்புக்கட்டுரைகள்

லொயிட் பர்ணந்து 38 ஜனசக்தி திட்டத்தின் பேரண்டப் பொருளாதார அம்சங்கள்

சுக்காமோய் சக்கரவர்த்தி 44 தென் ஆசியாவின் அபிவிருத்தி அனுபவம்

ஏ. பி. ரி. விஜயரத்ன 53 நம்பிக்கைக் கூறுகளின் குறிக்கோள்களும் தொழிற்பாடுகளும்

எச். எல். ஹேமச்சந்திரா 55 அரிசி குற்றல் - தனியார் ஆலைச் சொந்தக்காரர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள்

## விசேஷ அறிக்கை

3 ஒருங்கிணைந்த கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்

பீ. ஹேவாவிதாரண 6 கிராமிய தொழில் வாய்ப்புக்களின் உருவாக்கத்தில் ஒ. கி. அ. நிகழ்ச்சித் திட்டத்தின் பங்கு குறித்த ஓர் ஆய்வு

விவசாய ஆராய்ச்சி பயிற்சி நிலையம் 12 குருணாகல் மாவட்ட ஒருங்கிணைந்த கிராமிய அபிவிருத்தி திட்டம் – ஒரு மதிப்பீடு

பீ. ஜே. பேர்க்மன் - ஜோன் மூர் 16 சுவீடிஷ் உதவியுடன் மாத்தறை மாவட்டத்தில் கிராமிய அபிவிருத்தி

எஸ். பி. எப். சேனரத்ன 23 ஒருங்கிணைந்த கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை மதிப்பீடு செய்வதிலுள்ள பிரச்சினைகள்

கலாரஞ்சி மஹேஸ்வரன் 31 காணிப்பாவனைத் திட்டமிடலும் ஒ. கி. அ. திட்டமும்

எல். கே. பி. குணவர்தன 35 காணிப்பாவனைத் திட்டமிடலுக்கான ஒருங்கிணைந்த அணுகுமுறை

## நிரல்

நிதி 62 இலங்கையின் பங்குச் சந்தையின் செயற்பாடு

பூபாலசிங்கம் புத்தகசாலை
போன் கடை: 23631 வீடு: 24076
4-A, ஆஸ்பத்திரி ரோட், யாழ்ப்பாணம்.

## அடுத்த இதழில்

- ★ தயார் செய்யப்பட்ட ஆடைகள் கைத்தொழில் – அண்மைய வளர்ச்சிப் போக்குகளும் எதிர்கால வாய்ப்புக்களும்
- ★ இலங்கையில் பங்குச்சந்தை
- ★ திறந்த பொருளாதாரமும் ஏற்றுமதி வளர்ச்சியும் – இலங்கை, தென்கொரியா அனுபவங்கள் குறித்த ஒப்பீட்டாய்வு

அட்டை வரைபடம்

பொருளியல் நோக்கு கருத்துக்களையும், அறிக்கைகளையும், புள்ளிவிவரத்தரவுகளையும், உரையாடல்களையும் பல்வேறு கோணங்களிலிருந்து அளிப்பதன் மூலம் பொருளாதாரத்திலும் பொருளாதார அபிவிருத்தியிலும் ஆர்வத்தை உண்டாக்கி அறிவினை வளர்ப்பதைக் குறிக்கோளாகக் கொண்டது.

பொருளியல் நோக்கு மக்கள் வங்கியின் ஒரு சமூகப் பணித்திட்டமாகும். எனினும் அதன் பொருளடக்கம் பல்வேறு ஆசிரியர்களால் எழுதப்பட்ட கட்டுரைகளைக் கொண்டதாயிருக்கும். அவை வங்கியின் கொள்கைகளையோ உத்தியோக பூர்வமான கருத்துக்களையோ பிரதிபலிப்பவையல்ல. எழுத்தாளரின் பெயருடன் பிரசுரிக்கப்படும் சிறப்புக்கட்டுரைகள் அவ்வாசிரியர்களின் சொந்தக் கருத்துக்களாகும். அவை அவர்கள் சார்ந்துள்ள நிறுவனங்களைப் பிரதிபலிப்பனவுமாகா. இத்தகைய கட்டுரைகளும், குறிப்புக்களும் வரவேற்கப்படுகின்றன.

பொருளியல் நோக்கு மாதந் தோறும் வெளியிடப்படும். அதனை சந்தா செலுத்துவதன் மூலமோ, விற்பனை நிலையங்களிலிருந்தோ பெற்றுக்கொள்ளலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிகழ்ச்சிக் குறிப்பேடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையில் ஒ. கி. அ. திட்டங்கள்




# ஒருங்கிணைந்த கிராமிய அபிவிருத்தித் திட்டங்கள்

1988இல் பத்தாண்டுகளைக் கடந்து விட்ட இலங்கையின் மாவட்ட ஒருங்கிணைந்த கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் (மாஓகி) தற்போது இலங்கையிலுள்ள 25 மாவட்டங்களுள் பதினேழில் தொழிற்படுத்தப்பட்டு வருகின்றது. தற்போதைய வறுமை ஒழிப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் நோக்கத்திலிருந்து இதைப் பற்றி ஆழமாக நோக்கப்பட்டு வருகின்றது.

ஒப்பீட்டளவில், இலங்கையைப் பொறுத்தவரையில் மாஓகி நிகழ்ச்சித் திட்டம் ஒரு புதிய எண்ணக்கருவாகும். 1978இல் உலக வங்கியால் தொடக்கி வைக்கப்பட்ட இத் திட்டம் 1979இல் முதன் முதலாக குருநாகலையில் செயற்படுத்தப்பட்டது. இதைத் தொடர்ந்து அதே ஆண்டில் சுவீடன், நோர்வே ஆகிய நாடுகளின் நிதியுதவியுடன் மாத்தறை, அம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்களில் மேலும் இரு ஒகிஅ திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டன. 1980இல் ஒல்லாந்து நாட்டின் நிதியளிப்புடன் நுவரெலியாவில் மற்றுமொரு கருத்திட்டம் தொடக்கப்பட்டது. 1981இல் உலக வங்கியின் நிதியுதவியுடன் மாத்தளை, புத்தளம் ஆகிய மாவட்டங்களிலும், 1982இல் பதுளையில் விவசாய அபிவிருத்திக்கான அனைத்துலக நிதியத்தின் உதவியுடனும் இத்தகைய கருத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டன. இவற்றைத் தொடர்ந்து 1984இல் வவுனியா, மன்னார், இரத்தினபுரி, மொனராகலை ஆகிய மாவட்டங்களில் மாஓகி நிகழ்ச்சித் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டன. இவற்றுள் முன்னைய இரண்டுக்கும் உலக வங்கியின் நிதியுதவி கிடைத்தது. இரத்தினபுரிக்கு நெதர்லாந்திலும், மொனராகலைக்கு 'நோராட்' நிறுவனத்திடமும் நிதியுதவிகள் கிடைத்தன. 1985இல் முல்லைத்தீவுக்கு ஒல்லாந்தின் நிதியளிப்பும், 1986இல் கேகாலைக்கு விவசாய அபிவிருத்திக்கான அனைத்துலக நிதியத்தின் நிதியளிப்பும் கிடைத்தன. 1987இல் களுத்துறை, கண்டி ஆகிய மாவட்டங்களில் இத்தகைய நிகழ்ச்சித் திட்டங்கள் தொடக்கப்பட்டன. இவற்றில் முன்னையதற்கு பின்லாந்து நிதியளிப்பும் பின்னையதற்கு மேற்கு ஜேர்மனியின் நிதியளிப்பும் கிடைத்தன. 1988-ல் அம்பாறை மாவட்டத்துக்கான ஒகிஅதி ஆரம்ப வேலைகள் பூர்த்தியடைந்தன. ஜப்பான் அரசாங்கம் இதற்கு நிதியளிப்புச் செய்யுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

இந் நிகழ்ச்சித் திட்டங்களின் கீழ் கொண்டுவரப்பட்ட வட மாவட்டங்கள் மூன்று இனக்கலவரங்கள் காரணமாகக் கடந்த நான்காண்டுகளாக இவற்றின் நன்மைகளைப் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளன. உலக வங்கியின் நிதியளிப்பைப் பெற்ற வவுனியா, மன்னார் ஆகியனவும் ஒல்லாந்து அரசாங்கத்தின் நிதியளிப்பைப் பெற்ற முல்லைத்தீவும் இந்த மாவட்டங்களாகும்.

இம் மூன்று ஒகிஅதி திட்டங்களுக்குமான மதிப்பிடப்பட்ட மொத்தச் செலவு ரூ. 100 கோடியாகும். இதில் 1987-ன் இறுதியில் 12.4 கோடி ரூபா மட்டுமே செலவிடப்பட்டிருந்தது. 1988-ல் இம் மாவட்டங்கள் ஒவ்வொன்றிலும் மேலதிகமாக 4 இலட்சம் ரூபா செலவிடப்பட்டது. இம் மூன்று ஒகிஅதி திட்டங்களுக்கும் புத்துயிரளிக்குமாறு அரசாங்கம் கொடையாளிகளைக் கோரியுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனுல் கொள்கைத் திட்டமிடல், அமுலாக்கல் அமைச்சு இக்கருத் திட்டங்களை உன்னிப்பாக அவதானித்து வருகின்றது. மொனராகலை, மாத்தறை, பதுளை ஆகிய மாவட்டங்களில் கொந்தளிப்பு நிலைகள் காரணமாக ஒ.கி.அ. நிகழ்ச்சித் திட்டங்கள் பின்னடைவுகளை எதிர்நோக்குகின்றன.

அம்பாந்தோட்டை ஒ.கி.அ. திட்டத்துக்கு மதிப்பிடப்பட்ட செலவுத் தொகையான 70 கோடி ரூபா ஒதுக்கப்பட்டது. ஒ.கி.அ. திட்டங்களுக்கென ஒதுக்கப்பட்ட தொகையில் இதுவே மிக அதிகமானதாகும். இதனைத் தொடர்ந்து குருநாகலை மாவட்டம் 64.5 கோடி ரூபாவைப் பெற்றது. பதுளைக்கு 61 கோடி ரூபாவும் புத்தளத்துக்கு 58.4 கோடி ரூபாவும் நுவரெலியாவுக்கு 52 கோடி ரூபாவும் ஒதுக்கப்பட்டது. குறைவான தொகைகளைக் கண்டியும், முல்லைத்தீவும் பெற்றுக்கொண்டன. அவை முறையே 3.4 கோடி, 9.2 கோடி ரூபா மதிப்பிடப்பட்ட செலவினமாகப் பெற்றன.

1988-ன் முடிவில் பல பக்க முகவராண்மை நிலையங்கள் அல்லது அரசாங்கங்களால் 650 கோடி ரூபா செலவிடப்பட்டிருந்தது. மதிப்பிடப்பட்ட மொத்தச் செலவில் 80 சதவீதத்துக்கு மேற்பட்டவை வெளிநாட்டு நிதியளிப்பினூடாக ஈடுசெய்யப்படுமென எதிர்பார்க்கப்பட்டது. 1987-ல் ஒ.கி.அ. நிகழ்ச்சித் திட்டங்களில் செய்யப்பட்ட முதலீடுகள் 44.6 கோடி ரூபாவாக காணப்பட்டன. 1988-ல் இது 46.1 கோடி ரூபாவாக அமைந்திருந்தது. 1988-ன் முடிவில் கூட்டு மொத்தச் செலவு ரூ.500 கோடியை விட அதிகமாகக் காணப்பட்டது. இன்று வரையும் கொடையாளிகள் இத்தகைய திட்டங்களுக்கு வழங்குவதாக வாக்களித்த மொத்தத் தொகை ரூபா 500 கோடியை விட அதிகமானதாகும்.

கைத்தொழிலுக்கும் விவசாயத்துக்குமான குறிப்பான நிதிகள் அரச வங்கிகளூடாக வழிப்படுத்தப்பட்டன. கைத்தொழில் திட்டங்களை உள்ளடக்கிய விவசாய அபிவிருத்திக்கான கடன்களாகிய கால்நடை வளர்ப்பு, தெங்கு மற்றும் தெங்கிலைச் செய்கைக்கான கூரம் பசளைத் திட்டங்கள், பண்ணைப் பொறிமயத் திட்டம் என்பவற்றை இவற்றுக்கு உதாரணமாகக் கூறலாம். இவற்றுள் 35 கோடியே 88 இலட்சம் ரூபா பெறுமானமுள்ள கொண்ட 81,800 கடன்களை மக்கள் வங்கி வழங்கியிருந்தது. இவை குருநாகலை, புத்தளம், மாத்தளை, பதுளை, மன்னார், வவுனியா மாவட்டங்களின் ஒ.கி.அ. நிகழ்ச்சித் திட்டங்களின் கீழ் வழங்கப்பட்டவையாகும்.

குருநாகலை மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட முதலாவது ஒ.கி.அ. நிகழ்ச்சித் திட்டம் 1986-ல் முடிவுற்றது. ஒ.கி.அ. நிகழ்ச்சித் திட்ட நலன்களை மேலும் நிரந்தரமாக்குவதற்காக 1987-ல் புதியதொரு திட்டம் வகுக்கப்பட்டது. இத் திட்டத்துக்காக வாக்களிக்கப்பட்டிருந்த மொத்தத் தொகையான 44.5 கோடியும் இத் திட்டத்திற்கு செலவிடப்பட்டிருந்தது. குறிப்பாகத் தெங்கு, நெல் உற்பத்தித் துறைகளில் விவசாய விளைதிறனை அதிகரித்தல், நீர்ப்பாசன விஸ்தரிப்புச் சேவைகளையும், உள்ளீடுகளின் வளங்களையும் முன்னேற்றுதல், கடன்கள் கிடைப்பதை உறுதி செய்தல் ஆகியவற்றுக்கு அழுத்தம் கொடுக்கப்பட்டது. சமூக சேவை நடவடிக்கைகளும், உள்ளமைப்பு வசதிகளும் திட்டங்களில் கூறுகளாக அமைந்தன. விவசாயத்தை விட கால்நடை அபிவிருத்தி, நிலக்கீழ் நீரைப் பயன்படுத்தல், கிராமிய நீர் விநியோகம், கிராமிய மின்மயமாக்கம், சுகாதாரம், கல்வி என்பவற்றுக்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. மறுபுறத்தில், மாத்தளை மாவட்டத்தில் சிறு ஏற்றுமதிப் பயிர்கள், பட்டுப்பூச்சி வளர்ப்பு, காடு வளர்ப்பு, நீர்ப்பாசனமும் நீர் முகாமைத்துவமும் ஆகியவற்றுக்கும் ஏனைய மாவட்டங்களில் பெருந்தோட்ட வீடமைப்பு, தெங்கில் சிறு உடைமைகள், மாதர் சமூக நடவடிக்கைகள், தொழிற் பயிற்சி என்பனவும் ஒ.கி.அ. நிகழ்ச்சித் திட்டத்தில் உள்ளடக்

அட்டவணை 1

ஒ. கி. அ. திட்டம் மீதான மாவட்ட வாரியான செலவு

ரூ. பத்து இலட்சம்

| | அறிமுகம் செய்யப்பட்ட வருடம் | மாவட்டம் | இதுவரையில் செலவு ஒன்று சேர்ந்தது | | | செலவு | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 1986 முடிவில் | 1987 முடிவில் | 1988 முடிவில் | 1986-ல் | 1987-ல் | 1988-ல் * |
| 1 | 1979 | குருநாகல் | 443.0 | 648.0 | 648.0 | 48.8 | 3.0 | - |
| 2 | 1979 | மாத்தளை | 139.0 | 153.0 | 174.0 | 25.0 | 34.0 | 22.0 |
| 3 | 1979 | அம்பாந்தோட்டை | 330.0 | 382.0 | 456.0 | 34.0 | 72.0 | 60.0 |
| 4 | 1980 | நுவரெலியா | 186.0 | 228.0 | 287.0 | 48.0 | 41.0 | 42.0 |
| 5 | 1982 | மாத்தறை | 231.0 | 274.0 | 302.0 | 39.0 | 33.0 | 26.0 |
| 6 | 1981 | புத்தளம் | 378.0 | 427.0 | 467.0 | 74.0 | 49.0 | 40.0 |
| 7 | 1982 | பதுளை | 282.0 | 254.0 | 277.0 | 77.0 | 56.0 | 23.0 |
| 8 | 1984 | வவுனியா | 63.0 | 63.6 | 65.7 | 6.0 | 1.0 | 0.1 |
| 9 | 1984 | மன்னார் | 34.0 | 55.3 | 55.4 | 7.0 | 6.3 | 0.1 |
| 10 | 1984 | இரத்தினபுரி | 52.0 | 86.0 | 107.0 | 30.0 | 29.0 | 26.0 |
| 11 | 1984 | மொனராகலை | 48.0 | 102.0 | 148.0 | 19.0 | 55.0 | 46.0 |
| 12 | 1985 | முல்லைத்தீவு | 5.0 | 5.3 | 5.4 | 1.0 | 1.3 | 0.1 |
| 13 | 1986 | கேகாலை | 16.0 | 39.0 | 72.8 | 10.0 | 23.0 | 37.3 |
| 14 | 1987 | களுத்துறை | 0.3 | 7.3 | 44.0 | 0.3 | 7.0 | 37.0 |
| 15 | 1987 | கண்டி | 0.5 | 0.7 | 1.7 | 0.5 | 0.2 | 0.5 |

* உத்தேசம்

ஆதாரம்: பொருளாதார மீளாய்வு, இலங்கை மத்திய வங்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கப்பட்டவையாக இருந்தன.

பாரிய முதலீட்டுத் திட்டங்களின் வாயிலாக நேரடி நலன்களைப் பெற்றுக் கொள்ளாத மாவட்டங்களில் அபிவிருத்தியை ஏற்படுத்துவதற்காக ஒகிஅ நிகழ்ச்சித் திட்டங்கள் அறிமுகப் படுத்தப்பட்டன. ஒப்பீட்டளவில் புறக்கணிக்கப்பட்டிருந்த பகுதிகளில் கல்வி, சுகாதாரம், பாதுகாப்பான நீர் போன்ற அடிப்படைத் தேவைகளை உள்ளூர் மட்டங்களில் வழங்குதலையே இவை தமது நோக்கமாகக் கொண்டிருந்தன. 1970களின் முற்பகுதியிலிருந்தே அனைத்தும் அடங்கிய பிராந்திய அபிவிருத்தி; உள்ளூர் மட்ட அபிவிருத்தி என்பவை பற்றிய எண்ணக் கருக்கள் பற்றிய பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அரசியல் நிர்வாக அதிகாரங்களைப் பரவலாக்கல் என்ற கொட்பாட்டின் அடிப்படையில் உள்ளூர் மட்டங்களில் மக்களின் பங்களிப்பை ஊக்குவிக்கும் நோக்குடன் நிறுவன, நிர்வாக ரீதியான சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு வந்தன. உள்ளூர் வளங்களை முழுமையாகப் பயன்படுத்துவதன் மூலமும் மக்களின் பங்கேற்பைப் பெற்றுக்கொள்வதன் மூலமும் அடிப்படைத் தேவைகளை அடைவதை உறுதி செய்வதே இதன் நோக்கமாக அமைந்தது. இக் குறிக்கோள்களை அடையும் நோக்கில் மக்கள் குழுக்கள், விவசாய விளைவு பெருக்கக் குழுக்கள், கிராம அபிவிருத்தி சபைகள், (1980-ன் பின்னர்) மாவட்ட அபிவிருத்தி சபைகள் போன்ற நிறுவன ரீதியான அமைப்புகள் அறிமுகப்படுத்தப்பட்டன. பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவுத் திட்டமுறை, மாவட்ட அபிவிருத்தி அதிகாரிகள் முறை, (1978 முதற்கொண்டு) மாவட்ட மந்திரிகள் முறை என்பவை நிர்வாகத்தைப் பன்முகப்படுத்தும் நிறுவன ரீதியான மாற்றங்களை நோக்கங்களாகக் கொண்டவையாகும். இவற்றுக்கு இணையாக ஒகிஅ நிகழ்ச்சித் திட்டமும் சமூக அபிவிருத்தியைக் குறிப்பான

அட்டவணை 2

ஒ. கி. அ. திட்டங்களுக்கு நிதி கிடைத்த மூலங்கள்

ரூ. பத்து இலட்சம்

| | அமுல் செய்யப் பட்ட வருடம் | மாவட்டம் | வெளிநாட்டு உதவி நாடு | செலவு மதிப்பீடு | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | வெளிநாட்டு உதவி | | உள்நாட்டு | | மொத்தம் |
| | | | | தொகை | % | தொகை | % | |
| 1 | 1979 | குருநாகல் | – உலகவங்கி | 430 | 66.4 | 218 | 33.6 | 649 |
| 2 | 1979 | மாத்தறை | – சுவீடன் | 336 | 90.1 | 37 | 9.9 | 373 |
| 3 | 1979 | அம்பாந்தோட்டை | – நோர்வே | 686 | 98.0 | 14 | 2.0 | 700 |
| 4 | 1980 | நுவரெலியா | – நெதர்லாந்து | 510 | 98.1 | 10 | 1.9 | 520 |
| 5 | 1981 | மாத்தளை | – உலக வங்கி | 307 | 67.9 | 145 | 32.1 | 452 |
| 6 | 1981 | புத்தளம் | – ,, | 397 | 68.0 | 187 | 32.0 | 584 |
| 7 | 1982 | பதுளை | – ஐ. அ. ச. நி. | 500 | 82.0 | 110 | 18.0 | 610 |
| 8 | 1984 | வவுனியா | – உலக வங்கி | 246 | 64.9 | 133 | 35.1 | 379 |
| 9 | 1984 | மன்னார் | – ,, | 220 | 65.1 | 118 | 34.9 | 338 |
| 10 | 1984 | இரத்தினபுரி | – நெதர்லாந்து | 209 | 98.1 | 4 | 1.9 | 213 |
| 11 | 1984 | மொனராகலை | – நோர்வே | 392 | 98.0 | 8 | 2.0 | 400 |
| 12 | 1985 | முல்லைத்தீவு | – நெதர்லாந்து | 90 | 97.8 | 2 | 2.2 | 92 |
| 13 | 1986 | கேகாலை | – ஐ. அ. ச. நி. | 262 | 64.1 | 147 | 35.9 | 409 |
| 14 | 1987 | களுத்துறை | – பின்லாந்து | 224 | 85.5 | 38 | 14.5 | 262 |
| 15 | 1987 | கண்டி | – ஜேர்மனி | 32 | 100.0 | – | 0.0 | 32 |

ஆதாரம்: பொருளாதார [illegible] திட்டமிடல் அமைச்சு

நோக்கமாகக் கொண்ட கிராமிய எழுச்சித் திட்டமும் வகுக்கப்பட்டன.

மகாவலி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம், பாரிய கொழும்பு பொருளாதார ஆணைக்குழு நகர அபிவிருத்தி - வீடமைப்புத் திட்டம் ஆகிய மூன்று முன்னேற்றத் திட்டங்களால் நன்மைகளைப் பெற்றுக் கொள்ளாத கிராமியத் துறைக்கு இயக்கவியல் புகுத்துவதாக ஒகிஅ நிகழ்ச்சித் திட்டம் அமையுமென நம்பப்பட்டது. சமமான பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்தல், பொருளாதார வாய்ப்புக்களை அதிகரித்தல், கிராமப்புறங்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல், முன்னுரிமை உற்பத்தி சார்ந்த நிகழ்ச்சித் திட்டங்களில் பங்கு கொள்ளாதோர்பால் கவனத்தைச் செலுத்துதல் என்பவற்றிற்கு இத்திட்டம் உதவும் என நம்பப்பட்டது. வறிய துறையினர்பால் முக்கிய கவனம் செலுத்துவதாகவும், பிற்பட்ட கிராமிய குடித்தொகையினரின் சார்பில் தலையிடக் கூடியதாகவும் அதே நேரத்தில் உற்பத்தித் திறன் குறிக்கோள்களை நிறைவேற்றக் கூடியதாகவும் இருக்கும் வகையில் இந்த உத்தி அமைந்திருக்குமென எண்ணப்பட்டது.

பல்வேறு மாவட்டங்களில் தொழிற்படுத்தப்பட்டுவரும் ஒகிஅ நிகழ்ச்சித் திட்டங்களின் நோக்கங்களும் அவற்றுக்கு முக்கியத்துவம் வழங்கப்படும் அம்சங்களும் கணிசமான வேறுபாடுகளைக் காட்டி நிற்கின்றன. மிக அதிக அளவிலான விவசாய நடவடிக்கைகளைக் கொண்டதும், மிகப் பெருந்தொகையினரான விவசாயத் தொழிற்படையினரை உள்ளடக்கியதுமான குருநாகல் மாவட்டத்தில் விவசாய உற்பத்திப் பெருக்கம், வருமான அதிகரிப்பு என்பவற்றுக்கு அழுத்தம் கொடுக்கப்பட்டது. குறிப்பான திட்டக் கூறுகள் ஒவ்வொன்றினதும் ஆண்டுக்குரிய செலவுகள், சாதனைகள் பற்றிய இலக்குகளைக் கொண்டதாக குருநாகல் நிகழ்ச்சித் திட்டம் அமைந்திருந்தது. மாத்தறை, அம்பாந்தோட்டை, மாத்தளை, நுவரெலியா போன்ற மாவட்டங்களில் ஒகிஅ நிகழ்ச்சித் திட்டங்களில் குறிக்க இலக்குப் பிரதேசங்களையும், குழுக்களையும் நோக்கியதாக அபிவிருத்தி நடவடிக்கைகள் அமைந்திருந்தன

(15-ம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிராமிய தொழில் வாய்ப்புக்களின் உருவாக்கத்தில் ஒருங்கிணைந்த மாவட்ட கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் பங்கு பற்றிய விமர்சன ரீதியான ஓர் ஆய்வு

பீ. தேவாவிதாரண
(பொருளியற் பேராசிரியர்,
பேராதனைப் பல்கலைக்கழகம்)

[illegible] அபிவிருத்தி [illegible] கிராமிய தொழில் வாய்ப் [illegible] பரிமாணங்களில் இவ்வாய்வில் கிராமிய தொழில் வாய்ப்புக்களை உருவாக்குவது [illegible]

கிராமப்பகுதிகளில் சமூக பொருளாதார அபிவிருத்தியைத் துரிதப்படுத்தும் முக்கிய வழிமுறையாக விளங்கும் ஒன்றிணைந்த மாவட்ட கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் (ஒமாகிஅநி) முதன் முதலாக 1979இல் மேற் கொள்ளப்பட்டது. தற்போது 24 மாவட்டங்களுள் பதினொன்றில் இத்தகைய திட்டங்கள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன. தற்போது நாட்டில் பெரிய முதலீட்டுத் திட்டங்கள் பல செயற்படுத்தப்படுகின்றன. அவை மூன்று முன்னோடித் திட்டங்களை உள்ளடக்கியவையாகும். ஒமாகிஅநி இத்தகைய பெரிய திட்டங்களில் உள்ளடக்கப்படாத மாவட்டங்களின் நலன்களைக் குறிப்பாகக் கருதி வகுக்கப்பட்டதாகும். கிராமியத் துறையில் இயக்க நிலையைப் புகுத்த வேண்டியுள்ள நீண்டகாலத் தேவையைக் கருத்திற் கொண்டு இவை வகுக்கப்பட்டுள்ளன. மாவட்டங்களுக்குள் சமமின்மையைப் போக்க இவை எத்தனிக்கின்றன. ஒமாகிஅநி நிகழ்ச்சித் திட்டத்தின் இணைப்பாக இவை செயற்படுகின்றன. அபிவிருத்தியைப் பன்முகப்படுத்தும் பணியை இவை திடமாக்குகின்றன. இவ் வகையில் இவை தம்மட்டில் தாங்களாகவே முன்னோடிக் கருத்திட்டங்களாகக் கருதப்படுகின்றன. இதற்கிணங்க ஒவ்வொரு மாவட்டத்திலும் வருமானம், தொழில், வாழ்க்கைத் தரம் என்பவற்றில் கணிசமான அதிகரிப்பை ஏற்படுத்துவதைத் தமது பரந்த குறிக்கோளாகக் கொண்டுள்ளன.

இவற்றின் உத்திகளும் அணுகு முறைகளும் பல அம்சங்களை உள்ளடக்குவனவாக அமைந்துள்ளன. அவையாவன:

ஒவ்வொரு கிராமத்திலும் காணப்படும் விவசாயவளங்கள், உள்ளமைப்பு வசதிகள் என்பவை நிறைவாகப் பயன்படுத்தப்படுவதை உறுதி செய்தல்: அவை வீணடிக்கப்படலைத் தவிர்த்தல்.

உற்பத்தியில் காணப்படும் தடைகளை அகற்றுவதன் மூலம் இத்தகைய வளங்கள் மேலும் திறமையாகப் பயன்படுத்தப்படுவதை உறுதி செய்தல்,

விரைவான முதலீடுகளூடாக முக்கிய இடைவெளிகளை இட்டு நிரப்புவதும் முக்கிய தேவைகட்கு ஏற்பாடுகளைச் செய்தலும்,

மேலதிகமான திறமான சேவைகளை மேலும் வலுப்படுத்தல்,

குறிப்பிட்ட தேவைகளை அடையவும் ஒவ்வொரு மாவட்டத்திலும் காணப்படும் சாத்திய வளங்களைப் பயன்படுத்தவும் இந் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் குறுகிய நடுத்தரக் காலத் திட்டங்கள் வகுக்கப்படுகின்றன. இவை பின் தங்கிய பகுதிகள், பிரதிகூலம் கொண்ட குழாத்தினர் என்போரில் சிறப்பான அக்கறை கொண்டவையாக அமைகின்றன. இக் கருத்திட்டங்களின் ஆதரவளிப்பதற்கு உள்ளமைப்புகள் ஏற்படுத்தப்படுகின்றன. வேகமான விளைவுகளை ஏற்படுத்தும் உற்பத்தி நோக்கம் கொண்ட கருத்திட்டங்களாக இவை அமைகின்றன. உற்பத்தி விளைதிறனையும், உற்பத்தி நடவடிக்கைகளையும் பெருக்குவதற்கு கருத்திட்ட உத்திகளில் அழுத்தம் கொடுக்கப்படுகின்றது. இவற்றைச் செயற்படுத்தப்படுவதற்காகத் தனி அமைப்பு முறை மாற்றங்களை ஏற்படுத்த முயற்சிப்பதில்லை. ஏற்கெனவே காணப்படும் சமூக பொருளாதாரக் கட்டுக் கோப்புக்குள்ளேயே இவற்றின் குறிக்கோள்களை அடைய எத்தனிக்கப்படுகின்றது. இவற்றின் நல்லியல்புகளை ஒன்று சேர்ப்பதன் மூலமும் நடவடிக்கைகளைப் பக்கவாட்டில் இணைப்பதன் மூலமும் பல் துறை அணுகுமுறை கைக்கொள்ளப்படுகின்றது. இத் திட்டங்கள் சகல உற்பத்தித் துறைகளையும் உள்ளடக்குவனவாக அமைவதில்லை. அத்துடன் இவற்றினூடாக சகல பிரச்சினைகட்கும் தீர்வு காணவும் எத்தனிக்கப்படுவதில்லை. திட்டங்களைத் தொழிற்படுத்துவதில் பல இடையூறுகள் ஏற்படுவதுண்டு. அத்துடன் வரையறுத்த காலப்பகுதியினுள் அவை நிறைவு செய்யப்படவும் வேண்டும், எனவே இத்தகைய அணுகுமுறை அதனை இயற்றியோர் வர்ணித்தது போல, அனைத்தையும் அடக்கிய தன்மைகளும் முகாமைப்படுத்தக் கூடிய தன்மைகளும் இடையிலான இணக்கமாக அமைகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொரு மாவட்டத்திலும் கைக்கொள்ளப்படும். திட்டமிடற் கோட்பாடு வேறுபட்டதாக அமைகின்ற நடைமுறை வடிவமைப்பு, அணுகுமுறை என்பவற்றைப் பொறுத்த வரை இவற்றிடையே ஒருமைத் தன்மை காணப்படுவதில்லை. புதுமையைப் புகுத்தல், சோதனை செய்தல், ஒன்றைச் செய்யும்போதே அனுபவத்தைப் பெற்றுக் கொள்ளல் போன்றவற்றை அனுமதிப்பதற்காக வேண்டுமென்றே இத்தகைய வேறுபாடுகள் அனுமதிக்கப்பட்டுள்ளன. குருணாகலை, புத்தளம், மாத்தளை, பதுளை ஆகிய நான்கு மாவட்டங்களின் ஒவ்வொரு ஆண்டுக்குரிய இலக்குகளைக் கொண்டவையாகத் தயாரிக்கப்பட்டுள்ளன. அபிவிருத்தி செய்யப்பட வேண்டிய துறைகள் முற்கூட்டியே இனங்காணப்பட்டுள்ளன. இவ்வகையில் இவை பரந்த அடிப்படையிலான கருத்திட்டங்களாகும். இவை உற்பத்தி, வளர்ச்சி என்பவற்றுக்கு அழுத்தங் கொடுக்கின்றன. பாரிய மாற்றங்கள் இவற்றில் அனுமதிக்கப்பட்டிருக்கவில்லை. இறுக்கத் தன்மை கொண்டவையாக இவை வகுக்கப்பட்டுள்ளன. நுவரெலியா, மாத்தறை, அம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்களுக்கான திட்டம் ஆண்டுதோறும் தயாரிக்கப்படுகின்றன. சுழன்று வருந்தன்மையும் தொடர்ச்சியும் கொண்டவை. நெகிழ்ச்சிமிக்க அணுகுமுறை கொண்ட இத்திட்டங்களில் பின்தங்கிய பிரதேசங்களையும், இலக்குக் குழாத்தினரையும் அபிவிருத்தி செய்வதற்குச் சிறப்பாக வடிவமைக்கப்பட்ட துணைக் கருத்திட்டங்கள் அல்லது நடவடிக்கைத் தொகுதிகளையுஞ் சேர்த்துக் கொள்ள முடியும். இத் திட்டமிடல் அப்பிரகாரம் தனிப்பட்ட கருத்திட்டத்தைத் தேர்ந்தெடுத்து அதனை நடைமுறைப்படுத்தல், அந்தப் பிரச்சினை தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சிகள் என்பவை தொடர்பானதாகும்.

ஒமாஅ கருத்திட்டங்களிலும் அமைப்பில் செய்யப்படும் முதலீடுகளிலும் உற்பத்தி நோக்கங்கட்கு அழுத்தங் கொடுக்கப்படுகின்றது. அதே நேரத்தில் பொருத்தமான மேற்றலைச் செலவுகள், ஆதாரமான உள்ளமைப்புக்கள், சேவைகள் என்பவற்றின் சமப்படுத்தப்பட்ட கலவையாகவும் இவை அமைகின்றன. அடிப்படைத் தேவைகள், சமூக அபிவிருத்தி என்பவை தொடர்பான கருத்திட்டங்களும் இவற்றிற் சேர்த்துக் கொள்ளப்படுகின்றன. ஒவ்வொரு மாவட்டத்திலும் காணப்படும் வளங்கள், தேவைகள், பல்வகைத் துறைகள் என்பவற்றைப் பொறுத்து கருத்திட்ட நடவடிக்கைகள் வேறுபடுகின்றன. ஒவ்வொரு மாவட்டத்திலும் முக்கியமான இரு தேவைகளைத் தேர்ந்தெடுத்து அவற்றை முன்னெடுக் கருத்திட்டங்களாகக் கருதும் போக்கு தற்போது காணப்படுகின்றது. நெல், நீர்ப்பாசனம், விவசாய விரிவாக்கம் என்பவை அநேகமான மாவட்டத் திட்டங்களில் இத்தகைய அந்தஸ்தைப் பெற்றுள்ளன. தெங்கு, கைத்தொழில் பெரியபொருளாதாரப் பயிர்கள், பாதை அபிவிருத்தி, தேயிலைச் சிறுடைமைகள், கிராமிய மின்மயமாக்கல், மீன்பிடி, பட்டுச் செய்கை, காடுவளர்த்தல், கால்நடை வளர்ப்பு என்பவை தனிப்பட்ட மாவட்டத் திட்டங்களில் அதிக அழுத்தம் பெறும் ஏனைய நடவடிக்கைகளாகும்.

ஒமாஅதி திட்டங்களின் செலவுகள் மிதமானவை. நாட்டின் மொத்த மூலதனச் செலவினத்தின் இரண்டு சதவீதத்துக்கு உட்பட்டவையாகவே அவை அமைகின்றன. தேசிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள், பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டம் என்பவற்றூடாகவும் மாவட்டத்திலும் வளங்கள் பாய்ச்சப்படுகின்றன. அவற்றுக்கு மேலதிகமானவையாக ஒமாஅதி வளங்கள் அமைவதனால் மாவட்டப் பொருளாதாரத்தில் அவைதாக்கத்தை ஏற்படுத்தக் கூடியவையாகின்றன. இது சகல மாவட்டங்கட்கும் பொருத்தமானதல்ல. உதாரணமாக மாத்தறை மாவட்டத்தை எடுத்துக் கொண்டால் அங்குள்ள பிரச்சினைகளுடன் ஒப்பிடும் போது அங்கு செய்யப்படுஞ் செலவினம் அளவிற் குறைந்ததாகவே கருதப்படல் வேண்டும். பல்வேறு மாவட்டத் திட்டங்களில் செலவுகளின் பிறநாட்டு நிதியளிப்பு 66-100 சதவீதமாகக் காணப்படுகின்றன எனினும் இத்தகைய உதவி கடன் சர்க்காரியுடன் கூட ஒமாஅதி செலவுகள் நாட்டினைத் தகைமைப்படு அமைவாகவே இருப்பதைக் காண முடிகின்றது.

ஒமாஅதி திட்டங்களின் அறிவார்ந்த நிலை, உண்மைத் தோற்றம், குறிக்கோள்கள், உத்திகள், குறுஇயல்புகள் என்பவற்றை மேற் கண்டோம். கிராமிய வாய்ப்புகளை உருவாக்குவதில் ஒமாஅதி திட்டத்தின் பங்கினைப் பற்றி ஆராய்வதற்கான பின்புலம் இவ்வாறு உருவாக்கப்பட்டுள்ளது: கிராமிய தொழில் வாய்ப்புப் பிரச்சினையின் பல்வேறு வடிவங்கள் இத்தகைய பிரச்சினைகளாற் பாதிப்புறும் பல்வேறு குழாத்தினர், கிராமிய வேலை வாய்ப்பு உருவாக்கத்துடன் இணைந்த திட்டமிடல் தொடர்பான அம்சங்கள், கொள்கையளவிலான பிரச்சினைகள் என்பவற்றின் அடிப்படையில் நிகழ்ச்சித் திட்டத்தை விமர்சனக் கண்ணோட்டத்துடன் பரிசீலிப்பதன் மூலம் இந்த ஆய்வு மேற்கொள்ளப்படவுள்ளது. ஒரு கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் கிராமிய தொழில் வாய்ப்புப் பிரச்சினையாற் பாதிப்புறும் பல்வேறு குழாத்தினர் மீது நான்கு முக்கிய வழிகளில் தாக்கத்தை ஏற்படுத்தலாம். அவர்களின் உற்பத்தி நடவடிக்கைகளையும் அல்லது உற்பத்தி வளங்களையும் பாதிப்பதன் மூலமும், இலக்குக் குழாத்தினர் என்ற வகையில் அவர்களை நேரடியாகச் சென்றடைவதனூடும், இலக்குப் பிரதேசம் என்ற வகையில் அவர்கள் அமைவிடங்களின் மீது விசேட கவனஞ் செலுத்துவதனூடும் தாக்கங்கள் ஏற்படுத்தப்படலாம். எமது ஆய்வு இத்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிப்படையிலேயே அமைந்துள்ளது.

உற்பத்தி நடவடிக்கைகள் மீதும், உற்பத்தி வளங்கள் மீதும் ஒமாகிஅபி திட்டங்களின் தொழில் வாய்ப்பு விளைவுகள்.

நெல், தெங்கு, பெரிய பொருளாதாரப் பயிர்கள் உப உணவுப் பயிர்கள் என்பவற்றை உள்ளடக்கியதான விவசாய உற்பத்தி அமைகின்றது. இதன் மீதும் காணி, நீர்ப்பாசனம் ஆகிய பௌதிக வளந் தளம் மீதும் ஒமாகிஅபி திட்டங்கள் பாரிய தாக்கங்களைக் கொண்டவையாக உள்ளன. அவற்றுள்ளும் இறுக்கமான வகையிலான திட்டங்கள் இவற்றின் மீது கொண்ட அழுத்தம் இன்னும் ஆழமானதாகும். வளங்கள் தனியாரின் உடைமைகளாக அமைந்துள்ளன. இவற்றைச் செறிவாகப் பயன்படுத்துவதன் மூலம் விளைதிறனையும் வெளியீட்டையும் அதிகரிப்பதே இத் திட்டங்களின் வாயிலாக ஏற்படுத்தப்படும் சிந்தனை மாற்றங்களாகும். இதிலிருந்து உடனடியாக எழும் பிரச்சினை, காணியற்றோரும் போதியளவு காணிகளைக் கொண்டிராதோரும் இத்திட்டங்களின் விளைவாக ஏற்படுத்தப்படும் தொழில் வாய்ப்பு, வருமான நலன்களைப் பெற மாட்டார் என்பதாகும். இப் பிரச்சினையின் ஆழத்தைக் குருணகல் மாவட்டப் புள்ளிவிபரங்கள் எடுத்துக் கூறுகின்றன. அங்கு அமைய வேலையையும் எப்பொழுதும் கூலித் தொழிலையுஞ் செய்யுங்குடும்பங்கள் 8 சதவீதமாகவும், வீட்டுத் தோட்டங்களை மட்டுமே கொண்டிருந்த குடும்பங்கள் 18 சதவீதமாகவும், குறைந்த அளவு காணிகளை (அதாவது மொத்தமாக 2 ஏக்கர் அல்லது நெற் காணி 1 ஏக்கர் என்பதற்குக் கீழாக) கொண்டிருந்தோர் 58 சதவீதமாகவும் காணப்பட்டனர். செறிவு கூடியதாக விவசாயத்தை மாற்றியமைப்பதன் மூலம் வருமானங்களை உயர்த்த முடிந்துள்ள போதிலும் மாவட்டத்தில் காணப்படும் காணியற்ற நிலை, குறைந்தளவாகவே காணிகளை உடைமை கொள்ளப் பட்டுள்ள நிலை, வேலையின்மை என்பவற்றின் மீது இந்த அணுகு முறையின் மூலம் கணிசமான தாக்கம் எதனையும் ஏற்படுத்த முடியாது என மாத்தளை ஒமாகிஅபி திட்டம் வெளிப்படையாக ஏற்றுக்கொண்டுள்ளது.

புதிய விவசாய உரிமைப் பொருட்களை ஏற்படுத்தித் தருவதில் காணியற்றோருக்கும், போதிய காணிகளைக் கொண்டிராதோருக்கும் ஒமாகிஅபி திட்டங்கள் மிகக் குறைந்த நலன்களை மட்டுமே ஏற்படுத்தித்தரக் கூடியதாக இருக்கும். பெரிய காணி விஸ்தரிப்பு நடவடிக்கைகளை மிதமான திசைகளைக் கொண்டு இயங்கும் இத்திட்டங்களால் மேற்கொள்ள முடியவில்லை. எனவே விவசாயத்தைச் செறிவுமிக்கதாக்குவதற்கே அவை அழுத்தங்கொடுக்கின்றன. சில ஒமாகிஅபி திட்டங்களின் கீழ் கிராமிய நீர்ப்பாசனம் புனரமைப்பு நடவடிக்கைகளும் மேற் கொள்ளப்படுகின்றன. ஆனால் இத்தகைய 4 திட்டங்களின் கீழும் புதிதாக பயன்படுத்தக் கூடியதாக மாற்றியமைக்கக் கூடிய காணியின் அளவு 25,000 ஏக்கர்களைக் கூடத் தாண்ட மாட்டாது. மேலும் அவ்வாறான காணிகளும் கூட எல்லை விளைதிறன் கொண்டவையாக மட்டுமே அமைந்திருக்கும்.

விவசாய செறிவாக்க நடவடிக்கை புதிய வேலை வாய்ப்புகளை உருவாக்குவது இரு காரணிகளின் செல்வாக்கினால் நிர்ணயிக்கப்படும். உழவு யந்திரங்கள், தெளிகருவிகள் என்பவற்றின் கொள்வனவுக்குச் சலுகையடிப்படையில் வழங்கப்படும் கடன் திட்டங்களால் விவசாயத்திற் காணப்படும் ஊழியச் செறிவு உண்மையில் குறைவடையவே செய்யும். வேலை வாய்ப்பினை அதிகரிப்பதென்ற இந் நிகழ்ச்சித் திட்டத்தின் இலட்சியங்கள் இந்த வகையில் முறியடிக்கப்படுகின்றன. நெற் செய்கையைச் செறிவாக்குவதன் மூலம் அதிக வேலை வாய்ப்புகளை வழங்கும் நோக்குடன் குருணாகலை ஒமாகிஅபி திட்டம் வகுக்கப்பட்டது. ஆனால் இத் திட்டத்தின் ஆதரவில் ஒரு ஆண்டில் மட்டும் (1980) 14 மில்லியன் ரூபா உழவு யந்திரக் கடன்கள் விநியோகம் செய்யப்பட்டன. அடுத்த காரணி பயிரிடற் செறிவுடன் தொடர்பானது. கிராமியக் குளங்கள் கருத்திட்டங்களின் வாயிலாக பயிரிடற் செறிவு அதிகரிக்குமெனத் திட்டத்தில் சித்திரிக்கப்பட்டிருந்தது. எனினும் குளங்கள் புனரமைக்கப்பட்ட பின்னரும் காலபோகத்தில் கிடைக்கக் கூடியதைவிட அதிகளவு மழை நீரை இக் குளங்களில் தேக்கி வைக்க முடியாது. எனவே தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் இரு போக வேளாண்மைக்கு மேலதிகமாகக் குளங்கள் புனரமைக்கப்பட்ட பின்னரும் எதனையுஞ் செய்வதற்கு இடமில்லை. எனவே பருவகால வேலையின்மையைப் போக்குவதில் இவற்றின் பங்களிப்பு மட்டுப்படுத்தப்பட்டதாகவே இருக்கும். குறுக்குமட்டமான விரிவாக்கத்தினூடாகவோ, செறிவைக் கூட்டுவதன் வாயிலாகவோ புதிய வேலை வாய்ப்புக்களை உருவாக்கும் பணி இவ்வாறு நடைபெறுமாயின் காணியற்றோரும் குறைந்தளவு காணிகளை மட்டும் கொண்டிருப்போரும் வேலை வாய்ப்புக்காக கிராமத்தின் விவசாயமற்ற துறையையே நாட வேண்டியிருக்கும். ஆனால் ஒமாகிஅபி திட்டங்களில் இத் துறைக்கோ இதில் பங்கேற்பவர்கட்கோ எவ்வித ஏற்பாடுகளும் காணப்படவில்லை. உதாரணமாக குருணாகல ஒமாகிஅபி திட்டத்தில் கிராமிய கைத் தொழில்கள் நிர்ணயிக்கப்படாத எதிர்காலக் கட்டமொன்றுக்குப் பின்போடப்பட்டுள்ளது. தற்போது செயற்பட்டுவரும் ஒமாகிஅபி திட்டங்களில் ஏழு திட்டங்கள் பற்றிய விபரங்களே கிடைக்கக் கூடியனவாக உள்ளன. இவற்றுள் ஒரு சில



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வத்தில் மட்டுமே விவசாய மற்ற நடவடிக்கைகளுக்கான கருத்திட்டங்கள் காணப்படுகின்றன. இவை கூட ஏனைய திட்டங்களுக்குள் உள்ளடக்கப்பட்டனவாகும். கைவினைஞர் கருத்திட்டம் ஒன்று, தொழிற் பயிற்சி நிலையங்கள் 15, நடமாடும் பயிற்சி நிலையங்கள் 5 ஆகியவையே அவை. கிராமிய அபிவிருத்தியுடன் கிராமங்களைத் தொழில்களைத் தொடர்புபடுத்தாதிருப்பது தேசிய தொழில் வாய்ப்புக்கும் பாரிய சேதத்தை ஏற்படுத்துவதாக அமையும். குருணாகலை ஒமாகேறி திட்டம் பண்ணை அபிவிருத்தித் திட்டங்களின் தேவைகளை ஈடு செய்வதற்காக பெருந் தொகை மண்வெட்டிகளை விரைவாக இறக்குமதி செய்ய ஆலோசித்தது. ஆனால் அண்மையிலுள்ள மாவட்டம் ஒன்று இத்தேவையின் ஒரு பகுதியையாவது ஈடுசெய்யுமளவுக்கு இவ்வுற்பத்தியில் தகைமையைக் கொண்டிருந்ததை கவனத்துக்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை. தொழில் வாய்ப்பைப் பெருக்குதல் தொடர்பான திட்டங்களில் காட்டப்படும் அசிரத்தைக்கு இதனை ஒரு உதாரணமாக காட்டலாம். வேலை வாய்ப்புகளைப் பெருக்குவதில் கிராமியத் துறை பல இடையூறுகளைத் தாண்டவேண்டியுள்ளது. இந்நிலையில் கிராமிய வேலையின்மைப் பிரச்சினைக்கும் வறுமைப் பிரச்சினைக்கும் தீர்வு காண விவசாயத்துறையிலும் விவசாய உத்திகளிலும் தங்கியிருப்பது புத்திசாலித்தனமற்றதாகும். ஒமாகேறி திட்டங்களின் தவறுகளாக இது அமைந்தது. விவசாயஞ் சாராத கிராமியத்துறையின் அபிவிருத்திக்கு முக்கியத்துவமளித்து கிராமிய அபிவிருத்தியின் முக்கிய தொனிப் பொருளாக அதனைக்கொள்ள வேண்டிய அவசியத்தை எமது ஆய்வு வெளிப்படுத்துகின்றது. விவசாயஞ் சாராத கிராமியத்துறை கருவமற்றதாகவும் சிக்கல் வாய்ந்ததாகவும் காணப்படுகின்றது. எனவே வழமையான வகைப்படுத்தலில் இவற்றை உட்படுத்துவதில் கஷ்டங்கள் உள்ளன. இதன் காரணமாக தேசிய அபிவிருத்தித் திட்டமிடலில் இத்துறை பிரதிபலிக்கப்படுவதில்லை. அபிவிருத்தி சார்ந்த விடயங்களைப் புவியியல் மட்டத்தில் தீர்மானிப்பதற்கு மாவட்ட - பிரதேச அபிவிருத்தி பற்றிய கருதுகோள் வாய்ப்பளிக்கின்றது. எனவே அபிவிருத்தித் திட்டமிடலில் விவசாயஞ் சாராத கிராமியத் துறையை அதனுள் சேர்த்துக் கொள்வது அவசியமானதாகும்.

ஒமாகேறி திட்டம் கட்டுமான வேலைகள், கிராமிய வேலைகள் ஆகிய கூறுகளையும் உள்ளடக்கியதாகும். இவை ஊழியச் செறிவு மிக்கவை. எனவே குறுகிய காலத்துக்காயினும் காணியற்றோரும் குறைவான காணிகளைக் கொண்டிருப்போரும் கூலித் தொழிலைப் பெற்றுக் கொள்ள இக்கூறுகள் சந்தர்ப்பம் வழங்குகின்றன. நுவரெலியா மாவட்டம் பெருந்தோட்டங்களால் சூழப்பட்ட கிராமங்களைக் கொண்டுள்ளது. இங்கு விவசாயத்துக்குப் போதிய சந்தர்ப்பம் காணப்படுவதில்லை. இத் திட்டத்தில் மட்டுமே கிராமிய வேலைகளூடாக வேலைவாய்ப்புகளை வழங்குதல் வெளிப்படையான குறிக்கோளாக அமைந்துள்ளது. எனினும் இத்திட்டத்தின் வாயிலாக 1000க்கு உட்பட்ட தொகையினருக்கு மூன்றாண்டு காலத்துக்கு மட்டும் வேலை வாய்ப்பினை வழங்கக் கூடியதாக இருக்கும். இம்மாவட்டத்தின் காணியற்றோர் தொகை யோ 50,000 ஆகும். ஏனைய மாவட்டங்களில் ஒரு நிர்மாண வேலைகள் கூட கிராமிய வறியோருக்கு வழங்கப்படாமல் ஒப்பந்தக்காரரால் வெளியிலிருந்து தருவிக்கப்பட்ட தொழிலாளருக்கு வழங்கப்பட்டுள்ளன. கண்டி ஏழைகட்கு இவ்வாறு வேலை வாய்ப்புகளை வழங்காமையும், ஏற்கனவே விளக்கப்பட்டவாறு தேற் செய்கைத் தொழினுட்பத் தொடர்பாக கடைப்பிடிக்கப்பட்டு வரும் முதலாந்த கொள்கையும் தொழில் வாய்ப்பைப் பொறுத்தவரை இந் நிகழ்ச்சித் திட்டங்களில் முறையான திட்டமிடல் காணப்படாமையைத் தெளிவாக எடுத்துக்காட்டுகின்றன.

நிகழ்ச்சித் திட்டங்களில் விஸ்தரிப்பு, உள்ளீடுகளை வழங்கல் போன்ற ஏனையச் சேவைகள் காணப்படுகின்றன. அத்துடன் மானியம், சலுகை அடிப்படையிலான கடன்கள் போன்ற உதவிகளும் அடங்குகின்றன. இவற்றினூடாகப் பல்வேறு தோட்டப் பயிர்கள், மரப் பயிர்கள் என்பவற்றின் உற்பத்தியை மேம்படுத்தும் செறிவுமிக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள நிகழ்ச்சித் திட்டங்கள் எத்தனிக்கின்றன. மிகவுஞ் சிறியவர்களும், மிகவும் வறியவர்களும், மிக அதிகளவு தேவைகளைக் கொண்டவர்களுமான விவசாயிகட்கு இத் திட்டங்களிலுள்ள நலன்களை வழங்கும் விருப்பும் திட்டங்களில் காணப்படுகின்றது. இவ்வகையில் குறிப்பாகச் சிறிய விவசாயிகள் அதிகளவில் பங்கேற்கும் கிராமியக் கடன்முறை ஒன்றினை வகுத்து கடன் ஒழுக்கத்தின் சில நெறிகளையும் குருநாகல் ஒமாகேறி திட்டம் அறிவித்தது. விவசாய விரிவாக்கத்துக்கு முன்னோடித் திட்ட அந்தஸ்தை வழங்கிய மாத்தளை மாவட்ட நிகழ்ச்சித் திட்டம் மிகச் சிறிய நில உடைமைகளையும் வீட்டுத் தோட்டங்களையும் உள்ளடக்கும் வகையில் முறைமை ஒன்றினைக் கையாண்டது.

ஒமாகேறி திட்டங்களினால் ஏழைகளும் பிரதிகூலமடைந்தோரதும் சார்பாக உதவிகளும் சேவைகளும் விநியோக முறையை மாற்றியமைக்க முடிந்ததா? இந்த மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட சில ஆய்வுகளில் இக் கேள்விக்கு எதிர்மறையான விடையே பெரும்பாலும் கிடைத்துள்ளது. குருநாகல் மாவட்ட பயிர் செய்கைக் கடன் திட்டத்தில் சிறிய விவசாயிகளின் பங்கேற்பு குறைவாகவே இருந்தது. உயர் இடமுடைய கொண்ட விவசாயிகள் இத்திட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டத்தில் சேர்ந்துக் கொள்ளப் படவேயில்லை. ஆனால் செழிப்பான விவசாயிகள் இத் திட்டத்தின் கீழ் ஆக்கூடிய நலன்களைப் பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருந்தது. குருநாகல், புத்தளம் மாவட்டங்களின் தெங்கு வளமாக்கிய உடன் திட்டத்தில் பெரிய உடைமையாளருக்குச் சாதகமான மிக விபரீதமான பங்கீட்டு முறை காணப்பட்டது. தமது ஏனைய தொழில்கட்கு நிதியிட்டுஞ் செல்வமும் பலவிடமான மூலமாக இத் திட்டத்தை அவர்களுட் சிலர் பயன்படுத்தியுமுள்ளனர். மாத்தளை, குருநாகல் பெரிய பொருளாதாரப் பயிர்கட்கான மானியத் திட்டத்தில் மிகச் செழிப்பானோர் மட்டுமே நன்மைகளைப் பெற்றுக்கொண்டனர். அவர்களிற் பலர் அரசாங்க ஊழியத்தையும், வியாபாரத்தையும் தமது முக்கிய தொழிலாகக் கொண்டிருந்தனர். அத்துடன் குடும்ப உறுப்பினர் பெயர்களிற் பெறப்பட்ட மூன்று அல்லது நான்கு மானிய அனுமதிப் பத்திரங்களையும் சிலர் கொண்டிருந்தனர். எனவே, ஏற்கனவே செல்வந்தராக இருந்தவர்களை மேலும் செல்வந்தராக்குவதே இத்திட்டத்தின் நிகர விளைவாக அமைந்தது. குருநாகல் மாவட்ட விவசாய விஸ்தரிப்புச் சேவைகள் மேல்நிலை அதிகாரிகளால் மேலும் வலிமைப் படுத்தப்பட்டிருந்தது. எனினும், சேவைகளின் தரத்தில் எவ்வித மாற்றமும் ஏற்படவில்லை. சிறு விவசாயிகட்கு மிகக் குறைந்த நலன்களை மட்டுமே வழங்குவதாக அது காணப்பட்டது. உண்மையில் அவர்கட்கு அது நலன்கள் எவற்றையுமே அது வழங்கவில்லை எனவும் கூறலாம்.

சமமற்ற பகிர்வுக்கு அமைப்பு முறைக் காரணிகள் ஏதுக்களாய் அமைந்தன. இவற்றைத் திருத்துவதற்கான பயனுள்ளதும் சமநிலையாக்குவதுமான வழிமுறைகள் ஏதும் இத்திட்டங்களில் ஒழுங்குபடுத்தப்பட்டிருக்கவில்லை. சிறிய விவசாயிகள் பல பொருளாதாரப் பயனீனங்களைக் கொண்டவர்களாகக் காணப்படுகின்றனர். இதனால் இத்தகைய திட்டங்களிற் பங்குபற்றும் அவர்கள் ஆற்றல் குறைவடைகின்றது. கடன், மூலதனம் சார்ந்த துறை அனுகூலங்களும் நிறுவனங்களாலும் மேற்கொள்ளப்படும் வழங்கல்களுக்கும், பாரம்பரிய முறைசாரா நிதித்துறை தொழிற்படுனோரால் காட்டப்படும் பதிற்குறிகட்டும் தடைகள் ஏற்படுகின்றன. சமூக – பொருளாதார இரட்டைத் தன்மையால் கிராமிய வறிய அமைப்பில் காணப்படும் சமமின்மைகள் திட்டங்களிற் பங்குபற்றும் அவர்கள் ஆற்றல்களைப் பாதிக்கின்றது. திட்டங்களின் விளைவுகள் மற்றும் வளர்ச்சி சார்ந்த சித்தகைப் போக்கு திட்டங்களில் விவசாயத்துறையினரை நடைமுறைக்கைகளைச் சேர்க்காதவரை, காணியற்றோரையும் குறைவான காணிகளைக் கொண்டோரையும், நட்டாற்றில்விட்டு விடும். உற்பத்தி மற்றும் வளர்ச்சி சார்ந்த திட்டங்களை தற்போது காணப்படும் சொத்து மற்றும் வருமான விநியோக முறைகளில் சேர்செய்தபோதும் போது மிகவும் சிறிய விவசாயிகளும், நிலமற்றோர் கொண்ட விவசாயிகளும் உரிய விகிதாசார நலன்களைப் பெற்றுக் கொள்ள முடியாதிருக்கும். எனவே ஒருங்கிணைந்த திட்டங்களை புதிய பரிமாணங்களை வகுத்துக் கொண்டால், ஏழை மக்களின் தேவைகளுடனும், உள்ளூர் நிலைகளுடனும் தம்மைச் சம்பந்தப் படுத்திக் கொள்ளக் கூடியதாக இருக்கும். இலக்குப் பிரதேசங்கள், இலக்குக் குழுக்களைத் தொடர்பான இரு மேலதிக அணுகு முறைகளைக் கைக்கொண்டு இதற்கான சந்தர்ப்பத்தை இவை பெற்றுக் கொள்ளலாம். ஒருங்கிணைந்த திட்டங்களில் நெகிழ்ச்சி கொண்ட, வகையைச் சேர்ந்த உற்பத்தித் துறை அமைப்புக் கூடியதாக இருந்துவந்து.

## இலக்குப் பிரதேச அணுகுமுறை

தேர்ந்தெடுக்கப்பட்ட பின்தங்கிய பிரதேசங்களுக்குப் பெருநிலை, மனிதவள அபிவிருத்திப் படிமுறைகளைச் செயற்படுத்துவதே இதன் நோக்கமாகும். இதற்காக உற்பத்தி சார்ந்த கருத்திட்டங்கள், உள்ளமைப்பு அபிவிருத்திகள், அடிப்படைத் தேவைக் கூறுகள் எல்லாவற்றையும் நோக்கியாக்கி அவ்விடங்கட்கு எடுத்துச் செல்ல வேண்டும். ஒரு மாவட்டத்தின் பெருநிலாதார, புவியியல் அம்சங்கள் இலக்குப் பகுதியை இனங் காண்பதற்கு உதவும். அம்பாந்தோட்டை மாவட்டத்தில் அமைந்துள்ள "குறுங்குடியேற்றத் திட்டங்கள்" இரண்டு பாரிய நீர்ப்பாசனத் திட்டங்களிடையே அமைந்துள்ளன. இவை புறக்கணிக்கப்பட்டு, பின்தங்கிய நிலையுடன் கொண்டனவாக உள்ளன. இப் பகுதி பிரமைக் குணங்களைப் புனரமைப்பது, 728 ஏக்கர் அளவுடைய சிறிய விவசாயக் குடும்பங்களைக் குடியமர்த்துவது, விவசாயப் பதிவின் மூலம் நலன்புரி சேவைகளை வழங்குவது ஆகியவை கருத்திட்ட நடவடிக்கைகளில் அடக்கப்பட்டுள்ளன. இத்தகைய பல பகுதிகளுக்கெனக் குறிப்பாக வகுக்கப்பட்ட கருத்திட்டங்களும், பாரிய உற்பத்தி நடவடிக்கைகளை உள்ளடக்கிய கருத்திட்டங்களும் இம் மாவட்டத்தின் பொருளாதாரத்துக்கு வலுவூட்டக் கூடியனவென்றும் பொதுமக்களை உயர்த்தக் கூடியவை என்றும் நம்பப்படுகின்றது. மலை சூழ்ந்த நுவரெலியா மாவட்டத்தின் வளங்குன்றிய சில கிராமங்களும் இலக்குப் பகுதியாகக் கொள்ளப்பட்டுள்ளன. அம்பாந்தோட்டையின் மட்டுப்படுத்தப்பட்ட பிரதேசத்தில் பல்துறை சார்ந்த நடவடிக்கைகளில் அக்கறை செலுத்தப்பட்டு வருகின்றது. இன்னுமொரு நிலை நுவரெலியாவில் குறிப்பிட்ட அணுகு முறையிலிருந்து வேறுபடுகின்றது.

இந்த அணுகுமுறை இரு பெருந்தடைகள் எதிர்நோக்குகின்றன. வளத்துக்குள்ளாகும் பகுதி எவ்வளவு குறைவாக இருப்பது அவற்றில் ஒன்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாத்தியமானமுள்ளதாக கருத்திட்டங்களை அமைப்பது கஷ்டமாக இருப்பது மட்டுமன்று. இத்தகைய இடங்களே அபிவிருத்தி செய்யப்படுதல் தேவையான முதலீடுகள் ஒமஅதி நிதிகளில் அவ்வாறான திட்டத்துக்கு வெளியாக அப்பால் தள்ளப்பட்டதாக இருக்கும். ஒரு மாவட்டத்துக்காகத் திட்டமிடாமல் அதைவிடச் சிறிய நிர்வாகப் பிரிவுக்கெனத் திட்டமிடுவதில் பல அனுகூலங்கள் உள்ளன. அத்தகைய திட்டமிடலில் பிரச்சினைகளை இனங்காணுதல் எளிதாக இருக்கும். செறிவு கூடியவகையில் அபிவிருத்தியை மேற்கொள்ளக் கூடியதாகவும் இருக்கும். அபிவிருத்திக் கூறுகள் ஒவ்வொன்றின் நடவடிக்கைகளிலும் சிறப்பான இணைப்பை ஏற்படுத்தக் கூடியதாக இருக்கும். இக் காரணங்களால் திட்டமிடல் பற்றிய தற்போதைய போக்கு நிர்வாகப் பிரிவுகளை நோக்கியதாக மாறி வருகின்றது.

### இலக்குக் குழு அணுகுமுறை

பிரதிகூலம் கொண்டோராயும், சலுகை குன்றியோராயும் உள்ளவர்களுக்காகச் சிறப்பாக வடிவமைக்கப்பட்ட கருத்திட்டங்களூடாக அவர்களை அடைதல் இதன் நோக்கமாகும். நெகிழ்ச்சியுள்ள வகையைச் சேர்ந்த மூன்று ஏற்பாடுகள் இந்த அணுகுமுறைக்கு வெளிப்படையான அங்கீகாரத்தை வழங்குகின்றன. அம்பாந்தோட்டை, நுவரெலியா மாவட்டங்களைப் போலன்றி மாத்தறை மாவட்டத்தில் வறியோர் குறித்த ஓர் இடத்திலும் ஒன்றுதிரளாது பல்வேறு சார்ந்த நெருக்கடிமிக்க கிராமங்களில் பரந்திருக்கின்றனர். இதனால் இலக்குக் குழாத்தினர் அணுகுமுறையை இலக்குப்பகுதி அணுகுமுறையுடன் ஒன்றிணைப்பதற்குக் குறைந்தளவு வாய்ப்பே காணப்படுகின்றது. எனவே சிறிய உடைமையாளருக்கான வீட்டுத் தோட்ட அபிவிருத்திக் கருத்திட்டங்கள், காணியற்றோருக்கும் வேலையற்றோருக்கும் கிராமிய வேலைகளையும் பெரிய தோட்டங்களில் வேலைகளையும் வழங்கல், வேலையற்ற இளைஞருக்கு தொழிற்பயிற்சி, 18–40 வயதுக்குட்பட்ட கல்வித் தராதரமற்ற ஏழைப் பெண்களுக்கு சுய வேலைவாய்ப்பும் வருமான உருவாக்கமும் போன்ற நடவடிக்கைகளூடாக பலதரப்பட்ட வறியோரை எட்டுவதற்கு எத்தனிக்கப்பட்டது.

மாத்தறை ஒமஅதி திட்டத்தில் கடைப்பிடிக்கப்பட்டது போன்ற இலக்குக் குழாத்தினருக்கு மட்டும் அழுத்தம் கொடுக்கும் அணுகுமுறை தோல்வியைத் தழுவக் கூடியதாகும். ஏனெனில் பரந்த அடிப்படையிலான உற்பத்தித் துறை நோக்கிய அபிவிருத்தியைச் சமாந்தரமாக இவை ஏற்படுத்துவதில்லை. எனவே நலன் பெறும் குழாத்தினர் இவற்றை நிவாரணமாகவோ சமூக சேவை நடவடிக்கைகளாகவோ கருத இடமுண்டு. தம்மைச் சூழ அபிவிருத்தி ஏற்படும் போது நலன்களைப் பெற்றுக் கொள்ளும் தனியார் தமது ஆற்றல்களை நன்கு உணரக் கூடியதாக இருக்கும். கிராம அபிவிருத்தியின் பரந்த நலன்களுக்கும் குறித்த குழாத்தினரின் நலன்களுக்குமிடையே ஒரு சமநிலை ஏற்படுத்தப்படல் வேண்டும்.

இலக்குப் பகுதி இலக்குக் குழாம் அணுகுமுறை பயனுள்ளதாக இருக்கவேண்டுமெனில் திட்டமிடலிலும் அதனை நடைமுறைப்படுத்துவதிலும் நலன் பெறுவோர் நிச்சயம் பங்கு கொள்ளல் வேண்டும். இத்தகைய பங்கேற்பு இடம்பெறுமாயின் பிரச்சினைகளை இனங்கண்டு கொள்ளவும், தீர்க்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் முடிவதுடன் குழாத்தினரின் பெற்றுக் கொள்ளும் தகைமைகளை மேம்படுத்தவும் கூடியதாக இருக்கும். உள்ளூர்ச் சமூகத்தினரைக் கலந்தாலோசித்தல், தன்னிச்சையான நிறுவனங்களின் உதவிகளைப் பெற்றுக் கொள்ளல் போன்ற எத்தனங்கள் ஒமஅதிகளின் பணியாதல் வேண்டும்.

விவசாயம் சார்ந்ததும் அற்றதுமான துறைகளில் பொருத்தமான அமைப்பு முறையில் அமைந்த பண்புகள் காணப்பட்டால் மட்டுமே வளர்ச்சியைப் பொறுத்தவரை ஒன்றையொன்று வலுவூட்டும் தொடர்புறுத்தற் பொறியமைப்பு செயற்படக்கூடியதாக இருக்கும். கூலியச் செறிவுமிக்க இறு விவசாயத்துறையானது கூலியச் செறிவுமிக்கதும், தாராளமாகப் பரந்துள்ளதுமான சிறிய அளவிலான விவசாயஞ் சாராத உற்பத்திக் கூறுகளுடன், ஒத்த பரிமாணத்தில் சமப்படும் போது மட்டுமே இந்த ஒழுங்கு சாத்தியமானதாகும்.

### முடிவுரை

இச் சமூகச் சூழல் இலங்கைக்குப் பொருத்தமானதா? தற்போதுள்ள கொள்கைகளும் நிகழ்ச்சித் திட்டங்களும் கிராமப் புறங்களில் ஒன்றுடனொன்று தொடர்புபட்டதும் ஒன்றுக்கொன்று அனுசரணையானதுமான, விவசாயஞ் சார்ந்ததும் அற்றதுமான அபிவிருத்திக்கு அனுகூலமானவையா? இச் சமூகச் சூழல் ஓரளவுக்குக் காணப்படுகின்றது. கிராம விவசாய உடைமைகள் சிறியனவாகவும், கூலியச் செறிவு கொண்ட வாய்ப்புகளைக் கொண்டனவாகவும் இருப்பதனால் நிறுவன ரீதியான மாற்றங்களைச் செய்து தொழில்நுட்ப அடிப்படையிலான வளர்ச்சியை அவற்றில் மேம்படுத்த முடியும். கிராமிய விவசாயஞ் சாராத நடவடிக்கைகள் பற்றிய நோக்கின்மையால் ஒமஅதி பக்கச் சார்புள்ள கொள்கை வழி முறையாகவே அமைகின்றது. கிராமிய அபிவிருத்தியுடன் விவசாயஞ் சாராத கிராமிய நடவடிக்கைகளை இணைக்கும் நிகழ்ச்சித் திட்டம் ஒன்றுக்கான தேவைப்பாடு

(16-ம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருணாகல் மாவட்ட ஒருங்கிணைந்த கிராமிய அபிவிருத்தி திட்டம்

விவசாய ஆராய்ச்சி பயிற்சி நிலையத்தின் ஒரு மதிப்பீடு

## அறிமுகம்

கிராமிய அபிவிருத்தியின் வேகத்தைத் துரிதப்படுத்துவதற்காக வெளிநாட்டு நிதியளிக்கும் நிறுவனங்களின் உதவியுடன் இலங்கை அரசாங்கத்தால் 1979 ல் தொடக்கி வைக்கப்பட்ட பாரிய நலிவு நிகழ்ச்சித் திட்டங்களில் மாவட்ட ஒன்றிணைந்த கிராமிய அபிவிருத்தித் திட்டங்கள் ஒரு வகையாகும். கிராமிய குடும்பங்களின் வேலை வாய்ப்பையும் வருமானத்தையும் பெருக்குவதன் மூலம் பொது வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவது இந்நிகழ்ச்சித் திட்டத்தின் முக்கிய குறிக்கோள்களில் ஒன்றாகும். இந்நோக்கத்துக்காகப் பரவலாக்கப்படுத்தப் பட்ட திட்டமிடல் முறையின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாக மாவட்டங்களில் கிராமியத் துறைக்குக் கூடிய வளங்கள் ஒதுக்கப்படுகின்றன. பிராந்திய அபிவிருத்தித் திட்டமிடல் நோக்கத்துக்காக தனிப்பட்ட மாவட்டத்தை ஒரு அலகாகக் கருதி நிர்வாக மாவட்டங்களின் அடிப்படையில் ஒன்றிணைந்த கிராமிய அபிவிருத்தி (ஒகிஅ) நிகழ்ச்சித் திட்டங்கள் வகுக்கப்பட்டு நிறைவு செய்யப்படுகின்றன.

குறிப்பாக மகாவலி ஆற்றுப்படுக்கை அபிவிருத்திக் கருத்திட்டம் போன்ற அரசாங்கத்தின் முன்னோடித் திட்டங்களால் நேரடியாக நன்மையடையாத நிர்வாக மாவட்டங்களில் தற்போது இத்தகைய நிகழ்ச்சித் திட்டங்கள் செயற்படுத்தப்பட்டு வருகின்றன. இவ்வகையில் முன்னோடித் திட்டப் பிரதேசங்களுக்குப் புறத்தே காணப்படும் பல்வேறு பின்தங்கிய கிராமிய மாவட்டங்களில் பொதுத்துறை முதலீடுகளில் ஒரு வகையான சமநிலையை ஏற்படுத்துவதை ஒகிஅ நிகழ்ச்சித் திட்டங்கள் சாத்தியமாக்கியுள்ளன எனலாம்.

எனினும், தற்போது பல்வேறு மாவட்டங்களில் தொழிற்படுத்தப்பட்டுவரும் ஒகிஅ நிகழ்ச்சித் திட்டங்களின் நோக்கங்களையும் அவற்றில் முக்கியத்துவமளிக்கப்படும் விடயங்களையும் பொறுத்தவரை அவை ஒன்றிலிருந்து மற்றொன்று கணிசமாக வேறுபடுவதைக் காண முடிகின்றது. மிக அதிகளவு விவசாயத் தொழிற்படுநரையும் விவசாய நடவடிக்கைகளையும் கொண்ட குருணாகல் இத்தகைய நிகழ்ச்சித் திட்டங்களால் நன்மையடைந்த முதலாவது மாவட்டமாகும். இந்நிகழ்ச்சித் திட்டம் உலக வங்கியின் உதவியுடன் மேற்கொள்ளப்படுகின்றது. விவசாயப் பெருக்கம், வருமான அதிகரிப்பு என்பவற்றுக்கு இத் திட்டத்தில் பெருமளவு அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது. செலவுகள், சாதனைகள் என்பவற்றைப் பொறுத்தவரை ஒவ்வொரு கருத்திட்டக் கூறுகட்கும் ஆண்டுக்குரிய இலக்குகள் நிர்ணயிக்கப்படும் அடிப்படையில் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

மாறாக நோர்வே, சுவீடன், ஒல்லாந்து ஆகிய நாடுகளின் கொடையளிக்கும் முகவராண்மை நிலையங்களின் உதவியுடன் மேற்கொள்ளப்படும் வேறு சில ஒகிஅ நிகழ்ச்சித் திட்டங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட விடயங்களையும் குழாங்களையும் இலக்காகக் கொண்டு சம்பந்தப்பட்ட குழாத்தைப் பொறுத்தவரை முன்னுரிமை வழங்கப்பட வேண்டிய அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டுள்ளது. அம்பாந்தோட்டை, மாத்தறை, நுவரெலியா ஆகிய மாவட்டங்களில் தனி நாடுகளின் ஆதரவுடன் மேற்கொள்ளப்படும் ஒகிஅ நிகழ்ச்சித் திட்டங்கள் செயற்படுத்தப்பட்டு வருகின்றன. உலக வங்கியின் உதவியுடன் மேற்கொள்ளப்படும் திட்டங்களுடன் ஒப்பிடுகையில், இவற்றில் அபிவிருத்திச் செலவினங்களின் அளவுத் திட்டம் மிகக் குறைவானதாகும்.

## திட்டக் குறிக்கோள்கள்

இந்த மாவட்டத்தின் முக்கிய பொருளாதார நடவடிக்கைகளான நெல் மற்றும் தென்னை உற்பத்தியில் ஈடுபட்டுள்ள சுமார் 170,000 விவசாயக் குடும்பங்களின் விவசாய வினைத்திறன், தொழில், வருமானங்கள், வாழ்க்கைத் தரம் ஆகிய ஒன்றுடன் ஒன்று இணைந்த குறிக்கோள்களை எய்துவதாக குருணாகல் ஒகிஅ கருத்திட்டத்தின் அணுகுமுறை அமைந்துள்ளது. இதன் செயற்திறனைப் பொறுத்து நாட்டின் ஏனைய மாவட்டங்களில் நடைமுறைப்படுத்துவதற்கான மாதிரி பிராந்திய அபிவிருத்திப் பிரதிரூபத்தைத் தோற்றுவிப்பதையும் திட்டமிடுவோர் நோக்கமாகக் கொண்டுள்ளனர். நெல் மற்றும் தென்னை சிறு உடைமையாளரின் விவசாய முறைகளைத் தரமுயர்த்துவதே குருணாகலயில் கொள்ளப்பட்ட உத்தியாகும். திட்டப் பிரதேசத்திலுள்ள சிறு விவசாயிகளுள் பெரும்பாலானோர் குறைந்த தொழில்நுட்ப மட்டங்களில் தொழிலாற்றுகின்றனர் எனவும், கருத்திட்டத்தின் தலையீட்டால் உள்ளீடுகளின் பயன்பாடு அதிகரிக்குமெனவும், திருத்திய தொழில்நுட்பங்கள் பயன்படுத்தப்படுமெனவும் இதற்கேற்ற வகையில் உற்பத்தியில் பதிற் குறி அமையுமெனவும் அனுமானிக்கப்பட்டது. சிறிய உடைமையாளருக்குக் கிடைக்கக் கூடிய வளங்களை முன்னேற்றுவதன் மூலம் நெல் மற்றும் தென்னை உற்பத்திகளின் தளத்தை வலுவடையச் செய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வதே திட்டத்தின் முக்கியமான உத்தி விசையாக அமைந்தது. இவ்வகையில், விவசாயக் குளங்களைப் புனரமைத்தல், நெற்குச் சிறு உடைமைகளில் மறுநடுகை, சிறு நடுகை, வடுபயிர்ச் செய்கை, உரப்பாவனை மற்றும் விவசாய விஸ்தரிப்பு முறைகளில் முன்னேற்றங்களைக் கொண்டு வருதல், கடன் உள்ளீடான வழங்கல் என்பவற்றைக் கருத்திட்டத்தின் அடித்தளம் எனலாம். இந்த நேரடியான உற்பத்தித் திறன் கூறுகட்குப் புறம்பாக போக்குவரத்து, சுகாதாரம், கல்வி, குடிநீர் விநியோகம், கிராம மின்மயமாக்கல் என்பவற்றிலும் முன்னேற்றத்தை ஏற்படுத்துவதற்கு கட்டுப்படுத்தப்பட்ட மூலதனத்தை உள்ளடக்கியதாகக் கருத்திட்டம் அமைந்திருந்தது. இக் கருத்திட்டத்தில் 13 பெருங்கூறுகள் காணப்பட்டன. இவற்றை ஏற்கனவே புள்ள 20 அரசாங்க முகவராண்மை நிலையங்கள் கையாண்டன.

1979-83 காலச் செயற்படுத்து அட்டவணை முக்கியமாக சிறிய விவசாயக் குளங்களைப் புனரமைத்தல், தெங்கு அபிவிருத்தி திகழ்ச்சித் திட்டம் என்பவற்றைப் பூரணமாக எய்துவதற்காக 1985 வரை நீடிக்கப்பட்டது. மாவட்ட மட்டத்தில், கருத்திட்ட நடவடிக்கைகளை ஒருங்கிணைந்த முழுநேரப் பணிப்பாளர் ஊடாக திட்ட அமுலாக்கல் அமைச்சினூடும் 465மில்லியன் ரூபாவென மதிப்பிடப்பட்ட திட்டத்தின் மொத்தச் செலவுகள் மீதான கட்டுப்பாடு நிறுவப்பட்டது.

பொதுவான மதிப்பீடு

குளங்களை ஒட்டிய திகழ்ச்சித் திட்டம் பின்வரும் பொருளாதார விளைவு விகிதங்களை எய்தியது. தெங்கு அபிவிருத்தி தொடர்பான இலக்குகள் எய்தப்பட்டிருப்பின் விளைவு விகிதங்கள் இன்னும் அதிகமாக இருந்திருக்கும்.

மதிப்பிடப்பட்ட பொருளாதார விளைவு விகிதங்கள்

1. திட்டத்தொடக்கமும் திட்ட மீள்நிகழ்வும் — 72%
2. திட்டத்தின் முன்னும் பின்னும் — 128%

எளிதில் உணர்ந்தும் ஆய்வுடன் கூடிய விளைவு விகிதங்கள்

1. நெல்லுக்கு திட்டத்தின் 60% நலன்களுடன் — 31%
2. 1980 உற்பத்தி, விளைநிலப்பட்ட காணி என்பவற்றுடன் — 51%

இலக்கு பற்றிய சிந்தனை கொண்ட கிராமிய அபிவிருத்தி உத்தியை நடைமுறைப்படுத்தல், பொதுவான தொகுதி இலக்குகளை எய்துவதில் தொடர்புள்ள பல பிரச்சினைகளை முழுதாக கடைப்பிடிச் செய்தலும் அவற்றைத் திறமையாக ஒருங்கிணைத்தலும், ஏற்கனவே காணப்பட்ட சேவை அமைப்புகளை ஏற்ற வகையில் மாற்றியமைத்தல், குறிப்பிடத்தக்க பௌதீக பொருளாதார வேறுபாடுகளைக் கொண்டிருந்த ஒரு பிராந்தியத்தில் பல உற்பத்திக் கூறுகளின் உள்ளமைப்புகளை அபிவிருத்தி செய்தல் ஆகிய அனைத்தையும் எடுத்து நோக்கும் போது திட்டம் வெற்றி கண்டுள்ளது என்றே சொல்ல வேண்டும்.

நீண்ட காலத்தில் பொருத்துறை முதலீடுகளுக்கான கோரிக்கை படிப்படையில் விரிவடைந்து சென்றமையைக் குறித்துக் கொண்டால் திட்டத்தின் வாயிலாக மேற்கொள்ளப்பட்ட இருக்கமான முதலீடு மற்றும் அபிவிருத்தி எத்தனங்களும் அதன் விளைவாக ஏற்பட்ட உயர் நீரோட்டமும், எதிர்பார்க்கப்படும் எதிர்கால மீளக்கொடு விகிதமும் வேறு வழிகளில் போதியளவில் ஏற்பட்டிருக்க முடியாது.

எனினும் முன்னணித்துறைகளின் உற்பத்தி மற்றும் வளர்ச்சி சார்ந்த கூறுகளின் முதலீடு தொடர்பாகத் திட்டம் காட்டிய முன்னுரிமைக்கு அமைவாக ஏற்கனவே காணப்பட்ட உள்ளமைப்புகட்குப் புத்துயிர் வழங்குவதன் மூலமும் புதியவற்றை உருவாக்குவதன் மூலமும் வேலை வாய்ப்புகளை உருவாக்கல் என்ற அம்சத்தைப் போதிய அளவுக்குக் கணித்துள்ளது எனலாம்.

எனினும், திட்டத்தின் புலனாக பெரிய அளவிலானதும் நீடித்ததுமான வேலைவாய்ப்பு உருவாக்கம் ஏதும் இடம் பெற்றுள்ளது என்பதற்கான ஆதாரங்கள் எவையும் காணப்படவில்லை. இத்திட்டத்தில் காணப்பட்ட பயிர் விவசாயத்துக்குச் சாதகமான பக்கச் சார்பு கிராமிய கைத்தொழில் மயமாக்கல் நிகழ்ச்சித் திட்டத்தை வருந்து அதற்கு முதலீடுகளைச் செலுத்துவதிலிருந்து அதனைத் தடுத்துள்ளது. வேலை வாய்ப்புகளைக் கொண்டிய மட்டத்தில் உருவாக்குவதற்கும் விவசாயத் துறையிலிருந்து மிகையான தொழிலாளரைத் தன்பால் ஈர்ப்பதற்கும் நீண்ட காலத்தில் கைத்தொழில் மயமாக்கம் பெருமளவில் உதவியிருக்கும்.

சேவைகளை வழங்குதல் தொடர்பாக நிலவிய பிராந்திய சமநிலையின்மைகளை அகற்றுவது என்பது இத் திட்டத்தின் விளக்கப்பட்ட நோக்கங்களில் ஒன்றாகும். இதன் காரணமாகக் குருநாகல் மாவட்டத்தின் வெளியீடு, வருமானம் என்பவற்றில் பாதிப்புகளை ஏற்படுத்தியிருக்கலாம். இந்த நோக்கமும் போதியளவுக்கு எய்தப்படவில்லை. நீர்ப்பாசன புனருத்தாரண நிகழ்ச்சித் திட்டம், வேலைவாய்ப்புகள் நிகழ்ச்சித் திட்டத்தின் கணிசமான பகுதி என்பவற்றைக் கொண்ட ஏனைய நிகழ்ச்சித் திட்டங்களில் செலவிடப்பட்ட முதலீடுகள் ஈரவலயத்துக்குச் சாதகமான பக்கச் சார்பு கொண்டவையாக அமைந்திருந்தன. ஈரவலயத்தில் ஏற்கனவே நன்கு முன்னேறிய உள்ளமைப்புக்கள் காணப்பட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டன. எனவே முதலீடுகளை ஏற்றுக் கொள்வதற்கு அவ் விவசாயத்துக்குரியவையே ஏற்கனவே காணப்பட்ட சமமின்மைகளை குறைப்பதற்கு பதிலாக அவற்றை அதிகரிப்பதற்கே உதவியுள்ளன.

வாழ்க்கைத் தரத்திலும் வருமானங்களிலும் இக் கருத்திட்டம் ஏற்படுத்திய தாக்கங்களை இன்னும் சிறிது காலத்தின் பின்னரே மதிப்பீடு செய்யக் கூடியதாக இருக்கும். எனினும் திட்டத்தின் முன்னர் காணப்பட்ட பௌதிக வாழ்க்கைத் தரப் பெறுமானங்களின் சுட்டியில் பெரிய மாற்றங்கள் எதுவும் திட்டத்தின் பின்னர் ஏற்பட்டிருக்கவில்லை. மேலும் பூரண வறுமை நிலை இக் காலப்பகுதியினுள் 2 புள்ளிகளால் வீழ்ச்சி பெற்றுள்ளது. உள்ளமைப்பு வசதிகளுக்கும் சேவைகட்குமாகத் திட்ட காலத்தினுள் 430 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது. இதன் விளைவாகப் பண நிரம்பல் அதிகரித்திருக்க வேண்டும் என்பதுடன் வர்த்தக வியாபாரக்கம், அபிவிருத்தி நடவடிக்கைகள் என்பவற்றில் முன்னேற்றம் ஏற்பட்டு முன்னரை விட அதிகமான பணவீக்க விளைவுகள் ஏற்பட்டிருத்தல் வேண்டும். இத்தகைய அம்சங்களின் தாக்கங்களை எமது ஆய்விலிருந்து தனிமைப்படுத்த முடியாதென்ற போதிலும் ஒருங்கிணைந்த திட்டத்தினூடாக மேற்கொள்ளப்பட்ட முதலீடுகள் மாவட்டத்தின் வாழ்க்கைத் தரத்தைப் பேணுவதில் நிறைவான விளைவுகள் எவற்றையும் ஏற்படுத்தியிருக்க வேண்டுமெனவும் வறுமைக் கோட்டின் கீழாக இருந்தோரின் வருமான மட்டங்கள் திட்டகாலத்தில் மட்டுமாவது அதிகரித்திருக்க வேண்டுமெனவும் நாம் கருதுகின்றோம்.

இலக்கு நோக்கிய வழிமுறைக்கு தெழிச்சிபெற்றதாக அமைந்திருந்த போதிலும் திட்டமிட்ட குறுங்கால ஒருங்கிய நிகழ்ச்சித் திட்டத்தின் அணுகுமுறையானது திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்ட காலத்தில் பக்கச் சார்புள்ள அரசியலின் தாக்கங்களைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதில் பெருமளவுக்கு உதவியுள்ளது. இந்த அம்சங்கள் ஒருங்கிய நிகழ்ச்சித் திட்டக் கட்டுக் கோப்பை உரிய மாறுதல்களுடன் ஏனைய இடங்களில் பிரதிபண்ணஞ் செய்யக் கூடிய வாய்ப்பினைக் காட்டி நிற்கின்றன.

திட்டம் நிறைவேற்றப்பட்ட காலப்பகுதியில் (1979-85) மாவட்டத்திலும் நெல் மற்றும் தெங்கு உற்பத்தித் தளங்கள், சமூக உள்ளமைப்புகள், ஏனைய வசதிகள் என்பவற்றில் பாரிய முதலீடுகள் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டன. நீர் முகாமைத்துவம் தவிர்ந்த கருத் திட்டத்தின் ஏனைய அனைத்துக் கூறுகளும் மிகக் குறைவான கால தாமதத்துடன் தமது இலக்குகளை எய்துள்ளமை பதிவு செய்யப்பட்டுள்ளது. நீர்ப்பாசன புனரமைப்பு தொடர்பான காரியத்தில் ஏற்பட்ட குறைவுக்குப் பல காரணங்களுள்ளன. சிறிய குளங்களை தீர்மானிப்பதிலும், புனரமைக்கப்பட்டவற்றை ஒப்படைப்பதிலும் நேர்ந்த தாமதங்கள் திட்டமிட்டபடி திருந்திய நீர் முகாமைத்துவத்தைப் பெற்றுக் கொள்வதில் தாமதங்களை ஏற்படுத்திய காரணங்களாகக் காட்டப்படுகின்றன.

பௌதிக இலக்குகளைப் பிரதானமாக அடைவதற்கான சேவைகளையும் உள்ளீடுகளையும் பொருளாதார மற்றும் உள்ளமைப்புகளில் முன்னேற்றம் ஏற்படுத்துவது தொடர்பாக வழங்கப்பட்ட முக்கியத்துவம் காரணமாகத் திட்ட நடவடிக்கைகளில் மக்கள் பங்கேற்புக்குப் போதியளவு வரவேற்பை வழங்காதிருந்தமை திட்டத்தில் பிரதிபலிக்கப்படுகின்றது. பெற்றுக் கொள்ளும் பொறியமைப்புக்குப் பதிலாக வழங்கும் பொறியமைப்பு வலிமைப்படுத்துவதில் அழுத்தம் கொடுக்கப்பட்டமை இதன் தவிர்க்க முடியாத விளைவாக அமைந்தது.

சிறிய குளங்களைப் புனரமைத்தல் திட்டத்தின் ஒரு கூறாகும். இத்தொடர்பில் ஏற்பாடு, நிறைவேற்றும் என்பவை பற்றிய விவசாயிகளின் தேவைகளை விளக்கக் கூடிய பங்குள்ள பொறியமைப்பு, குறிப்பாக, திட்டத்தின் ஆரம்ப காலங்களில் காணப்பட்டமை அதன் ஒரு குறைபாடாகும். எனினும் சிறிய குளங்களைப் புனரமைக்க முன்னர் அதனால் நன்மைகளைப் பெற்றுக்கொள்ளும் விவசாயிகளைக் கலந்தாலோசிப்பது என்ற திட்ட முகாமையின் அண்மைக்கால நடைமுறை சரியான நடவடிக்கையாகும்.

உள்ளீடுகளின் விலைகள் மிக வேகமாக அதிகரித்துச் செல்வதாலும் விவசாயிகளின் இலாபங்கள் குறைவடைந்து செல்கின்றன. வெளியீட்டை அதிகரிப்பதற்கு அவசியமான நவீன உற்பத்தித் தொழினுட்பங்களைப் பயன்படுத்துவது பற்றிய அவர்களின் தீர்மானங்கள் மீது இவை பாதகமான விளைவுகளை ஏற்படுத்தலாம். இப் போக்கு நெல், தெங்கு ஆகிய இரண்டிலும் காணப்பட்டது.

திட்டத்தில் காணப்பட்ட பயிர் விவசாயம் பற்றிய பக்கச் சார்பு கிராமிய கைத்தொழில் மயமாக்க நிகழ்ச்சித் திட்டமொன்றில் முதலீடுகளை மேற்கொள்வதிலிருந்து அதனைத் தடுத்துள்ளது. அத்தகைய நிகழ்ச்சித் திட்டமொன்றின் நீண்டகால நல்விளைவுகள் கிராமிய வேலைவாய்ப்பு உருவாக்கலுக்கு மட்டுமன்றி விவசாயத் துறையிலிருந்து மிகை வளங்களைப் புலம் பெயரச் செய்வதிலும் உதவியிருக்கக்கூடும். திட்டத்தின் விளைவாக நீடித்த வேலைவாய்ப்பு உருவாக்க வழிமுறைகள் ஏதும் ஏற்பட்டதற்கான சான்றுகள் எவையுமில்லை. 430 மில்லியன் ரூபா செலவினம் ஏற்பட்டபோதிலும் நலன்களின்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாய்ச்சல் மற்றும் திட்டத்தின் தாக்கம் என்பவற்றைக் கண்காணிக்கும் பொறிமுறையமைப்பு எதுவும் உருவாக்கப்படாமை துரதிருஷ்டவசமானதே. எதிர்காலக் கருத்திட்டங்களில் முகாமைத்துவ தகவல் முறையொன்று சேர்க்கப்பட வேண்டியதன் அவசியத்தை இக்குறைபாடு உணர்த்தி நிற்கின்றது.

இலங்கையில் மாவட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டமொன்றுக்கு இடம்மிடல் பயன்படுத்தப்பட்ட முதல் சந்தர்ப்பமாக இது அமைந்திருந்தமையால் இக்கருத்திட்டம் சில வரையறைகளைத் தன்னகத்தே கொண்டிருந்தமை வெளிப்படை. எனினும் இந்த அணுகுமுறையானது அக மற்றும் புறத்தாக்கங்களைத் தவிர்க்க உதவிய அதே நேரத்தில் தகுந்த காரணிகளின் அடிப்படையிலும் நிறைவேற்றத்தின் போது சுட்டிய அனுபவங்களின் அடிப்படையிலும் மாற்றங்களைச் செய்வதற்கு ஏதுவான வகையில் நெகிழ்ச்சி கொண்டதாக அமைந்திருந்தமையால் மாதிரித் திட்டம் என்ற வகையில் இது வெற்றிகண்டுள்ளது.

இடம்மிடல் எண்ணக் கருவினும் தேவைப்படுத்தப் பட்ட மிகக் குறைந்த வழிமுறைகளே திட்டப்பணிகளின் ஆணையிடமாக அமைந்திருந்தன, செலவுத் திறன் மிக்கதாகத் திட்டத்தை நிர்வகிப்பதில் இது பெருமளவுக்கு உதவியது. இந்த ஆய்வில் காட்டப்பட்ட விளைவுகளும் பௌதிக இலக்குகளையும் முகவராண்மை நிலையங்களிடையேயான ஒத்துழைப்பையும் பொறுத்தவரை கட்டப்பட்ட சாதனைகளும் இத்திட்டம் பிரதிநுப்படு செய்யப்படுவதற்கான ஏதுக்களை மேலும் அதிகமாக்குகின்றன.

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

மாவட்டக் கருதுகோளின் கீழ் குழுத்தினருக்கு அத்தியாவசியமாகத் தேவைப்படும் நடவடிக்கைகள் அவர்களுக்கு ஏற்றவிதத்தில் வடிவமைக்கப்பட்டிருந்தன. குருணாகல் நிகழ்ச்சித் திட்டத்தைப் போலன்றி இத்தகைய நிகழ்ச்சித் திட்டங்களின் அபிவிருத்திச் செலவு அலகுத் திட்டம் குறைவானதாகவே இருந்தது.

ஒப்பீட்டளவில் ஒ.கி.அ நிகழ்ச்சித் திட்ட அணுகுமுறையானது அபிவிருத்தியைப் பொறுத்தவரை புதிதான ஒன்றாகும். இதனால் இவற்றின் முழுமையான தாக்கம் பற்றிய பரந்த மீளாய்வுகள் எவையும் மேற்கொள்ளப்படவில்லை. ஒ.கி.அ நிகழ்ச்சித் திட்டங்கள் பல்வேறு தடைகளைத் தாண்டி வந்துள்ளமையை அநுபவ வாயிலாக அறியமுடிகின்றது. வறுமையை ஒழித்தல் என்ற இவற்றின் முக்கிய குறிக்கோள் மீது இந் நிகழ்ச்சித் திட்டங்கள் பாரிய தாக்கங்கள் எவற்றையும் விளைவிக்கவில்லை. பரந்துபட்ட அபிவிருத்திக் குறிக்கோள்களைத் தன்னகத்தே கொண்டிருப்பதால் போதும் அவை எவற்றையும் ஆற்ற இவை எத்தனிக்கும் அதேவேளையில் இவற்றுள் எவற்றையும் ஆற்ற முடியாது போகின்றது என்ற கண்டனத்துக்கு இவை உள்ளாகின்றன.

1985 இல் குருணாகலில் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீடு ஒன்றிலிருந்து ஒ.கி.அ நிகழ்ச்சித் திட்டம் இம் மாவட்டத்தின் ஒரு சில கிராமங்கட்கு எதனையும் செய்திருக்கவில்லை என்பது தெரிய வந்தது. இம்மாவட்டத்தின் கல்கமுவ பகுதியிலுள்ள பருகம, மொரகொல்ல என்ற விருத்தி குன்றிய இரு கிராமங்கள் மீளாய்வுப் பாசறை ஒன்றினுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டன. நேரடியாக அங்கு சென்று பார்த்தபோது ஒ.கி.அ நிகழ்ச்சித் திட்டத்தால் இக் கிராமங்கள் மிகக் குறைந்தளவு நன்மைகளை மட்டுமே பெற்றுவந்துள்ளமை தெரியவந்தது. இக்கிராமங்கள் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு குளம் மட்டுமே புனரமைக்கப்பட்டிருந்தது ஆனால் இது அப்பகுதி மக்களைத் திருப்திப் படுத்துவதாக இருக்கவில்லை. அத்துடன் புனர்நிர்மாணம் மேற்கொள்ளப்பட்ட விதமும் அவர்களுக்குத் திருப்தியளிக்கவில்லை. இவ்விரு கிராமங்களிலும் குடிநீர், வைத்தியசாலைகள், பாடசாலைகள், மிருக வைத்திய நிலையங்கள் என்பவை தொடர்பாக இன்னும் அதிகமான அக்கறை செலுத்தப்பட வேண்டியுள்ளது. கள வேலைக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட இவ்விரு கிராமங்களும் ஒ.கி.அ நிகழ்ச்சித் திட்டத்தால் மேற்கொள்ளப்பட்ட பணிகள் அனுகூலிக்கப்படக்கூடிய அளவுக்கு இடம் பெற்றிருக்கவில்லையென பாசறைப் பார்வையாளர் ஒருவர் அறிவிக்கின்றார்.

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

காணப்படுகின்றது. வர்த்தக, கைத் தொழில் கொள்கைகள் விவசாயம் சாராத கிராமத் துறையின் விரிவாக்கத்துக்கு உதவுவனவாக அமையவில்லை. அவற்றுள் உருவாக்கப்பட்ட சூழல் கிராமக் கைத்தொழில் கட்குப் பாதகமானதாகவே அமைகின்றது. சிறிய எமது நாடு நல்ல கிராமியத் தொடர்பூட்டலையும் போக்குவரத்து வசதிகளையும் கொண்டது. சென்று காட்டின் விளைவுகள் எளிதிற் பரவக் கூடியதுதான் அமைப்பையும் வாழ்க்கை முறைகளையும் கொண்டது. இச் சூழலில் இத்தகைய கொள்கைகள் நவீன துறையால் உற்பத்தி செய்யப்படுவனவும் இறக்குமதி செய்யப்படுவனவுமான பொருட்கள் சார்ந்த பாரிய ஊழக்குகளையும் அவற்றின் பொருந்தா விளைவுகளையும் ஏற்படுத்தக் கூடும். அதிகரித்துச் செல்லும் விவசாயச் செலவுகள் கிராமத் துறையிலுள்ளோரைப் பெரிதளவிலும் அத் துறையிலுள்ளோரையே வறுமையில் அடுப்படுத்துவதற்கும் மேலும் சாதகமான வர்த்தக, கைத்தொழிற் கொள்கைகள் தேவையாகும். இத் துறையின் நடவடிக்கைகள் சந்தை விரிவாக்கம் பெரும் சக்திகளாலும் மூலதனமிடப்படக் கூடிய நிதிகளின் அதிகரித்த நிரம்பலால் தூண்டப்படல் வேண்டியவையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுவீடிஷ் உதவியுடன் மாத்தறை மாவட்டத்தில் கிராமிய அபிவிருத்தி

1970களில் பின்னரைப் பகுதியில் இலங்கையின் தென்பகுதி குறைவபிவிருத்தியின் குணம்சங்களைக் கொண்ட பல பண்புகளைக் கொண்டதாக இருந்தது. குடித்தொகையின் பாதிக்கு மேற்பட்டோர் உணவு முத்திரை பெறும் தகவுடையோராகக் காணப்பட்டனர். வேலையின்மை உச்ச கட்டத்தை அடைந்திருந்தது. சிசு மரண விகிதமும் நோய்வாய்ப்படும் விகிதமும் மிக உயர்வானவையாகக் காணப்பட்டன.

ஏற்கனவே காணப்பட்ட வசதிகளைத் தொழிற்படுத்தவும், மட்டுப்படுத்தப்பட்ட புதிய முதலீடுகளை ஏற்படுத்தவும் மட்டுமே மாவட்ட அரசாங்க நடவடிக்கைகள் போதுமானவையாக இருந்தன. பின் தங்கிய மாவட்ட மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு இவை போதியனவாக அமையவில்லை. எனவே சிறப்பான அபிவிருத்தி முயற்சிகட்கான தேவை நிலவியது.

இப் பிரச்சினைகட்கான ஒரு பதிற்குறியாக மாத்தறை ஒருங்கிணைந்த கிராமிய அபிவிருத்தித் திட்டம் (ஒகிஅ) சுவீடிஷ் சர்வதேச அபிவிருத்தி நிறுவனமான சீடாவின் ஆதரவுடன் 1979ல் ஆரம்பிக்கப்பட்டது. ஆரம்ப காலமுதலே இக் கருத்திட்டம் அதன் தன்மையைப் பொறுத்தும் சிந்தனைப் போக்கைப் பொறுத்தும் பாரிய மாற்றங் கட்கூடாகப்பட்டு வந்துள்ளது. இத் திட்டத்தின் ஆரம்பகால நடவடிக்கைகள் தற்போது கண்டனக் கண்கொண்டு நோக்கப்படுகின்றன.

கருத்திட்டமும் அதன் முகாமையும் எத்தகைய கோட்பாடுகளால் வழி நடாத்தப்பட்டன? மாத்தறை மாவட்டத்தில் மாற்றமுற்று வரும் குறிப்பிட்ட சூழ்நிலைகட்கிணங்க கருத்திட்ட உள்ளீடுகள், அதன் சாதனைகள் என்பவற்றைப் பொறுத்தவரை, மாற்றமுற்று வந்த சித்தாந்தங்கள் எவற்றைக் குறித்து நின்றன? கருத்திட்டத்தின் எதிர்காலப் போக்கு எத்தகைய தோற்றத்தைத் தரும்? இக் கட்டுரையில் நாம் விடையிறுக்க எத்தனிக்கும் சில முக்கிய வினாக்கள் இவையாகும்.

## கிராமிய அபிவிருத்திக்கான இலங்கை அரசாங்கத்தின் கொள்கை

அரசாங்கத்தின் முன்னுரிமை சார்ந்த கொள்கையாக ஒகிஅ கோட்பாடு 1977ல் கைக்கொள்ளப்பட்டது. கிராமிய அபிவிருத்தியை ஏற்படுத்தக்கூடிய பொருத்தமான ஒரு முயற்சியாக ஒகிஅ அமைகின்றது. சிறிய விவசாயிகள், வாரக் குடிகள், காணியற்றோர் என்பவர்களை உள்ளடக்கிய கிராமிய வறியவர்களின் சமூக பொருளாதார வாழ்க்கையை முன்னேற்றும் உத்திகளைக் கொண்டதாக அது அமைகின்றது. கருத்திட்டத்தின் பல்வேறு படிகளான திட்டமிடல், நிறைவேற்றல், நிலைநிறுத்தல் ஆகியவற்றில் ஏழை மக்களைச் சம்பந்தப்படுத்த வேண்டிய தேவையை உணர்ந்ததாக அந்த உத்தி அமைந்துள்ளது. இதிலிருந்து சில முக்கிய அம்சங்கள் தோற்றம் பெறுகின்றன. கிராமிய சமூகங்களின் ஏழை வகுப்பினரை இலக்காகக் கொண்டவையாக அபிவிருத்தியின் நலன்கள் வகுக்கப்படுகின்றன. அபிவிருத்திப் படிமுறையில் அவர்கள் தீவிரமாகப் பங்கேற்பது முக்கியமான விடயமாகி விட்டது.

## கிராம அபிவிருத்திக்கான சீடாவின் நோக்கங்களும் கொள்கையும்

ஆரம்பத்தில் ஒகிஅ திட்டங்களை வகுப்பதில் சீடா (சுவீடிஷ் சர்வதேச அபிவிருத்தி நிறுவனம்) மிகவும் செயலூக்கம் குன்றிய பங்கினையே வகித்தது. வறுமையின் மீதும், அதன் காரணங்கள் மீதும் நேரடித் தாக்

பி. ஜே. போக்மன்
ஜொன்றூர்

குதலைக் கொடுப்பதன் மூலம் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு பங்களிப்புச் செய்வதே அபிவிருத்தி உதவியின் நோக்கமாக இருந்தது. ஆனால் இது குறிப்பிட்ட கொள்கை வழிமுறையாக மாற்றப்படவில்லை. மாற்றீடாக ஒகிஅ திட்டமிடலில் சுய விசுவாச அணுகுமுறை கடைப்பிடிக்கப்பட்டது.

சுவீடிஷ் அபிவிருத்தி உதவிகளை வடிவமைத்தல் அவற்றை வழி நடாத்தல் என்பவைபற்றி சுவீடிஷ் பாராளுமன்றமான 'ரிக்ஸ்டாக்' ஐந்து இலக்குகளை விதித்திருந்தது. இவ் உதவிகளால் பின்வரும் விளைவுகள் ஏற்படுத்தப்படல் வேண்டும்.

— பொருளாதார அபிவிருத்தி
— பொருளாதார - சமூக சமநிலை ஏற்படல்.
— பொருளாதார - அரசியல் சுதந்திரம்.
— ஜனநாயக அடிப்படையிலான சமூக வளர்ச்சி.
— இயற்கை வளங்களைத் தூரதிருஷ்டியுடன் முகாமைசெய்வதும் சூழலைப் பாதுகாப்பதும்.

இந்த இலக்குகளை அடிப்படையாகக் கொண்டு '80களின் ஆரம்பத்தில் கிராமிய அபிவிருத்திக்கான உத்தி ஒன்றினை சீடா வகுத்தது. கிராமியக் குடித்தொகையின் மிகக் குறைந்த வருமானம் பெறுவோரின் 40 சதவீதத்தினர் இலக்குக் குழுவாக இருக்கவேண்டும் என்பது பொது விதியாகக் கொள்ளப்பட்டது. அபிவிருத்தி குறித்த தீர்மானம் மேற்கொள்வதிலும் அதனை நடைமுறைப்படுத்துவதிலும் உள்ளூர் மக்களுக்கு முக்கிய பங்குண்டு; அரசாங்கம் மேற்கொள்ள வேண்டிய தீர்மானங்களுக்கான வழிகாட்டலுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளூர் வாசிகளின் ஆலோசனைகளும் பெறப்படல் வேண்டும்; இத்தகைய இரு அணுகு முறைகளை இத்த உத்தி வெளிப்படுத்திக் காட்டுகின்றது. மக்கள் பங்களிப்புடன் வளங்களை வளர்த்தெடுத்தல் என்ற மக்களின் முக்கிய பணிக்கு தெளிவான முக்கியத்துவம் வழங்கப்பட்டுள்ளது. அரசியற் சார்புள்ளவையும் அல்லாதவையுமான மக்கள் நிறுவனங்கள் உள்ளூர் மட்டங்களிற் காணப்படல் வேண்டும் என்பதையே இது குறிக்கின்றது.

உத்தியின் இலக்கு 1961 வரை 'பொருளாதார அபிவிருத்தி' என்பதாக இருந்தது. இதன் பின்னர் விரிவான குறிக்கோள்களைக் குறிக்கும் வகையில் இது 'வளங்களின் அபிவிருத்தி' என மாற்றியமைக்கப்பட்டது. ஒரு நாட்டின் அபிவிருத்திக்குப் பொருளாதார வளங்களை விட ஏனைய முக்கிய வளங்களும் தேவைப்படுகின்றன. ஒரு நாட்டின் அரச நிர்வாகம் மற்றும் படிப்படியாக வளர்த்தெடுக்கப்படும் அறிவு பொருளாதாரஞ் சாராத வளங்களுக்கு ஓர் எடுத்துக் காட்டாகும். மக்கள் தொகுதியினரிடையே பரந்த வேறுபாடுகள் காணப்படும் ஒரு நாட்டில் தேசிய ஒருமை தோன்றுவது அந்நாட்டின் முக்கிய வளங்களில் ஒன்றாக அமையலாம்.

உத்தியில் விளக்கப்பட்ட சமப்படுத்தல் இலக்கு பின்வரும் முறையில் மேலும் நுணுக்கமாக வகுக்கப்பட்டுள்ளது.

1. வருமானம், ஆதனம் என்பவற்றில் சமத்துவம்
2. கல்வி, சுகாதாரம், குடிநீர் போன்ற சமூகசேவைகளைப் பெற்றுக் கொள்வதில் சம உரிமை.
3. சமூக அந்தஸ்து, அரசியல் செல்வாக்கு என்பவற்றில் சமஉரிமை.

இலக்குள் இரண்டாவது அம்சமான கிராமிய அபிவிருத்திக் கருத் திட்டங்களுக்கான நிதி உதவியின் முக்கிய வகைத்தைப் பெற்றவை.

அமைப்புமுறை

ஒ.கி.அ. திட்டங்களின் திட்டவாக்கம், நிறைவேற்றல் என்பவற்றுக்கான முற்றான பொறுப்பு திட்ட அமுலாக்கல் அமைச்சின் பிராந்திய அபிவிருத்திப் பிரிவின் பணியாகிறது. நாடெங்குமுள்ள மாவட்ட திட்ட அலுவலகங்களுடாக இப்பிரிவு தொழிலாற்றுகின்றது. தேசிய உத்தி, கொள்கைகள் என்பவற்றின் அடிப்படையில் பிராந்திய அபிவிருத்திப் பிரிவு செய்யும் திட்டமான சிபாரிசுகளை மாவட்ட ஒ.கி.அ. கருத்திட்ட அலுவலகங்கள் செயற்படுத்துகின்றன.

மாத்தளை ஒ.கி.அ. நிகழ்ச்சித் திட்டம் ஒரு கருத்திட்டப்பணிப்பாளரதும், மூன்று துணைப் பணிப்பாளர்களதும் கீழ் செயற்படும் திட்டப் பணியணியூடாக மாவட்ட மட்டத்தில் திட்டப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. ஆரம்ப காலத்தில் மாவட்டத்திலுள்ள தொடர்பான திணைக்களங்களால் கருத்திட்டமிடல், நிறைவேற்றல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன. திட்ட அமுலாக்கத்தில் தொடர்பான திணைக்களங்கள் தொடர்ந்தும் முக்கிய பங்கு வகிக்கும் அதேநேரத்தில் கருத்திட்டங்களைத் திட்டமிடல், அவற்றை ஆயத்தப்படுத்தல், கண்காணித்தல், மதிப்பீடு செய்தல் போன்றவற்றில் திட்டப்பணியணி தற்போது கணிசமான ஆர்வத்துடன் பங்கேற்று வருகின்றது. திட்டத்தின் கூறுகளைப் பொறுத்தவரை அபிவிருத்தி அலுவலர், திட்ட அமுலாக்க அலுவலர் என்போருடாகத் திட்டப்பணியணி ஆரம்ப நிறைவேற்று முகவராண்மை நிலையமாகவும் பணியாற்றுகின்றது.

உள்ளூர் மட்டத்தில் கருத் திட்டவாக்கம், நிறைவேற்றல் என்பவற்றில் உதவி அரசாங்க அதிபர்களின் பணி பெறப்படுகின்றது. கிராம அபிவிருத்திச் சங்கங்கள், சிக்கன, கடனுதவி கூட்டுறவுச் சங்கங்கள் போன்ற கிராமிய நிறுவனங்களின் பங்களிப்பும் பெறப்பட்டுவருகின்றது.

ஏனைய மாவட்டங்களில் உள்ளதுபோல, மாவட்ட மந்திரி, அரசாங்க அதிபர் ஆகியோரின் தலைமையில் இயங்கும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு ஒ.கி.அ. கருத் திட்டங்களின் மதிப்பீட்டாளராகவும், கண்காணிப்பாளராகவும் பணியாற்றுகின்றது. அரசாங்க அதிபர் தனது பதவி வழியான பணிகளான ஒருங்கிணைப்பு மற்றும் நிர்வாகப் பணிகளூடாகத் திட்டத்துக்கு முக்கிய ஆதரவு வழங்குபவர் ஆகின்றார்.

திட்டத்தின் ஒவ்வொரு கட்டம் தொடர்பாகவும் (வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தினூடாக) இலங்கை அரசாங்கத்துக்கும் (நொராட் ஊடாக) நோர்வே அரசாங்கத்துக்குமிடையே ஒப்பந்தம் செய்யப்படுகின்றது. திட்டத்தின் உள்ளீடுகள், நிறைவேற்றப்பட வேண்டிய நடவடிக்கைகள் என்பன இந்த ஒப்பந்தங்களின் அடிப்படையில் தீர்மானிக்கப்படுகின்றது. ஒவ்வொரு கட்டத்துக்குமான தொழிற்படு திட்டவாக்கத்தை ஒ.கி.அ. நிகழ்ச்சித் திட்டப்பணியணியின் ஆலோசனையின்படி வகுக்கப்படுகின்றது. ஆண்டுக்குரிய திட்டங்களாக இவை மேலும் வகுக்கப்படுகின்றன.

ஆரம்பகாலம் (1979) தொடக்கம் நொராடும் ஒ.கி.அ. நிகழ்ச்சித் திட்டமும் இணைந்து ஆண்டுதோறும் திட்டத்தின் சாதனைகள் பற்றிய மதிப்பீட்டை மேற்கொண்டு வருகின்றன. அடைந்த முன்னேற்றம் பற்றியும், முன்னேற்றம் ஏற்படாவிட்டால் அதற்குரிய காரணம் பற்றியும் மதிப்பீடு செய்து அதன் அடிப்படையில் அடுத்த ஆண்டுக்கான புதிய ஆலோசனைகள் பரிசீலிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கப்படுகின்றன. இவ்வகையிலேயே அடுத்த ஆண்டுக்கான நிதி ஒதுக்கீடும் செய்யப்படுகின்றது. ஒகிஅ நிகழ்ச்சித் திட்டத்தின் உத்திகள், அணுகுமுறைகள் என்பவற்றை மதிப்பீடு செய்து, கருத்திட்டம் திட்டமிடப்பட்ட விளைவுகளை ஏற்படுத்தும் விதத்தில் சரியான பாதையில் செல்கின்றதா என்பது உறுதிப்படுத்தப்படுகின்றது. இடையில் உள்ளக மீளாய்வுக்கும் ஆண்டுதோறும் மேற்கொள்ளப்படும் மதிப்பீடு அவசியமானதாகும்.

புற மீளாய்வுகள் ஒவ்வொரு கட்டத்தின் முடிவில் ஒகிஅ திட்டத்தின் முக்கியமான காலப் பகுதியில் மேற்கொள்ளப்படுகின்றன. இத்தகைய இரு மீளாய்வுகள் இதுவரை மேற்கொள்ளப்பட்டுள்ளன. திட்டத்தின் முதலாவது கட்ட நிறைவின் பின் 1983 இலும் இரண்டாவது கட்ட நிறைவைத் தொடர்ந்து 1987 இலும் மீளாய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. ஒகிஅ நிகழ்ச்சித் திட்டத்துக்கு உதவி வழங்கல் தொடர்பான கொள்கையாக்கத்துக்கு இத்தகைய மீளாய்வுகள் மேலும் பெருமளவில் உதவுகின்றன.

கருத்திட்டத்தின் முன்னேற்றமும் பரிணாமமும்

தற்போது மாத்தறை ஒகிஅ நிகழ்ச்சித் திட்டத்தின் மூன்றாவது கட்டம் செயற்படுத்தப்படுகின்றது. இதற்கு முந்திய ஒவ்வொரு கட்டமும் நெருக்கமாக மீளாய்வு செய்யப்பட்டு அதன் விளைவாகத் திட்டத்தின் போக்கிலும் அதன் உள்ளடக்கத்திலும் முக்கிய மாற்றங்கள் செய்யப்பட்டன.

முதலாவது கட்டம் (1979 - 84)

கிராமிய அபிவிருத்திக்கான இலங்கை அரசாங்கத்தின் கொள்கைகளுக்கு மாத்தறை ஒகிஅ திட்டம் 1979 ல் ஆரம்பிக்கப்பட்டது. இக் கருத்திட்டத்தின் கீழ் தொடர்ச்சியான பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. தேசிய அபிவிருத்திக்கெனத் தெளிவான தேசிய உத்தி ஒன்று வகுக்கப்பட்டிராமையால் உலக வங்கியின் குருணாகலை ஒகிஅ திட்டத்தை ஒட்டி இதுவும் பல்துறை முதலீட்டுத் திட்டமாகச் செயற்படுத்தப்பட்டது.

தொடர்பு கொண்ட இணைக் களங்கள் ஏற்கனவே மேற்கொண்டிருந்த முயற்சிகளை முன்னேற்றவும் வெளிப்புலனாகிய இடைவெளிகளை நிரப்பவும் தேவையான நடவடிக்கைகள் தேர்ந்தெடுக்கப்பட்டன. மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையம் நிர்மாணித்தல், மூன்று தாவர நாற்று மேடைகளை அமைத்தல், கோழிக்குஞ்சு பொரிக்கும் நிலையம் அமைத்தல், சிறிய தேயிலைத் தோட்ட உடைமையாளருக்காக கொழுந்து சேகரிக்கும் நிலையங்களை அமைத்தல், தொழிற்சாலைகளை நிர்மாணித்தல், புனரமைத்தல்; படகு நிர்மாணத் துறை முன்றையும் பனிக்கட்டி ஆலையையும் அமைத்தல், கிராமிய மின்னாக்கத் திட்டங்கள், 1319 ஏக்கர் காடுகளை வளர்த்தல், வருமான உருவாக்க நடவடிக்கைகளில் மாதரைப் பயிற்றுவித்தல், கிராம சுகாதார சேவகர்களைப் பயிற்றுவித்தல், பல்நோய் சிகிச்சை நிலையங்களை நடாத்துதல், பாதைகளை அமைத்தல், சிறிய குளங்களைப் புனரமைத்தல் ஆகியவை இவற்றுட் குறிப்பிடத்தக்கவையாகும்.

இவ்வகையிற் பார்க்கும்போது, துறைவாரியான பெரிய ஆய்வுகளை மேற்கொள்ளாமையும், துறைகட்கிடையேயான பிரச்சினைகள் பற்றியும் அவற்றிற்கிடையேயான உறவுகள் பற்றியும் கருத்திற் கொள்ளாமல் மேலெழுந்தவாரியாக முதலாம் கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன என்பதை அறியக் கூடியதாக இருக்கின்றது. முதலாம் கட்டத்துக்கான மொத்தச் செலவு 7.7 கோடி ரூபாவாகும். இச் செலவை ஈடு செய்வதற்காக ஸிடா 18.2 மில்லியன் சுவீடிஷ் குரோணர்களை (7.3 கோடி ரூபா) வழங்கியது.

முதலாவது கட்டம் பற்றிய மீளாய்வு

1983 மே மாதத்தில் முதலாம் கட்டம் பற்றி மேற்கொள்ளப்பட்ட புற மீளாய்வு மிகவும் கடுமையானதாகும். கிராமிய அபிவிருத்தி தொடர்பாகப் புதிதாக வகுக்கப்பட்ட உத்தியின் அடிப்படையில் மீளாய்வுக்கான வழிகாட்டல்கள் தயாரிக்கப்பட்டன. இவற்றின் அடிப்படையிலேயே முதலாம் கட்ட நடவடிக்கைகள் யாவும் மதிப்பீடு செய்யப்பட்டன. பத்துக் கருத்திட்டக் கூறுகள் மீது ஆய்வு நடாத்தப்பட்டு மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டது. திட்டத்தால் சரியான பிரச்சினைகள் அணுகப்பட்டிருந்த போதிலும் இவை திட்டமிட்ட விளைவுகளை ஏற்படுத்தவில்லை எனவும் பிரச்சினைகளைக் கண்டறிவதிலும் அவற்றை ஆய்வு செய்வதிலும் போதிய அக்கறை காட்டப்படவில்லை எனவும் கண்டறியப்பட்டது. பல நடவடிக்கைகள் வெற்றியும் தோல்வியும் கலந்த விளைவுகளையே அடைந்திருந்தன.

திட்டத்தின் பயனாக எப்போதும் வறியோரே நன்மைகளைப் பெறுவோராக அமைந்திருக்கவில்லை என்பது ஆய்வின் பயனாக அறியப்பட்டவற்றுள் முக்கியமானதாகும். திறமையாகச் செயலாற்றிய சில கூறுகளுங்கூட உண்மையான அமுலாக்கத்தின் போது நன்மைகளைப் பெற்றுக் கொள்ள வேண்டிய இலக்குக் குழாத்தினரை விட்டு விலகிச் சென்றிருந்தன. உள்ளமைப்பு விருத்தி செய்யப்பட்ட முன்னேற்றங்கள் ஏழைகட்கு மிகக் குறைந்த அளவிலேயே நன்மை பயந்தன என்பதும் வெளிவந்தது. நடவடிக்கைகளைத் திட்டமிடல், அமுலாக்கல் என்பவற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றில் இலக்குக் குழாத்தினரை ஏற்படுத்துவது தொடர்பாக மிகக் குறைந்த எத்தனங்களே மேற்கொள்ளப்பட்டிருந்தமையும் மீளாய்வுக் குழுவினரின் பலத்த கண்டனத்துக்கு உள்ளாகியது. இலக்குக் குழாத்தினரைக் குறிப்பாக மனதிற் கொண்டே நடவடிக்கைகள் வடிவமைக்கப்படல் வேண்டுமென்ற பாடம் இதிலிருந்து பெறப்பட்டது. மாத்தறைத் திட்டப் பணிமனையினருக்கும் சம்பந்தப்பட்ட ஏனையோருக்கும் முதலாவது கட்டம் பயனுள்ள படிப்பினை அனுபவத்தைக் கொடுத்ததாக அமைந்தது.

### இரண்டாவது கட்டம் 1984 - 88

1983ல் ஆரம்பிக்கப்படவேண்டிய இரண்டாவது கட்டத்துக்கான ஆரம்பத்திட்ட ஆலோசனைகள் 1982 ஆகஸ்ட் மாதத்தில் மதிப்பீட்டுக் குழுவினரின் வரவுக்கு முந்திய மூன்று வாரங்களில் வகுக்கப்பட்டன. முதலாம் கட்டத்தில் கைக்கொள்ளப்பட்ட திட்ட ஆலோசனைகளிற் பெரும்பகுதியை ஏற்பதற்குக் குழுவினர் தயக்கங்காட்டினர். இதனால் கிராம அபிவிருத்திப் பிரிவினருடனும் திட்டப் பணிமனை ஊழியருடனும் நீடித்த கலந்துரையாடலே மேற்கொண்ட பின்னரே இறுதியாக ஆலோசனைகள் இரு சாராராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டன. நன்மை பெறுவோர் திட்டத்திற் பங்கேற்றல், இலக்குக் குழாத்தினரை நோக்கிய அணுகுமுறை என்பவற்றுக்கு அழுத்தம் கொடுக்கப்பட்ட சீடாவின் உத்திக்கமைவாக்கப்பட்ட தகைமைகளைக் கொண்டவையாக இவ்வாலோசனைகள் இறுதிவடிவம் பெற்றன.

1984 ஜூலை மாதத்தில் இரண்டாம் கட்டம் ஆரம்பிக்கப்பட்டது. முதலாம் கட்டத்துக்கு முற்றிலும் வேறுபட்ட கொள்கைகளையும் திட்டமிடப்பட்ட கோட்பாடுகளையும் அடிப்படையாகக் கொண்ட நடவடிக்கைகளை உள்ளடக்கிய வகையில் நிகழ்ச்சித் திட்டம் தயாரிக்கப்பட்டது. கிராமிய அபிவிருத்திக்கான சீடாவின் உத்தியின் செல்வாக்குக்கு உட்பட்ட விதத்தில் இரண்டாம் கட்டம் அமைந்தது.

கண்டறிவுப் பாங்கிலும், பரீட்சார்த்த அடிப்படையிலும் புதிய கருத்துக்கள் தொழிற்படுத்தப்பட்டன. இலக்குக் குழாத்தினரின் வாழ்க்கைத் தரத்தை ஈற்றில் முழுமையாக முன்னேற்றக் கூடியதாகக் கருத்திட்டக் கூறுகளை வடிவமைத்தல் என்பது ஒரு சவாலாகவே அமைந்தது. திட்ட காலத்தினுள் புதிய கருத்திட்ட ஆலோசனைகளை உள்ளடக்கக் கூடிய அளவுக்கு போதிய நெகிழ்ச்சி கொண்டனவாகவே ஆரம்ப தொழிற்படு திட்டம் வகுக்கப்பட்டது.

வறியோருள் 40 சதவீதமானவர்களை நோக்கித் திட்டங்கள் இலக்குப்படுத்தப்படல் வேண்டும் என்பது சீடாவின் குறிப்பான கிராமிய அபிவிருத்தி உத்தியாக அமைந்தது. அத்துடன், வறியோரின் வருமானங்களும் வாழ்க்கைத் தரமும் வறுமை குறைந்தோரது வருமானம், வாழ்க்கைத் தரம் என்பவற்றை விட வேகமாக வளர்ச்சி பெறவும் வேண்டும். இவ்வகையில் அதிகளவிலான சமத்துவம் ஏற்படுத்தப்படல் வேண்டும். வறுமைப் பிரச்சினையை ஆய்வு செய்தல், வறுமையைப் போக்குவதில் நன்மை பெறுவோர் நேரடியாகப் பங்கு கொள்ள வழிவகை செய்தல் என்பவை தொடர்பாகவும் இந்த உத்தியில் வழிவகை செய்யப்பட்டிருந்தது. மாத்தறை றிவு நிகழ்ச்சித் திட்டத்தைப் பொறுத்தவரை இக் கருத்துக்களைப் பயனுள்ளதும் யதார்த்தபூர்வமானதுமான நிகழ்ச்சித் திட்டமாகத் தொழிற்படுத்துவதில் அனுபவக் குறைவு என்பது பெருந்தடையாகவே இருந்தது.

புதிய சிந்தனையோட்டத்தின் விளைவாகத் தோன்றிய இரண்டாவது கட்டத்தின் நடவடிக்கைகளின் வகைகள் பற்றிய பரந்த சித்திரமாக இதன் கீழுள்ள சுருக்க விவரணம் அமைகின்றது.

### வீட்டுத் தோட்ட அபிவிருத்தி

முதலாவது கட்டத்தின் தொடர்ச்சியாக வீட்டுத் தோட்டத்தில் பயிரிடுவதற்கான பயிர் வகைகளை விநியோகித்தல் அமைந்தது. நன்மை பெறுவோரைப் பயிற்றுவிக்கும் நிகழ்ச்சித் திட்டம் இதனுடன் புதிதாகச் சேர்க்கப்பட்டது. முதலாம் கட்டத்தின் போது அபிவிருத்தி செய்யப்பட்ட மாப்பயன, விரிவான பண்ணைகளில் அமைக்கப்பட்ட நாற்று மேடைகளிலிருந்து 295 கிராம அபிவிருத்திச் சங்கங்களைச் சேர்ந்த 14,000 குடும்பங்கள் இரண்டாம் கட்டத்தின்போது நன்மைகளைப் பெற்றுக் கொண்டன. மட்டுப்படுத்தப்பட்ட சிறிய வீட்டுத் தோட்டங்களை மட்டும் உடைமையாகக் கொண்டிருந்த இலக்குக் குழாத்தினரான குடும்பங்களுக்கும் குறிப்பாக நலன் பயக்கத்தக்க தீவிரமான வீட்டுத் தோட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டமொன்று 1985ல் தொடக்கி வைக்கப்பட்டது. வருமானங்களையும் சத்துணவு வகைகளையும் உயர்த்துவதே இதன் நோக்கமாக இருந்தது. 82 கிராமங்களைச் சேர்ந்த 1840 குடும்பங்கள் இலக்குக் குழுமமாக அமையும் வகையில் இந் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

அரசாங்கத்தின் தெங்கு மறுநடுகை மானியத்தைப் பெற்றுக் கொள்ளும் தன்மையை ஈட்டுவதற்காகக் காணிகளைத் தயாரிப்பதற்கு உதவும் வகையில் மேலும் 250 குடும்பங்களுக்கு கொடைகள் வழங்கப்பட்டன.

### கிராம அபிவிருத்திச் சங்கங்கள்

சிரமதான வீதிகளுக்கு மதகுகளையும், சமூகப் பயன்பாட்டுக்கான கொட்டில்களையும் அமைக்கும் நடவடிக்கைக்காக முதலாம் கட்டத்தின் தொடர்ச்சியாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக் கட்டத்திலும் உதவு தொகைகள் வழங்கப்பட்டன.

### தொழிற் பயிற்சி

தச்சுத் தொழில், மேசன் தொழில், ஆடைகள் தைத்தல், தும்பு வேலைகள் என்பவற்றில் 600 வேலையற்ற இளைஞருக்கு ஆற்றல் பயிற்சி வழங்கப்பட்டது.

### சுயதொழில் நடவடிக்கைகட்கு ஆதரவு

வருமானத்தைப் பெருக்கும் இந் நடவடிக்கைக்காக கிராம அபிவிருத்திச் சங்கங்கள், சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கங்கள், மாதர் சங்கங்கள் என்பவற்றினூடாக வழங்கப்பட்ட கடன்களால் 8000 குடும்பங்கள் நலன்களைப் பெற்றுக் கொண்டன.

### விவசாயத்தினூடாக வேலை வாய்ப்பு உருவாக்கம்

காணியற்ற தொழிலாளருக்கு வேலை வாய்ப்புக்களை உருவாக்கித் தருவதற்காக அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபன பெருந்தோட்டங்களில் முறையாகப் பயன்படுத்தப்படாதிருந்த காணிகளைத் திருத்தும் நடவடிக்கையாக இது அமைந்தது. தெங்கு, இறப்பர் செய்கை, காடு வளர்த்தல் மற்றும் ஊடுபயிர்ச் செய்கை என்பவற்றால் ஏறத்தாழ 140,000 மனித நாட்களுக்குச் சமனான வேலை வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டது.

### தோட்டத் தொழிலாளருக்கான நலன்புரி வசதிகள்

தோட்டங்களில் வதியும் தொழிலாளர் குறிப்பிட்ட அந்தஸ்தைப் பெற்றுக்கொள்ளும் இலக்குக் குழுவினராக அங்கீகரிக்கப்பட்டிருந்தனர். வீடமைப்பு, நீர் விநியோகம் மற்றும் மலசலகூட வசதிகளை ஏற்படுத்துவதற்காக 12 தோட்டங்கள் தெரிவு செய்யப்பட்டன. ஒரு தோட்டத்தில் கல்விக் கூடம் ஒன்றும் அமைக்கப்பட்டது.

### கரையோர அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்

குறிப்பிட்ட இலக்குக் குழுவினரை நோக்கியதாக இத் திட்டமும் அமைந்தது. அடிப்படை வசதிகளைக் கொண்ட இரு குடியேற்றத் திட்டங்கள் அமைக்கப்பட்டன. 336 மீனவக் குடும்பங்கள் இவற்றில் குடியேற்றப்பட்டன. மேலும் 160 குடும்பங்களுக்குக் குழாய் நீர் வசதி செய்து தரப்பட்டது.

### பின்தங்கிய பிரதேச அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்

பல துறைகளையும் சார்ந்த தொகுப்பாக்கப்பட்ட சமூக நலன்களையும் பொருளாதார ஆதரவுகளையும் வழங்குவதன் மூலம் இலக்குக் குழுவினரை முன்னேற்றும் மற்றுமொரு பரீட்சார்த்த அணுகுமுறையாக இது அமைந்தது. 5700 இலக்குக் குழுவினரைக் கொண்ட 56 கிராமங்கள் தெரிவு செய்யப்பட்டு குடிநீர் வழங்கல், மலசல கூட வசதிகள், வீட்டுத் தோட்ட அபிவிருத்தி, சுய வேலை வாய்ப்பு, சிரமதான மூலம் கிராம வீதிகளை அமைத்தல் என்பவற்றுக்கு உதவிகள் வழங்கப்பட்டன. மக்கள் பங்கேற்பைத் திரட்டுவதற்காக 400 கிராமிய ஆர்வலர் இலக்குக் குழுவினரிடையே இருந்து சேர்க்கப்பட்டு சமூக ஆட் திரட்டலில் அவர்கட்குப் பயிற்சி வழங்கப்பட்டது.

### ஆரம்ப சுகாதார நிலையங்கள்

சுகாதாரத் துறைக்கு முதலாம் கட்டத்தில் வழங்கப்பட்ட ஆதரவு இரண்டாம் கட்டத்திலும் தொடர்ந்து வழங்கப்பட்டது. இரண்டு உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் கிராமோதய சுகாதார நிலையங்கள் அமைக்கப்பட்டதுடன் 76 சுகாதாரத் தொண்டர்களும் குடும்ப சுகாதார சேவகர்களாகப் பயிற்றுவிக்கப்பட்டனர். புதிதாகத் திரட்டப்பட்ட 1700 சுகாதாரத் தொண்டர்கள் கிராமங்களிலும் தோட்டங்களிலும் சுகாதார மேம்பாட்டு நடவடிக்கைகளில் பயிற்றுவிக்கப்பட்டனர். மாவட்ட சிறுவிலான சுகாதார நிகழ்ச்சித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டு நீர்வடிப்பு மலசல கூடங்கள் அமைப்பதற்கு மானியங்கள் வழங்கப்பட்டன.

### எரிபொருட் சிக்கனம் கொண்ட அடுப்புத் திட்டம்

விறகுக்காகப் பயன்படுத்தப்பட்டு வரும் மரங்களின் எண்ணிக்கை வேகமாக வீழ்ச்சியுற்று வருவதனாலும் கூட்டடுப்புக்களைத் தயாரிப்பதில் வேலை வாய்ப்புக்களை உருவாக்குவதற்காகவும் உதவிய இத் திட்டம் முக்கிய ஒரு வழிமுறையாக அமைந்தது.

### ஊழியர் பயிற்சி

மாத்தறை ஒன்றிய நிகழ்ச்சித் திட்டத்தின் புதிய சிந்தனைப் போக்கினைப் போதிப்பதற்காக திட்டப் பணியினர் யாவருக்கும், குறிப்பாகத் தொடர்புள்ள இளைஞர்களையும் உள்ளடக்கிய அணுகுமுறைக்கு முகவராண்மை நிலைய ஊழியர்களுக்கும் பயிற்சியளிப்பது இரண்டாம் கட்டத்தின் முக்கிய குறிக்கோள்களில் ஒன்றாக அமைந்தது. 1984-88 காலப்பகுதியில் கருத்திட்டச் செலவு 91.7 மில்லியன் ரூபாவாக அமைந்தது. இதில் 10 சதவீதத்தை இலங்கை அரசாங்கம் வழங்க, எஞ்சியதை சிடா பொறுப்பேற்றது.

முதலாவது கட்டத்தில் ஆரம்பிக்கப்பட்ட கருத்திட்டங்களிற் சில இரண்டாம் கட்டத்திலும் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டமை மாத்தறை ஒன்றிய நிகழ்ச்சித் திட்டத்தின் புதிய சிந்தனைப் போக்கைப் பிரதிபலிப்பதாக உள்ளது. இலக்குக் குழுவினர் அணுகு முறை, மக்கள் பங்களிப்பைத் திரட்டுதல் என்பனவை முன்னைய கட்டத்திலிருந்து இதனைப் பிரித்துக் காட்டும் அம்சங்களாகும். புதிய சிந்தனைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போக்கில் சில பிரச்சினைகள் பற்றி இதன் பின்னுள்ள பகுதியில் விளக்கப்படுகின்றது.

### இரண்டாவது கட்டம் பற்றிய மீளாய்வு

கருத்திட்டத்தில் புதிய திருத்தப் போக்கு ஏற்படுத்திய குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களில் 1987 மே மாதத்தில் மேற்கொள்ளப்பட்ட இரண்டாவது கட்டம் மீதான புற மீளாய்வு வரவேற்றுள்ளது. எனினும் இவ்விடயங்கள் தொடர்பாகக் கண்டனங்களும் தெரிவிக்கப்பட்டுள்ளன. அந்நேரத்தில் பேரவின் உத்தியைத் தொழிற்படுத்துவதற்கு மாத்தறை மாவட்டத்தில் நிலவிய நிலை எப்போதும் சாதகமாக இருக்கவில்லை என்பதையும் மீளாய்வுக் குழு ஏற்றுக் கொண்டது. குறிப்பான சில பிரச்சினைகளை இச் சந்தர்ப்பத்தில் மேலும் ஆராய்வது பொருத்தமானது.

### இலக்குக் குழாத்தினரை வரைவிலக்கணஞ் செய்வதும் இனங்காணலும்

உணவு முத்திரை பெற்றுக் கொள்வதை வறுமையின் குறிகாட்டியாகக் கொள்ளல் முற்றிலும் திருப்தியற்ற ஒரு அளவு முறையாகும். எனினும் குறிப்பான தனிப்பட்ட குடும்பங்களைப் பொறுத்தவரை உடனடியாகப் பயன்படுத்தக் கூடிய ஒரேயொரு குறிகாட்டியாக இதுவே காணப்படுகின்றது. ஆனால் மாத்தறை மாவட்டத்தில் உணவு முத்திரை பெறுபவர்கள் மாவட்டக் குடித்தொகையின் 60 சதவீதத்தினராக அல்லது 78,250 குடும்பங்களாக அமைந்திருந்தனர். மாத்தறை ஒ.கி.அ நிகழ்ச்சித் திட்டத்தில் மக்கள் பங்கேற்பைப் பெற்றுக் கொள்ளல் என்ற இலட்சியத்தை அடைவதானால் இது யதார்த்தமற்ற இலக்காகவே அமையும்.

### மாத்தறை ஒ.கி.அ நிகழ்ச்சித் திட்டத்தின் வரவுத் திட்டம்

ஆண்டுக்குரிய செலவுத் திட்டத்துடன் ஒப்பிடுகையில் இக் கருத்திட்டம் மிகச் சிறியதே. 1987ம் ஆண்டின் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்டம் மாவட்ட அபிவிருத்தி சபை வரவு செலவுத் திட்டம் என்பவற்றின் கூட்டுத் தொகைக்குச் சமமானதாகவே இக் கருத்திட்டம் காணப்பட்டது. இலக்குக் குழாத்தினரின் நலன் பற்றிப் பொறுத்தவரை இந்நிதிகளை ஒதுக்கீடுகள் வேறுபட்ட ஏனைய முகவராண்மை நிலையங்களின் நடவடிக்கைகள் மாத்தறை ஒ.கி.அ நிகழ்ச்சித் திட்டத்தின் சாதனைகளை அற்பமானவையாக்கி விடும் என்பதே அதன் விளைவாக இருக்கும். ஏனைய முகவராண்மை நிலையங்களின் கொள்கைகளில் புதிய திருத்தப் போக்கை ஏற்படுத்த வேண்டிய தேவையை இது மாத்தறை ஒ.கி.அ நிகழ்ச்சித் திட்டத்தின் மேலும் உணர்த்தியுள்ளது.

### இலக்குக் குழாத்தினரின் அமைப்பும் வாழிடங்களும்

மனித வளத்தைப் பொறுத்தும், சூழல் நிலைகளைப் பொறுத்தும் மாத்தறை மாவட்டம் பல்வினத் தன்மை கொண்டதாக இருக்கின்றது. நெருக்கமாக மக்கள் வாழும் கரையோரப் பகுதிகள், முற்றிலும் வேறுபட்ட மத்திய பிரதேசம், தேயிலை உற்பத்தி செய்யப்படும் மலைநாட்டுப் பகுதி என்பவை ஒன்றிலிருந்து மற்றொன்று வேறுபட்டவையாகக் காணப்படுகின்றன. ஏழை மக்கட் தொகுதியினரின் பரம்பல் தெளிவாக வரையறுக்கப்படாததாக இருக்கின்றது. இதனால் கருத்திட்டங்களுக்குத் திட்டமான இலக்குகளை வகுப்பதில் தடைகள் ஏற்படுகின்றன. கருத்திட்ட உள்ளீடுகளைப் பெருமளவிற் பரந்துள்ள அமைவிடங்களுக்கு பகிர்ந்தளிப்பதிலும், பல முகவராண்மை நிலையங்களின் நடவடிக்கைகளை ஒன்றிணைப்பதிலும் மாத்தறை ஒ.கி.அ நிகழ்ச்சித் திட்டம் பெருந்தடைகளை எதிர்கொள்கின்றது.

### பயன்படுத்தப்படாத மட்டுப்படுத்தப்பட்ட வளங்கள்

இம்மாவட்டத்தின் வேலையின்மை வீதம் மிக உயர்வாகக் காணப்படுகின்றது. குறிப்பாக இளைஞரிடையே வேலையின்மை பெருமளவினதாகக் காணப்படுகின்றது. இது 32 சதவீதமானதென மதிப்பிடப்பட்டுள்ளது. 80-85 சதவீத குடும்பங்கள் விவசாயத் தொழிற்படுநராக வர்ணிக்கப்படுகின்றனர். இதனால் காணிகளற்ற நிலை சார்பளவிற் குறைவானதாகவே இருத்தல் வேண்டும். எனினும் இவர்களது உடைமையாகவுள்ள காணிகளின் அளவு குடும்பத்தைப் பராமரிப்பதற்கு ஏற்றதாக அமைந்திருக்கவில்லை. இதனால் கூலித்தொழில் மூலம் வருமானம் உழைக்க வேண்டிய கட்டாயம் இவர்களிடையே நிலவுகின்றது. அத்துடன் கிடைக்கக் கூடிய நிலம் அனைத்தும் ஏற்கனவே பயிரிடப்பட்டு வருவதால் விவசாயத் துறையில் புதிய வேலை வாய்ப்புகளை உருவாக்கக் கூடிய வாய்ப்பு மிக அற்பமானதாகவே அமைந்துள்ளது. இம் மாவட்டத்தின் கைத்தொழில் உற்பத்தி மிகக் குறைவானதாக உள்ளது. அத்துடன் கைத்தொழிற் பெருக்கத்தைத் தூண்டக் கூடிய வளங்களோ அன்றி முதலீட்டு நலன்களோ இங்கு காணப்படவில்லை. பொதுவாகக் கூறின், சுயதொழில் வாய்ப்புகளையோ, கூலித் தொழில் வாய்ப்புகளையோ உருவாக்குவதற்கான சந்தர்ப்பங்கள் மிகவும் குறைவாகவே காணப்படுகின்றன.

இத்தகைய பிரச்சினைகளின் மத்தியில் கருத்திட்டத்தின் முன்னேற்றம் பற்றிய மீளாய்வுக் குழு தனது அதிருப்தியைத் தெரிவித்ததில் ஆச்சரியத்துக்குரியதொன்றுமில்லை. பிரச்சினைகளின் ஆய்வு செய்தல், இலக்குக் குழாத்தினரை இனங்கண்டு கொள்வது முதலான சிரமங்கள், பெண்களைத் திட்ட நடவடிக்கைகளில் பங்கேற்பதற்கு அழுத்தம் கொடுக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1970-களின் நடுப்பகுதியின் [illegible] இலங்கையில் [illegible] தெளிவாகத் [illegible] கைத்தொழில் [illegible] அத்துடன் [illegible] யோசனை இருந்தன. அத்துடன் [illegible] நிதி வந்தன.

குறிப்பான அரசாங்க நடவடிக்கைகளினூடாக [illegible] 1979-ல் மாத்தறை மாவட்டத்தில் ஒருங்கிணைந்த கிராமிய அபிவிருத்தித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. சுவீடன் சர்வதேச அபிவிருத்தி முகவர் நிலையம் (சிடா) இதற்கு அனுசரணை வழங்கியது. இத்திட்டம் [illegible] பட்டதிலிருந்து [illegible] மாற்றங்கள் ஏற்பட்டு வந்துள்ளன. அத்துடன் ஆரம்ப காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட பல நடவடிக்கைகள் இப்பொழுது [illegible] வருகின்றன.

இச் செயற்திட்டத்தின் பின்னணியில் இருந்த கருத்துக்கள் யாவை? மாத்தறை மாவட்டத்துக்கேயுரிய தனித்துவமான சூழ்நிலைகளில் இத் திட்டம் எவ்வாறு எதிர்கொண்டது? இதன் சாதனைகள் என்ன? எதிர்காலம் எப்படியிருக்கும்? இந்த முக்கியமான கேள்விகளுக்கு விடையளிக்க இக் கட்டுரையில் ஒரு முயற்சி மேற்கொள்ளப்படுகிறது.

கும் வகையில் மக்கள் பங்கேற்கும் அளவும் அது எவ்வளவுக்கு நீடித்ததாக இருக்கும் என்பதும், தொழில் வாய்ப்பு உருவாக்கல் மட்டம், இலக்குக் குழாத்தினர் அணுகு முறையைக் கைக்கொள்வதற்கு சம்பந்தப்பட்ட முகவராண்மை நிலைகள் எந்தளவுக்குத் தூண்டப்பட்டன போன்ற குறிப்பான கேள்விகள் எழுப்பப்பட்டன.

டொனின் உத்தியின் தொழிற்படுத்துவதற்கான கஷ்டமான பணியில் மாத்தறை ஒகிஅ கருத்திட்டப்பணியகத்துக்கு கொழும்பிலிருந்து போதுமான ஆதரவு கிடைக்கவில்லை என்பதையும் குழு உணர்ந்திருந்தது. அதே நேரத்தில் பொது சனப் பங்கேற்பைத் திரட்டுவதில் மாத்தறை ஒகிஅ நிகழ்ச்சித் திட்டம் எட்டிய சாதனைகளைக் குழு பாராட்டியது. இத் தொடர்பில் தோட்டங்களில் வசிக்கும் தொழிலாளர் கருத் திட்டமும், கரையோர மற்றும் பின்தங்கிய பிரதேச அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டமும் முக்கியமானவையாகக் கருதப்பட்டன. மாத்தறை ஒகிஅ நிகழ்ச்சித் திட்டம் மூன்றாவது கட்டத்தைத் தொடர்வதற்கான [illegible] செலவுக்குத் தகுதி பெற்றிருந்தது என்பதே மீளாய்வின் விளைவாக அமைந்தது.

மூன்றாவது கட்டம் 1988-92

மாத்தறை ஒகிஅ நிகழ்ச்சித் திட்டத்தின் திட்ட ஆலோசனைகள் மதிப்பீட்டுக் குழுவொன்றால் பெப்ருவரி 1988ல் பரிசீலிக்கப்பட்டன. சிறிய மாற்றங்களுடன் குழு ஆலோசனைகளை ஏற்றுக் கொண்டது.

கருத்திட்ட நடவடிக்கைகள் செலவித் தூண்டல் நடவடிக்கைகள் எனவும், நிரம்பல் தூண்டல் நடவடிக்கைகள் எனவும் தெளிவாகப் பாகுபடுத்தப்பட்டன. தாம் பெற்றுக் கொள்ளும் சேவைகளையும், அவை பெறப்படும் விதத்தையும் மாற்றியமைப்பதற்கு இலக்குக் குழுவினருக்குள்ள தலைமைக்கு முக்கியத்துவம் அளிக்கும் நடவடிக்கைகள் செலவித் தூண்டல் நடவடிக்கைகளாகும். சேவைகளை வழங்குதல், பொருளாதார ஆதரவு என்பவற்றுக்கு முக்கியத்துவமளிக்கப்படும் நடவடிக்கைகள் நிரம்பல் தூண்டல் நடவடிக்கைகளாகும். செலவித் தூண்டல் நடவடிக்கைகள் விரிவாக்கஞ் செய்யப்படல் வேண்டுமென்றும், இலக்குக் குழாத்தினர் பங்கேற்புடன் இடம் பெறும் அபிவிருத்தி நடவடிக்கைகளினால் உருவாக்கப்பட்ட கேள்விக்கு ஏற்ப நிரம்பல் தூண்டல் நடவடிக்கைகள் அமைய வேண்டும் எனவும் பொது உடன்பாடு காணப்பட்டது.

பிரச்சினைக்குரிய கிராமங்கள், சமூகங்கள் என்பவற்றினூடாகக் கருத்திட்ட இலக்குகளை வகுத்தல் பற்றி மூன்றாங் கட்டத்தில் முக்கிய கவனஞ் செலுத்தப்பட்டது. மாவட்டத்தில் காணப்பட்ட 712 கிராமங்களில் 228 கிராமங்கள் பிரதிகூலம் கொண்டவையாக இனங் காணப்பட்டு அவையே இலக்குப் பகுதிகளாகக் கொள்ளப்பட்டன. கருத்திட்டச் சமூகங்களைத் தேர்ந்தெடுப்பதில் கிராம விஸ்தரிப்புத் திட்டப் பிரதேசங்கள், சமூக அல்லது பௌதிக ரீதியில் தனித்து விடப்பட்ட கிராமங்கள், மிகவுந் தொலைவிலமைந்துள்ளதும் தோட்டங்களை உள்ளடக்கியதுமான வடபகுதி, வரட்சியால் பாதிக்கப்படும் கிழக்குப் பகுதி, கடற்றொழிலையும், தும்புத் தொழிலையும் மேற்கொள்ளும் கரையோர வலயம் என்பவை தொடர்பாகச் சிறப்பான கவனஞ் செலுத்தப்பட்டது. இரண்டாங் கட்டத்தைப்போல தோட்டங்களில் வசிக்கும் தொழிலாளர் மீதும், இக்கட்டத்தின் போது தோட்டங்களில் வதியாத தொழிலாளர் மீதும் குறிப்பான கவனஞ் செலுத்தப்பட்டது.

(30-ம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒருங்கிணைந்த கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை மதிப்பீடு செய்வதிலுள்ள பிரச்சினைகள்

எஸ். பி. எப். சேனரத்ன

கலாநிதி சேனரத்ன தேசிய நூதனசாலையின் மானிடவியல் பிரிவில் முன்னைநாள் தலைவராவர். மார்க்சிய ஆரம்பகால உறுப்பினர்களுள் இவரும் ஒருவர். பிரதானமாகத் தென்னாசியாவிலுள்ள பல்வேறு சர்வதேச நிறுவனங்களில் மதியுரையாளராக கடந்த பத்தாண்டுகளாக பணியாற்றி வருகின்றார்.

தற்போதிருப்பதை விட அளவிற் குறைவடையாத பெரிய கிராமியத் துறையொன்று இந்நாட்டில் இன்னும் நீண்ட காலங்களுக்கு நிலவுமென்பதற்குச் சகல அறிகுறிகளும் தென்படுகின்றன. இலங்கைக் குடித்தொகையின் கிராமிய நகர வகுதியைப் பொறுத்தவரை அடுத்த 25 ஆண்டுகளில், ஏன் 60 ஆண்டுகளிற் கூட, சிறிதளவு சார்பளவான மாற்றமும் மட்டுமே ஏற்பட முடியும்.

இவ்வாறிருப்பு, சிலர் எச்சரித்திருப்பதைப் போல, ஒரு சவாலாக மட்டுமன்றி அச்சுறுத்தலாகவும் கூட அமையலாம். பயன்படுத்தப்படாத நிலவளம் ஏராளமாகக் காணப்படுமேயானால் இதைப் பற்றி நாம் பராமுகமாக இருந்துவிட முடியும். ஆனால் யதார்த்தத்தில் மனிதனுக்கும் நிலத்துக்குமிடையேயான விகிதாசாரம் மிக வேகமாக வீழ்ச்சியடைந்து வருகின்றது. இப் பிராந்தியத்திலுள்ள ஏனைய சில நாடுகளிலும் இதே நிலை காணப்படுவது ஓரளவுக்கு ஆறுதலளிப்பதாக உள்ளது.

இலங்கையின் பின்னணியில் கிராமியத் துறைக்கென வகுக்கப்படும் கொள்கைகள், கிராமியத் துறையில் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடிய கொள்கைகள், கிராமிய வாழ்வை மாற்றியமைக்கக் கூடிய வழிமுறைகள், நிறுவனங்கள் ஆகியவை அனைத்தும் பெரும் முக்கியத்துவம் பெற்றவையாகின்றன. தொடர்ந்து வந்த அரசாங்கங்களின் கொள்கைத் தொகுதிகளில் இந்த மாற்றங்கள் குறித்து அத்துணை முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை, வாதிடப்பட்டால் அதனை ஒரு சிலரால் மட்டுமே சாடக் கூடியதாக இருக்கும்.

இந்த அடிப்படையில் இக் காலப்பகுதியே அபிவிருத்தி உத்தி என்ற வகையில் ஒன்றிணைந்த கிராம அபிவிருத்தியின் (ஒகிஅ) திறனாய்வை மதிப்பீடு செய்வதற்கு உகந்ததாகும். கிராமிய அபிவிருத்தியில் ஈடுபடுவதற்கான ஒரேயொரு பயனுள்ள வழி இதுவென லேலேட் டரின் என்பவர் கூறுகின்றார். எனினும் அதற்கு முற்றுமுழு தொழிநுட்ப அணுகுமுறை வழங்க அதன் எதிர்ப்பாளர் மறுக்கின்றனர். நட்டாலியின் கூற்றுப்படி இது 'வழிமுறையைத் தேடிச் செல்லும் ஒரு தந்திரோபாயமாகும்'. குறித்த ஒரு நாட்டின் அனுபவத்தின் அடிப்படையில் இயற்றில் எது ஏற்புடையது என்ற வினா இதிலிருந்து எழுகின்றது.

இலங்கையின் ஒகிஅ கொள்கை பற்றியோ இந்த செயல்முறைக் குறிப்பின் அடிப்படையில் தயாரித்து நடைமுறைப்படுத்தப்படும் கருத்திட்டங்கள் பற்றியோ இக் கட்டுரையில் கருத்து வெளியிடப்படவில்லை. மாறாக, எந்த நாட்டினதும் ஒகிஅ நடவடிக்கைகள் அர்த்த பூர்வமானவையாக அமைய வேண்டுமெனில் வெவ்வேறு கேள்விகட்கு விடையளிக்கப்படல் வேண்டும் என்பது பற்றியும், எவ்வெவ் விடயங்கள் குறித்து அக்கறை செலுத்தப்படல் வேண்டும் என்பவை பற்றியே ஆராயப்படுகின்றது. ஒகிஅ பற்றி இடம்பெற்றுவரும் தர்க்கம் பற்றி ஆரம்பத்தில் குறிப்பிட்டுள்ளேன். அதனைத் தொடர்ந்து ஒகிஅ நிகழ்ச்சித் திட்டங்களின் 'புறத் தோற்றம்' பற்றியும், அவற்றை மதிப்பீடு செய்வது தொடர்பான பிரச்சினைகள் பற்றியும் இக் கட்டுரையில் விளக்கப்படுகின்றது.

## விவாதம்

ஒரு அலகாக கிராமிய அபிவிருத்திக்கான ஒரு எண்ணக்கரு காலம். குடியேற்ற காலங்களில் கிராமிய அபிவிருத்தி ஒரு கடமையாகக் கொள்ளப்படவில்லை. இப் பிராந்திய நாடுகள் சுதந்திரமடைந்தபின்னர் பதவியேற்ற புதிய ஆட்சியாளர் விவசாயக் குடிமக்களின் நிலைமை வேகமாகத் திருத்தியமைக்கலாம் என்ற நம்பிக்கையுடன் கிராம அபிவிருத்தியை ஒரு உத்தியாகக் கடைப்பிடிக்கத் தொடங்கினர். இதற்கு அவர்கள் வைத்துக்கொண்ட அரசியல். பொருளாதார எடுகோள்கள் பற்றி நாம் அக்கறை செலுத்தவேண்டியதில்லை. ஆனால் விரைவில் இந்த உத்தியைச் செயற்படுத்த முடியாது என்பது தெரியவந்தது. இலங்கை உட்பட, புதிதாகச் சுதந்திரமடைந்த நாடுகள் '50களின் ஆரம்பத்திலேயே கிராமிய அபிவிருத்தி தொடர்பான பிரச்சினைகளில் ஈடுபடலாயின.

தோல்வியின் காரணம் நிர்வாகத் திறமையின்மையே என விரைவில் கண்டறியப்பட்டது. எனினும் பிரச்சினையின் தோற்றுவாயை ஏற்படுத்திய முக்கியமான அடிப்படைக் காரணம் இனங் காணப்பட்டிருந்தது. ஆயினும் ஆட்சியாளர் பகிரங்கமாக இதனை ஒப்புக் கொள்ள முன்வரவில்லை. சிக்கலான வழிகளில் கிராமிய அபிவிருத்தியை ஏற்

படுத்திவிட முடியாது. சுதந்திரத்துக்குப் பிற்பட்ட ஆரம்ப காலத்தில் எதிர்பார்க்கப்பட்டதற்கு மாறாக விவசாய விளைவுத் திறனைப் பெருக்குதல், வறுமை, வேலையின்மை அகற்றுதல், கல்வி, போக்குவரத்து, சுகாதார சேவைகள் என்பவற்றை முன்னேற்றுதல் ஆகிய செலவினை ஏற்படுத்துவனவாக அமைந்தன. எனவே இவற்றுக்குச் செலவிடுவதாலும் ஏனைய துறைகளில் முதலீடுகளை மேற்கொள்ள முடியாதிருந்தது. சில நாடுகள் — குறிப்பாக இந்தியா - தம்மைக் கைத்தொழில் நாடாக மாற்றியமைப்பதற்கு முதன்மை வழங்கின. கிராமிய அபிவிருத்தியானது சுதந்திர நாடொன்றின் தார்மிகப் பொறுப்பாக அன்றி தனிக்கப்பட்ட வேலைத்திட்டமாக அமைந்து விவசாயிகளின் அரசியல் முக்கியத்துவத்துக்கும் பொருளாதார இலாபங்களுக்கும் இடையிலான சமரசமாகக் கருதப்படலாயிற்று. அதன் பின்னர் கிராமிய அபிவிருத்தி தனது தனித்துவமாக அமையவில்லை. சாதகமான அரசியல், பொருளாதாரச் சூழல்களைக் கருதிக் கொண்டு சில பகுதிகளில் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டன. தேசிய பொருளாதாரத்தின் பயனைச் சிறிதளவு மட்டுமே அனுபவித்த அதே நேரத்தில் தேசிய அபிவிருத்தியில் மிகக் குறைந்தளவு பங்களிப்பை மட்டுமே வழங்கக் கூடியவையாக ஏனைய பகுதிகள் காணப்பட்டன. எனினும் சகல நாடுகளாலும் இதே அணுகுமுறையைக் கைக்கொள்ள முடியவில்லை. இந்தியா தன்னைக் கைத்தொழில் நாடாக மாற்றியமைப்பதிலும் உலகளாவிய வல்லரசாகத் தன்னை வளர்த்துக் கொள்வதிலும் நாட்டம் காட்டியமையால் அங்கு அது சாத்தியமாயிற்று. வேறு நாடுகளின் உதாரணமாக (முன்னர் கிழக்குப் பாகிஸ்தான் என அழைக்கப்பட்ட) வங்காள தேசத்தில் இந்த அணுகுமுறை சிறிதளவு நன்மையை மட்டுமே விளைவித்தது. அபிவிருத்திக்கெனச் சில இடங்களை மட்டும் தேர்ந்தெடுத்து ஏனைய அந்நாட்டுப் புறக்கணிப்பதற்கு அந்நாட்டின் பொருளாதார ஒன்றைத் தன்மை இடமளிக்கவில்லை. வளர்ச்சியடைந்து வந்த கைத்தொழில் துறையின் ஆதரவும் தூண்டுகோலுமின்றி சகல கிராமிய பகுதிகளிலும் நீடித்த அபிவிருத்தினை ஏற்படுத்துவதற்கான உத்தியொன்று வகுக்கப்பட வேண்டியிருந்தது. இத் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக இப் பிராந்தியத்தில் ஒகிஅ தோற்றம் பெற்றது.

வங்காள தேச திகழ்ச்சித் திட்டம் கொமில்லா மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டது என்பது தெரிந்ததே. இந் நோக்கத்துக்காக ஆரம்பிக்கப்பட்ட நிறுவனம் மூன்று கட்ட கூட்டுறவு அமைப்புகளை உள்ளடக்கியதாக இருந்தது. இந் நிறுவனம் பல்வேறு வகைப்பட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டது. இக் கருத்திட்டத்துக்கு அரசாங்கத்தின் அமோக ஆதரவு மட்டுமின்றி வளங்களாலும், நலனாசிட் பங்கேற்கும் பகுப்பாய்வாளர், திட்டமிடல் நிபுணர் என்போரை உள்ளடக்கிய மனித வள ஆதரவும் கிட்டியது. ஆரம்ப காலத்தில் இத் திட்டம் அமோக வெற்றியீட்டியது என்பதை மறுப்போர் மிகச் சிலரே. ஆனால் ஏழெட்டு ஆண்டுகட்கிடையில் இதில் உடைவுகள் தோன்றத் தொடங்கின. 70 களின் நடுப்பகுதியில் திகழ்ச்சித் திட்டம் செயலிழந்து விட்டது.

கொமில்லா விடயம் எப்போதுமே தீர்த்து வைக்கப்படவில்லை. அது வெற்றியடைந்ததா அல்லது தோல்வியைத் தான் தழுவிக் கொண்டதா? அது வெற்றி பெற்றிருந்தால் அதனை அடியொற்றி ஏனைய திகழ்ச்சித் திட்டங்கள் தோற்றுவிக்கப்பட்டனவா? மாறாக, அது தோல்வியுற்றிருந்தால் அரசியற் காரணிகளைத் தோல்விக்குப் பொறுப்பாக்கலாமா?

ஆனால் கொமில்லாவின் ஆரம்ப கால வெற்றி ஒகிஅ வை பயனுள்ள / அணுகுமுறையாகச் சிபாரிசு செய்வதற்கும், அதனை மேம்படுத்துவதற்கும் சர்வதேச நிறுவனங்களுக்குத் தூண்டுகோல் அளிப்பதாயிற்று. தமது நாட்டு நிலைகட்கு ஏற்றவாறு ஒகிஅ வை மாற்றியமைத்துச் சில நாடுகள் அதனைச் செயற்படுத்தலாயின. வேறு சில நாடுகள் தாம் ஏற்கனவே மேற்கொண்டிருந்த திகழ்ச்சித் திட்டங்களை ஒகிஅ யாக மாற்றியமைத்தன. அடிப்படைத் தேவைகள் அணுகு முறை பிரபல்யம் பெற்று 'வறியோருள் வறியோருக்கான' அபிவிருத்தி மேற்கொள்வது ஆரம்பிக்கப்பட்டதும் ஒகிஅ தனது கட்டுக் கோப்புக்குள் இப் புதிய எண்ணக் கருக்களைக் கட்டிணைத்துக் கொண்டது.

இதே காலப்பகுதியில் தர்க்கம் தொடர்ந்தும் இடம் பெற்று வரலாயிற்று. ஒகிஅ யின் பயன் விளைவு பற்றிக் கருத்து வேறுபாடு காணப்பட்டதுடன் அது என்ன என்பது பற்றிய மன ஒருமையும் குறைவாகவே காணப்பட்டது. சிலர் அதனை இலக்குகளையுமான சில இலட்சியங்களின் சேர்க்கையாகக் கருதினர். வேறு சிலர் இதனை நடைமுறைப்படுத்தும் உபாயமாகவும் முயற்சியின் இறுதி விளைவாகவும் கண்டனர். கிராமியத் துறையும் அதன் பிரச்சினைகளை அணுகும் ஒருத்துவமாக வேறு சிலர் அதனைக் கொண்டனர். இவ்வாறே அழுத்தங்களின் பல்வேறு சேர்க்கைகள் காணப்படுகின்றன.

ஒகிஅ யின் ஆதரவாளர் அதன் சார்பில் பல்வேறு வாதங்களை முன்வைக்கின்றனர். கிராமியத் துறையில் காணப்படும் மட்டுப்படுத்தப்பட்ட வளங்கள் ஒன்று சேர்க்கப்படல் வேண்டும். மட்டுப்படுத்தப்பட்ட வளங்கள் ஒன்று சேர்க்கப்படல் வேண்டும், முதன்மைமிக்க நிறுவனத்திற்கும் அத்தியாவசிய நடவடிக்கைகளுக்கும் மட்டுமின்றி மிகவும் வறுமைப்பட்ட தொகுதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பினரை நோக்கி வளங்களைத் திசைப் படுத்து வதற்கும் இது வாய்ப்பளிக்கின்றது. கொள்கை வகுப்பு உயர்ந்த மட்டத்திலேயே இடம் பெற்ற போதிலும் உள்ளூர்ச் சமூகமானது தனது அபிவிருத்தியைத் தானே திட்டமிடுவதற்கும் தனது சாதனைகளைத் தானே கண்காணித்துக் கொள்வதற்கும் ஒகிஅ சந்தர்ப்பம் வழங்குகின்றது என்பதே அவர்களின் தலையாய வாதமாக அமைகின்றது. அபிவிருத்தியைச் செயற்படுத்துவதற்கான விருப்பம் காணப்பட்டு, அவ்விருப்பம் ஒழுங்கான திட்டமாக மாற்றியமைக்கப்படுமாயின் வெற்றி நிச்சயம் கிட்டுமென அவர்கள் உறுதியாக நம்புகின்றனர். தோல்வி ஏற்படலாம் என்பதை இவர்கள் மறுக்கவில்லை. விருப்பம் காணப்படாத இடத்தும் திட்டமிடலில் தவறு நேரும் போதும் மட்டுமே இது நேரலாம் என அவர்கள் வாதிடுகின்றனர்.

ஒகிஅ வை நிராகரிப்போர் பலர். ஒகிஅ பற்றி அதன் ஆதரவாளரிடையேயே மன ஒருமை காணப்படுவதில்லை என்றும், எண்ணக்கரு பற்றிய சிந்தனைத் தெளிவைக் கொண்டிராததுடன் பொருத்தமான தொழினுட்பங்களையும் அவர்கள் வகுத்திருக்கவில்லை என்றும் வாதிடுகின்றனர். தகுந்த கோட்பாட்டு அமைப்பை ஒகிஅ இன்னும் வகுத்துக் கொள்ளவில்லை என்பது அவர்கள் வாதமாகும். கிராமிய அபிவிருத்தியாக இருந்தாலும் வேறென்னவாக இருந்தாலும் ஒருங்கிணைப்பு என்பது எந்தத் திட்டத்தினதும் முக்கிய பண்பாக இருக்கவேண்டுமென அவர்கள் சுட்டிக் காட்டுகின்றனர். காய்கறி உற்பத்தியை மேம்படுத்தும் போது உற்பத்திப் பொருட்களைச் சந்தைக்கு எடுத்துச் செல்வதற்கான இட நகர்த்தல் ஏற்பாடுகள் காணப்படுவதையும் உறுதி செய்ய வேண்டியது அவசியமாகும். இத்தகைய ஒருங்கிணைப்புகள் காலனித்துவகாலத்திலும் காணப்பட்டமையைச் சுட்டிக் காட்டி வெளிப்படையானதும் நேரடியானதுமான நடை ஒன்றுக்கு வழங்கப்படும் மாட்டிலைக் கோவையாக ஒருநிலை அவர்கள் சாடுகின்றனர்.

அரசியல் யதார்த்தங்களுடன் தொடர்பு கொண்டதாக இரண்டாவது வாதம் அமைகின்றது. கொமிலா போன்ற திட்டங்களின் வெற்றிக்கு அவற்றுக்கு வழங்கப்பட்ட ஆதரவுகளே அடிப்படைக் காரணங்களாக அமைந்தன. இந்த ஆதரவுகள் மறுக்கப்பட்டவுடன் திட்டம் சீர்குலைந்தது. கிராமத்துக்குள்ளேயும், கிராமங்கட்கிடையேயும், மாவட்டங்கட்கிடையேயும் பல ஆழமான வேறுபாடுகள் வழமையாகக் காணப்படுகின்றன. கருத் திட்டங்களுக்கு வழங்கப்படும் வளங்களின் பாரிய பரிமாணத்தினுள் இவ்வேறுபாடுகள் அமிழ்ந்து விடுகின்றன. வளங்கள் மறுக்கப்பட்டதும் இப்பேதங்கள் மீண்டும் தலைதூக்குகின்றன.

ஒகிஅ திட்டங்கள் சில கட்டுப்பாடுகட்கு அமைவாக இருக்குமளவுக்கு ஒருங்கிணைக்கப்பட்டவையாகக் காணப்படுவதில்லை என்ற வகையில் மூன்றாவது வாதம் அமைகின்றது. கட்டுப்பாட்டின் தனி விளைவாகவே ஒருங்கிணைப்பு அமைகின்றது. ஒகிஅ திட்டங்களிற் காணப்படும் கட்டுப்பாடு அதற்கு வழங்கப்படும் வெளிநாட்டு நன்கொடையுடன் தொடர்பானது. இவ்வகையில் ஒகிஅ என்பது கொடையாளிகளின் எண்ணக் கருவாகவே அமைகின்றது என்ற வகையில் நிராகரிப்போரால் சித்திரிக்கப்படுகின்றது. இவ்வகையில் ஒகிஅ திட்டங்களின் அடிப்படை அம்சமான பங்கேற்றல் என்பது பற்றிப் பலமான ஐயங்கள் ஏற்படுத்தப்படுகின்றன. அடித்தளத்திலிருந்து கட்டியெழுப்பப்படும் திட்டங்கள் மிகவும் வித்தியாசமான பண்புகளைக் கொண்டிருக்க வேண்டும் என்பதே இவர்கள் முடிவாக அமைகின்றது.

கிராமிய சமூகத்தின் அமைப்பின் மாற்றங்களைக் கொண்டுவரும் ஊடகம் என்ற முறையில் முன்வைக்கப்படும் கிராமிய அபிவிருத்தித் திட்டங்களைவிட ஒகிஅ கருத் திட்டங்கள் மிகக் குறைந்த அளவிலேயே வேறுபடுகின்றன என்பதே இதனை நிராகரிப்போரின் வாதங்களின் சாரமாகும்.

தர்க்கத்தின் புறத் தோற்றத்தை மட்டுமே இங்கு விபரித்துள்ளோம். தனது அனுபவத்தின் அடிப்படையில் குறித்த நாடொன்று தன்னை எவ்விடத்தில் சேர்த்துக் கொள்ளும்? இது இருவகையான வினாக்களுக்கான விடைகளில் தங்கியுள்ளது. அவற்றைக் கீழே காண்போம்.

## புறத்தோற்றம்

இப் பிராந்தியத்தில் பல்வேறு வகையான ஒகிஅ திட்டங்களுள்ளன என்பதை அறிவதற்குப் பிராந்திய நாடுகளுக்கு விரிவான பயணம் மேற்கொள்ள வேண்டிய அவசியமில்லை. போதிய எழுத்தாக்கங்கள் இதனைத் தெளிவாக விளக்குகின்றன. இப் பல்வேறு திட்டங்கள் எந்தெந்த வகையில் வேறுபடுகின்றன, இவ்வேறுபாடுகளால் ஒகிஅ திட்டங்கள் எவ்வாறு தேசிய இயல்பைப் பெற்றுக் கொள்கின்றன? என்பவையே விடை காணப்பட வேண்டிய வினாக்களாகும். இந்த இரு பெரும் மாதிரிகளை இதன் கீழ் விளக்குகின்றேன்.

இலக்குக் குழாத்தினைப் பற்றியது பிரதானமானவற்றுள் ஒன்றாகும். சில சமயங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட புவியியற் பகுதிகளே இலக்குக் குழாமாக அமைகின்றன. வளங்கள், சேவைகள், முதலீடு என்பவை அதிதாகக் காணப்படுவதனால் இந்நிலை எழுகின்றது. வேறு சில சந்தர்ப்பங்களில் உதாரணமாக இந்தியாவில் 'வறியோருள் வறியோர்' என்ற பதத்தின் வெளிப்பாட்டுக்குப் புறம்பாக கிராமியக் குடிகளிடையே தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு குழுவினருக்காகத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திட்டம் வகுக்கப்படுகின்றது. இத்தகைய திட்டம் இலக்குக் குழுத்தினர் நாட்டின் எப்பகுதியில் வாழ்ந்தாலும் அவர்கள் மேம்பாட்டைக் கருப்பொருளாகக் கொண்டிருக்கும். வேறு சில சமயங்களில் நாட்டின் அனைத்துக் கிராமியத் துறையையும் உள்ளடக்குவதாகக் கூடத் திட்டம் அமைந்திருக்கலாம். இதுவே வங்காள தேசத்தில் கைக்கொள்ளப்பட்ட மாதிரியாகும்.

நிகழ்ச்சித் திட்டத்தின் குறிக்கோள் பற்றியதாக இரண்டாவது முக்கிய வேறுபாடு அமைகின்றது. பல்துறைத் திட்டங்களாகச் சில திட்டங்கள் அமைகின்றன. விவசாய விளைவினைப் பெருக்குதல், கிராமிய மட்டத்திலான உற்பத்திக் கைத்தொழில்கட்கு ஊக்குவிப்பு வழங்குதல், இவற்றின் வாயிலாகவும் பிறவழிகளிலும் வருமானங்களை அதிகரித்தல், சேவைகளை விருத்தி செய்தல், புதிய நிறுவனங்களை ஏற்படுத்துதல், போக்குகளை மாற்றியமைத்தல் பற்றிய பல்வேறு நோக்கங்களை அடக்குவனவாக இவை காணப்படுகின்றன. வேறு சில மட்டுப்படுத்தப்பட்ட நோக்கங்களுக்காக வகுக்கப்படுகின்றன. அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்தல் வருமானத்தை அதிகரித்தல் என்பனவே அவற்றின் குறிக்கோள்களாகக் காணப்படுகின்றன. ஆனால் இவை இரண்டுக்கும் இடைப்பட்ட குறிக்கோள்களைக் கொண்டனவாகவே அநேக திட்டங்கள் காணப்படுகின்றன.

குறிக்கோள்களில் காணப்படும் வேறுபாடுகளை மற்றொரு வழியிலும் அணுகமுடியும். கிராமியத் துறையின் அபிவிருத்திக்கும் நலன்களைக் காப்பதற்கென ஒவ்வொரு நாட்டிலும் சில கொள்கைகள், நிகழ்ச்சித் திட்டங்கள், நிறுவனங்கள் என்பன காணப்படுகின்றன. ஒகிஅ நிகழ்ச்சித் திட்டம் ஆரம்பிக்கப்படுமுன்னர் இவை கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களூடாகவும், அரசாங்கத்தின் வழமையான முகவராண்மை நிலையங்களூடாகவும் மேற்கொள்ளப்பட்டிருக்கும். ஒகிஅ நிகழ்ச்சித் திட்டம் ஒன்றினை ஆரம்பிக்கும் போது அமைப்பு முறை மாற்றங்கள் சில ஏற்படுத்தப்படல் வேண்டும். ஏனைய நிறுவனங்களால் முன்னர் மேற்கொள்ளப்பட்ட சில தொழிற்பாடுகளை இந்த நிகழ்ச்சித் திட்டம் பொறுப்பேற்று விடும். எனவே ஒகிஅ நிகழ்ச்சித் திட்டத்தின் நோக்கத்தை, கிராமியத் துறை தொடர்பாக எவர் எதனைச் செய்கின்றனர் என்ற பரந்த கேள்வியின் அடிப்படையிலும் பரிசீலிக்கலாம்.

நிறுவனங்களைப் பொறுத்த வரை ஒகிஅ நிகழ்ச்சித் திட்டங்கள் கணிசமாக வேறுபடுகின்றன. தேசிய, மாவட்ட, உள்ளூர் ஆகிய சகல மட்டங்களிலும் சில புதிய நிறுவனங்கள் தோற்றுவிக்கப்படும். மாறாக புதியவற்றை உருவாக்காது விடவும் சில நிகழ்ச்சித் திட்டங்கள் செயற்படக்கூடும். உதாரணமாக, கிராமிய மட்டத்தில் கூட்டுறவு நிறுவனம் போன்று ஏற்கனவேயுள்ள நிறுவனங்களூடாகவும் அது தொழிற்படலாம். எனினும் அநேக நிகழ்ச்சித் திட்டங்களுக்காக, அநேகமாக நிறுவனங்களும் இவ்வாறிருப்பினும் சிலவற்றையாவது புதிதாகத் தோற்றுவிப்பர்.

கொள்கையாக்கம், நிகழ்ச்சித் திட்டங்களைத் தயாரித்தல், ஆதரவுகளை வழங்கல், பயிற்சி நெறிகளை நடாத்துதல், திட்ட நிறைவேற்றம், திட்டக் கண்காணிப்பு, மீளாய்வு ஆகிய பல்வேறு தொழிற்பாடுகளை இந்த நிறுவனங்கள் ஆற்றுகின்றன. பல்வேறு மட்டங்களில் இப்பணிகள் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ள வகையைப் பொறுத்தவரை ஒரே சீரான தன்மை மிகக் குறைவாகவே காணப்படுகின்றது. கொள்கையாக்கம் மட்டும் எங்கும் தேசிய மட்டத்தில் மேற்கொள்ளப்படுகின்றது. எனினும் கொள்கையாக்க வழிமுறையில் வேறுபாடுகள் காணப்படுகின்றன. குறித்துரைக்கப்பட்ட விரிவான விதிகளை உள்ளடக்கியனவாகச் சில கொள்கைகள் காணப்பட வேறு சிலவற்றில் கொள்கைகள் விரிவாக விளக்கப்பட்டிருப்பதில்லை.

சில நாடுகளில் ஒகிஅ நிகழ்ச்சித் திட்டம் அரசாங்கத்தின் தனிப் பொறுப்பாக இருக்கின்றது. வேறு சில நாடுகளில் தேசிய நிகழ்ச்சித் திட்டம் அரசாங்கச் சார்பற்ற நிறுவனங்களதும், பிறநாட்டு முகவராண்மை நிலையங்களதும் ஆதரவுடன் மேற்கொள்ளப்படுகின்றது. நிதி, தொழில்நுட்ப அறிவு, ஆளணி என்ற பல்வேறு வடிவங்களாக இந்த ஆதரவுகள் அமையலாம். நிகழ்ச்சித் திட்டத்தின் எந்த மூன்று மட்டங்களிலும் ஆதரவுகள் வழங்கப்படலாம்.

எந்த வழியிலானதாக இருப்பினும் ஒகிஅ நிகழ்ச்சித் திட்டத்தின் நிறுவன ரீதியான அமைப்பு உதவியம் பெறுபவர்களும் அவ்வாறே தருபவருமான வழங்குநர்களின் சேர்க்கையை அனுமானமாகக் கொண்டதாகவே அமைந்திருக்கும். சில சமயங்களில் பல்வேறுபட்ட கடமைகளையும் இலக்குகளையுங்கொண்டதாக இச்சேர்க்கை அமைவதுண்டு. இத்தகைய கடமைகளை ஆற்றுவதற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு உரிய பயிற்சி வழங்குவது அவசியமாவதுமுண்டு. இத்தகைய கடமைகளை ஆற்றுவதற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கட்கு உரிய பயிற்சி வழங்குவது அவசியமாவதுமுண்டு.

நிகழ்ச்சித் திட்டங்களில் காணப்படும் இத்தகைய வேறுபாடுகள் அவற்றின் நிதி ஏற்பாடுகளிற் பிரதிபலிக்கும்மேலே குறிப்பிட்டுள்ளவாறு அரசாங்கம் ஒன்றிலிருந்து மட்டும் நிகழ்ச்சித் திட்டங்களுக்கான நிதி கிடைப்பதில்லை. நிதியைப் பகிர்ந்தளிப்பதும், நிதிக் கட்டுப்பாடு நிதி எங்கிருந்து பெறப்படுகின்றது என்பதைவிட முக்கியமான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாகும். மேலும் பலவேறு மட்டங்களுக்கு அதிகாரம் எவ்வாறு வழங்கப்படுகின்றது என்பதைப் பொறுத்தும் நிகழ்ச்சித் திட்டங்கள் வேறுபடும்.

இத்தகைய வேறுபட்ட மாதிரிகளில் ஏதாவது ஒன்றின் அடிப்படையில் நிகழ்ச்சித் திட்டம் அமைந்திருக்கும் என்பதை மேற்போந்த விளக்கம் எடுத்துக் காட்டுகின்றது. இவை விரிவாக ஒவ்வொரு நாட்டுக்கான நிகழ்ச்சித்திட்டமும் தனக்கெனத் தனிப் பண்பினைக் கொண்டதாக இருக்கும். எனவே ஒரு நாட்டின் ஒசிஅ திட்ட அனுபவத்தை மதிப்பீடு செய்யும் போது அந்த நாட்டின் வெளித்தோற்றத்தை இனங் காணுவது அவசியமாகின்றது. திட்டத்தின் இலக்குக் குழாத்தினர் யார்? திட்டத்தின் குறிக்கோள்கள், அதனைச் செயற்படுத்துவதற்காகப் பயன்படுத்தப்படும் நிறுவனங்கள் போன்றவை தொடர்பாக நிகழ்ச்சித் திட்டத்தின் நிலை யாது என்பவற்றை அறிவது முக்கியமானதாகின்றது.

இது மட்டுமல்ல, குறித்த புறத்தோற்றத்தை அந்நிகழ்ச்சித் திட்டம் எவ்வாறு பெற்றுக் கொண்டது? எந்த நோக்கங்களும் தீர்மானங்களும் திட்டத்தின் வடிவமைப்புக்குக் காரணமாயின? வேறுபட்ட பல விருப்புக்களுக்கிடையே இருந்து சுதந்திரமான தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதா? அல்லது குறைந்தளவு மாதிரிகளிலிருந்து மட்டும் தெரிவு செய்யப்படத் தேர்ந்ததா? நிகழ்ச்சித்திட்டம் பல்வேறு கட்டங்களாக வகுக்கப்பட்டிருக்குமெனில் ஒரு தொகுதித் தீர்மானங்களுடன் மட்டுமின்றி ஒரே மாதிரி வினைக்கப்பட்டவையும் தொடர்ச்சியான தீர்மானங்களுடன் நாம் சம்பந்தப்படுகின்றோம். அமைக்கப்பட்ட நிறுவனங்கள், வகுக்கப்பட்ட திட்டங்கள், எந்திய விதிகள் என்ற வகையில் அமைந்த ஒழுங்குமுறை பற்றிய விபரம் எதுவிதமான பலனையும் தராது. முறையாக விளக்கமுற்பட்டால் இந்த வரலாறு மேலெழுந்தவாரியானதாக அமையாமல் மிகச் சிக்கலானதாகக் காணப்படும். மிகத் தெளிவான அடிப்படையைக் கொண்டதும் பிரச்சினையின் பல அம்சங்களை உள்ளடக்கியதுமான பரிந்துரையாக மேற்கொள்ளப்படும் தீர்மானங்களின் விளைவாக ஒசிஅ நிகழ்ச்சித் திட்டம் குறிப்பிட்ட புறத்தோற்றத்தைப் பெறுகின்றது. ஏனைய முக்கிய தேவைகளிலவு இன்றன எனப் புலங்கொள்ளப்படும் போது கிராமியத்துறையின் 'நலன்' களுக்கெனச் செலவிடுவதற்கான சிரமம் அல்லது புத்திசாதுரியமற்ற நிலையாக அது அமைகின்றது. அரசாங்கமானது நாட்டின் நிலைமைக் கருத்திற்கொண்டு அதனை மாற்றியமைப்பதற்குத் தேர்ந்தெடுத்த வழியாக ஒசிஅ திட்டம் அமைகின்றதெனப் பரந்த கருத்திற் கூறலாம். எனவே ஒசிஅ திட்டத்தின் புறத்தோற்றம் பற்றிய ஆய்வு வரையறை கொண்ட மேலெழுந்த வாரியான கண்ணோட்டத்தைத் திருத்தும் ஒரு நடவடிக்கையாக அமையலாம்.

புறத் தோற்றத்தின் முக்கியத்துவத்துக்குக் கொடுக்கப்படும் அழுத்தத்தை ஏட்டுச் சுரைக்காய் என கிராமிய அபிவிருத்தி ஆர்வலர் கருதி அது நடைமுறை வாழ்க்கைக்கு ஒவ்வாதது என நிராகரிக்கக் கூடும். ஆனால் இச்சொல் முறையானது கடன்கள் நோக்கங்களுக்குக் கொடுக்கப்பட்டிருப்பதற்கான காரணத்தைக் கண்டறிவதைப் போன்றதல்ல. ஒரு விசாரணை வேறொன்றுக்கான பிரதியீடாக அமையமாட்டாது. ஒரு நாட்டின் ஒசிஅ அனுபவத்தை மதிப்பீடு செய்வதில் இரண்டு செயன்முறைகளும் முக்கியமானவைகளாகும். கொள்கையின் திடமான வெளிப்பாடாகக் கடன்களை வழங்குதல் அமைகின்றது. ஆனால் சமநிலைத் தன்மை புறத்தோற்றத்திலேயே வெளியிடப்படும். ஒசிஅ நிகழ்ச்சித் திட்டத்தின் புறத்தோற்றத்தினைக் கருத்திற் கொள்ளாது அதனை ஆய்வு செய்வது நோயின் காரணத்தைக் கண்டறியாமல் அதனைக் குறிகட்டு மருத்துவம் செய்வதற்கு ஒப்பானதாகும்.

### மதிப்பீடு செய்யவிருள்ள சில பிரச்சினைகள்

ஒரு திட்டத்தின் புறத்தோற்றத்தைவிட அதன் வடிவமும் அது எவ்வாறு செயற்படுத்தப்படுகின்றது என்பதும் விசாரணைக்குட்படுத்தப்பட வேண்டியவையாகும். விதிக்கப்பட்ட இலக்குகள், எதிர்பார்க்கப்பட்ட விளைவுகள் என்பனவே ஒரு நிகழ்ச்சித் திட்டத்தின் வழமையான மதிப்பீட்டின் அடிப்படையாக அமைகின்றன. ஒசிஅ நிகழ்ச்சித் திட்டத்தின் இந்த இரு அம்சங்களையும் மதிப்பிடுவதிலுள்ள பிரச்சினைகள் யாவை?

ஒரு திட்டத்தின் வளங்களையும், குறிக்கோள்களையும் தொடர்புபடுத்தும் வழிமுறையாக அதன் புறத்தோற்றம் அமைகின்றது. திட்ட அமுலாக்கங்களில் குறிப்பிட்ட பணிகளைச் செய்பவர்கள் அத்திட்டத்தின் வளங்களைப் பயன்படுத்துகின்றனர். இவர்கள் ஒவ்வொருவரது பணியும், அவர்களிடையேயான தொடர்பும் அமைப்பின் மூலகங்களாக அமைய, அமைப்பு புறத்தோற்றத்தின் பிரதான கூறாக அமைகின்றது. இங்கு பணி என்னும் போது அது நிகழ்ச்சித் திட்டத்தின் அலுவல் சார் கூறாக மட்டும் மட்டுப்படுத்தப்படாது திட்டத்துக்காகப் பணியாற்றுவோரையும் அதனால் அணுகப்படுவோரையும் உள்ளடக்குவதாகவே அமைகின்றது.

மக்களின் செயற்பாட்டினும் அவர்கள் நடந்து கொள்ளும் குறிப்பிட்ட வழிகளிலும் புறத்தோற்றத்தின் சுவடுகளும் தங்கியுள்ளது. அலுவலர்களின் நெறிப்படுத்திட்ட அவர்களது [illegible]லிக்க, ஆக்கபூர்வமான பங்களிப்பையே பெரிதும் எதிர்

பாரங்கப்படுகின்றது. பொது நலனுக்காக அவர்கள் செயற்பட வேண்டும். அவர்கள் அலுவல் சார் அமைப்பொன்றின் அங்கமாக அமைவதனால், சில சமயங்களில், இத் தேவைப்பாடுகள் குறித்துரைக்கப்பட வேண்டியதும் அவசியமாகின்றது. வேறு சிலரது பணிகள் வற்புறுத்தலாலும் கவர்ச்சியாலும் பெறப்படவேண்டியவையாகின்றன. எனவே உரிமைகள், கடமைகள், ஊக்குவிப்புக்கள், வெகுமதிகள், தண்டனைகள் என்பவற்றை உள்ளடக்கிய திட்டமொன்று வரையப்படல் வேண்டுமெனச் சுருக்கமாகக் கூறலாம்.

புறத்தோற்றத் தொடர்பான கேள்விகள் யாவை? குறிப்பிட்ட குறிக்கோள்களின் பதிற்குறியாக இவை ஏன் அமைதல் வேண்டுமென்பது இவற்றுள் வெளிப்படையானதாகும். தேர்வின் சரியிலைத் தன்மை யாது? நிகழ்ச்சித் திட்டத்துடன் தொடர்புடைய குறிக்கோள்களிற் சில ஏன் அதனுடன் சேர்த்துக் கொள்ளப்படவில்லை?

இவற்றைவிட வேறு கேள்விகளும் உள்ளன. திட்டம் யாருக்காக வகுக்கப்பட்டதோ அவர்களின் உண்மையான தேவைகளைக் குறிக்கோள்கள் உள்ளடக்குகின்றனவா? குறிக்கோள்கள் தொடர்பாக அறநெறி சார்ந்த கண்டனங்கள் தெரிவிக்கப்பட்டிருந்தனவா? குறிக்கோள்கள் மிக நியமமாக ஆக்கப்பட்டுள்ளனவா? இயன்றுட் சில குறிப்பான இலக்குகளாக வகுக்கப்பட்டு அவற்றுக்கு எல்லையடிப்படையிலான வடிவம் கொடுக்கப்பட்டிருக்கக்கூடும். உதாரணமாக மிக வறியோருள் 10 சதவீதமானவர்களின் வருமானங்களை 40 சதவீதத்தால் அதிகரிப்பதை எதிர்பார்க்கும் வகையில் நிகழ்ச்சித்திட்டம் வகுக்கப்பட்டிருக்கலாம். இதனை வடிவில் வரையறுக்கப்பட முடியாத வேறு சில குறிக்கோள்களும் நிகழ்ச்சித் திட்டத்தில் இடம் பெற்றிருக்கவும் கூடும். காணியற்றோர் இடையே ஐக்கிய உணர்வை வளர்ப்பது போன்றவற்றை இதற்கு உதாரணமாகக் கூறலாம்.

வளங்களைத் திறமையாகப் பயன்படுத்தும் வகையில் திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளதா அல்லது அதிக வளங்களைப் பயன்படுத்திய போதும் மிகக் குறைந்த உற்பத்தியளவை மட்டும் அடையக்கூடியதாக இருக்குமா? திட்டத்தின் பல்வேறு கூறுகளையும் ஒன்று சேர்க்கும் போது அவை இசைவாகவும் இணக்கத் தக்கவையாகவும் இருக்குமா? நிகழ்ச்சித் திட்டம் வடிவமைக்கப்பட முன்னரேயே குறிக்கோள்கள், வடிவமைப்பு, தொடர்பு என்பவை பற்றிய விளக்கங்கள் தொகுக்கப்படவேண்டியது அவசியமாகும்.

திட்டத்தின் தொழிற்பாட்டின் விளைவாக நேர்ந்த மாற்றங்களை இனங் காணுவதே மதிப்பீட்டுச் செயற்பாட்டின் முதற் படியாகும். ஆரம்ப நிலைபற்றி நன்கு தெரிந்திருப்பதுடன் முடிவு நிலையை இனங்காண முடியும் என்ற எடுகோளின் அடிப்படையிலேயே மதிப்பீடு மேற்கொள்ளப்படுகின்றது. நாம் ஏற்கனவே கூறியவாறு சில குறிக்கோள்களைப் பொறுத்த வரை பிரச்சினைகள் எதிர் கொள்ளப்படலாம். ஆனால் ஏனைய குறிக்கோள்களைப் பொறுத்த வரை மாற்றத்தின் அளவை நிச்சயப்படுத்திக் கொள்ளக் கூடியதாக இருக்கும்.

சிலர் இதனையே மதிப்பீடெனக் கொள்ளவும் கூடும். வேறு சிலர் செலவு – நலன் என்பதனையே ஆய்வின் அடிப்படையெனக் கொள்கின்றனர். நிகழ்ச்சித் திட்டம் சில குறிக்கோள்களை அடைய முடியாமற் போனதற்கான காரணங்களை விளக்குவதும் அவசியமானதாகும்.

ஏனைய முயற்சிகளைப் போல ஒவ்வொரு நிகழ்ச்சித் திட்டங்களின் சாதனைகள் ஒன்றன வடிவமைப்பு, முகாமை ஆகிய இரு மட்டங்களின் விளக்கமாகும். முகாமை மட்டத்தில் தவறு நேர்ந்துள்ளமை கண்டறியப்பட்டால் வடிவமைப்பு சரியாக இருந்துள்ளது என்றும் முகாமைத்துவம் திறமையாக இருந்திருக்குமானால் நிகழ்ச்சித் திட்டம் தனது இலட்சியங்களை அடைந்திருக்க முடியும் என்றும் அனுமானிக்கப்படுகின்றது. உதாரணமாக, தவறு வடிவமைப்பில் நேர்ந்திருக்குமாயின் ஊக்குவிப்புகளுக்கும் எதிர்பார்க்கப்பட்ட நடவடிக்கைகளுக்குமிடையே இசைவின்மை காணப்பட்டதென்றும் திறமையாக முகாமைப்படுத்தப்பட்ட போதும் நிகழ்ச்சித் திட்டம் தோல்வியைத் தழுவியதென்றும் கொள்ளப்படல் வேண்டும்.

இக் காரணிகளில் ஏதாவது ஒன்றின் காரணமாக மட்டுமே தோல்வி ஏற்படுவதென்பது மிக அரிதான நிகழ்ச்சியே. தோல்வியின் காரணம் தவறான முகாமையா அல்லது தவறான வடிவமைப்பா என்பதை நிர்ணயிப்பது எளிதல்ல. விவசாய விளைதிறன் அதிகரித்திருந்த போதிலும் சந்தைப்படுத்தற் குறைபாடு காரணமாக வருமான அதிகரிப்பு ஏற்படாதிருக்கக் கூடும். இது முகாமைத்துவப் பிரச்சினையா அல்லது வடிவமைப்புக் குறைபாடா என உடனடியாகக் கண்டறிய முடியாது. வடிவமைப்புக் குறைபாடுகளுக்கு முகாமைத்துவ விளக்கங்கள் அளிக்கப்படுதலே வழமையாக நடைபெறுவதாக உள்ளதாகும். இரு விளக்கங்களும் பற்றிய குழப்பநிலையைத் தவிர்ப்பதற்கு ஆதலின் வடிவமைப்பு இசைவானதாகவும் தர்க்க ரீதியானதாகவும் மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதை நிச்சயப்படுத்திக் கொள்ளல் வேண்டும். ஒரு ஒவ்வ நிகழ்ச்சித் திட்டத்தின் குறிக்கோள்களில் ஒன்றாக விவசாய விளைதிறனைப் பெருக்குதல் என்பது விளங்குகின்றதென்றும் இந்த அதிகரிப்பை மேம்படுத்துவதற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊக்குவிப்புகள் வழங்கப்பட்டன எனவும் கொள்வோம். இந் நிலையில் இக்குழுவினரின் பூரண பதிற்குறி கிடைக்குமென எதிர்பார்க்கப்பட்டிருந்து அவர்களுள் 20 சதவீதத்தினரின் பதிற்குறி மட்டும் கிட்டியிருக்குமெனில் அது வடிவமைப்பின் பிரச்சினை என நிச்சயமாகக் கூறமுடியும்.

இறுக்கமான வடிவமைப்பில் விரும்பத்தக்க நடத்தையும் எடுகோள்களும் பொருத்தமான முறையில் ஒன்றுடனொன்று தொடர்புபடுத்தப்பட்டிருக்கும். மிக வறியோரின் வருமானத்தை முன்னேற்றுவதை மட்டும் நோக்கமாகக் கொண்ட எளிய ஒன்றைப் பிரமாண திட்டங்கள் கூட சில எடுகோள்களின் அடிப்படையிலேயே வகுக்கப்பட்டிருக்கும். அவர்களின் வறுமையின் மட்டம் மிக அதிகமாக இருப்பதனால் அவர்களது வருமானங்களை 50 சதவீதத்தால் அதிகரிப்பதற்கு திட்டத்தில் வகை செய்யப்பட்டிருக்குமாயின் அதற்கு அவ்வளவு பதிற்குறியும் கிடைக்குமென அனுமானிக்கப்படும். இலக்குக் குழுத்தினர் சில தொழில்களையும், நடவடிக்கைகளையும் மேற் கொள்ளப் பின்னிற்கக் கூடுமாதலால் சில வேளைகளில் இந்த எடுகோள் பிழைக்கவும் கூடும். முக்கிய எடுகோள்கள் வேண்டிக்குரியனவாக அல்லது முறையற்றனவாக அமையுமெனில் திட்டங்கள் எதிர்பார்க்கப்பட்டவாறு தொழிற்படாது போகவும் கூடும்.

வடிவமைப்பைப் பரிசீலிக்கும் அடுத்த கட்டம் கோட்பாடுகளின் அமைகின்றன. அவை சரியானவைதானா என வினவுவது ஒரு நிகழ்ச்சித் திட்டம் எவர் நலன்கருதி ஆக்கப்பட்டது எனக் கேட்பதற்குச் சமமானதாகும். அவர்கள் நடத்தை எத்தகைய பிழைகளுடன் முன்னுணர்த்தப்பட்டது. பொதுக் கலாச்சாரத்தைக் கொண்டுள்ள ஒரே சீரான மக்கள் என்ற வகையிலன்றி தனிப்பட்ட அல்லது குழும முறையில் அவர்கள் ஏன் அவ்வாறு நடந்து கொள்கிறார்கள்? இத்தகைய வினாக்களுக்கு பல்வேறு வகையாக விடையிறுக்கப்படலாம். பாரபட்சமானவை என்ற வகை முதல் முறையானவை எனக் கணிக்கப்படக் கூடியவை வரை இவை வேறுபடலாம். கிராமிய அபிவிருத்தி போன்ற தோற்றங்களை பாரம்பரிய ஒழுக்க முறைகளைக் கடந்த அணுகு முறைகளைப் பயன்படுத்திப் ஆராய வேண்டும் என்ற குறிப்பைத் தவிர இதை விரிவாக விளக்குதல் எனது நோக்கமல்ல. இரு அணுகு முறைகளும் ஒவ்வொரு வகையில் குறைபாடுடையனவாக இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. இவற்றுள் ஒன்றில் கல்வி மட்டும், உடைமையாகவுள்ள ஆதனங்கள் போன்ற தனியார் குணவியல்புகள் இனங்காணப்பட்டுள்ளன. தனியார் பதிற்குறியை விளங்கிக்கொள்வதற்கு இது தேவையாக உள்ளது. தனியார் நடத்தை என்ற தாக்கத்தின் அடிப்படையிலும் இது திருத்தமான விளக்கத்தை மட்டும் தரும். மற்றையதில் தனியார் நடத்தையின் விதம், காரணங்கள் பற்றிய முடிவுகள் கிடைக்கும் என்ற நம்பிக்கையில் உறவுமுறை, சாதி, நிலப்பயன்பாடு என்பவை பற்றி விசாரணை மேற்கொள்ளப்படுகின்றது. அளவையிடுவதை தவிட இது அதிகமான விளக்கத்தைக் கொடுக்கக் கூடியதாக இருந்த போதிலும் இதுவும் தேவையை முற்றாகப் பூர்த்தி செய்வதாக இல்லை.

புதிய நிகழ்ச்சித் திட்டம் பற்றிய ஒரு மதிப்பீடு எத்தகையதாக அமையும் என்பதை எடுத்துக் காட்டுவதாக மேற்கூறிய விளக்கம் அமைந்துள்ளது. ஆனால் குறித்த ஒரு நாட்டைப் பற்றி நாம் சுயவிருத்துக்கு எடுத்துக் கொண்டோமெனில் நாம் பல வினாக்களைத் தொடுக்க வேண்டியிருக்கும். கோட்பாட்டு ரீதியான அல்லது முறையிற்படியக்கூடிய மாற்றீட்டு அப்பியாசமாக மட்டுமன்றி விஷக்கன முறையாக இனங்காணப்பட்டுள்ளனவா? விடைகள் தெளிவாக இருந்திருப்பின் செயற்-தலைகள் அவ்வாறு மட்டும் மேற்கொள்ளப்பட்டு அந்த இடத்தில் நிறுத்தப்பட்டு விட்டதா? அல்லது வடிவமைப்புப் பிரச்சினைகளும் முகாமைத்துவப் பிரச்சினைகளும் வேறுபடுத்தப்படும் கட்டம்வரை செல்லப்பட்டதா? நிகழ்ச்சித் திட்டத்தின் பாரிய நோக்கங்கள் பயனுள்ள வகையில் பரிசீலிக்கப்படுவதை உறுதிசெய்யும் அளவுக்கு அடங்கிய ஆய்வுச் செயன்முறையில் இது ஆக்கப்பட்டுள்ளதா?

மதிப்பீட்டை நோக்கி

சில நாடுகள் காலனித்துவ மாற்றங்கள் கிராமியத்துறையில் ஒரு மாற்றத்தில் பெருமளவுக்குத் தங்கியிருப்பதனாலும் இது ஒரு அவசியமான மதிப்பீட்டு அப்பிரோசமாக இருப்பதனாலும் இதுபற்றி தர்க்கத்துக்கு மீண்டும் செல்வோம். பல வழிகளில் கிராமிய உருமாற்றம் நிகழலாம். ஆனால் அவ்வழிகள் அனைத்தும் சகல நாடுகளாலும் பயன்படுத்தப்படக் கூடியவையல்ல. புதிய இந்த அநேக மார்க்கங்களில் ஒன்றாகும்.

புதிய பற்றியதாகவோ, வெறும் கிராமிய அபிவிருத்தி பற்றியதாகவோ அல்லது அபிவிருத்தி பற்றியதாக இத்தர்க்கம் அமைந்துள்ளது. ஒரு நாட்டில் காணப்படும் குழுக்களின் இடையே அது நாடோறும் எதிர்கொள்ளும் சக்தியின் மத்தியில் அந்நாடு தன்னை எங்கு இட்டுச் செல்லுகின்றது என்பதைப் பற்றியதாக இத் தர்க்கம் அமைகின்றது.

இக் கட்டுரையில் விபரிக்கப்பட்ட அப்பியாசத்தை விளங்கிக் கொள்ளாத நாடொன்று இத்தகைய தர்க்கத்தில் பெரிய அளவில் பங்கேற்பது இயலாததாக இருக்குமென்பதே எமது கருத்தாகும். இத்தகைய அடிப்படையின்றி ஒரு நாடு இத்தர்க்கத்தில் பங்கேற்குமாயின் அது தன்னுடைக்கப்படாத கோட்பாடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களுடன் கூடிய பங்கேற்பாக மட்டுமே அமைய முடியும். ஏனெனில் வரலாற்றின் இக்கால கட்டத்தில் அது தன்னைத் தானே காத்துக் கொள்ள முடியாமலும் போய்விடும்.

பிரச்சினைக்குரிய தொன்றாக இத் தர்க்கம் அமையாது விடினும் கூட ஏனைய பொருத்தமான இந்த அப்பியாசத்தை மேற்கொள்வது பயனுள்ளதாகவே அமையும். மேற்கொள்ளப்பட்ட செய்கை நன்கு திட்டமிடப்பட்டதா அல்லது அதன் திருத்தங்கள் சொல்வதால் மட்டும் போதுமானதா இல்லாவிடின் முழுவதும் மீள அமைக்கப்படல் அவசியமானதா போன்ற விடயங்கள் தர்க்கத்தின் பயனாக வெளிக்கொணரப்படும். மட்டுப்படுத்தப்பட்ட காலஎல்லை, குறைவான வளங்கள், குறைந்த இடைவான ஆற்றல்கள் என்பவற்றுடன் மேற்கொள்ளப்படக்கூடிய அப்பியாசமாக இது அமையவில்லை. எனினும் முதலீட்டின் அளவுத் திட்டம் இத் தர்க்கத்தால் ஏற்படக்கூடிய கால மற்றும் வள விரயத்தை அவசியமானதாக்குகின்றது.

ஏனைய நிகழ்ச்சித் திட்டங்களில் ஒரு சிலவே இக் கட்டுரையில் விபரிக்கப்பட்ட மதிப்பீட்டு நடை-முறைக்கு உட்படுத்தப்பட்டன என்ற குறிப்புடன் இக் கட்டுரையை முடிவுறுத்தல் பொருத்தமானதே. ஏனைய பற்றிய ஆக்கங்களுட் பல பொருளியல் வல்லுனராலேயே மேற்கொள்ளப்பட்டன. அவற்றுட் பல உள்ளீடு — வெளியீடு தொடர்பான பிரச்சினை பற்றியே அக்கறை செலுத்தியுள்ளன. கொள்கைரீதியில் நமது கருத்துக்களை அவை தெரிவித்துள்ள போதிலும் பங்கீட்டையங்கள் பற்றி அவற்றில் ஆராயப்பட்டிருக்கவில்லை. வேறு சில ஆக்கங்கள் தமது அக்கறை புலம் என்பவற்றின் அடிப்படையில் அங்கொன்றும் இங்கொன்றுமாக சில விடயங்களின் ஆய்வுகளையன்றி வேறில்லை.

நிகழ்ச்சித் திட்டங்களுடன் தொடர்பு கொண்ட முகவராண்மை நிலையங்கள் கூட அவைதாமும் அடக்கிய மதிப்பீடுகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்துள்ளன என்பதற்கான சான்றுகளும் ஒன்றும் வாசகமே காணப்படுகின்றன. ஏனெனில் கூட இத்தகைய விசாரணைக்கு உட்படுத்தப்படவில்லை.

ஏனைய பற்றிய செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்ட 30 ஆண்டுகள் கடந்த இன்னும் கூட உரிய விசாரணைகள் மேற்கொள்ளப்படாவிடின் கோட்பாட்டளவிலோ தொழிநுட்பம் என்ற வகையிலோ ஏனைக்குச் சார்பான வாதம் வெறும் வார்த்தை அலங்காரமாக மட்டுமே காணப்படமுடியும்!

ஒப்பீட்டளவில் இலங்கையின் கிராமியத்துறை பிரதேசமும் பெரியதாகும். சனத்தொகைப் பரம்பலும் கிராமியத்துறைக்குச் சார்பானதாகவே இருக்கிறது. கிராமியத்துறையின் முக்கியத்துவம் இனிவரும் காலங்களிலும் தொடர்ந்தும் உயர் அளவில் இருந்து வரும் என்பதற்கான சான்றுகள் தென்படுகின்றன. எனவே, நாட்டின் பொருளாதார அபிவிருத்தி கிராமியத்துறையின் அபிவிருத்தியிலேயே தங்கியிருக்கின்றது என்பதில் சந்தேகமில்லை. இதனால் கவனிப்பிலேயே கிராமியத்துறைக்கான திட்டமிடல் முக்கிய இடத்தைப் பெறுகிறது.

(28-ம் பக்கத் தொடர்ச்சி)

கருத்திட்ட நடவடிக்கைகள் நான்கு பிரதான நிகழ்ச்சித் திட்டங்களாக வகைப்படுத்தப்பட்டன. அவையாவன:-

1. இலங்கைக் குழாத்தினர் பங்கேற்கும் அணுகுமுறையுடன் கூடிய செறிவு கொண்ட கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்.
2. நீடித்த கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம். இலங்கைக் குழாத்தினர் குறிக்கும் அவர்கள் பங்கேற்கும் நடவடிக்கைகளைக் குறிக்கும் கிராம அபிவிருத்திச் சங்கங்களின் சிந்தனைப் போக்கின் மாற்றங்களை ஏற்படுத்தும் பரந்த அடிப்படையைக் கொண்டதாக இது அமையும்.
3. வேலைவாய்ப்புக்களையும் வருமானத்தையும் உருவாக்கும் நிகழ்ச்சித் திட்டம்.
4. சுகாதாரம், கல்வி, தோட்டத் தொழிலாளர் நலன், பின் தங்கிய இடங்களின் போக்குவரத்து என்பவற்றை உள்ளடக்கிய பல்துறை நிகழ்ச்சித் திட்டமாக அமையும் சமூக மற்றும் பொருளாதார உள்ளமைப்பு நிகழ்ச்சித் திட்டம்.

கருத்திட்டத்தின் இக் கட்டத்தின் ஆண்டொன்றுக்கு 40-45 மில்லியன் ரூபா செலவிடப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

ஆரம்ப காலத்தில் இத் திட்டம் தொடர்புள்ள நிலைக்களங்களின் செல்வாக்குக்கு உட்பட்ட உள்ளமைப்பு முதலீடுகளாகக் காணப்பட்டது. திட்டப் பணிமனை இத்திட்டத்தில் பிரதான செலவுத் திட்டத்தொடர்பான கட்டுப்பாடுகளை மட்டுமே கொண்டதாக அமைந்திருந்தது. கடந்த ஒன்பது ஆண்டுகளில் இந்நிலையில் மாற்றங்கள் ஏற்பட்டன. தற்போது வறுமைக்கு முக்கியத்துவமளிக்கும் திட்டங்களும் நலன்களைப் பெறுவதும் கொள்ளும் மக்களின் பங்கேற்பை கொண்ட இணக்கக் கூடிய தொகுதி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. திட்டமாக்கம், கண்காணிப்பு என்பவற்றில் மட்டுமின்றித் திட்ட நிறைவேற்றத்திலும் நேரடிப் பொறுப்புகளை வகிக்

(35-ம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணிப் பாவனைத் திட்டமிடலும் ஒ. கி. அ. திட்டமும்

கலாரஞ்சனி மகேஸ்வரன்

ஒ. கி. அ. திட்டமிடலில் காணிப்பாவனை திட்டமிடல் [illegible] மாத்தளை ஒ. கி. அ. [illegible] பயன்படுத்து[illegible] ஒ. கி. அ. திட்டத்தின் [illegible]

மாத்தளையில் பெறக்கூடிய தரவுகளான காணியும், பாவனைக் கேற்ப அது வகைப்படுத்தப்பட்ட நிலைமையும் அட்டவணை 1இல் தரப்பட்டுள்ளது. கட்டுரை முழுவதிலும் விவாதத்திற்கெடுக்கப் பட்ட விடயங்கள், இம் மாவட்டத்தில் உள்ள சாகுபடிக்கேற்ற நிலத்தின் பாவனை மீதான ஆசிரியரின் அவதானிப்பில் ஏற்பட்டு பின்னர் தேசிய மட்டத்தில் காணிப்பாவனையைப் பொதுப் படுத்தி விளக்கப்பட்டுள்ளது. மேலும் இக்கட்டுரையின் நோக்கமானது எதிர்கால அபிவிருத்திக்கான பொருளாதார, விவசாய பொருளாதாரத்தில் காணிப் பாவனை திட்டமிடலின் முக்கிய தேவையை எடுத்துக் காட்டுவனவாகும். இங்கு கவனிக்கப்பட வேண்டியவை விடயங்களாவன:-

(அ) சாகுபடிக்கேற்ற நிலத்தை செய்கை பண்ணப்படும் பயிர்களின் வகைகளினதும் குறிப்பிட்ட இடத்தில் பல இன பயிர்களை செய்கை பண்ணும் தேவையினதும் இயற்கைக்கேற்ப விவசாயிக்கு அதிகரித்த நன்மைகளை ஏற்படுத்தும் விதமாக, நிலப்பரப்பைப் பயன்படுத்துதல்; சந்தைத் தேவைகளில் மாற்றங்களுக்கேற்ப இயங்குதல்; குறிப்பிட்ட காலத்தில் உள்ளூர் சந்தையிலும், உலக சந்தையிலும் அதன் உற்பத்திகளின் விற்பனையூடாக தேசிய பொருளாதாரத்திற்கு உதவக் கூடிய பயிர் வகைகளை அறிமுகப்படுத்தலுமாகும்.

(ஆ) ஒ. கி. அ. நிகழ்ச்சித் திட்டம் கிராமிய மக்களின் வருமான உற்பத்தி நடவடிக்கைகளுக்கு காணிப்பாவனை தொடர்பில் முக்கியமாக விவசாயம் தொடர்பிலான நடவடிக்கைகளுக்கு அறிமுகப்படுத்துதல் மூலம் கிராமிய வறுமையை ஒழித்தல்; தற்போது நடைமுறையிலுள்ள சிறந்த காணிப் பாவனை மாதிரிகளுக்குப் பதிலாக திட்டமிடப்பட்ட காணிப் பாவனை உபாயத்தின் மூலம் வழிப்படுத்துதல்; சிரம முறையாக வரிப்படுத்துதல்; குறிப்பிட்ட விவசாய நடவடிக்கையை கொண்டு நடாத்துவதற்கான நிதியின் கிடைக்கப் பெறுந்தன்மை போன்ற முக்கிய நோக்கங்களைக் கொண்டுள்ளது.

(இ) கிராமிய மக்களின் வாழ்க்கைத் தரங்களை உயர்த்துவதற்குத் தேவையான சமூக, பொருளாதார உள்ளக அமைப்புகளை நிறுவுதலுக்கு, இத்தகைய உள்ளக அமைப்புகளின் நிறுவுதலில் பயன்படுத்தப்படும் அதன் தகுதி பற்றிய அனுபவ ரீதியான மதிப்பீட்டினூடாக சாகுபடிக் கேற்றதல்லாத நிலங்களைப் பயிர்தல்.

மாத்தளை மாவட்ட ஒ. கி. அ. திட்டங்கள், காணிப்பாவனைகளில் நேரடியான செல்வாக்கினை ஏற்படுத்தியுள்ளன.

(அ) சிறு ஏற்றுமதி பயிர்களின் கீழ். சிறு ஏற்றுமதி பயிர்ச் செய்கையாளருக்கு மானிய திட்டத்தின் கீழான நிதிகளை வழங்குதல் மூலம் உதவியுள்ளது. இவ்விடயத்தில் சிறு ஏற்றுமதி பயிர்ச் செய்கையினை விவசாயிகள் மேற்கொள்வதற்கான ஊக்குவிப்பாகவே மானியத்திட்டம் பயன்படுத்தப்பட்டதென பார்க்கலாம். நீண்டகாலம் சிறு ஏற்றுமதிப் பயிர்கள் அல்லாத ஏனைய குறுகிய காலப் பயிர்களுக்கு மானியங்கள் வழங்கப்படின், விவசாயி நீண்டகாலப் பயிர்களின் கீழான நீண்டகால அடிப்படை ஈடுபாடில்லாது, குறுகிய கால இடைவெளிகளில் பயிர்களை மாற்றுவதாகின்றதென்பது ஆசிரியரின் கருத்தாகும்.

சிறு ஏற்றுமதிப் பயிர்கள், விவசாயிக்கு ஒவ்வோர் உற்பத்தி அலகுக்கும் உயர் வருமானம் வழங்கும் அதேவேளையில் இப் பயிர்களின் விளைச்சல் காலம் ஒரு வருடத்திற்கு மேலாகவுமுள்ளது. ஒ. கி. அ. திட்டத்தினால் வழங்கப்படும் நிதியின் அளப்பெரிய [illegible] திட்டமிடுதற் பொருட்டு வழிப்படுத்தப்படுகின்றது.

ஒ. கி. அ. தி. நடைமுறைப் படுத்தலுக்கு முன்னர் 1980இல்

அட்டவணை 1

மாத்தளை மாவட்டத்தில் சிறு ஏற்றுமதிப் பயிர்களின் கீழ் காணிப்பரப்பு

| வருடம் | கொக்கோ | கோப்பி | கறுவா | ஏலக்காய் | மிளகு | கராம்பு | சாதிபத்திரி |
|---|---|---|---|---|---|---|---|
| * 1980 | 14,166 | 4,311 | 386 | 5,085 | 10,613 | 787 | 268 |
| ** 1986 | 9,603 | 3,773 | 220 | 5,085 | 9,363 | 1,828 | 160 |

* உயர் நிலப்பயிர்களும் கால்நடைகள் புள்ளிவிபரவியலும் 1980 ** இலங்கையின் விவசாய, குடிசன கணிப்பீடு, புள்ளிவிபரவியல் திணைக்களம் புள்ளிவிவரங்கள், 1988



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டவணை 2

| விவசாயப் பயிர்களில் காணிப்பாவனை – 1982 | | |
|---|---|---|
| காணிப்பாவனை | பரப்பளவு ஹெக்டேயர்களில் | வீதம் |
| 1. பெருந்தோட்டப் பயிர்கள் தேயிலை, இறப்பர், தென்னை | 798,103 | 39.7 |
| 2. ஏனைய நிரந்தரப் பயிர்கள் | 176,599 | 8.8 |
| 3. [illegible] நெல் | 556,982 | 27.7 |
| 4. நெல் தவிர்ந்த தற்காலிகப் பயிர்கள் | 195,048 | 9.7 |
| 5. சேனை, கைவிட்ட நிலம் | 54,129 | 2.7 |
| 6. புல்வெளி | 20,097 | 1.0 |
| 7. பயிரிடக் கூடிய ஆனால் பயிர் செய்யப்படாத நிலம் | 91,648 | 4.6 |
| 8. வீடுகள், கட்டடங்களின் கீழுள்ள பரப்பளவு | 73,416 | 3.7 |
| 9. பாதை மற்றும் [illegible] | 40,805 | 2.1 |
| | 2,008,728 | 100.0 |

சிறு ஏற்றுமதிப் பயிர்களில் மேற்கொள்ளப்பட்ட காணிப் பகிர்வும் ஐ. கி. அ. தி. திட்டப் படுத்தலின் முடிவிலும் 1986இல் மேற்கொள்ளப்பட்ட காணிப் பகிர்வும் ஒப்பிடப்படும் நோக்கங்களுக்காக மேலே தரப்பட்டுள்ளன.

ஒவ்வொரு சிறு ஏற்றுமதிப் பயிர்களின் கீழுமான காணிப் பகிர்வில், இப்பயிர்களின் உற்பத்திக்கான சந்தைத் தேவையில் மாற்றமேற்பட்டு அதன் காரணமாக அத்தகைய உற்பத்தியின் விலைகளில் பிரதிபலிப்பு ஏற்படுவதால் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. சிறு ஏற்றுமதிப் பயிர்களுக்கிடையிலான காணிகளின் பகிர்வுத் தன்மையையும் ஓரளவிற்கு இந்த எண்ணளவுகள் பிரதிபலிக்கின்றன.

பின்னணி

வரையறுக்கப்பட்ட மூலவளமாகவுள்ள காணியின் நியாயமான பாவனையை உறுதிப்படுத்துதல் முக்கியமானதாகும். இருபது மாவட்டங்களில் சமீபத்தில் நடைமுறைப்படுத்தப்பட்ட ஐ. கி. அ. திட்டங்கள், திட்டமிடல் அம்சங்களில் வேறுபட்ட போதிலும், கிராமிய வறியவர்களிடையே வறுமையை ஒழிப்பதில் முக்கியமானதும், சம்பந்தமானதுமெனக் கருதப்படும் திட்டங்களுக்கு [illegible] ஐ. கி. அ. தி. கருதுகோளினைக் கொண்டிருந்தன. மேற் கூறியவற்றை அடையும் பொருட்டு கிராமிய வறியவர்களின் வாழ்க்கைத் தரங்களையும், வாழ்க்கைத் தன்மையையும் சிறந்ததாக்கும் வருமான உற்பத்தி நடவடிக்கைகளில் முக்கியத்துவம் செலுத்தப்பட்டது. வருமான உற்பத்தி நடவடிக்கைகள் ஏதேனும் வகையில் சமூக அல்லது பொருளாதார உள்ளக அமைப்பு நிறுவனத்தில் அல்லது கைத்தொழில் விவசாய பாவிப்பில், உதாரணமாக கட்டடங்கள், [illegible], நீர்த் தேக்கங்கள் அல்லது விவசாயம் அல்லது கைத்தொழில் போன்ற ஏதேனும் ஒன்றினில் வரையறுக்கப்பட்ட மூலவளமாகிய காணியைப் பயன்படுத்துவதில் தேவைப்படுகின்றன. மேற்கூறியவற்றில் ஒன்றை நிறைவேற்றுவதற்குக் காணிப்பாவனை அத்தியாவசியமாகின்றது.

அடுத்துவரும் பகுதியில் விவாதிக்கப்படவுள்ள விடயம் இத்தகைய வரையறுக்கப்பட்ட மூலவளத்தின் நியாயமான பாவனை பற்றியதாகும். கிராமிய மக்களின் குறிப்பிட்ட தேவைக்கென நிர்ணயிக்கப்படும் [illegible] காணியானது வகைப்படுத்தப்பட்டு மதிப்பிடப்படல் வேண்டும். தற்போது நடைமுறைப்படுத்தப்படும் ஐ. கி. அ. தி. நடைமுறைகள் யாவும், கிராமிய மக்களின் வறுமையை ஒழிக்கும் கருதுகோளினைச் சுற்றிய அமைந்திருப்பினும் அவை மேற் கூறிய கருத்திற்கு முக்கியத்துவமளிப்பதில்லை.

காணி வளங்களை ஒவ்வாத முறைகளில் பயன்படுத்துவதன் மூலமாக வறுமையை ஒழிப்பதென்பது நிச்சயமான குறுகிய நோக்குடையதொன்றாகும். தற்போது மாத்தளை மாவட்டத்தில் சிறு ஏற்றுமதிப் பயிர் செய்கை விவசாயிகள் உயர் வருமானத்தைப் பெற உதவுகின்றது. ஆயினும் வாவிகளையும், மண்ணையும் அனுமதிக்கும் இப்பிரதேச வீட்டுத் தோட்டங்களையும், ஏனைய இழுக்கக் கூடியதான சாதுவான நிலங்களையும் இப்பயிர்களுக்குப் பயன்படுத்துவதென்பது சிந்திக்க வேண்டிய விடயமாக உள்ளது. சிறு ஏற்றுமதிப் பயிர்ச் செய்கையை ஊக்குவிக்கும் சி. ஏ. ப. திணைக்களத்தின் முயற்சிகள் தேசிய இலக்குகளுக்கு ஏற்றதாக இருப்பினும் நீண்ட கால பயிர்களான சிறு ஏற்றுமதிப் பயிர்களுக்கு காணிகளைப் பயன்படுத்துதல், விவசாயிகளுக்கு அனுகூலமாக இருக்கக் கூடிய குறுகிய கால பயிர்களின் பயிர்ச் செய்கையைத் தடை செய்கின்றது. இப்பயிர்களின் விளைச்சல் காலம் நீண்டதாக இருப்பதுடன் அதிகமாக பயிரிட்டு உற்பத்தியைக் குறிப்பிட்ட சந்தைத் தேவைகளுக்கு வழங்கும் விதத்தில் விவசாயி கடுந் தொழிலாளர்களையும் இயக்கச் செய்கின்றது. சிறு ஏற்றுமதிப் பயிர்களுடன் கலப்புப்பயிர்ச் செய்கை மேற்கொள்ளுதலென்பது எப்போதும் இயலுமானதொன்றல்ல. ஏனைய பயிர்களின் செழிப்பான வளர்ச்சியை இவை பாதிப்பதாக அமையலாம்.

நெற் காணியுடைமை அதிகரிப்பதற்குக் குளங்களை புனருத்தாரணம் செய்தல் மற்றுமொரு முக்கிய அம்சமாகும். திருப்தியான நீர் வழங்கல் நடைமுறைகளின் கீழ் வழங்கப்படும் போதியளவு நீருடன் நெற்செய்கையை மேற்கொள்ளுதல் பல சந்தர்ப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பங்களிப்பு உயர் பெறுபேறுகளைத் தந்துள்ளது. இருந்த போதும் நெல் உற்பத்தியில் தேசிய இலக்கினை அடைவதற்கான வழியும் வகுக்கப்படுகின்றது. கவனமாக பரிசீலிக்கப்படின் நீர்ப்பாசனத்தின் கீழ் நெற் சாகுபடிக்குப் பயன்படுத்தப்படும் அதே நிலங்கள், வேறு உயர் வலயப் பொருட்களின் பயிர்ச்செய்கைக்கும் பயன்படுத்தப்பட்டும் (உதாரணமாக மரக்கறிகள், பழங்கள் போன்றவை) பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்படக் கூடிய வகைகளின் அடிப்படையில் நிலத்தின் உச்ச அளவு பயன்பாட்டினைப் பெற முடிகின்றது.

ஒவ்வொரு பிரதேசத்தினதும் காலநிலை, மண்வளம் என்பனவை தொடர்பில் இந்த மாற்றுப் பயிர்கள் அடையாளம் காணப்பட வேண்டும். இவ்விதமான பயிர்களை அடையாளம் காணுதல், குறிப்பிட்ட காலநிலையிலும், மண்வளத்திலும் அப்பயிர்களின் பெறுபேறுகள் தொடர்பில் ஆராயான அனுபவரீதியான மதிப்பீடல் மூலம் மேற் கொள்ளப்படல் வேண்டும்.

பொருத்தமுடைமைத் தன்மை பற்றிய ஆய்வு மூலம் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இடரீதியாக பருவகாலரீதியாக, வளம் அடிப்படையாக, ஏற்ற பயிர்களின் தொகுதியொன்றினை தொகுக்க முடிகின்றது. இதையடைவதற்கு விவசாயமண், காலநிலை, திணைக்களங்கள் ஒன்றுபட்டு செயற்பட வேண்டும்.

தேசிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களில் கூறாகவுள்ள ஒ. கி. அ. நிகழ்ச்சித்திட்டம், மொத்த திட்டமிடல் சட்டகத்திற்குள் வகுக்கப்பட வேண்டும். இவ்விதம் செய்கையில் இயற்கை வளங்களான நிலம், நீர் முதலியவை மூன்று சிறிய மக்களுக்கேற்ப விகிதமாக அதாவது கிராமியமக்களின் உணவு, உறையுள், சூழ்நிலைச் சுகாதாரம், நிர்வாகம், கல்வி போன்ற தேவைகள் பொருத்தமுள்ளதாக சேர்ந்து ஒதுக்கீடு செய்யப்படல் வேண்டும்.

இடைக்கிடை கூடியதாகவுள்ள காணி, முதலில் சாகுபடி நிலம், சாகுபடியற்ற நிலம் என்ற வகையில் வகைப்படுத்தப்பட வேண்டும். இவ்விதமான விரிவான பிரிவுபடுத்தலின் பின்னர் சாகுபடி நிலமானது அதன் அமைவிடம், இடைத்தர, உயர்வலயங்களில் பயிர் உற்பத்திக்கேற்பவும், மண்வளம், காலநிலை வகைக்கேற்பவும், அடுத்து அந்த நிலங்களில் பயிரிடப்படக் கூடிய பயிர் வகைகளின் அடிப்படையிலும் வகுதிப்படுத்தப்பட வேண்டும். இவ்வொரு இடத்திலும் மேற்கொள்ளப்பட வேண்டிய ஏற்ற பயிர்களை அடையாளம் கண்டபின்னர், உற்பத்தியாளர் அவற்றை உள்ளூரிலும், வெளியூர்ச் சந்தைகளிலும் சந்தைப்படுத்தக் கூடியதன் அடிப்படையில் பொருளாதார சாத்தியத்தை மதிப்பாய்வு செய்யும் ஆய்வும் மேற்கொள்ளப்பட வேண்டும்.

தனியார்கள் நிலவும் சந்தையொன்றுக்கு உற்பத்தி செய்யும் தற்போதைய நடைமுறையானது பெரிய சிறிய விவசாயிகளின் சிறுப்பான்மையினை மற்றும் செய்து அவர் தனது உற்பத்திகளை அத்தகைய உற்பத்தித் தேவையில் வீழ்ச்சி காரணமாக உள்ளூர், வெளியூர் சந்தைகளில் சந்தைப்படுத்த முடியாத விரக்தி நிலைக்கு ஆளாக்குகின்றது. இத்தகைய ஒரு முடிவு விவசாயியை கடனை மீளக் கொடுக்க வேண்டிய சுமைகளுக்கு ஆக்கி அதன் விளைவாக முன்னேற வழியற்ற நிலைக்கு தள்ளுகின்றது. மேற்கூறிய ஒரு சூழ்நிலையில் சிறிய விவசாயி, ஒரு போதும் தொழில், முதலீட்டினை, அல்லது நிலத்தில் வேறெந்த வகையிலும் முதலீடு செய்ய முடியாத நிலையில், அதுவும் குறிப்பாக பயிர்ச் செய்கை தொடர்பில் ஈடுபட முடியாத நிலைக்கு ஆளாகி விடுவதால் தனது தொழிலை, வேறாற்று கூலி வேலையாளின் நிலைக்கு தள்ளப்படுகிறான். வேறு ஒரு பயிர்ச் செய்கையுடன் கூடுதல் பயிர்ச் செய்கையைக் கொண்டு நடாத்தக் கூடிய நிலைமையுள்ளவர்களின் நிலங்களில் நாள் கூலி அடிப்படையில் வேலை செய்யும் நிலைக்குத் தள்ளப்படுகின்றான்.

காணிப்பாவனைத் திட்டமிடல்

ஒ. கி. அ. நிகழ்ச்சித் திட்டங்களில் காணிப்பாவனைத் திட்டமிடல் அதிமுக்கியத்துவம் பெறும் ஒரு அம்சமல்ல.

(அ) தேசிய மூலவளங்களின் முக்கிய பாகமான நிலம், ஒரு இயற்கை மூலவளமாகும். ஒவ்வொரு மாவட்டத்திற்குமென ஒ. கி. அ. நிகழ்ச்சித் திட்டத்தின் சட்ட வரைசட்டகத்துள் அதன் பாவனைத் திட்டமிடலை மட்டுப்படுத்துதலென்பது விவசாய உற்பத்தி, பொருட்கள், சேவைகள் என்பவற்றின் நியதிகளில் முழு சமுதாயத்தினதும் தேவைகளை மேலும் தேசிய இலக்குகளின் பெறுபேற்றிற்கு வழிவகுப்பதில்லை.

(ஆ) ஒ. கி. அ. நிகழ்ச்சித்திட்டங்களின் நோக்கங்கள், காணியின் பரிபாலனம், முறையான பாவனையொன்றவற்றை இலக்காகக் கொண்டிராது கிராமிய மக்களின் வறுமை ஒழிப்பினையே இலக்காகக் கொண்டுள்ளன. ஆகவே தேசிய மட்டத்தில் காணிப் பாவனைத் திட்டமிடலுக்குப் பொறுப்பாக ஒரு தனிப் பிரிவொன்று அமைக்கப்பட்டு, ஒ. கி. அ. திட்டங்களும், அபிவிருத்திசார் திட்டங்களும், தத்தம் இலக்குகளை அடைவதில், அது வறுமை ஒழிப்பாக, பெண்களுக்கான அருமான உற்பத்தி நடவடிக்கைகளாக, அபிவிருத்திக்காக வீடற்றவர்களுக்கு உறையுள் வழங்குவதற்காக, ஏற்றுமதிக்கான பயிர்கள், மரக்கறிகள் பயிர் செய்வதற்காக, தொழிற்சாலைகள் அமைப்பதற்காக, இது போன்றதற்காகவும் இத்தப் பிரிவுடன் வழிப்படுத்தப்பட வேண்டும்.

இக்கட்டுரை முழுவதும் காணியின் முறையான பாவனை பற்றி வலியுறுத்தப்பட்ட போதிலும் காணி பயன்படுத்தப்படாதுள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொரு பயன்பாட்டினையும் சந்தர்ப்ப செலவிற்கு முக்கியத்துவமளிப்பதன் மூலம் காணியின் சிறப்பான பாவனைக்குரிய பெறுமதியென அறியப்பட்டுள்ளது. பயிர் ஒதுக்கான பயிர்களை தெரிந்தெடுப்பதிலும் இத்தகைய சந்தர்ப்பச்செலவின் முக்கியத்துவம் கவனத்திற்கெடுக்கப்பட வேண்டும். எந்தவகைப் பயிர்ச்செய்கைத் தெரிவினையும், அப்பயிர்ச்செய்கைக்கான உற்பத்திச்செலவு, விற்பனைவிலை, அப்பயிர் உற்பத்தியை சந்தைப்படுத்தல்வசதி பற்றி விவசாயி அறிந்து தெரிவுசெய்து கொள்ளும் வசதியை விவசாயிக்கு வழங்கவேண்டும்.

விவசாயிக்கு வழங்கப்படும் பயிர்த்தெரிவு, குறிப்பிட்ட பிரதேசத்தின் மண்வளம், காலநிலை என்பவை தொடர்பில் ஏற்ற பயிர்வகைகளில் பரந்த அளவிற்கு இடமளிக்கவேண்டும். விவசாயி தாம் விரும்பும் பயிரைத் தெரிவு செய்வதற்கு அனுமதிக்கும் விடயத்தில், அது பாரம்பரியம், கலாசாரம், அப்பயிரின் பயிரிடுவதில் கடந்தகால அனுபவம் போன்ற காரணங்களுக்காக அப்பயிர் மீதான அவரது சார்பிற்கு எதிராக அமையலாம். புதிய பயிரினைத் தெரிந்தெடுப்பதென்பது, விவசாயி அந்தப் பயிரின் வளர்ப்பில் மேற்கொள்ளும் முயற்சி திறன்களால் வழங்கப்படும் செலவு விலைகள், இரட்டுக்கள் பயன்பாட்டிலும் வழிப்படுத்தப்பட்டு, மேற்கொள்ளும் முயற்சியில் மட்டுமே தங்கியுள்ளது. மேலும் புதிய பயிரினைத் தெரிவதில் அனுகூலம், பிரதிகூலங்களின் அடிப்படை வேறுபாடுகளைக் காணும் விவசாயியின் முன்னோடிகள், உணர்வு, கடந்தகால அனுபவம் என்பவற்றிலும் தங்கியுள்ளது.

மேலே விவாதிக்கப்பட்டவை யாவும் சாகுபடி நிலங்களின் பயனுள்ள பயன்பாடு தொடர்பானவையாகும். சாகுபடிக்கேற்ற தப்பாத நிலங்களும், வீடமைப்பு, நிருவாகக் கட்டட அமைப்பு தொழிற்சாலைகள் போன்றவற்றுடன் நகரங்கள், பட்டினங்களுக்கு அண்மையாயும், நீர்வசதி, போக்குவரத்து வசதி போன்றவற்றில் அண்மையையும் பொருந்திய நிலைமைகள் பெறுமதிவாய்ந்தனவாக அமைந்துள்ள வசதிகளின் அமைத்த ஆக்க பயன்படுத்தலாம். மாத்தளை மாவட்டத்தில் 57.9 சதவீத காணி ஏதேனும் ஒரு வகையில் பயன்படுத்தப்படுகின்ற நிலையுடன் தோட்டநிலத்தில் 42.5 சதவீதம் பெருந்தோட்டப் பயிர்ச்செய்கைக்கும் ஏனைய நிரந்தர பயிர்ச்செய்கைக்கும் ஒதுக்கப்பட்டுள்ளது. இடப்பெயர்ப்பட்ட காணிப்பாவனை யொன்றின்கீழ் கூறுகள், பயிர்ச்செய்யப்படக்கூடிய ஆறுவகைப் பயிர்ச் செய்கைப் படத்தால், நெற்பயிர்ச் செய்கையும், பெருந்தோட்டப் பயிர்களின் சிறுகாணி நிலப்பகுதிகள், சுற்றுப் பெருந்தோட்டங்கள் போன்றவை மதிப்பீடு அறிவிருந்த இடங்களுக்கென ஒதுக்கப்படலாம்.

காணிப்பாவனைகளையும், காணியின் சிறப்பான பாவனையைப் பெறும் வழிகளையும் ஆராய்ந்த பின்னர், காணிப் பாவனையின் பயனுள்ள இடமீட்டலை மதிப்பிட வேண்டியுள்ளது. இந்நோக்கினை முன்வைப்பட்டவாறு, ஆரம்பத்தில் தேசிய மட்டத்தில் ஆரம்பித்து, சாகுபடித்தன்மை, மண்வளம், காலநிலை என்பவற்றிற்கேற்ப காணி அடையாளங்காணப்பட்டு, பின்னர் குடியேற்ற பூகோளவியல் அடிப்படையில், ஒவ்வொரு இடத்திற்குமேற்ற பயிர்களின் தொகுப்புடன் தொடர்புபட வேண்டுமென்ற ஆலோசனை கூறப்படுகின்றது.

இதன் தொடர்ச்சியாக குறிப்பிட்ட காலப்பகுதியில் வளர்க்க வேண்டுமெனத் தெரியப்படும் ஒவ்வொரு பயிருக்குமான உற்பத்தி இலக்குகளுடன் மாவட்ட அரசு பண்டமிக் காணிகளும் கருதப்படும். நீண்டகாலப் பயிர்களின் விடயத்தில், சந்தைப்படுத்தல்கள், குறிப்பிட்ட காலப்பகுதியில் இப்பயிர் உற்பத்தியின் சந்தைப்படுத்தல் என்பவை தொடர்பான அனுபவரீதியான கருதுகோளின் பின்னரே காணி ஒதுக்கப்படுத்தப்பட வேண்டும்.

இந்தப் பணியில் இத்தகைய திட்டமிடல் செயல்முறையை அடைவதற்கு இடை, சகலவகையான காணிப்பாவனை, மண்வளம், காலநிலை என்பவை தொடர்பாக நிபுணர்கள் குழு சேர்க்கப்பட்டு, மண்வளம், காலநிலை, பூகோளவியலில் பயிர்வகைகள், கட்டமைப்பு நிர்மாணத்துவம் (தெருக்கள், கட்டடங்கள்) போன்றவற்றில் மட்டுமல்ல அவர் பொதுவாகவும் வேலையேற்படுத்தப்பட வேண்டும். நிபுணர்களின் பற்றாக்குறை காரணமாக ஏற்கனவே அரச நிறுவனங்களில் உள்ளவர்களிடையே இருந்து இத்தகையவர்கள் பகுதிநேர அடிப்படையில் கூட்டாக வேலைசெய்யும் முயற்சி மேற்கொள்ளப்படலாம். ஆயினும் தேசிய மட்டத்தில் காணிப்பாவனையைத் திட்டமிடும் இம் மையக் குழுவானது ஒரு அரச நிறுவனத்திற்குள் அடக்கப்படலாகாது. உதாரணமாக தெருக்கள் அபிவிருத்தி அதிகார சபையினுள் அல்லது விவசாய நிலையங்களத்தினுள் அடக்கப்படலாகாது. அதற்குப்பதிலாக நாட்டின் முக்கிய கொள்கைகளை ஆராயும் திட்டமிடல் தொடர்பு கொள்ளுதல் அவசியம்.

மேற்கூறப்பட்டவாறு ஒரு அமைப்பு ஏற்படுத்தப்படும் இடத்து, ஒ.கி.அ. திட்டங்களின் திட்டமிடலானது, வழமை ஒழுங்கில் கைக்குள்ளிருக்கும் முகமாக எடுக்கப்படும் நடவடிக்கை வகையில் மேற்கொள்ளப்பட இருக்கின்றது. இப்போதுள்ள நிலைமைகள் போன்று மேற்கூறிய நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்துவதற்கு பொருத்தமானதாயுள்ள அந்த அரசாங்க முகவர் நிலையங்களிலும்

(37-ம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(30-ம் பக்கத் தொடர்ச்சி)

கும் வகையில் திட்டப் பணிமனையின் பங்கு வளர்ச்சி பெற்றுள்ளது.

இத்தகைய மாற்றம் இலகுவாக ஏற்பட்டு விடவில்லை. கிராமிய அபிவிருத்தி தொடர்பான புதிய கருத்துக்களைக் கற்று அவற்றைத் தொழிற்படுத்தும் பணியில் உயர் அதிகாரிகளின் ஆதரவு மறுக்கப்பட்ட நிலையில், பலவேளைகளில், திட்டப்பணி தனிமைப்படுத்தப்பட்டிருந்தது. இது பற்றிய செய்கை, வழிகாட்டல் ஆலோசனை, கருத்திட்டக் கூறுகளைப் பரிசீலனை செய்தல், வடிவமைத்தல், தயாரித்தல், கண்காணித்தல் தொடர்பான விதி ஒரு சென்று ஆகும் போதுதான் பிராந்திய அபிவிருத்திப் பிரிவினால் வழங்கப்பட்டன.

இலக்குக் குழாத்தினரின் பிரச்சினைகளுக்கும் மாத்தறை மாவட்ட நிலமையும் பொருந்த மக்கள் பங்கேற்பு அணுகு முறையும் சொந்தமான, தனித்துவமான பதிற்குறியை மாத்தறை ஒருங்கிணைந்த கிராமிய அபிவிருத்தித் திட்டம் அனுபவத்தின் வாயிலாக அடைந்துள்ளது. ஆனால் திட்டமிடல் நிர்வாக முறைகளையும், நிகழ்கால நடவடிக்கைகள் பற்றி நெகிழ்ச்சித் தன்மை காணப்படுவதனால் அனுபவத்தினை அடிப்படையில் திருத்தங்களைச் செய்து கொள்வதற்கான வாய்ப்புகளும் காணப்படுகின்றன. மாத்தறை மாவட்ட ஒரு நிகழ்ச்சித் திட்டமாக உருவாக்கப்பட்ட திட்டத்தை இணைந்த, எந்தளவுக்குச் செயற்படுத்தப்படக்கூடும் என்பது அம்மாவட்டத்தில் நிலவும் அரசியற் சூழ்நிலை பிரதானமாக நிச்சயப்படுத்தக் கூடியதாக முடியுமாயுள்ளது. திட்டத்துடன் தொடர்பு கொண்ட சமூக முகவர் நிலையங்கள் ஏற்கனவே குளறுபடைந்து விட்டன. திட்ட நடவடிக்கைகளில் மக்கள் தாமாகவே முன்வந்து பங்கேற்பதிலும், திட்டப்பணிமனையின் மீது தங்கியிருக்க முடியாத பழுவைச் சுமத்துவதை வாயிலாகவும் புதிய வழிகள் கண்டறியப்படுதல் வேண்டும்.

# காணி பாவனைத் திட்டமிடலுக்கான ஒருங்கிணைந்த அணுகு முறை

அல். பே. பீ. ஞானரத்தன
([illegible] அபிவிருத்தி [illegible] பணிப்பாளர்)

இலங்கையின் பொருளாதாரமானது, அதன் மொத்த தேசிய உற்பத்தியில் மூன்றிலொரு பங்கினையும், சகல வேலைவாய்ப்புகளிலும் அரைவாசிக்கு மேலான பங்கினையும், மொத்த ஏற்றுமதி வருமானங்களில் நான்கில் ஐந்து பங்கினையும் வகிக்கும் விவசாயத்தில் பெரிதும் தங்கியுள்ளது. விவசாய உற்பத்திக்கு பயிர்கள் வளர்வதற்கான அடிப்படையான நிலம் அடிப்படையாகவுள்ளது. நாட்டின் 65 இலட்சம் ஹெக்டேர் நிலப்பரப்பில், பெருந்தோட்டப் பயிர்களுக்குப் பட விவசாய உற்பத்திக்கென்னப் பயன்படுத்தப்படும் நிலம் நீங்கலாக மேலும் 27 இலட்சம் ஹெக்டேர் நிலப்பரப்பு பயிர்ச்செய்கைக்குக் கிடைக்கக்கூடியதாகவுள்ளது. எவ்வாறெனினும் நாட்டின் தற்போதுள்ள 1 கோடியே 62 இலட்சம் சனத்தொகை 1.7 சதவீதமென்னும் ஆண்டு வளர்ச்சி வீதத்தில் அதிகரித்து, தலைக்குரிய காணி வளம் அதிவேகமாகக் குறைந்து அடுத்த நூற்றாண்டில் அரைவாசியாகும் நிலையேற்படும். இதனால் வீடமைப்பு, கைத்தொழில், பொழுதுபோக்கு, போக்குவரத்து போன்ற பொருளாதாரத் துறைகள், குறிப்பாக அவை விவசாயத்துறையிலும் துரிதகதியில் அதிகரித்து வருவதால் அவற்றின் பாவனைக்கான நிலத்திற்கு அதிகரித்த தேவையேற்பட்டு வருகின்றது.

இலங்கையின் மொத்த காணி வளங்கள் மட்டுப்படுத்தப்பட்டவை; ஆனால் [illegible] தமையால் எனினும் பயன்படுத்தப்பட்டு விருத்தியான ரீதியில் காணிக் கட்டுப்பாட்டுக் காலவரையறையின்றி பயன்படுத்தப்படக்கூடிய ஒரு தேசிய மூலவளமாக இருக்கின்றது. ஆகவே விவசாய சமுதாயமொன்றில் இத்தகைய மட்டுப்படுத்தப்பட்ட நிலப்பரப்பினை அனுகூலமான, நியாயமான பாவனைக்குட்படுத்துவதற்கு முறையான திட்டமிடல் உபாயமொன்றின் நிறைவேற்றம் தேவையேற்படுவது மிகவும் ஏற்றதாகவுள்ளது. விரிவான காணிப் பாவனைத் திட்டமிடல் நிகழ்ச்சித் திட்டமொன்றின் தேவைப்படுத்தும் வேறும் பல சிறந்த காரணங்களுமுள்ளன. முதலாவதாக கிராமியத்துறையில் விவசாய உற்பத்தியை அதிகரித்து வேலைவாய்ப்பினை அதிகரிக்கும் பல்வேறு காணி வகை மாற்றங்களையும் நடவடிக்கைகளையும் அடையாளம் காண இது உதவுகின்றது. நாட்டிலுள்ள பல்வேறு காணிவகைகள், மத்தியில் அமைந்துள்ள மலை, மலைத்தொடர்களுக்கு, விசேடமாக உயர் மழை வீழ்ச்சியுள்ள பகுதிகளில் முறையற்ற பயிர்ச் செய்கை நடைமுறைகள் பல பாரிய மண் அரிப்பிற்கு இடமளிக்கின்றன. இதனால் மிகுந்த மேல் மண்ணின் அரிப்பு, நீர்நிலைகள் குளங்களின் நிரம்பல், இவற்றின் காரணமாக மண்ணின் நீர் கொள்ளளவு தன்மைக் குறைவு என்பன பயிர்களின் உற்பத்தியைக் குறைப்பதுடன், உலர் காலப்பகுதியில் நீரையும் குறைக்கின்றது. நீர்த்தேக்கங்களின் ஆயுட்காலக் குறைவும், அடிக்கடி ஏற்படும் வெள்ள அபாயங்களும் (ஆறுகளின் நீர்க் கொள்ளளவு ஆற்றல் குறைப்பு காரணமாக) காணிகளின் தவறான பாவனைகளில் நேரடியான பிரதிபலன்களாகும். இலங்கையின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களை விரயமாக்கி முழு சமுதாயத்தின் நிலைபேறான தன்மையை ஆபத்துக்குட்படுத்துகின்றன.

பல்வேறுவகையான காணிப் பாவனைகளின் பொருத்தமை அல்லது ஏற்புடைமையை நிர்ணயிக்கும் நடைமுறையொன்றாக காணிப் பாவனைத் திட்டமிடலை விபரிக்கலாம். காணிப் பாவனை வகைகளைத் தெரிதலுக்கும் குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களை அடைவதற்கென சிறப்பாக உருவாக்கப்பட்ட செயல்முறைகளை மேற்கொள்ளுவதற்குமாக பௌதிக, சமூக, பொருளாதார மதிப்பீடுகளை மேற்கொள்ளுதலை இது உள்ளடக்கும். நில உருவாக்கவியல், மண்வள அறிவு, மண்வள ஆய்வு, மண் அமைப்பியல், சூழ்நிலை அறிவு, தாவரவியல், வன விலங்கு ஆய்வுகள், வளப்பராமரிப்பு, விவசாயம், பொருளாதாரம், சமூகவியல் என்பன உட்பட பல ஒழுங்கு முறையான அணுகு முறையை இது ஏற்படுத்துகின்றது. இலங்கையில் 1983ஆம் ஆண்டு காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்ட சட்டவாக்கத்துடன் காணிப் பாவனைத் திட்டமிடல் உபாயமொன்றினை மேற்கொள்ளும் ஆரம்ப முயற்சியொன்று முதலில் மேற்கொள்ளப்பட்டது. இக் கட்டளைச் சட்டத்தில் அமுலாக்கப்பட்ட நடை முறையானது, காணியின் முறையான, நியாயமான ஒதுக்கீட்டிற்கு ஒரு முக்கிய படியாக அமைந்தது. ஆயினும் இந்நடைமுறையில் பொருட்களின் நிரம்பல், சட்ட ரீதியான தன்மைத் தடைகளாக இருந்தமையால் சில வருடங்களின் பின் செயலற்றுப் போயின. பெரும்பாலும் சமீப காலங்களின் இந்த நடவடிக்கைகளின் வீழ்ச்சிக்கு காரணமாக, காணிப் பாவனைத் திட்டமிடல் தொடர்பாக அடிப்படை ஆய்வுகளையும், ஆராய்ச்சிகளையும் மேற்கொள்வதற்கு பொறுப்பாக பல முகவர் நிலையங்கள் ஏற்பட்டமை. இவற்றுள், திட்டமிடல் திட்ட அறிக்கைகள் அமைச்சினதும் நடை முறைப்படுத்தப்பட்ட இருந்திருந்த கிராமிய அபிவிருத்தித் திட்டத்தின் வேண்டுகோளின் பேரில் சில மாவட்டங்களுக்கென காணி ஏற்புடைமைத் தேசப் படங்களைத் தயாரிப்பதற்குப் பொறுப்பாக நீர்ப்பாசனத் திணைக்களத்தில் காணிப் பாவனைப் பிரிவு அமைந்தது.

காணிப் பாவனை நடவடிக்கைகளில் பல அமைச்சுக்களும், முகவர் நிலையங்களும் ஈடுபட்டு இருப்பினும், தற்போது காணி, காணி அபிவிருத்தி அமைச்சு நாட்டின் காணிப் பாவனைத் திட்டமிடலை இணைப்பாக்கி வருகின்றது. காணிப் பாவனை திட்டமிடல் மூன்று கருதுகோள் மட்டங்களில் பொதுவானதாகவுள்ளது. அவையாவன:- தேசிய, மாவட்ட, உள்ளூர் மட்டங்களாகும். தேசிய மட்டத்தில் திட்டமிடுதலென்பது முழு நாட்டிற்கும் குறித்தப் பாதுகாப்பு, வெளிவெளிப்படையான ஏற்புடைத்தான கொள்கைகளை உருவாக்கலையடக்கும். காணிப் பாவனையும் அபிவிருத்தியும் மீதான இடை அமைச்சு இணையங்கள் குழுவானது காணிப் பாவனை தொடர்பான அமைச்சுக்களின் செயலாளர்களையும் இங்கு அமைச்சுகளின் ஏனைய திணைக்களத் தலைவர்களையும் உள்ளடக்கி தேசிய மட்ட அமைப்பினை உருவாக்குகின்றது.

மாவட்டத்திற்குள் முன்னுரிமைகள் அடையாளங் காணப்பட்ட பின்னர் காணிப் பாவனைத் திட்டமிடல் தயாரிக்கப்படக் கூடிய நடைமுறைச் சாத்தியமான இடம், மாவட்ட மட்ட திட்டமிடலே என உணரப்பட்டுள்ளது. சாத்தியமான திட்டமிடலுக்கும் அதையடுத்துவரும் நடை முறைப்படுத்தலுக்கும் ஒரு பிரிவாக பயன்படுத்தக்கூடிய உகந்த அளவான இடமாக மாவட்டம் உள்ளதெனக் கருதப்படுகின்றது. தேசிய மட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட கொள்கைத் தீர்மானங்கள் மாவட்ட மட்டத்திலேயே அமுலாக்கப்படுகின்றன. அரசாங்க அதிபர்களின் வழிப்படுத்தலின் கீழ் மாவட்டங்களுக்கான காணிப் பாவனைத் திட்டங்களை பிரேரிப்பதற்கும், வரைவதற்கும் மாவட்ட காணிப் பாவனைத் திட்டமிடல் குழு பொறுப்பாகவிருக்கும். காணிப் பாவனை நடவடிக்கைகளுடன் தொடர்புபட்ட அரச திணைக்களங்களினதும், நிறுவனங்களினதும் உள்ளூர்த் தலைவர்கள் இக்குழுவில் இடம்பெறுவர். இக்குழுவிற்கு உதவவென தொழில்நுட்பப் பயிற்சியுடைய காணிப் பாவனை திட்டமிடல் அலுவலரொருவர் மாவட்ட கச்சேரியின் காணிக் கிளையில் இருப்பார். திணைக்களங்களிலிருந்து காணிப் பாவனை தொடர்பிலான எந்தப் பிரேரணைகளும் நடைமுறைப்படுத்தலுக்காக இங்கு கொண்டுவரப்படும். இத்தகைய பிரேரணைகள் குழுவின் முன் கொண்டுவரப்படும் வேளைகளில், திட்டமிடப்பட்ட காணிப் பாவனைக்கு உத்தேசிக்கப்பட்ட காணியின் ஏற்ற தன்மையை மதிப்பிடும் வேலையை காணிப் பாவனைத் திட்டமிடல் அலுவலர் மேற்கொள்வாரென எதிர்பார்க்கப்படுவார். மேலும் அந்தக் குறிப்பிட்ட காணி ஏற்றதாக இராவிடின், மாவட்டத்தில் வேறுமொரு ஏற்ற இடமொன்றினை அவர் சுட்டிக் காட்டலாம். இந்த அலுவலர் ஏனைய கடமைகளின் மத்தியில், புதிய அமைவாக்கல்களைத் திட்டமிடல், விவசாய, பரிபாலனத் திட்டங்களைத் திட்டமிடல், ஏற்கனவே பகிரிடப்பட்ட இடங்களை காணிப் பாவனை, காணி முகாமைத்துவம் என்பவற்றின் மேம்பாட்டிற்கான திட்டமிடல் என்பவற்றுடன், இந்த மாற்றங்களின் விளைவுகளை, சூழலில் அவற்றின் பயன்கள் என்ற நிலையில் மதிப்பிடுதல் என்பதும் அடங்கும்.

மாவட்டத்திற்கான காணிப் பாவனையை சுட்டிக்காட்டும் திட்டங்களின் தயாரிப்பு இந்த உபாயத்தின் மற்றுமொரு முக்கிய அம்சமாகும். பல்வேறு வகைப் பிரிவுகளை, காணி அமை





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரிவு வகைகள், காலநிலை என்பவற்றுடன் தற்போதைய காணிப் பாவனை என்பன அடிப்படைக் கணிப்பீட்டு விவரங்களையும் இது தருகின்றது. காணிப் பாவனை மாற்றங்கள் பற்றிய தரப்பட்டுள்ள ஆதாரத்தை இத் திட்டம் வழங்குகின்றது.

மாகாண சபைகளின் அடிப்படையிலான அதிகாரப் பரவலாக்கலுடனும், புதிய நிருவாக அமைப்பு நிறுவனத்துடனும், மாவட்ட மட்ட அமைப்பிலும், சேர்க்கையிலும் மிகச் சிறிய மாற்றங்களே இடம்பெறக்கூடுமெனினும், இந்த உபாயத்தின் மிக முக்கிய அம்சமாவது, இது வரை பல்வேறு முகவர் நிலையங்களிலும் விரிவாக்கல் கொள்கை ஆக்கத்தின் ஆதாரமாக இடம்பெற்ற காணிப்பாவனைத் திட்டமிடலுக்கு ஒருங்கிணைந்த அணுகு முறையொன்றினைப் பிரயோகிக்க ஆரம்பித்தமையாகும்.

எந்தவொரு திட்டமிடல் நடைமுறையினதும் முக்கிய கூறொன்றாக, பிரச்சினைகளை அடையாளங் கண்டு அப் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கும் ஆலோசனைகளையும் வழங்குவதாக அமையும். இதற்கென குறிப்பிட்ட விடயத் துறை தொடர்பான பல்வேறு வகைத் தரவுகளின் சேர்க்கையும் பகுப்பும் தேவைப்படுகின்றது. காணிப் பாவனைத் திட்டமிடல் தொடர்பாகவும் இதே தேவையுள்ளது. மேற்கூறப்பட்ட பல்வேறு ஒழுங்கு முறைகளே தேவையான தரவு உட்படுத்துகின்றது. கூறப்போயின் பல அரசாங்க திணைக்களங்களும், நிறுவனங்களும் தங்கள் வழமையான கடமைகளாக இத்தகைய சில தரவுகளை தோற்றுவித்து சேகரித்து வைத்துள்ளன. கம்பியூட்டர் நுணுக்க வளர்ச்சி காரணமாக நில அளவைகளிலிருந்தும், சகல ஒழுங்கு முறைகளிலிருந்தும் சிறந்த தரவு அடிப்படைகளைப் பெறுதல் சாத்தியமாகியுள்ளது. அதன் விளைவாக தகவலின் துரித, செயற்றிறன் மிக்க நடைமுறைப்படுத்தலுக்கு வழிவகுக்கப்பட்டுள்ளது. ஆகவே இது வரை பல்வேறு அமைப்புகள் வேறுவேறாகக் கிடைக்கக்கூடியதாகவிருந்த காணிப்பாவனைத் திட்டமிடலுக்கு அவசியமான தரவினை உள்ளடக்கும் விதமாக கம்பியூட்டர் மயமாக்கப்பட்ட தரவு ஆதாரமொன்று நிறுவப்படும். கம்பியூட்டர் மய தரவு ஆதாரம் அடிப்படையில் புவியியல், காணி, மண் வள தகவல் முறைமைகளென்றழைக்கப்படும் பல்வேறு முறைகளை அடக்கும். அதன் ஆரம்ப வடிவிலும், பல்வேறு வகைகளிலும் ஒரு தகவல் களஞ்சியமாக, காணிப் பாவனை தொடர்பான வினாக்களுக்கு விடைகள் பெறக்கூடியதாகவும், அவற்றை புள்ளி விபர அட்டவணைகளாகவும், கோட்டுப் படங்களாகவும், தேசப்படங்கள் முப்பரிமாண வரைவடிவங்களாகவும் வழங்கக் கூடியனவாகவும் உள்ளன.

இவ்விதம் அமைவாக்கப்பட்ட உபாயத்தின் நடைமுறைப்படுத்தல் தொடர்பிலான முதலாவது நடவடிக்கை, காணி, காணி அபிவிருத்தி அமைச்சில் காணிப் பாவனை கொள்கைத் திட்டமிடல் பிரிவின் நிறுவனமாகும். தொடர்ந்து இருந்து வரும் நிறுவன அபிவிருத்திகளுக்கு, உலக விவசாய நிறுவனத்தின் கொடையுதவியும், அதைத் தொடர்ந்து ஆசிய அபிவிருத்தி வங்கியின் இலகு கடனும் பொறுப்பாகவிருந்தன. இதன் கீழ் நில அளவை நீர்ப்பாசனத் திணைக்களங்களுக்கு அவற்றின் வான்வெளிப் படங்கள், ஏனைய தேசப் படங்களினது செலவு மிக்க உற்பத்திக்கும், இயற்கை வளவியல்பு, மண் வளத் தகவல் போன்றவற்றிற்குமான நிதி வழங்கப்படுகின்றது.

மேற்கூறப்பட்ட மாவட்ட காணிப் பாவனைத் திட்டமிடல் குழுக்கள், குழப்பம் நிறைந்த வடக்கு, கிழக்கு மாகாணங்களைத் தவிர ஏனைய மாகாணங்களில் உருவாக்கப்பட்டு இதன் நடவடிக்கைகளை இயைபாக்குவதற்கும் பொறுப்பாகவுள்ள காணிப் பாவனைத் திட்டமிடல் அலுவலர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர். குறிப்பிட்ட மாவட்டங்களுக்கு அனுப்பப்படும் முன்னர் இந்த அலுவலர்கள் காணிப் பாவனைத் திட்டமிடலில் பயிற்றப்படுகின்றனர். அநேக ஒழுங்கு முறைகளை அணுகு முறையை கடைப்பிடித்தலை எதிர்பார்த்து சம்பந்தப்பட்ட ஒழுங்கு முறைகளில் பயிற்றப்பட்ட அலுவலர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர். ஆகவே காணிப் பாவனை சம்பந்தப்பட்ட சகலரும் அதிக உணர்வுடன் இதில் ஈடுபட்டு இத் தேசிய முயற்சிக்கு ஒத்துழைப்பினை வழங்குவதற்கான அரங்கம் இப்போது தயார் நிலையிலுள்ளது.

(34-ம் பக்கத் தொடர்ச்சி)

டச அலகின் வேண்டுகோளில் அல்லது மக்களின் நலனில் உதவிகள் வழங்கப்படாமல் உதாரணமாக தேசிய காணித்திட்டமிடல் அமைப்பானது மாத்தளை மாவட்டத்தில் சி. ஏ. பயிர்களை வளர்த்தல் ஏற்றதெனக் கண்டால் ஏனைய மாவட்டங்களில் அன்றி அந்த மாவட்டத்தில் மட்டுமே ஐ.ஆர்.டி.பி நிதிகள் பயன்படுத்தப்படும். அதேபோன்று தேசிய காணிப்பாவனைத் திட்டமிடல் அமைப்பானது மாத்தளை மாவட்டத்தின் வேறொரு பகுதியில் வேறொரு பயிர்ச் செய்கையை அடையாளங் காணின், அங்கு மட்டுமே நிதி பயன்படுத்தப்படும். இந்த இடங்களிலுள்ள ஏதேனும் ஒரு பயிர்ச் செய்கையை ஊக்குவிப்பதற்கு ஐ. ஆர். டி. பி. நிதி வழிப்படுத்தப்பட்டு, கிராமிய மக்களின் வருமானத்தை அதிகரிப்பதில் விவசாயக் கைத்தொழிலும் உதவுமெனக் காணப்படின், மூலப் பொருட்கள் கிடைக்கக் கூடியதாகவுள்ள இடத்திலேயே கைத்தொழில் நிறுவப்பட வேண்டுமென்பதால் குறிப்பிட்ட பிரதேசத்திலேயே நிதிப்படுத்தல் மேற்கொள்ளப்பட வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனசக்தித் திட்டத்தின் பேரண்டப் பொருளாதார அம்சங்கள்

லொயிட் பர்னாந்து

பேரண்டப் பொருளியல் முகாமையின் நான்கு அடிப்படை அம்சங்களான பொருளாதார வளர்ச்சி, வேலைவாய்ப்பு, பண வீக்கம், சென்மதி நிலுவை என்பவற்றின் மீது அக்கறை கொண்டதாக ஜனசக்தித் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. இந்த அம்சங்கள் மீது முக்கிய கவனம் செலுத்துவதாக இக் கட்டுரை ஆக்கப்பட்டுள்ளது. வறுமையின் தாக்கம், அதனை அளவிடல் என்பனை பற்றி இக் கட்டுரையில் ஆராயப்படவில்லை. முழுமையான வறுமையின் விளைவாக அதன் சமூக, அரசியல், பொருளாதார விளைவுகள் கொள்கை வகுப்பாளரின் ஆழமான அக்கறையை ஈர்க்கும் அளவுக்குப் பூதாகரத் தோற்றம் பெற்றுள்ளன என்ற அடிப்படையில் இக் கட்டுரை அமைந்துள்ளது. எனினும், அரசியல், சமூக அம்சங்கள் ஏனைய கட்டுரைகளில் ஆராயப்பட்டுள்ளமையால் வறுமையின் பொருளாதாரத் தாக்கங்களுக்கே இக் கட்டுரையில் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது.

வறுமையால் ஏற்படும் பிரச்சினைகள் பற்றி பொருளியலாளர் போதியளவு அக்கறை காட்டவில்லை என்ற கண்டனம் பரவலாகத் தெரிவிக்கப்பட்டு வருகின்றது. இது முற்றிலும் உண்மையான ஒன்றல்ல. பொருளாதாரத்தின் வழமையான அம்சங்களான அபிவிருத்தி பற்றிய கொள்கை வகுப்பு, திட்டமிடல் என்பனவை வறுமை சார்ந்த பிரச்சினைகளுடன் தொடர்பானவையே. எனினும் இவற்றைத் தீர்த்து வைப்பது பற்றி ஒவ்வொரு பொருளியலாளரும் வெவ்வேறு அணுகு முறைகளைக் கையாண்டு வந்துள்ளனர்.

எனினும், ஆய்வாளர் எளிதாக்குவதற்காக வறுமை பற்றிய பிரச்சினைகளில் அரசாங்கத் தலையீட்டை ஏற்காதோரை ஒரு துருவத்தாராகவும்; ஏதேனும் ஒரு வகையில் தலையீட்டை வற்புறுத்துவோரை மறு துருவத்தாராகவும் கொண்டு இத்தகைய அணுகு முறைகளை வகைப்படுத்தலாம். எனினும், இன்று செயலளவில் எல்லோரும் ஏதோ ஒரு வகைத் தலையீட்டை ஏற்பவர்களாகவே காணப்படுகின்றனர். பொருளாதார அபிவிருத்தியுடன் வறுமை ஒழிப்பு எத்தளவுக்குத் தொடர்பு கொண்டது என்ற விடயத்திலேயே இவர்களிடையே கருத்து வேறுபாடு நிலவுகின்றது. தலையீட்டை மேற்கொள்ளும் வழிமுறை தொடர்பாகவும் இவர்கள் வேறுபாடு கொண்டவர்களாகவே காணப்படுகின்றனர்.

இப் பின்னணியில் உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் போன்ற அனைத்துலக நிறுவனங்களின் போக்கினைப் புரிந்து கொள்ளல் அவசியமாகின்றது. வளர்ச்சி குன்றிய நாடுகளின் பொருளாதார வளர்ச்சி, பணவீக்கக் கட்டுப்பாடு என்பவற்றுக்கு இந் நிறுவனங்கள் தரும் முக்கியத்துவத்தின் பின்னணியில் வறுமை ஒழிப்பு முற்றாகப் புறக்கணிக்கவும் படுகின்றது எனக் காலாதி காலமாகக் கருதப்பட்டு வருகின்றது. எனினும் உலக வங்கித் தலைவர், சர்வதேச நாணய நிதியத்தின் முகாமைத்துவ இயக்குனர் ஆகியோரால் சமீபத்தில் விடுக்கப்பட்ட அறிக்கைகள் வளர்ச்சி குன்றிய நாடுகளின் வறுமை ஒழிப்பு பற்றி இந் நிறுவனங்கள் தற்போது அதிகரித்த அக்கறை கொண்டுள்ளமையை வெளிப்படுத்துவனவாக உள்ளன. அவற்றின் போக்கில் ஏற்பட்டுள்ள இம் மாற்றம் வறுமையின் சமூக அரசியல் விளைவுகள் பற்றி வளர்ச்சி குன்றிய நாடுகளின் கொள்கை வகுப்பாளர் நீண்ட காலமாகக் கொண்டிருந்த அக்கறையை அங்கீகரிப்பனவாக அமைகின்றன. மறுபுறத்தில் வறுமையின் பொருளாதார விளைவுகளையும், குறிப்பாக வளர்ச்சிக்கு அதனால் ஏற்படக் கூடிய குந்தகங்களையும் பற்றிப் பொருளியலாளர் மத்தியில் ஏற்பட்டுவரும் சிந்தனை மாற்றங்களைப் பிரதிபலிப்பனவாகவும் அமைகின்றன. டிரிஜென்ஸியின் 'வாழ்வு மட்டங்கள்' சர்வதேச தொழில் அமைப்பின் 'அடிப்படைத் தேவைகள்', செனரியும் மற்றையோரும் எழுதிய 'வளர்ச்சியுடன் மறுபகிர்வு' போன்ற ஆக்கங்களும் மற்றும் அண்மைக்கால வெளியீடுகளான அமர்த்யா சென்னின் 'உரித்தாளுமைகள்', 'சந்தர்ப்பங்கள்' போன்ற நூல்களும் இச் சிந்தனை மாற்றத்துக்குச் சான்று பகர்வனவாக உள்ளன.

வறுமை பற்றிய விடயங்களில் பொருளியலாளர் காட்டி வரும் அதிகளவு அக்கறைக்கு ஏதுவாக அமைந்த குறைபாடான தத்துவார்த்த வளர்ச்சியைப் பற்றி இச் சிறு கட்டுரையில் ஆராய்வது சாத்தியமற்றது. வறுமையை நீக்குவதற்கு மட்டுமின்றி அபிவிருத்தியை மேம்படுத்துவதற்காகவும் மனித வளங்களில் அதிகரித்த முதலீடுகள் மேற்கொள்ளப்படல் வேண்டுமென்பதே அவர்களின் அடிப்படை ஆலோசனைகளாக அமைகின்றன.

## பேரண்டப் பொருளியல் நிலை

இலங்கையில் ஜனசக்தி நிகழ்ச்சித் திட்டத்தைத் தேவைப்படுத்திய பேரண்டப் பொருளியல் நிலைகளை ஆராய்வதற்கு முன்னர், வறுமையைப் பாதிக்கும் அடிப்படைக் காரணிகள் பற்றிய கலந்துரையாடல் அவசியமானதாகின்றது. வருமானப் பகிர்வு முக்கியமானதொரு காரணி என்பது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிப்படையானதே. எனினும் வருமான மட்டமும், மறுபகிர்வுக்கும் வறுமை ஒழிப்புக்குமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ள கொள்கை வழி முறை மற்றும் போண்டைச் சூழல் ஆகிய மேலும் இரு காரணிகளும் அதே அளவு முக்கியத்துவம் கொண்டவையாகும். எனவே தலா வருமான மட்டங்களில் தொடர்ச்சியானதும் குறிப்பிடத்தக்கதுமான அதிகரிப்பு ஏற்படுத்தப்படாவிட்டால் மறுபகிர்வு, வறுமை ஒழிப்பு என்பவற்றுக்கான நடவடிக்கைகள் வறுமையை மறுபகிர்வு செய்வனவாகவும், வாழ்க்கை மட்டத்தை மேலும் தாழ்த்துவனவாகவுமே அமைய முடியும். மேலும், பணத்தின் கொள்வனவுச் சக்தி பணவீக்கத்தால் அடித்துச் செல்லப்படக் கூடுமெனில் பொருளாதார வேதனங்களை அதிகரித்தல் போன்ற மறு பகிர்வு நடவடிக்கைகள், நலன்புரி நடவடிக்கைகளாக அமைய முடியாது போய்விடும். அதைப் போலவே உற்பத்தி அதிகரிப்பு ஏற்படாதவிடத்து நிர்ணயிக்கப்பட்ட வேதனங்களைக் கட்டுப்படுத்தல் சட்டங்கள் புதிய வேலை வாய்ப்புகளை உருவாக்குதற்குத் தக்கவாறு அமைந்து விடவும் கூடும். அதனாலும் உற்பத்திச் செலவில் ஏற்படும் அதிகரிப்பைச் சமாளிப்பதற்காகத் தொழில் கொள்வோர் ஊழியத்துக்குப் பதிலாக மூலதனத்தை அதிகரிக்க எத்தனிப்பர்.

மொத்த உள்நாட்டு உற்பத்தியிலும் குடித்தொகையிலும் ஏற்படும் சராசரியான அதிகரிப்பைத் தலா வருமான அதிகரிப்போடு வரைவிலக்கணப்படுத்தலாம். தற்போது இலங்கையின் குடித்தொகை அதிகரிப்பு ஆண்டுக்கு 1.4 சதவீதமாகும். குடித்தொகை அதிகரிப்பு வீதம் குறைவடைந்தமைக்கு குடிமக்கள் வெளிநாடுகளுக்குச் சென்றமையும் காரணமாக அமைந்துள்ளது. எனினும், அண்மையான இந்த அதிகரிப்பு வீதம் அபிவிருத்தியடைந்த பல நாடுகளுடன் ஒப்பிடத்தக்கதாக உள்ளது. குடித்தொகை அதிகரிப்பு வீதங்களைத் தீவிரமாக மேலும் குறைப்பதற்கு இதற்கு மேல் இடமில்லை. பொதுவாகப் பொருளாதார வளர்ச்சியைத் துரிதப் படுத்துவதே முக்கிய பணியாக அமைகின்றது.

தேர்ந்தெடுக்கப்பட்ட ஆசிய நாடுகளிடையே தலா வருமான மட்டங்கள், வீதங்கள் தொடர்பாக இலங்கையின் நிலை பற்றிய கணிப்பான தகவல்களை இதன் கீழுள்ள அட்டவணை 1 விளக்குகின்றது. 1950ல் இரண்டாம் இடத்தில் காணப்பட்ட இலங்கை 1987ல் எட்டாம் இடத்துக்கு வீழ்ச்சியடைந்திருப்பது கவனிக்கப்பட வேண்டிய அம்சமாகும். இது கால வரை எல்லைப் பட்ட வீழ்ச்சி கூடிய சராசரி வளர்ச்சி வீதம் ஆண்டுக்கு 6.3 சதவீதமாக மட்டுமே இருந்துள்ளது என்பது அட்டவணையிலிருந்து எளிதில் புலனாகின்றது. மலேசியாவின் தலா வருமானத்தை எட்ட இலங்கைக்கு 32 ஆண்டுகள் பிடிக்கும் (பார்க்க: அட்டவணை 2) தாய்லாந்து [illegible] இன்றைய தலா வருமான மட்டத்தை அடைவதாயினும் கூட ஏறத்தாழ 19 வருடங்கள் செல்லும்.

கடந்த 25 ஆண்டுகளில் இலங்கையின் பொருளாதார வளர்ச்சி பரிமாணங்களை கீழுள்ள அட்டவணை 2 விளக்குகின்றது. பொருளாதார வளர்ச்சி வீதம், [illegible] ஆகிய இரு அடிப்படைக் காரணிகள் [illegible] தீர்மானிக்கின்றன. [illegible] முதலீட்டு வளர்ச்சியைத் துரிதப் படுத்தக் கூடியதாக இருக்கும். கடந்த பத்து ஆண்டுகளில் வளர்ச்சியை ஏற்படுத்துவதில் [illegible]

அட்டவணை 1

இலங்கையின் வளர்ச்சி செயற்பாட்டை ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுதல்

| நாடு | 1950 மொ.உ.உ. அ/ தலா நபர் | இடம் | 1960 மொ.உ.உ. அ/ தலா நபர் | இடம் | 1970 மொ.உ.உ. அ/ தலா நபர் | இடம் | 1980 மொ.உ.உ. அ/ தலா நபர் | இடம் | 1987 மொ.உ.உ. அ/ தலா நபர் | இடம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| இலங்கை | 113.8 | 2 | 142.1 | 4 | 183.2 | 3 | 250.7 | 7 | 391.9 | 5 |
| பர்மா | 42.2 | 5 | 66.2 | 7 | 80.4 | 8 | 169.9 | 8 | 210.7 | 8 |
| இந்தியா | 55.9 | 3 | 73.4 | 6 | 98.6 | 6 | 253.7 | 6 | 291.2 | 7 |
| கொரியா | — | — | 151.4 | 3 | 266.8 | 2 | 1507.2 | 2 | 2993.1 | 1 |
| பாகிஸ்தான் | — | — | 50.6 | 8 | 87.1 | 7 | 286.9 | 5 | 337.5 | 6 |
| பிலிப்பைன்ஸ் | 170.6 | 1 | 253.4 | 2 | 179.0 | 4 | 720.7 | 3 | 596.4 | 4 |
| தாய்லாந்து | 59.5 | 4 | 96.8 | 5 | 178.8 | 5 | 714.0 | 4 | 914.4 | 3 |
| மலேசியா | — | — | 275.5 | 1 | 380.1 | 1 | 1743.2 | 1 | 1710.6 | 2 |
| எதிராக: | | | | | | | | | | |
| ஐக்கிய அமெரிக்கா | 1882.8 | | 2833 | | 4917.3 | | 11787.1 | 18,300 | 18300.8 | |
| ஐக்கிய இராச்சியம் | 722.4 | | 1379.1 | | 2224.4 | | 9829.9 | | 13440 | |

அ/ அமெரிக்க டொலரில் ஆ/ 1986



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டவணை 2

இலங்கை - மொ. உ. உ. வளர்ச்சியும் முதலீடும்

| | 1971-77 | 1978-82 | 1983-87 |
|---|---|---|---|
| மொ. உ. உ. வளர்ச்சி வீதம்[1] | 2.9 | 6.2 | 4.[illegible] |
| முதலீடு[2] | 15.7 | 27.6 | 25.1 |
| வெளிநாட்டுச் சேமிப்பு[2] | 3.2 | 12.8 | 8.5 |
| தேசிய சேமிப்பு[2] | 12.5 | 14.8 | 16.5 |
| அ. மூ. வெ. வீ.[3] | 5.4 | 4.4 | 6.1 |

1 - நிலையான விலைகளில்
2 - மொ. உ. உ. யின் விகிதமாக
3 - அதிகரிக்கும் மூலதன வெளியீட்டு விகிதம்

நாட்டுதவி முக்கிய பங்கினை வகித்துள்ளமையும் தெரிய வருகின்றது. அந்த நேரத்தில் மூலதன - வெளியீட்டு விகிதமும் அதிகரித்துள்ளது. மூலதனச் செறிவே இந்த அதிகரிப்புக்குக் காரணமாக அமைந்தது. துரிதப்படுத்தப்பட்ட மகாவலி அபிவிருத்தித் திட்டம் போன்ற மூலதனச் செறிவுமிக்க பெருந் திட்டங்களுக்கு நிதியீட்டஞ் செய்வதற்காக பிற நாட்டுதவிகள் பெருமளவில் பயன்படுத்தப் பட்டமையால் மூலதன - வெளியீட்டு விகிதம் அதிகரித்திருந்தமை ஆச்சரியமான தொன்றல்ல. கீழ்மை ஆற்றல் மட்டங்கள், முகாமைத்துவ முறைமைகள் என்பனவற்றும் பிரதிபலிக்கப்படும் குறைவான வினைத்திறன் இவ்விடயத்தில் முக்கிய பங்கினை வகித்திருக்கலாம்.

இலங்கையானது தனது வளர்ச்சிப் போக்கினைத் துரிதப்படுத்தி அதிகரித்த வேலைவாய்ப்புகளை உருவாக்க வேண்டுமெனில் முதலீட்டுக்கும் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கும் இடையேயான விகிதத்தைக் குறைக்க வேண்டும். உள்நாட்டுச் சேமிப்புகளையோ, வெளிநாட்டுச் சேமிப்புகளையோ அல்லது இரண்டையுமோ அதிகரிப்பதன் மூலம் மட்டுமே மொத்த உள்நாட்டு உற்பத்திக்கும் முதலீட்டுக்கும் இடையேயான விகிதத்தை அதிகரிக்க முடியும். ஏழ்மையான அடிப்படை அம்சங்களின் நுகர்வைக் குறைப்பதன் மூலமே உள்நாட்டுச் சேமிப்புகளை அதிகரிக்க முடியும். இந்த மதிய ஏற்றம் ஏழை வர்க்கத்தினரைப் பாதிக்கும். அந்நியச் சேமிப்புகளில், குறிப்பாகப் பிற நாட்டுதவிகளில் அதிக நாட்டம் காட்டுதல் இவ் வர்க்கத்தினரின் சுமையைக் குறைக்கக் கூடியதாக இருக்கும்.

உதவிகளை உரிய முறையில், உகந்த திறமையுடன் பயன்படுத்தும் ஆற்றலைக் கொண்டிருந்தால் மட்டுமே உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் போன்ற சர்வதேச நிதி நிறுவனங்களிடமிருந்தோ, இருபுடைக் கொடையாளிகளிடமிருந்தோ வெளிநாட்டு உதவிகளைப் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கும். அண்மைய ஆண்டுகளில் இருபுடைக் கொடையாளிகளும் உலக வங்கி மற்றும் சர்வதேச நாணய நிதியம் போன்ற அமைப்புகளின் நிறுவனங்களின் வழிமுறைகளையே பின்பற்றுவதைக் காண முடிகின்றது. தொடர்ச்சியான அமைப்பு முறைச் சீராக்கல்களை உள்ளடக்கியனவாக இவ் வழிமுறைகள் அமைகின்றன. மூலதனத்தின் இறைமையை அதிகரித்தல், அல்லது விருத்தி முன்னுரிமைமிக்க மூலதன - வெளியீட்டு விகிதத்தைக் குறைக்கும் தொடர்பான வழிமுறைகளே இலங்கையில் மேற்கொள்ளப்படல் வேண்டும். (பார்க்க - அட்டவணை 2) இலங்கையின் விருத்தி முன்னுரிமைமிக்க மூலதன-வெளியீட்டு விகிதம் உயர்வாகக் காணப்படுவதற்கு மகாவலி போன்ற வெளிநாட்டுதவி கொண்டு மேற்கொள்ளப்பட்ட மூலதனச் செறிவுமிக்க திட்டங்களே பிரதான காரணமாகும். இவ் வுறை நீக்கவிடுகளுக்கூடாக விருத்தி முன்னுரிமைமிக்க மூலதன - வெளியீட்டு விகிதம் உயர்வாகவே காணப்படுகின்றது. எனவே முதலீட்டின் தரத்தைச் சீர்திருத்தி வினைத்திறனை உயர்த்தும் வகையிலான வழிமுறைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

### அமைப்பு ரீதியான சீராக்கங்கள்

சந்தை விலைகள் அடிப்படையில் சந்தைப்படுத்தல் செலவுகளைப் பிரதிபலிப்பனவாகவும் நுகர்வோருக்கும் உற்பத்தியாளருக்கும் சரியான சமிக்ஞைகளை உரிய நேரத்தில் புலப்படுத்துவனவாக அமைதல் வேண்டும். இதுவே நாணயத்தின் அதன் பெறுமதி நிலைமையை வெளிப்படுத்தும் வழிமுறையாகும். அரசாங்கத்தின் தலையீடுகள் காரணமாக விலைமுறையில் ஏற்படுத்தப்பட்ட பேதலிப்புகளை நீக்குதல் இவ் வழிமுறைகளை எதிர்கொள்ளும். இறுதி ஒதுக்கீட்டுத் தொழில்களுக்கு நேரடியானதும் அல்லாததுமான மானியங்கள் கூடிய பட்சத்தில் விலைப் பேதலிப்புகள் காரணமாக அமைந்துள்ளன.

உற்பத்திக் காரணிகளதும், அந்நிய செலாவணி பொருட்களின் சேவைகளதும் மெய்ச் செலவுகளை பிரதிபலிப்பனவாகச் சந்தை விலை அமைந்திராத நிலை காணப்படுகின்றது. விலைப் பேதலிப்புகளைத் திருத்துவதன் மூலம் இத்தகைய விலைகளைக் குறைக்க அல்லது முற்றாக ஒழிக்கக் கூடியதாக இருக்கும். சட்டவிதிகள், வட்டி வீதங்கள், நாணய மாற்று வீதங்கள் ஆகியவற்றையும் திருத்தியமைக்க வேண்டியிருப்பதனையே இது காட்டுகின்றது. தேவையான திருத்தங்களை ஏற்படுத்தக் கூடிய சீராக்கங்களைத் தொகுதிப் பகுதி அமைப்பு முறைச் சீராக்கங்கள் என அழைப்பர், எனவே இத்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாணய நிதியம், உலக வங்கி ஆகியன விதிக்கும் கொள்கை மாற்றங்களை அறிமுகப்படுத்தல் என்ற வழிமுறை இப்போதும் பயன்படுத்தப்படுகின்றது. மூலாதாரங்களும், தொழில்நுட்ப ஆற்றல்கள், சந்தைப் படுத்தல் என்பவற்றைச் சீர் செய்வதற்கான நிறுவன ரீதியான மாற்றங்களுடன் மேற்கூறிய மாற்றங்கள் தொடர்பு கொண்டவையாக உள்ளமையால் சீராக்கல் தொகுதியினுள் இவையும் அடக்கப்படுகின்றன.

ஏழைகள், நிர்க்கதியோர், பெண்கள், குழந்தைகள் என்போரையே சீராக்கல் கொள்கைகள் பொருளளவில் பாதித்திருப்பதை அனுபவம் காட்டுகின்றது. யுனிசெப் நிறுவனம் வெளியிட்ட 'மனித முகத்துடன் கூடிய சீராக்கல்' என்ற ஆய்வறிக்கை இந் நிலைமையைத் தெட்டத் தெளிவாகக் காட்டியுள்ளது. மாற்று முறைச் சந்தை நிலவரங்கட்கேற்ப கூலி வருமானம் ஈட்டும் மூலங்களை மாற்றியமைக்கும் தகைமையைத் தனவந்தரும், உயர் மத்திய தர வர்க்கத்தினரும் கொண்டுள்ளனர். ஆனால் ஏழைகளும், கீழ் மத்திய தர வர்க்கத்தினரும் இச் சக்தியைப் பெற்றிருப்பதில்லை. எனவே அவர்களது வாழ்க்கை நிலை அமைப்பு ரீதியான சீராக்கல்களின் விளைவாக மேலும் பாதிப்படைய ஏதுவாகின்றது. உட்கொள்ளும் உணவு, சுகாதாரம், கல்வி நிலை என்பவற்றில் இந் நிலைகள் உடனடியாகப் பிரதிபலிக்கப்படுகின்றன.

ஜனசக்தியும் அமைப்பு முறைச் சீராக்கல்களும்

உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் என்பவற்றால் பணிக்கப்பட்டாலும், அல்லாவிடினும் இலங்கையைப் பொருத்தி பொருளாதார வளர்ச்சியைத் துரிதப்படுத்த வேண்டுமெனில் இலங்கை சில அமைப்பு முறையான சீராக்கல்களை மேற்கொண்டே தீர வேண்டும். எனினும் இவ் வழி முறைகளின் விளைவாக ஏற்படும் பாரதூரமான அசௌகரியம், வேலையின்மை, விலைவாசிப் பெருக்கம் ஆகியன ஏற்படுவதற்கு நீண்ட காலம் எடுக்கும். அதே வேளையில் இச் சீராக்கல்களின் விளைவாக ஏழைகளும், எளிதில் பாதிப்புக்குட்படுவோரும் வாழ்க்கை மட்டங்களில் ஏற்படக்கூடிய தாக்கங்களிலிருந்து அவர்கள் பாதுகாக்கப்படுதலும் வேண்டும். எளிதில் பாதிப்புறக் கூடியோரின் எண்ணிக்கை பற்றிக் கருத்து வேறுபாடு நிலவினாலும் இந் நாட்டு மக்களில் பெரும்பாலானோர் இவ் வகுதியினுள் அடக்கப்படக் கூடியோரே என்பதில் ஒருமை அதிகரித்து வருகின்றது. அமைப்பு முறைச் சீராக்கல் என்ற சந்தர்ப்பத்தில் இத்தகையோருக்கு உதவ ஏற்பாடாக ஜனசக்தி திட்டம் அமையக்கூடும்.

சத்துணவின்மை, வறுமை, வேலையின்மை, சமூக ரீதியான பின்னடைவு என்பவற்றின் காரணமாக உற்பத்தித் திறனை இழந்து நிற்கும் நாட்டு மக்களை ஒரு நிறுத்தாருக்கு உணவு, உடை போன்ற அடிப்படைத் தேவைகளை மட்டுமின்றி நிலையான தொழில் வாய்ப்புகளையும், வருமானங்களையும் வழங்கும் வகையில் ஒழுங்குபடுத்தப்பட்ட ஜனசக்தி முறை, வறியோர்களையும் வசதியில் விளைதிறன் மிக்க சுய வேலை வாய்ப்புக்களையும் ஏற்படுத்தித் தரும் வகையில் ஜனசக்தி நிகழ்ச்சித் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

உரித்துக் கொடுப்பனவும், முதலீட்டுக் கூறுகளையும் வழங்குவதன் வாயிலாக இரண்டாண்டுகளுக்குள் வறுமையை ஒழித்துக் கட்டுவதை ஜனசக்தி நிகழ்ச்சித் திட்டம் குறிக்கோளாகக் கொண்டுள்ளது. இவற்றுள் நுகர்வுக் கூறு மாதாந்தம் 1458 ரூபாய் கொண்ட உரித்தாவணமாகவும், முதலீட்டுக் கூறு மாதாந்தம் 1042 ரூபாய் கொண்டதாகவும் அமையும். அத்தியாவசிய பண்டங்களைக் கொள்வனவு செய்வதற்கென நுகர்வுக் கூறு உடனடியாக வழங்கப்படவுள்ளது. முதலீட்டுக் கூறு வங்கிக் கணக்கொன்றில் மாதாந்தம் சேமிக்கப்படும். முறையான முதலீட்டுக் கருத்திட்டம் ஒன்று சமர்ப்பிக்கப்பட்டு அது ஏற்றுக் கொள்ளப்பட்டால் இரண்டு ஆண்டுகளின் பின்னர் கணக்கிலுள்ள பணம் விடுவிக்கப்படும். நலன்களைப் பெற்றுக் கொள்வோர் விரும்பின் தமது நுகர்வுக் கூறின் ஒரு பகுதியை ஓராண்டின் பின்னர் வட்டியுடன் பணமாகப் பெற்றுக் கொள்வதற்கான ஏற்பாடுகளும் இந் நிகழ்ச்சித் திட்டத்தில் அடக்கப்பட்டுள்ளன. ஜனசக்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நலன்களைப் பெற்றுக் கொள்வோர் இடையான முதலீட்டுக் கருத்திட்டம் ஒன்றினைச் சமர்ப்பித்து தமது முதலீட்டுக் கூறின் வங்கியிலிருந்து பணத்தையும் பெற்றுக் கொள்ளலாம். தமது ஜனசக்தி கணக்கை பிணையாகக் கொண்டு இத் தொகையை முற்பணமாகப் பெறலாம்.

பொருளாதார விளைவுகள்

குறிக்கோள்களைப் பொறுத்த வரையிலும் பொருளாதார வளர்ச்சி, வேலையின்மை, பணவீக்கம், செலுத்தல் நிலுவை போன்ற பொருளாதார விளைவுகளைப் பொறுத்த வரையிலும் ஜனசக்தி நிகழ்ச்சித் திட்டத்தின் வெற்றி பல்வேறு காரணிகளில் தங்கியிருக்கும். அவையாவன:-

1. திட்டத்தின் பரிமாணமும் அது செயற்படுத்தப்படும் விதமும்.
2. அதற்கு நிதியீட்டம் செய்யும் வழிமுறைகள்.
3. தொடர்பான ஏனைய வழி முறைகள்.

உணவுப் பொருட்கள், உடை, மருந்து வகை ஆகிய அத்தியாவசியப் பொருட்களின் கேள்வி மட்டத்தை அதிகரிக்கும் நுகர்வு சார்ந்த நிகழ்ச்சித் திட்டமாகவே ஜனசக்தி நிகழ்ச்சித் திட்டம் ஆரம்ப காலத்தில் செயற்பட வேண்டுமெனத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திட்டமிடப்பட்டுள்ளது. எவரேனும் இத்திட்டத்தைப் பயன்படுத்த வேண்டும் என்றோ அவர்கட்கு எத்தகைய தொகை வழங்கப்படும் என்றோ இன்னும் தீர்மானிக்கப்படவில்லை. திட்டமிட்ட பல்வேறு அம்சங்களின் அடிப்படையில் நலவுரித்தாளிகளைத் தெரிவு செய்யும் நடைமுறை வகுக்கப்படும். அதன் பின்னரே ஜன சக்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கேள்வி அடிப்படையிலமைந்த தாக்கத்தைத் தொகையளவில் மதிப்பிடக்கூடியதாக இருக்கும். அத்தியாவசிய பொருட்களுக்கான கேள்வியை இத் திட்டம் எந்தளவுக்கு உயர்வடையச் செய்யுமோ அந்தளவுக்கு இத் திட்டத்தின் விளைவாகப் பணவீக்கம் அதிகரிக்கும் என்பது வெளிப்படை. கேள்வி விரிவாக்கத்துக்கிணங்க உள்ளூர் உற்பத்தி அதிகரிப்பதற்குச் சிறிது காலம் செல்லக் கூடும். இந்த இடைக் காலத்தில் இந் நிகழ்ச்சித் திட்டத்தின் நன்மைகளைப் பணவீக்கம் உறிஞ்சி விடுவதைத் தடை செய்ய வேண்டுமெனில் அதிகரிக்கும் கேள்வியைத் திருப்தி செய்வதற்கு இறக்குமதிகள் அதிகரிக்கப்படல் வேண்டும். இறக்குமதி அதிகரிப்பு சென்மதி நிலுவைப் பிரச்சினைகளைத் தோற்றுவிக்கும்.

இந் நிகழ்ச்சித் திட்டத்தின் பணவீக்க மற்றும் சென்மதி நிலுவை விளைவுகள் இந் நிகழ்ச்சித் திட்டத்தின் உரித்துத் தொகுதிகளிலும் தங்கியிருக்கும். குறுகிய காலத்தில் உள்ளூரில் தயாரிக்கப்படக்கூடிய உணவும் பொருட்களையும் ஏனைய பண்டங்களையும் ஆகியவற்றை நலவுரித்துக்களில் முக்கியமானவையாக அமைத்திருக்குமெனில் விளைவுகள் தாக்கம் குறைந்தவையாக இருக்கும். அல்லாவிடின் பாரதூரமான விளைவுகள் ஏற்படலாம். குறுகிய காலத்தில் உள்ளூரில் உற்பத்தி செய்யக்கூடிய பொருட்கள் உரித்துக்களிற் பெரும்பான்மையானவையாக அமையுமெனில் அது உள்ளூர் உற்பத்தியை ஊக்குவிப்பதற்கும் உள்ளூர் தொழில் வேலை வாய்ப்பினை அதிகரிப்பதற்கும் பெருமளவில் உதவக்கூடியதாகவும் இருக்கும்.

உரித்துடையவர் உரித்துடையோரே நலன் பெறுவோரில் முதன்மை பெறுவோராக இருக்கும் வகையில் தெரிவு செய்யும் நடைமுறை அமைந்திருத்தல் வேண்டும். சமூகத்தின் எளிதிற் பாதிப்புறக் கூடியோர் சிறந்தகதி செய்யும் முறையின் பொறுப்புக்களை அதிகரிக்கும் வேண்டுகோளைத் தாங்கிக் கொள்வதற்கு ஏற்ற வகையில் வழங்கப்படும் நிவாரணங்கள் அமைந்திருத்தலும் வேண்டும்.

நலவுரித்துக்களை வழங்குவதற்குக் கைக்கொள்ளப்படும் கோட்பாடானது நுகர்வு மட்டங்களில் மட்டுமின்றி சமூக நீதி நோக்கங்களையும் ஏற்படுத்தக் கூடியதென்பது இதனுடன் தொடர்பான அம்சமாகும். நலன்களைப் பெற்றுக்கொண்டோர் தமது தற்போதைய வருமான மட்டங்களைக் கருத்திற் கொண்டால் எல்லோரும் சமமான நலவுரித்துக்களைப் பெறுவோராயின் உயர் வருமானம் பெறுவோர் அதிக அளவு நலன்களைப் பெற்றுக் கொள்ள முடியும் என்பது வெளிப்படை. அத்துடன் அளவை வின்மையின் விளிம்பில் இருப்போருக்கும் தகைமை கொண்டோருக்கும் இடையிலான இடைவெளியும் இதனால் அதிகரிக்கும். ஆறாக்க செய்முறை தனைப்பிரித்து உரித்துக்களை வழங்குவதன் மூலம் இதனைத் தவிர்க்கலாம்.

ஜனசக்தி நிகழ்ச்சித் திட்டத்துக்கு நிதியளிப்பு

மூன்று பிரதான வழிகளில் இத் திட்டத்துக்கு நிதியளிப்பு செய்யலாம். ஆனால் இத்தகைய வழிகள் ஒவ்வொன்றும் பேரண்டப் பொருளியல் விளைவுகளை ஏற்படுத்தக் கூடியவையாகும். இவ் வழிகளாவன:-

1. பாதீட்டின் வரவீனத்தை பெருக்கிக் கொள்ளும் ஏனைய செலவுகளைக் குறைத்தல்.
2. புதிய வருமான வழி முறைகளைக் கைக்கொள்ளல்.
3. உள்நாட்டு துறையினரிடமிருந்து கடன் பெறல்.
4. வெளிநாட்டு துறையினரிடமிருந்து கடன் பெறல்.
5. பிற நாட்டுதவிகளைப் பெற்றுக் கொள்ளல்.

குறித்த வரையறைக்கு உட்பட்ட விதத்திலேயே பாதீட்டின் வரவீனம் மேற்கொள்ளப்படும் ஏனைய செலவுகளைக் குறைக்கக் கூடியதாக இருக்கும். ஏனெனில் நிறைவேற்று முகாமைத்துவம் செய்வதன் மூலம் கட்டாயச் செலவுகளை குறைக்காது பாதீட்டுச் செலவினங்களை வெறுமனே குறைக்கப் புதிய பொருளாதார வளர்ச்சி, வேலை வாய்ப்பு என்பன தொடர்பில் தீய விளைவுகளை தோற்றுவிக்கும். அரசாங்கத்தின் மூலதனச் செலவினத்தின் முக்கிய பகுதி பிரதான அபிவிருத்தித் திட்டங்களுக்கே ஒதுக்கப்படுகின்றது. இவ்வாறு நிலையில் அரசாங்கம் அவ்வாறு கருத்திட்டத்துக்கு ஏற்கனவே அளிக்கப்பட்ட நிதியை உதவிப் பயன்படுத்தப் படுகின்றது. பாதீட்டின் வரவீனம் மேற்கொள்ளப்படும் ஏனைய செலவினங்களைக் குறைத்து ஜனசக்தி நிகழ்ச்சித் திட்டத்துக்கு நிதியிடுவது வழங்கப்பட்ட ஏனைய கருத்திட்டங்களைக் குறைவடையச் செய்யும். அத் திட்டத்தில் குறித்த அக் கருத்திட்டத்துக்கென வழங்கப்படும் எந்த நாட்டுதவிக் கொடையும் பயன்படுத்த முடியாது. இது எதிர்காலத்தில் வழங்கலுக்கும் பொருத்தமான கொடையாளிகளை எச்சரிக்கை கொள்ளச் செய்யும். இதனால் இந் நடைமுறை விரும்பத்தக்க தொன்றல்ல.

புதிய வருமான வழி முறைகளைக் கைக்கொள்ளுமிடத்து அவ் வழி முறைகளைத் தெரிவுத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ளக் கூடிய வருமான அளவு கணிசமாக இருத்தல் அவசியமானது. அத்துடன் வருமானங்கள் எளிதில் சேகரிக்கக் கூடியனவாக இருந்தாலும் அரியதானது. பொதுவாக மாற்றங்கள் அல்லது விற்பனை அடிப்படையில் பெற்றுக் கொள்ளக் கூடிய வருமான வரி முறைகளே சேகரிக்க எளியனவாகவும் நிச்சயம் பயனளிப்பனவாகவும் அமைகின்றன. ஆனால் இவை உள்நாட்டு விலை மட்டங்களின் தவிர்க்க முடியாத தாக்கங்களை ஏற்படுத்தக் கூடியவை.

வங்கியல்லா மூலங்களுள் பிரதானமானவையான தேசிய சேமிப்பு வங்கி, ஊழியர் சேமலாப நிதி என்பவற்றிலிருந்து ஏற்கனவே இயன்றளவு கடன்கள் பெறப்பட்டுள்ளன. எனவே திறைசேரி உண்டியல்களுடான பரிமாற்ற சந்தை நடவடிக்கைகளும், நீண்டகால அரசாங்க ஆவணங்களைச் சந்தைப்படுத்தலும் மட்டுமே இத்தகைய மூலங்களுள் எஞ்சியுள்ளவையாகும்.

புதிதாகப் பணத்தை அச்சிட்டு வெளியிடுவதன் மூலம் வங்கித் துறையிலிருந்து கடன்களைப் பெற்றுக் கொள்வதற்கு பொருளாதார ரீதியான வரையறைகள் ஏதும் இல்லை. எனினும் இவ்வழிமுறை பாரிய அளவில் கைக்கொள்ளப்படுமிடத்து அந்நிய முறையின் திரவத்தன்மை அபாயகரமான அளவுக்கு விரிவாக்கம் பெறக்கூடும்.

ஜனசக்தித் திட்டத்தினால் தோற்றுவிக்கப்படும் மேலதிக நுகர்வுத் தொகுதிப் பொருட்களின் கணிசமான அளவு விநியோகம் பிற நாட்டுத் தயாரிப்புகளூடாக நிதியிடப்பட்டுச் செய்யப்படுமேயின் பணவீக்கத் தாக்கங்களை மட்டுமன்றி செலவுச் சமநிலைத் தாக்கங்களையும் ஏற்படுத்தக் கூடியதாக இருக்கும். மேலதிக நுகர்வுப் பொருட்களை உள்நாட்டு வழங்கிகளின் கொடைப்பாளிகளும் கூடச் சில வேளைகளில் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கும். முதலாவதாக, தனித்தனியாகக் கொண்ட வருமான அதிகரிப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் பயனாளிகளும் வாய்ப்பின்மை காரணமாக பெறுமதி. இரண்டாவதாக, உதவிப் பொருட்களின் சந்தையை நிரம்பல் செய்யும் நிறுவனங்கள் தமது ஆதரவுடன் மேற்கொள்ளப்படும் ஏனைய அரசுத் திட்டங்களின் உள்நாட்டு நாணய அடிப்படையிலான செலவுகளுக்காக அவர்கள் பயன்படுத்தக் கூடியதாக இருக்கும்.

## மேலதிக வழி முறைகள்

கடன் கட்டுப்பாடுகளும் எமது நாணயத்தில் மாற்றுப் பெறுமானத்தை உறுதியாகப் பேணல் போன்றவற்றை உள்ளடக்கிய மேலதிக வழி முறைகள் பணவீக்க மற்றும் செலவுச் சமநிலைத் தாக்கங்களைக் குறைத்திட உதவிடும். இவற்றை விட, விவசாய, கைத்தொழில் உற்பத்தியைப் பெருக்குவதற்கான வழிமுறைகள் முக்கியமானவையாகும்.

ஜனசக்தித் திட்டத்தால் ஏழை மக்களிடையே கூடுமானளவு மேலதிக கொள்வனவுச் சக்தி உணவுப் பொருட்களுக்கான கேள்வியைக் குறிப்பாக அதிகரிப்பது தவிர்க்க முடியாததாகும். உள்நாட்டு உணவுப் பொருட்களின் விலைகளும் அவற்றின் இறக்குமதியும் இத் திட்டத்தினைத் தொடர்ந்து வேகமாக அதிகரிக்கும். இதனைக் கட்டுக்குள் வைத்திருப்பதற்கு துரித விவசாய அபிவிருத்தி முயற்சிகள் மேற்கொள்ளப்படுவது அவசியமானதாகும். விவசாயம் பல்வேறு வாய்ப்புக்களை உள்ளடக்கிய துறையாகும். உதாரணமாக ஏற்றுமதி அபிவிருத்திக்கான சிறு விவசாயப் பொருட்களைக் குறிப்பிட்டுக் கூறலாம். ஜனசக்தி நிகழ்ச்சித் திட்டத்தின் வேறொரு அம்சமான அபிவிருத்திக் கடன் உதவித் திறனுடைய வகையில் செலுத்துவதற்கு இத்தகைய அபிவிருத்தி உத்தி பயனுள்ளதாகும்.

ஏற்றுமதிச் சம்பாத்தியத்தை அதிகரிப்பதற்கும் உள்நாட்டுக் கேள்வி விரிவாக்கத்தை ஈடு செய்வதற்கும் கைத்தொழில் துறையின் அபிவிருத்தியும் இந்த பாணியில் துரிதப்படுத்தப்படல் வேண்டும். அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட கைத்தொழில் கொள்கை விளக்கத்தில் கைத்தொழில் அபிவிருத்தி பற்றிய அடிப்படை உத்தி உள்ளடக்கப்பட்டுள்ளது. இந்த உத்தியின் பால் ஜனசக்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் குறிப்பாகச் சிறிய உற்பத்தியாளர் முக்கிய பங்கினை வகித்தல் வேண்டும்.

## ஜனசக்தி முதலீடு

சிறிய முயற்சிகளின் அபிவிருத்தி எதிர் கொள்ளும் முக்கிய பிரச்சினை மூலதனத்துடன் தொடர்பானதாகும். ஜனசக்தி நிகழ்ச்சித் திட்டம் இப் பிரச்சினையைத் தீர்ப்பதில் ஓரளவுக்கு உதவக்கூடும். ஜனசக்தி நிகழ்ச்சித் திட்டத்தின் முதலீட்டுக் கூறு 25,000 ரூபாவாகும். மேலெழுந்த வாரியாகப் பார்க்கும்போது இது சிறியதொரு பெறுமதியாகத் தோற்றமளிக்கும். ஒரு நாட்டத்தில் குறித்த ஒரு குடும்பம் சாத்தியவளமுள்ளதெனக் கருதப்பட்டால் இத்தொகையின் முழுமட்டங்களுக்கு அமைவான தொகை வரை மேலதிக நிதியீட்டமாகப் பெற்றுக் கொள்ளும் வாய்ப்புக் காணப்படுகின்றது. அதே நேரத்தில் ஜனசக்தி நிகழ்ச்சித் திட்டத்தின் பெறுனர் ஒன்றிணைந்து தமது மூலதனத்தை ஒன்று சேர்த்து பெரிய முயற்சி ஒன்றினை ஆரம்பிக்கவும் முடியும்.

மூலதனமானது உற்பத்திக் காரணிகளில் ஒன்று மட்டுமே. ஜனசக்தித் திட்டம் சமூகரீதியிற் பின்னடைந்துள்ள வறியோரில் வறியோரைக் குறிப்பொருளாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டதாகும். சந்தையில் எவ்வாறு செயற்படுவது, எவ்வெப் பொருட்களை பிரதானமாகச் சந்தைப்படுத்துவது, கொள்வனவாளர் எந்த

(58-ம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென் ஆசியாவின் அபிவிருத்தி அனுபவம்

('ஆசிய வரிசைக்கு மீளாய்வு' என்ற ஆசிய அபிவிருத்தி வங்கியின் பிரசுரத்தில் வெளியிடப்பட்ட விசேஷ ஆராய்ச்சிக் கட்டுரையின் இறுதிப் பகுதியை மட்டும் இங்கு பிரசுரிக்கின்றோம்.)

சுகமோய் சக்கரவர்த்தி
(பேராசிரியர், டெல்லி பொருளியற் கல்லூரி, டெல்லிப் பல்கலைக் கழகம்)

## சமூக அபிவிருத்தி

தொடர்ச்சியாக வறுமை நிலைத்திருப்பது தென்னாசிய நாடுகளின் முக்கிய பிரச்சினைகளில் ஒன்றாகக் காணப்படுகின்றது. அபிவிருத்திக் கொள்கையின் ஆரம்ப நாட்களில் பொருளாதார அபிவிருத்தியிலேயே வறுமை ஒழிப்புத் தங்கியுள்ளது என்பது பரவலாக ஏற்கப்பட்ட கருத்தாகக் காணப்பட்டது. பொருளாதார வளர்ச்சிக்கு பௌதிக மூலதனவாக்கம் அவசியமானதாகும். அதனுடன் மொத்த நுகர்வில் சுபீட்சமுடையோரின் பங்கை அதிகரிப்பது வசதியுள்ளவர்களின் சேமிக்கும் தன்மையை ஊக்குவிப்பதாகவும் அமையும். சேமிப்புகளை ஏற்படுத்துவதில் மோசமான தடைகளை எதிர்கொள்வதாகக் கூறப்படும் இந்நாடுகளில் இந்த நடைமுறையால் மொத்தச் சேமிப்பு மேலும் இன்றியமையாததாகும். அத்துடன் திட்டமிடல் நடைமுறை வறுமைப் பிரச்சினையை முற்றுக் கருத்திற்கு எடுத்துக் கொள்ளவில்லை எனவும் கூறிவிட முடியாது. ஏனெனில் காலப்போக்கில் வளர்ச்சியின் நலன்களை குடித்தொகையின் வறியோர் உட்பட்ட முழுச் சமூகமும் பெற்றுக் கொள்வதற்கு கீழ் நோக்கிய 'கசிந்து செல்லும்' நடைமுறை வழி வகுக்குமென நம்பப்பட்டது. தற்போதைய சமூகத்தினரின் நலன்களுடன் எதிர்காலச் சந்ததியினரின் நலன்களை இணையச் செய்வதற்கு நீதியான முயற்சியொன்று செய்யப்பட வேண்டும் என்பது ஆரம்ப கால அபிவிருத்திச் சிந்தனைகளின் முக்கிய அம்சமாகக் காணப்பட்டது.

எழுபதுகளின் ஆரம்பத்திலிருந்து இக்கருத்து பலத்த கண்டனத்துக்குள்ளாகியது. இத்தாக்கம் பற்றிய மீளாய்வை மேற்கொள்ள நான் விரும்பவில்லை. இக்கட்டுரையுடன் தொடர்புள்ள சில குறிப்புகளை மட்டும் இங்கு தர விரும்புகிறேன். குடித்தொகை, உயர்ந்த ஒருமைத்தன்மையும் அசையுந் தன்மையும் கொண்டது என்பதன் அடிப்படையிலேயே 'கசிந்து செல்லும் விளைவு' குடித்தொகையின் சகல பகுதியினரையும் சென்றடையும் என்ற எடுகோள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இத்தகைய குறிப்பாக தென்னாசிய நாடுகளிலாவது காணப்படுவதில்லை. இரண்டாவதாக மனித மூலதனவாக்கம் இணையாக ஏற்பட்டாலேயன்றி பௌதிக மூலதன ஆக்கத்தினால் மட்டும் வேகமான பொருளாதார வளர்ச்சியை அடைந்து விட முடியாது. கடந்த இரண்டு முதல் மூன்று தசாப்தங்களில் வேகமான குடித்தொகை வளர்ச்சி கண்டு வரும் தென்னாசிய நாடுகளில் மனித வள அபிவிருத்தி என்பது முக்கியத்துவம் பெற்ற விடயமாகி விட்டது. மூன்றாவதாக, ஏழைகளின் நுகர்வை அதிகரிக்கும் பொதுக் கொள்கைகள் ஒரே நேரத்தில் சமத்துவத்தையும் வளர்ச்சியையும் ஏற்படுத்துபவையாக அமையலாம். அடிப்படைக் கல்வி, திறன்களை வழங்குதல், சுத்தமான நீர், சுகாதாரம், மருத்துவ வசதிகள் என்பவற்றுக்கான பொதுச் செலவினங்கள் ஏழைகளுக்கு நேரடியாக நுகர்வு நலன்களை நல்குவனவாகும். இவை மனித மூலதனத்தில் செய்யப்படும் முதலீடுகளாகவும் கருதப்படல் வேண்டும். ஏனெனில் இவை உற்பத்தித் திறனைப் பெருக்குவதன் மூலம் வளர்ச்சிக்குத் துணை நேரடியாக அமையக்கூடியவையாகும். நான்காவதாக, தென்னாசிய நாடுகளில் அதுமையப் குடித்தொகை வளர்ச்சியும் வறுமையுடன் நெருங்கிய தொடர்பு கொண்டவையாகக் கருதப்படுகின்றன. மனித வள அபிவிருத்தி முயற்சிகளான சுகாதார, மருத்துவ வசதிகளை விஸ்தரிக்கச் செய்தல், படிப்பறிவு வீதத்தை முன்னேற்றுதல், கல்வி மட்டங்களை உயர்த்துதல் என்பவை வறுமையின் தாக்கங்களைக் குறைப்பதற்கு உதவுவது மட்டுமன்றி காலப்போக்கில் பிறப்பு மட்டங்களைக் குறைப்பதற்கும் உதவியாக அமையும். உண்மையில் இந்த மூலகங்கள் யாவும் ஒன்றுடனொன்று தொடர்புகொண்டவையாகும். இவற்றில் ஏதாவதொன்றில் ஏற்படுத்தப்படும் முன்னேற்றம் ஏனையவற்றிலும் முன்னேற்றத்தை ஏற்படுத்தி வளர்ச்சிப் படிமுறையைத் திடமானதாக்கி விடும்.

வளர்ச்சிக்கும் மனித வள அபிவிருத்திக்கும் இடையிலான இத்தகைய சாதகமான சுழற்சி நிலை காணப்படுகின்ற அதே வேளையில் சில அபிவிருத்திப் பொருளியலாளர்கள் பொருளாதார அபிவிருத்தியின் குறிக்கோள்களான வளர்ச்சி, சமத்துவம் என்பவற்றிடையேயான வேறுபாடுகளுக்கு அழுத்தம் கொடுக்க முனைகின்றனர். முரண்பாடு கொண்ட இவ்விரு கருத்துக்களும் பல விவாதங்களைத் தூண்டிவிட்டுள்ளன. அதன் விளைவாக பிரயோக ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டுள்ளன. இத்தாக்கத்தின் பேறு: அபிவிருத்தியானது அர்த்தபூர்வமானதாக இருக்கவேண்டுமெனில் வறுமை ஒழிப்புக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டுமெனச் சிலர் வாதிடுகின்றனர். அவர்கள் கருத்துப்படி, வறுமையும் போஷாக்கின்மையும் வளர்ச்சியின் நலன்கள் நியாயமான கால எல்லைக்குள் ஏழைகளைச் சென்றடைதலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்து தடுத்துவிடும். வளர்ச்சிப் படிமுறையானது, ஏழைகளை, குறிப்பாக, கிராமிய ஏழைகளைக் கருத்திற் கொள்ளாத ஒன்றாகும் எனச் சிலர் வாதிடுகின்றனர். அவர்கள் கருத்துப்படி பொருட்களும் சேவைகளும் முறைமையான விதத்தில் ஏழைகளிடையே பகிரப்படுவதற்கும் குறிப்பாக அவர்கள் அடிப்படைத் தேவைகளை ஈடு செய்வதற்கும் அரசாங்கத் தலையீடு அவசியமானதாகும்.

பொருளாதார வளர்ச்சியைத் தியாகஞ் செய்வதன் மூலம் ஏழைகளின் நலனை மேம்படுத்துவதற்கு நேரடியான நடவடிக்கைகளை மேற்கொண்ட தென்னாசிய நாடுகளிற் தலைசிறந்ததாகவும் ஏனைய நாடுகட்கு ஒரு உதாரணமாகவும் இலங்கை பல சந்தர்ப்பங்களில் வர்ணிக்கப்பட்டுள்ளது. பாரிய அளவிலான சமூக அபிவிருத்திச் செலவினங்களைச் செய்ததன் மூலம் நீண்ட ஆயுள் எதிர்பார்ப்பு, குறைவான சனத்தொகை வளர்ச்சி, உயர்மட்ட கலோரி அளவு கொண்ட உணவு என்பவற்றால் பிரதிபலிக்கப்படும் உயர்ந்த வாழ்க்கை மட்டத்தை ஏற்படுத்துவது இங்கு சாதகமாகியுள்ளது என வாதிடப்படுகின்றது.

ஆனால் 1977ன் பின்னர் சமூக அபிவிருத்திச் செலவினங்கள் குறைக்கப்பட்டு பொருளாதார அபிவிருத்திக் குறிக்கோள்களுக்கு பாரிய அழுத்தம் கொடுக்கப்பட்டு வருகின்றது. இலங்கையின் பொருளாதார நல்வாழ்வில் இவற்றின் விளைவு எத்தகையதாக இருக்கும் என்பது தொடர்பான தீர்ப்பை இவ்வளவு விரைவாக வழங்க முடியாதிருந்த போதிலுங்கூட சில பாதகமான போக்குகள் தென்படத் தொடங்கியுள்ளன. எனவே ஏனைய தென்னாசிய நாடுகளுடன் இலங்கையின் சமூக அபிவிருத்திப் படிமுறையை ஒப்பிடுவது பயனுள்ளதாக அமையும்.

1960ல் 62 ஆண்டுகளாகக் காணப்பட்ட ஆயுள் எதிர்பார்ப்பு 1985ல் 70 ஆண்டுகளாக அதிகரித்தது. 1985ல் இந்தியாவின் ஆயுள் எதிர்பார்ப்பு 56 வருடங்களாகவும், வங்காள தேசம், பாகிஸ்தான் ஆகிய நாடுகளில் 51 ஆகவும் அமைந்திருந்தது. 1960ல் இலங்கையின் (ஓராண்டிற்குட்பட்ட பிறப்புக் கட்டான) சிசு மரண விகிதம் 71 ஆக இருந்தது. இது 1985ல் 36 ஆகக் குறைவடைந்தது. வங்காள தேசத்தில் இதே ஆண்டில் இவ் விகிதம் 123 ஆகவும் பாகிஸ்தானில் 115 ஆகவும் இந்தியாவில் 89 ஆகவும் காணப்பட்டது. 1 – 4 வயது வரையிலான குழந்தைகளின் இறப்புவிகிதம் 1985ல் 1000க்கு 2ஆக இருக்க, இந்தியாவில் 11 ஆகவும் பாகிஸ்தானில் 16 ஆகவும் வங்காள தேசத்தில் 18 ஆகவும் காணப்பட்டது. 1985ல் ஆண்களின் படிப்பறிவு விகிதம் இலங்கையில் 91 சதவீதமாகக் காணப்பட்டது. பாகிஸ்தானில் இது 55 சதவீதமாகவும், வங்காள தேசத்தில் 40 சதவீதமாகவும், இந்தியாவில் 47 சதவீதமாகவும் இருந்தது. '60களில் 2.4 சதவீதமாகக் காணப்பட்ட சனத்தொகை அதிகரிப்பு விகிதம் '80களின் ஆரம்பத்தில் 1.4 சதவீதமாக வீழ்ச்சியுற்றது. பாகிஸ்தானில் இது 3.1 சதவீதமாகவும் வங்காள தேசத்தில் 2.6 சதவீதமாகவும் இந்தியாவில் 2.2 சதவீதமாகவும் இது காணப்படுகின்றது. இலங்கையில் 1960ல் 36ஆகக் காணப்பட்ட இயல்பான மரண விகிதம் 1985ல் 28ஆக வீழ்ச்சியுற பாகிஸ்தானில் 44 ஆகவும், வங்காள தேசத்தில் 40 ஆகவும், இந்தியாவில் 30 ஆகவும் காணப்படுகின்றது. இலங்கையில் பிறப்பு வீத வீழ்ச்சிக்குப் பெண்களின் படிப்பறிவு விகிதம் அதிகமானதாகக் காணப்படுவதும் ஒரு காரணமாகும். 1985ல் இது 81 சதவீதமாக இருந்தது. அத்துடன் குடும்பத் திட்டமிடல் முறைகளைப் பெருமளவில் கைக்கொண்டமையும் இதற்கொரு காரணமாகும். தாய்மையடையக் கூடிய வயதுப் பிரிவிலுள்ள திருமணமான பெண்கள் கருத்தடைச் சாதனங்களைப் பயன்படுத்துவது 1970ல் 7சத வீதத்திலிருந்து 1985ல் 57 சதவீதமாக வளர்ச்சியுற்றது. ஆனால் இந்தியாவில் இது 33சதவீதமாகவும் வங்காள தேசத்தில் 25 சதவீதமாகவும் பாகிஸ்தானில் 8 சதவீதமாகவும் காணப்பட்டது.

மானிய முறையிலமைந்த உணவுப் பங்கீட்டு முறையை நீண்டகாலமாக இலங்கை தொழிற்படுத்தி வந்துள்ளது. இதற்கான வழங்கலின் ஒரு பகுதி உள்நாட்டு உற்பத்தி மூலமும் எஞ்சியவை இறக்குமதிகள் மூலமும் பெறப்பட்டன. இதன் விளைவாக தலைநபருக்கான கலோரி வழங்கல் 1985ல் 2385 ஆகக் காணப்பட இந்தியாவில் இது 2189 ஆகவும், பாகிஸ்தானில் 2159 ஆகவும் வங்காள தேசத்தில் 1899 ஆகவும் அமைந்திருந்தது. இலங்கையின் உணவு விநியோகத்துக்கான அரச தலையீட்டு முறை பற்றிய ஆய்வு ஏழைகளின் மேம்பாட்டு வருமானத்தை உயர்த்துவதில் பெரும் பங்காற்றியுள்ளது என்பதை எடுத்துக்காட்டுகின்றது. அத்துடன் மனித மூலதன விருத்திப்பு, வேலை வாய்ப்பு உருவாக்கம், ஊழியத்துக்குக் கிடைக்கும் வெகுமதி என்பனவை அதிகரித்த அரிசி உற்பத்தி பெறப்பட்டமையாக இருந்தன.

எனினும், உணவு விநியோக முறையின் தொழிற்படுத்தல் செலவு '70களில் நாட்டின் நிதி நிலையில் பாரிய சுமையை ஏற்படுத்துவதாயிற்று. இக் கஷ்டங்களை எதிர்கொள்ளுமுகமாக 1978ல் கொள்கையளவிலானதும் நிறுவன அமைப்புகள் மூலமும் சில பாரிய மாற்றங்கள் கொண்டு வரப்பட்டன. உணவு விலைகட்கு வழங்கப்படும் மானியத்தைக் கணிசமாகக் குறைத்தல், உணவுப் பங்கீட்டுக்கான தகைமையைக் கொண்டோரின் எண்ணிக்கையைக் குறைத்தல், என்பவற்றின் வாயிலாகவும் நிலையான பெறுமதி கொண்ட உணவு முத்திரைகளை அவற்றுக்கீடாக வழங்கியதுடன் அதுவரைக்கால விலைகளை உயர்த்தியது போன்றவற்றை உள்ளடக்கியது போன்ற வழி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டவணை 1

தென்னாசிய நாடுகளின் மொத்த உள்நாட்டு உற்பத்தி மற்றும் வேலைவாய்ப்பு

(சதவீதங்கள்)

| நாடும் துறையும் | மொத்த உள்நாட்டு உற்பத்தி | | வேலைவாய்ப்பு | |
|---|---|---|---|---|
| | 1965 | 1985 | 1965 | 1980 |
| பங்களாதேஷ் | | | | |
| விவசாயம் | 53 | 50 | 84 | 75 |
| கைத்தொழில் | 11 | 14 | 5 | 6 |
| சேவைகள் | 36 | 36 | 11 | 19 |
| இந்தியா | | | | |
| விவசாயம் | 47 | 31 | 73 | 70 |
| கைத்தொழில் | 22 | 27 | 12 | 13 |
| சேவைகள் | 31 | 41 | 15 | 17 |
| பாகிஸ்தான் | | | | |
| விவசாயம் | 40 | 25 | 60 | 55 |
| கைத்தொழில் | 20 | 28 | 18 | 16 |
| சேவைகள் | 40 | 47 | 22 | 30 |
| இலங்கை | | | | |
| விவசாயம் | 28 | 27 | 56 | 53 |
| கைத்தொழில் | 21 | 26 | 14 | 14 |
| சேவைகள் | 51 | 46 | 30 | 33 |

ஆதாரம்: உலக வங்கி, உலக அபிவிருத்தி அறிக்கை, 1987.

முறைகள் கைக்கொள்ளப்பட்டன.

இக் கொள்கை மாற்றங்கள் உணவு நுகர்வு, போஷாக்குத் தன்மை என்பவற்றில் ஏற்படுத்திய தாக்கங்கள் யாவை என்ற கேள்வி இதிலிருந்து பிறக்கிறது. இலங்கையின் வழிமுறைக்கான நுணுக்கமான மேம்பாட்டைத் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட அனுபவமுறையியல் திறனாய்வுப் பணி ... ஒரு விமர்சனங்கள் இவ்விடயம் பற்றி அண்மையில் ஆராய்ந்துள்ளனர். இலங்கையின் வரவு செலவுத் திட்டத்தின் கணிசமானவிகிதாசாரம் நீண்ட காலமாக உணவு மானியத்திலும் ஏனைய சமூக சேவை நடவடிக்கைகளுக்குமாக செலவிடப்பட்டு வந்துள்ளமையால் அபிவிருத்திப் படிமுறையின் சமூகக் குறிகாட்டிகளில் இலங்கை அடைந்துள்ளது என சொல்லப்பட்டு வருவதாக அவர் வாதிட்டார். சமூகச் செலவின நிகழ்ச்சித் திட்டங்கள் காணப்பட்டாலும் இலங்கையின் வளர்ச்சி வீதம் மேலும் அதிகமானதாக இருந்திருக்குமென்று விமர்சனம் எழுப்பியபோது அவை இரண்டுக்கும் ஒரு முரண்பாடு காணப்பட்டமையை அவர் ஏற்றுக்கொண்டார். இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தி ஆண்டுக்கு 8 சதவீதம் அதிகரிக்குமாயின் 1976ல் காணப்பட்ட ஆயுள் எதிர்பார்ப்பான 68 ஆண்டுகளுக்குச் சமமான வருமான மட்டங்களை அடைய 152 ஆண்டுகள் செல்லும் என்ற முடிவுக்கு அவர் வந்தார். வருமான வளர்ச்சிப் பெறுமானங்களின் படி ஒரு நாடு நகர்கிறதுவெனில் வளர்முக நாடுகள் சமூக நலன்களைப் பெறுவதற்கு நீண்ட காலம் செல்லும் என்பதே அவர் கருத்தாகும். இந்த வகையில் ஏழைகளின் அடிப்படைத் தேவைகளை வழங்குவதற்கான நேரடி வழிமுறைகள் அவசியமானவை என அவர் கூறினார். பல்லா, கிளூவா என்பவர்கள் அண்மையில் இக் கருத்துக்கு மறுப்புத் தெரிவித்துள்ளனர். சுதந்திரம் கிடைத்த 1948 முதலாகவே இலங்கையில் சாதகமான உயர் வாழ்க்கை மட்டங்களை வெளிப்படுத்தக்கூடிய சமூக குறிகாட்டிகள் காணப்பட்டமையால் 1960களின் பின்னர் கைக்கொள்ளப்பட்ட அபிவிருத்திக் கொள்கைகள் 1970களில் சமூகக் குறிகாட்டிகளில் வெளிப்படுத்தப்பட்ட சாதகமான உயர் சாதனைகளை ஏற்படுத்திய தனிக் காரணியாக இருக்க முடியாதென்பதே அவர்கள் கருத்தாகும். ஆரம்ப நிலைகளைப் புறக்கணித்த வழிமுறை தொடர்பான குறைபாடுகளின் காரணமாகவே '70களின் பகுதியில் மிகக் குறைவாகக் காணப்பட்டமைக்கு 60 முதல் பெய்யப்பட்ட சமூக நுகர் செலவினங்கள் காரணமாக அமைந்தன என அவர்கள் வாதிட்டனர். 60-77 காலப்பகுதியுடன் ஒப்பிடும் போது பொருளாதாரச் சீர்திருத்தங்களைத் தொடர்ந்த 1977-84 காலப் பகுதியில் இலங்கையின் பொருளாதார வளர்ச்சி மிக அதிகமாகவிருந்ததுடன் வறிய ஏழைமக்களின் வாழ்க்கைத் தரங்களும் மிக உயர்ந்த அளவில் அதிகரித்துச் சென்றுள்ளன எனவும் அவர்கள் மேலும் வாதிடுகின்றனர். நேரடி வழிமுறைகளின் மூலம் சமூக நலனை மேம்படுத்தும் கொள்கைகளைக் கொண்ட காலத்தைவிட, சமூகச் செலவினங்களைக் குறைத்து அபிவிருத்திக்கு அழுத்தம் கொடுக்கப்பட்ட காலத்தில் அதிகளவு சமூக அபிவிருத்தி ஏற்பட்டிருந்தது என்பதே அவர்களின் வாதத்தின் மறு பொருளாகும்.

அபிவிருத்தி அனுபவத்தின் அடிப்படையில் மேற்கூறிய ஆய்வு எதனைக் குறிக்கின்றது? தென்னாசிய நாடுகள் ஒத்ததாக ஒரே காலப்பகுதியில் மூன்று முக்கிய மாறுதல்களைச் செய்யவேண்டி நேர்ந்தவை என்பதை நினைவு கொள்ளல் இச் சந்தர்ப்பத்தில் பொருத்தமானதாகும். குடித்தொகை சார்ந்த மாற்றங்கள், விவசாயத்துறை சார்ந்த மாற்றங்கள், கைத்தொழில் சமூகம் சார்ந்த மாற்றங்கள் என்பவையே இவை





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாகும். தெற்காசிய நாடுகளில் இந்த அம்சங்களிற் காணப்பட்ட வேறுபாடுகள் மாற்றங்களின் வேகத்தை மட்டுமின்றி அவற்றின் பொருளாதார வளர்ச்சி முறைமையும் பாதிக்கக் கூடும்.

சமூகத் தொடர்புகளைப் பொறுத்தவரை இலங்கையில் ஆரம்ப காலத்தில் சாதக நிலைகள் காணப்பட்டமையால் குறுகிய கால பகுதியினுள் குடித்தொகை வளர்ச்சியில் வேகமான வீழ்ச்சியைப் பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருந்தது. எனினும், தொழிற் படையைப் பொறுத்து மட்டுமல்லாமல் வெளியீட்டைப் பொறுத்தும் இது அமைப்பு ரீதியான மாற்றங்களுக்கு வழிவகுக்கவில்லை. சமூகநலச் சேவைகளின் வளர்ச்சியால் மட்டுமன்றி இலங்கையின் விவசாயத் துறையின் சில அம்சங்களாலும் மக்களின் வாழ்க்கைத் தரத்தைத் தொடர்ச்சியான முறையில் முன்னேற்றக் கூடியதாக இருந்தது. எனினும், ஏனைய இரு மாற்றங்களைக் கொண்டு வராமல் இந்த நிலை தொடர்ந்து நீடிக்க முடியும் என்பது தெளிவாகத் தெரியவில்லை.

மேலும், இறப்பர், தென்னம் பொருட்கள் என்பவற்றின் ஆதிக்கத்துக்குட்பட்டதாகவே இலங்கையின் விவசாயப் பொருளாதாரம் அமைந்துள்ளது. இவற்றில் தேயிலையும் இறப்பரும் ஒழுங்குபடுத்தப்பட்ட துறையினுள் அமைந்துள்ளன. இந்த ஒழுங்குபடுத்தப்பட்ட பெருந்தோட்டப் பயிர்த்துறையில் சுகாதார, வைத்திய, கல்வி வசதிகள் போன்ற தொழிலாளர் நலவுரிமைகள் நீண்ட காலமாகத் தொடர்ந்து காணப்பட்டு வந்தன. தனியார் தோட்டங்களிலும் பொதுத் துறைத் தோட்டங்களிலும் இதே நிலைமை காணப்பட்டு வந்தது. இப் பயிர்களின் ஏற்றுமதி வருமானம் நன்றாக அமைந்த போதிலும் தமது மெய் வருமானங்கள் குறைவாயுள்ளதை இப் பெருந்தோட்டப் பயிர்த்துறை தொழிலாளர் நிரு

அட்டவணை 2

தெரிவு செய்யப்பட்ட நாடுகளில் சார்பு ரீதியான துறைவாரியான உற்பத்தித்திறன் போக்குகள் 1960-1980

| நாடு | விவசாயம் | | | கைத்தொழில் | | |
|---|---|---|---|---|---|---|
| | 1960 | 1970 | 1980 | 1960 | 1970 | 1980 |
| பங்களாதேஷ் | 0.76 | 0.72 | 0.62 | 2.33 (3.1) | 2.32 (3.2) | 3.25 (5.2) |
| இந்தியா | 0.65 | 0.58 | 0.59 | 1.93 (3.0) | 2.22 (3.8) | 1.62 (2.7) |
| பாகிஸ்தான் | 0.68 | 0.63 | 0.58 | 1.12 (1.6) | 1.27 (2.0) | 1.39 (2.4) |
| இலங்கை | 0.62 | 0.56 | 0.54 | 1.90 (3.1) | 2.16 (3.9) | 2.00 (3.7) |
| கொரிய குடியரசு | 0.46 | 0.46 | 0.41 | 2.39 (5.2) | 1.57 (3.4) | 0.91 (2.2) |

குறிப்புகள்: சார்பு ரீதியான துறைவாரியான உற்பத்தித்திறன் துறைவாரியான தொழிலாளர் படையின் வீதமாக அளவிடப்படுகிறது.

அடைப்புக்குள் தரப்பட்டுள்ள புள்ளிகள் விவசாயத் துறைக்கு எதிராக கைத்தொழிலில் காணப்படும் சார்பு ரீதியான உற்பத்தித்திறனைக் காட்டுகின்றன.

ஆதாரம்: ஆசிய, பசுபிக் பிராந்தியத்துக்கான சமூக, பொருளாதார ஆணைக்குழு, 1982 (பாங்கொக்)

வளங்கள் உறுதி செய்துகொண்டன. மேலதிகமாக, குறிப்பாக '50களிலும், '60களிலும் பல குடியேற்றத் திட்டங்கள் ஏற்படுத்தப்பட்டதன் பயனாக அரிசி உற்பத்தியில் அதிகரிப்பு ஏற்பட்டது. காணியற்ற விவசாயிகட்கு அரசாங்கக் காணிகள் வழங்கப்பட்டன, புதிய நீர்ப்பாசனத் திட்டங்களின் கீழ் இக் காணிகள் அமைந்திருந்தன. மலிவான கடன்களும் மானிய விலைகளில் உள்ளீடுகளும் வழங்கப்பட்டன, வழமையான அபிவிருத்திப் படிமுறையால் காட்டப்படும் விவசாய அல்லது கைத்தொழில் மாற்றங்களை இவை ஏற்படுத்தாவிருந்தன. இக் காரணிகள் எதுவித பாரிய அழுத்தங்களுமின்றி குடித் தொகையின் வாழ்க்கைத் தரத்தைப் பேணக் கூடியனவாக இருந்தன.

மறுபுறத்தில் வங்காளதேசம், இந்தியா, பாகிஸ்தான் ஆகிய நாடுகளில் குடித்தொகை வேகமாக அதிகரித்தது. அத்துடன் அங்கு [illegible]மான விவசாய மாற்றங்களும் ஏற்படவில்லை. இதனால் இந் நாடுகளில் குடித்தொகை மாற்றங்கள் ஏற்படுவதில் தாமதம் ஏற்பட்டதாயிற்று. அங்கு புதிய தானிய தொழில்நுட்பங்கள் பின்பற்றப்பட்டன. அத்துடன் தனியார் உள்ளீடுகளையும் பயன்படுத்தத் தொடங்கினர். இதனால் நீடித்த அடிப்படையிலமைந்த விவசாய வளர்ச்சியை இந் நாடுகள் மேம்படுத்தலாயின. வளங்களின் பற்றுக்குறை நிலவிய போதிலும் மேற்கூறிய படிமுறையின் வாயிலாக நிலத்தின் விளைதிறனைப் பெருக்குவதில் இவை அதிக முன்னேற்றத்தை அடைந்தன. வலியுறும் விரிவடையாத காணி உடைமை முறை, காலனிகள் நன்றாட்டப்பட்டன, வேறு உரிமைகளில் பாதக விளைவுகள் என்பனவை காணப்படாமையால் இப் புதிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருமளவானது கிராமிய ஏழை மக்களும், காணியற்றோருக்கும், விவசாயக் கூலிகளுக்கும் புதிய தொழில்நுட்பத்தின் நலன்களைக் கிட்டச் செய்வதொன்றில் பூரண நம்பிக்கை கொள்ள முடியாதுள்ளது. தென்னாசிய நாடுகளில் விவசாய வளர்ச்சியை மேம்படுத்துவதற்கான எதிர்காலக் கொள்கைகள் கிராமிய ஏழைகளைச் சார்ந்ததான நிலவுடைச் சீர்திருத்தங்கள் மீது அதிக அழுத்தம் கொண்டவையாக இருத்தல் வேண்டும். தென்னாசிய நாடுகளின் அரசாங்கங்கள் பூரணமான நிலவுடைமைச் சீர்திருத்தங்களைச் செய்ய முடியாது திண்டாடுவதோ அல்லது அவற்றை விரும்பாததோ இருக்குமானால் விரைவான கைத்தொழில் மயமாக்கத்தின் மூலம் விவசாயத் துறையில் காணப்படும் மிகை ஊழியத்தைக் கவர்ந்து கொள்வதே அவற்றுக்குள்ள ஒரே ஒரு மார்க்கமாகும்.

கிழக்காசிய நாடுகள் வெளிநோக்கிய கைத்தொழில் மயமாக்க உத்திகளைக் கையாளுகின்றன. பல்வேறு காரணங்களுக்காக சிறிய கிழக்காசிய நாடுகளின் அரசாங்கங்கள் இவற்றைப் பிரதிபண்ணச் செய்ய முடியாதுள்ளன என்பதே எனது கருத்தாகும். ஏனெனில், முதலாவதாக, கிழக்காசிய நாடுகள் '50களில் பாரிய விவசாயச் சீர்திருத்தங்களை மேற்கொண்டிருந்தன. இதனால் நெகிழ்ச்சியான கூலி வீதம் கொண்ட விவசாய மிகைக் கூலிகள் விவசாயத் துறையிலிருந்து விடுவிக்கப்பட்டிருந்தனர். இந் நாடுகள் '60களில் மேற்கொண்ட துரித கைத்தொழில் மயமாக்கத்துக்குத் தேவைப்பட்ட கூலிப்படை தயாராகக் காத்திருந்தது. இரண்டாவதாக, ஆரம்பத்தில் ஐக்கிய அமெரிக்காவின் உதவிகள் என்ற வடிவிலும் பின்னர் ஜப்பானுடனான வர்த்தக உறவுகளாலும் பெருமளவிலான இலகு தவணைக் கடன்களூடாக இவை பல்வேறு பொருளாதார நலன்களைப் பெற்றுக்கொண்டன. மூன்றாவதாக, கல்வி, ஆற்றல் வளர்ச்சி, பொருளாதார ஸ்தாபனத் திட்டமிடல் என்பவற்றுக்கு இவை போதிய அழுத்தம் கொடுத்தன. அனைவற்றுக்கும் மேலாக, ஆசிய கலாச்சாரக் காரணிகளின் சேர்க்கையும் அரச பணிப்புக்களையும், வர்த்தக கைத்தொழிற்றுறைச் சந்தைச் சக்திகளின் தொழிற்பாடுகளும் சக்திமிக்க சேர்வை உட்பட்ட திறமான சர்வாதிகார உந்து விசைகளும் காணப்பட்டன. இக் காரணிகள் அனைத்தும் கிழக்காசிய நாடுகள் வேகமாகக் கைத்தொழிற் சமூகங்களாக மாறுவதற்கு வழிவகுத்தன. ஆனால் தென்னாசிய நாடுகள் குறிப்பிட்டுக் கூறக் கூடியளவுக்கு இச் சூழ்நிலைகளைக் கொண்டிருக்கவில்லை.

கைத்தொழில் நாடுகள் காப்பீட்டுக் கொள்கைகளைத் தீவிரமாகக் கைக்கொண்டன. அத்துடன் ஊழியச் செறிவு மிக்க உற்பத்திப்பொருட்களின் இறக்குமதிகளையும் அவை வெகுவாகக் குறைத்துக் கொண்டன. இவ்வகையில் தென்னாசிய நாடுகளின் ஏற்றுமதிக்கான எதிர்கால வாய்ப்புகள் பெருமளவுக் குறைவுறத் தொடங்கின. இதனால் போட்டியடிப்படையிலான விலைகளில் உற்பத்திப் பொருட்களை ஆக்கும் தகைமையைக் கொண்டிருந்த போதிலும் அவை வெளிப் போந்த கைத்தொழில் மயமாக்க உத்தியைக் கைக்கொள்வதில் தென்னாசிய நாடுகள் இடர்பாடுகளை எதிர்கொள்ளலாயின.

நாளது வளர்த்தொடைக்கு அமைவான கைத்தொழில் மயமாக்க உத்திகளையே தென்னாசிய நாடுகள் வகுக்கவேண்டியிருந்தன. உணவுப் பொருட்கள், புடவை, தோற் பொருட்கள், ஏனைய விவசாயஞ் சார்ந்த கைத்தொழில்கள் போன்ற அடிப்படை நுகர்வுப் பொருட்களைத் தீவிரமாக முன்னேற்றும் உத்திகளுக்கு அதிக அழுத்தம் கொடுக்கவேண்டியிருந்தது. சாதாரண நுகர்வுப் பொருட்களையும் ஊனவுக்குப் பதனிடப்பட்ட மூலப் பொருட்களையும் ஏற்றுமதி செய்வதற்கும் இது வாய்ப்பளிப்பதாக அமையும். மறுபுறத்தில், வருமானக் குவிப்புக்குச் சாதகமான கொள்கைகளினூடாக மட்டுமே இப் பொருட்களுக்கான உள்நாட்டுக் கேள்வியை அதிகரிக்க முடியுமாகையால் நெடுவாழ்வு நுகர் பொருட்களின் அபிவிருத்தி சார்ந்த கைத்தொழிற் பொருட்களின் கைத்தொழில் மயமாக்கம் இச் சமூகங்களிற்கு வாழ்க்கைத் தரங்களை மேலும் மோசமானதாக்கிவிடும்.

## சேமிப்புகள்

உள்ளூர்ச் சேமிப்புகளின் அபிவிருத்தி வேகமான பொருளாதாரத்தின் அபிவிருத்திக்கு அடிப்படையான முற்தேவையாகும். தென்னாசிய நாடுகளுள் உள்ளூர்ச் சேமிப்புகளை அதிகரிப்பதிலும் திரட்டுவதிலும் இந்தியாவின் சாதனை குறிப்பிடத்தக்கதாக உள்ளது. 1965ல் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 14 சதவீதமாக இருந்த இந்தியாவின் சேமிப்பு விகிதம் 1985ல் 21 சதவீதமாக அதிகரித்தது.

மறுபுறத்தில், 1965க்கும் 1985க்கும் இடைப்பட்ட காலத்தில் வங்காள தேசத்தின் உள்ளூர் சேமிப்பு விகிதம் 8 சதவீதத்திலிருந்து 3 சத வீதமாக வீழ்ச்சியுற்றது. இதே காலப்பகுதியில் பாகிஸ்தானின் சேமிப்பு விகிதம் 13 சத வீதத்திலிருந்து 5 சதவீதமாக வீழ்ச்சியுற்றது. கடந்த இரு தசாப்தங்களில் இலங்கையின் உள்ளூர் சேமிப்புகள் 13 சத வீதம் என்ற குறைவான மட்டத்தில் வளர்ச்சியின்றிக் காணப்பட்டது.

உள்ளூர்ச் சேமிப்பு மட்டங்கள் குறைந்த அளவிற் காணப்பட்ட போதிலும் வங்காளதேசம், பாகிஸ்தான், இலங்கை போன்ற நாடுகள் உள்ளூர் முதலீடுகளை உயர்ந்த மட்டத்தில் பேணக் கூடியனவாகக் காணப்பட்டன. பிறநாட்டுதவிகள், கடன், உள்ளூர் வாசிகள் வெளிநாடுகளிலிருந்து அனுப்பி வைக்கும்பணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்ற வெளிநாட்டுச் சேமிப்புகளின் உட்பாய்வின் காரணமாக இத்தகைய அதிகரிப்பு ஏற்படலாயிற்று.

வெளிநாடுகளிற் பணியாற்றும் உள்நாட்டவர்களின் அனுப்பல்கள் 1970 முதல் கொண்டு தென்னாசிய நாடுகளின் பிரதான அந்நியச் செலாவணி மூலமாக அமைந்தது மட்டுமன்றி அவற்றின் வர்த்தகப் பற்றுக் குறைகளை ஓரளவுக்குத் தீர்த்து வைப்பதற்கும் உதவின. 1978 ல் வங்காள தேசத்தில் இத்தகைய அனுப்பல்கள் 15 சதவீதத்துக்குச் சமமாக அமைந்திருந்தன. இது 1982 ல் 22 சதவீதமாக அதிகரித்தது. 1978 - 82 க்கு இடைப்பட்ட காலத்தில் இத்தகைய அனுப்பல்கள் வர்த்தகப் பற்றுக் குறையின் 70 சதவீதத்தை ஈடு செய்தன. இந்தியாவிலும் இத்தகைய அனுப்பல்கள் கணிசமானவையாக அமைந்திருந்த போதிலும் அங்கு கடந்த மூன்று தசாப்தங்களில் ஏற்பட்ட உள்ளூர்ச் சேமிப்பு அதிகரிப்பு உள்ளூர் முதலீட்டு மட்டங்களை அதிகரிப்பதற்குப் பெருமளவில் உதவி புரிந்தது. எனவே வெளிநாட்டவர்களின் அனுப்பல்களின் முக்கியத்துவம் அங்கு மிகக் குறைவானதாகவே அமைந்தது.

தென்னாசிய நாடுகள் பிற நாட்டுக் கடன்களில் பெருமளவுக்குத் தங்கியிருந்தமையால் அவற்றின் கடன் சேவைப்பளு மிக அதிகளவுக்கு அதிகரித்துச் சென்றது. கடன்களுக்கும் மொத்த தேசிய உற்பத்திக்கும் இடையேயான விகிதம் இலங்கையில் 1970 ல் 16.4 சதவீதமாகக் காணப்பட்டது. இது 1985ல் 47.6 சதவீதமாக அதிகரித்தது. இதே காலப்பகுதியில் வங்காள தேச கடன் சேவை விகிதம் 0.6 சதவீதத்திலிருந்து 37.1 சதவீதமாக அதிகரித்தது. எனினும் இவ்விரு நாடுகளும் சலுகை அடிப்படையிலான கடன்களையே பெற்றிருந்தமையால் அதிகரித்த அபாயத்தை ஏற்படுத்துவனவாக இவற்றின் கடன்பளு அமைந்திருக்கவில்லை. எவ்வாறாயினும் இவ்விரு நாடுகளும் கடன்களைப் பெற்றுக் கொள்ளும் வேகத்தைப் பார்க்கும் போது இவை பாரதூரமான கடன் சேவைப் பிரச்சினைகளை எதிர்காலத்தில் எதிர்நோக்கக்கூடிய வாய்ப்பினைக் கொண்டிருப்பதை அவதானிக்க முடிகின்றது.

கடந்த 2 அல்லது 3 தசாப்தங்களில் வருமானப் பகிர்வைப் பொறுத்தவரை பல மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. எனினும், இந்தியாவில் குறிப்பாக குடும்பங்களை உள்ளடக்கிய தனியார் துறையில் சேமிப்பு நாட்டம் மிக உயர்வாக இருந்து வந்துள்ளமையைக் காணக் கூடியதாக உள்ளது. அத்துடன் அண்மைக் காலம் வரையிலும் பொதுத் துறையிலும் சேமிப்புக்கான எல்லை நாட்டம் உயர்வாகவே காணப்பட்டது. நிதித்துறை ஆழமாக்கப்பட்டமை, சேமிப்புக்கருவிகள் பன்முகப்படுத்தப்பட்டமை, மெய் வட்டி வீதங்கள் பேணப்பட்டமை என்பனவற்றுடன் அண்மைக் காலத்தில் குடிமக்களின் சேமிப்புப் பழக்க வழக்கங்களில் ஏற்பட்ட மாற்றங்களும் இந்தியாவின் குடும்பத்துறை சேமிப்புக்களின் அதிகரிப்புக்குப் பெரிதும் உதவியுள்ளன.

மறுபுறத்தில், தனியார் துறையின் எல்லைச் சேமிப்பு நாட்டம் இதனிலும் மிகக் குறைவாக அமைந்திருந்த வேளையில் பாகிஸ்தானில் இது மிகவும் குறைவாகவே காணப்பட்டது. 1960-78 காலப் பகுதியில் எல்லைச் சேமிப்பு நாட்டம் இந்தியாவில் 0.24 ஆகக் காணப்பட்ட வேளையில் இலங்கையில் அது 0.18 ஆகவும் பாகிஸ்தானில் 0.11 ஆகவும் அமைந்திருந்தது.

இதனைவிடத் தென்னாசிய நாடுகளில் பொதுச் சேமிப்புக்களின் பங்கும் குறைவடைந்து சென்றுள்ளன. வட்டி செலுத்துமதி, பாதுகாப்புச் செலவினங்கள், நுகர்வு மற்றும் உற்பத்தி மானியங்கள் போன்ற உற்பத்தித் திறனற்ற அம்சங்களின் வளர்ச்சியை இதற்கு ஒரு காரணமாகக் காட்டலாம். போதிய வளங்களைப் பொதுத்துறை பெற்றுக்கொள்ள முடியாதிருந்தமையும் இதற்கான பிறிதொரு காரணமாகும். இந்தியாவைப் பொறுத்தவரை பொதுத்துறைச் சேமிப்பில் ஏற்பட்ட வீழ்ச்சியை தனியார்துறைச் சேமிப்புகள் சரிகட்டியமையால் அனைத்தையும் அடக்கிய சேமிப்பு 22 அல்லது 23 சதவீதமாக உயர்வாகக் காணப்பட்டது. ஆனால் ஏனைய தென்னாசிய நாடுகளில் இதனை ஒத்த அபிவிருத்தி ஏற்பட்டிருக்கவில்லை.

வங்காளதேசம், பாகிஸ்தான், இலங்கை ஆகிய நாடுகளில் எவ்வகையிற் பார்த்தாலும் உள்ளூர்ச் சேமிப்புக்களின் மட்டம் மிகக் குறைவாகக் காணப்படுகின்றது. இதனை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படாவிட்டால் நிலைத்த பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்துவது மிகக் கஷ்டமான விடயமாகவே இருக்குமென்பது தெளிவாகத் தெரிகின்றது.

முடிவுரை

வங்காளதேசம், இந்தியா, பாகிஸ்தான், இலங்கை போன்ற தெரிந்தெடுக்கப்பட்ட தென்னாசிய நாடுகளின் அபிவிருத்தி அனுபவங்களை மதிப்பீடு செய்து எதிர்காலத்திற் கைக்கொள்ளப்படவேண்டிய அபிவிருத்தி உத்திகளைச் சுட்டிக்காட்டுவதே இக்கட்டுரையின் பரந்த நோக்கமாகும். எனினும், அபிவிருத்தி அனுபவங்கள் பற்றிய குறிப்பான விடயங்கள் மீது மட்டுமே விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது. இவற்றைவிட வெளிநாட்டு வர்த்தகம், வெளிநாட்டுக் கொடுக்கல் வாங்கல்கள் என்பனவும் அதேயளவு முக்கியத்துவம் பெற்ற விடயங்களாகக் கருதப்படக் கூடியவையே. இக்கட்டுரையில் தெரிவு செய்யப்பட்ட ஒரு சில விடயங்களிலும் அபிவிருத்தி அனுபவத்தின் ஒரு சில அம்சங்கள் பற்றி மட்டுமே முக்கிய கவனம் செலுத்தப்பட்டது. ஏனெனில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது கருத்துப்படி இந்நாடுகளின் அபிவிருத்தி உத்திகளைப் பொறுத்த வரை இவ்விடயங்களில் அதிக அக்கறை செலுத்தப்படல் வேண்டும். தெரிவு செய்த நான்கு நாடுகட்கும் இந்த அம்சங்களிற் சில பொதுவானவையாக இருந்துள்ளன. வேறுசில அம்சங்கள் நாட்டுக்கு

நாடு வேறு பட்டவையாக அமைந்துள்ளன. இவற்றைச் சுருக்கிக் கூறல் பொருத்தமானதாகும். விவசாயத்திற் பெருமளவுக்குத் தங்கியுள்ள பெரிய தொழிற்படை தென்னாசிய நாடுகளின் கிராமப்புறங்களில் தங்கியுள்ளது. வங்காள தேசம், இந்தியா, பாகிஸ்தான் போன்ற நாடுகளில் ஏற்பட்டுவரும் வேகமான குடித்தொகை வளர்ச்சி காரணமாக கிராமிய குடித்தொகையை விட வேகமான அளவில் கிராமியத் தொழிற் படை வளர்ச்சி பெற்று வருகின்றது. விவசாயத் துறையின் மிகை ஊழியர் வருமான வாய்ப்புள்ள வழிகளில், விவசாயமற்ற தொழில்களில் ஈடுபடுத்தப்படக் கூடிய வேகம் மட்டுப்படுத்தப்பட்டிருப்பதனால் ஊழியச் செறிவுள்ள கைத்தொழில் உத்தி ஒன்று கைக்கொள்ளப்பட்ட போதிலும் தென்னாசிய நாடுகள் மிகை விவசாயத் தொழிலாளரின் சுமையை இன்னும் சில தசாப்தங்கட்குத் தாங்கிக் கொள்ள வேண்டியது அவசியமாகும். நிலங் காணி என்பவற்றைப் பொறுத்த தெரிந்தெடுக்கப்பட்ட விவசாய உத்திகளைத் தெரிந்தெடுப்பதற்குக் காலஞ் செல்லுதலும் இத்திசையில் ஏற்புடையதாகிறது. ஊழிய விளைவிருப்பைத் தடுப்பதாக அமைவதுடன் அண்மையான எதிர்காலத்தில் அதனை அதிகரிப்பதற்கும் இது உதவ மாட்டாது. இந் நாடுகளின் முழுமையான அபிவிருத்தி உத்திகளின் விவசாய அபிவிருத்திக்கு அதிலும் குறிப்பாக உணவுத் தானிய உற்பத்திக்கு உயர் முன்னுரிமை வழங்கப்படல் வேண்டும். இலங்கையும், வங்காள தேசமும் உணவுப் பற்றுக் குறை கொண்ட நாடுகளாக இருக்கும் வேளையில் இந்தியா தனது உணவுத் தேவையை ஈடு செய்வதில் கணிசமான சாதனையைப் புரிந்துள்ளது. மறுபுறத்தில் பாகிஸ்தான் உணவு உற்பத்தியில் மிகைநிலையை அடைந்துள்ளது. எனினும் அங்கு மிக உயர்வான சனத்தொகை அதிகரிப்பு வீதம் காணப்படுவதனாலும், உணவுத் தானிய உற்பத்தி வேகம் குறைவாகக் காணப்படுவதனாலும் இந்நிலை அண்மைக் காலத்தில் பாதிப்படைந்து வருகின்றது.

குறிப்பான சில தானியங்கள், பிராந்தியங்கள், சில விவசாய வகுப்பினர் என்பவர்களுக்காக மட்டுமே புதிய விவசாயத் தொழில்நுட்பம் வகுக்கப்பட்டதாக உள்ளது. விவசாய அபிவிருத்தி, விஸ்தரிப்பு நடவடிக்கைகள் என்பவற்றினூடாக இச் சமமின்மையைப் போக்குவதற்கு அதிகளவு வளங்கள் ஒதுக்கப்படுவது அவசியமானதாகும். வளர்ச்சியின் நலன்கள் அதிகளவான பிராந்தியங்களுக்கும் பல வகையினரான விவசாயிகட்கும் செலுத்தப்படுவதற்கு இது உதவுவதாக அமையும். இந் நாடுகளில் பிராந்திய மற்றும் சமூக மட்டங்களில் காலநிலை மாற்றங்கள் காரணமாக நிலவும் நிச்சயமற்ற தன்மைகளால் ஏற்படக்கூடிய உறுதியற்ற தன்மையினை அகற்றுவதற்கும் இது உதவக் கூடும்.

புதிய விவசாயத் தொழில்நுட்பத்தில் அளவுத்திட்ட நடுநிலைத் தன்மை காணப்பட்ட போதும் வருமானம் அல்லது ஆதனங்கள் என்பவற்றின் சமனற்ற பகிர்வைப் பொறுத்தவரை புலனாகக் கூடிய மாற்றங்கள் எவையும் ஏற்பட்டிருக்கவில்லை. இந்தியா சில பகுதிகளில் மேலும் மோசமடைந்திருக்கவுங்கூடும். இவ்விடயம் பற்றி இன்னும் விவாதிக்கப்பட்டு வருகின்றது. எனினும் தென்னாசியாவைப் பொறுத்த வரையிலாவது கடன் மற்றும் உள்ளீடுகளின் விநியோக முறை உட்பட்ட விவசாய மற்றும் நிறுவனரீதியான சீர்திருத்தங்கள் ஏற்படுத்தப்படல் வேண்டும். தற்போது திட்டமிடப்பட்டுள்ளவாறு விவசாய அமைப்பு முறையில் முழுமையான மாறுதல்கள் ஏற்படுத்தப்படாவிடினுங்கூட சில மாற்றங்களையாவது ஏற்படுத்துவது அத்தியாவசியமானதாகும்.

இலங்கை வங்காள தேசம் போன்ற நாடுகள் அமைப்பு ரீதியாகப் பன்முகப்படுத்தப்படாத பொருளாதாரங்களைக் கொண்டவையாகும், ஒரு சில ஆரம்ப பொருட்களின் ஏற்றுமதி வருமானத்திலேயே அவற்றின் விவசாயத்துறையின் சாதனைகள் பெருமளவுக்குத் தங்கியுள்ளன. இப்பொருட்களின் மொத்த உற்பத்தியில் ஒரு சிறு விகிதாசாரமே உள் நாட்டில் நுகரப்படுகின்றது. எனவே அனைத்துலகச் சந்தைகளில் உருவாக்கப்படும் உறுதியற்ற தன்மைகள் அவற்றின் மொத்த பொருளாதார அபிவிருத்தியைப் பாதிப்பனவாக அமைகின்றன. மேலும், குறுகிய காலத்தில், எந்த நியாயமான அளவுக்காவது, அவற்றின் ஏற்றுமதிகளைப் பன்முகப்படுத்துவதும் கடினமானதாகும். இத்தகைய பண்டங்களைப் பொறுத்தவரையில் தென்னாசிய நாடுகள் ஓரளவுக்குப் பொதுவான அக்கறை கொண்டிருப்பதனால் வர்த்தக மாற்று வீதங்களில் பாரதூரமான நஷ்டங்களை அடையாதிருப்பதற்காக அவை ஏதோ ஒரு வகையான வர்த்தகக் கூட்டுகளை ஏற்படுத்திக் கொள்வது விரும்பத்தக்கதாகும்.

பல்வேறு காரணங்கட்காகத் தென்னாசிய நாடுகளின் பொதுத் துறை நாட்டு அபிவிருத்திப் படிமுறையில் முக்கிய பங்கினை ஆற்ற வேண்டியுள்ளது. முதலாவதாக, வலு, போக்குவரத்து, தொடர்பூட்டல் போன்ற உள்ளமைப்பு வசதிகளைப் போதியளவு பெறாத காரணத்தால் இந் நாடுகள் வறுமையுற்ற வையாகக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணப்படுகின்றன. இந் நாடுகளின் தனியார்துறை இத்தகைய கருத்திட்டங்களுக்கான பாரிய மூலதனங்களுக்குத் தேவையான வளங்களைப் பெற்றுக் கொள்ளக் கூடியவையாக இருந்த போதிலும் கூட தன்னை அவற்றில் ஈடுபடுத்திக் கொள்வதில்லை. இரண்டாவதாக, அண்மைக் காலங்களில் நாடுகள் தாராளப் பொருளாதாரக் கொள்கைகளைக் கடைப்பிடிக்கத் தொடங்கியுள்ளன. சந்தைச் சக்திகளின் சுதந்திரமான தொழிற்பாடு வளங்களின் திறமையான பகிர்வுக்கு வழி வகுக்கும் என்ற வாதமே இத்தகைய கொள்கைகளின் ஆதாரமாக அமைகின்றன. ஆனால் கடன், தொழில், தொழில்நுட்பம் என்பவற்றுக்கான சந்தைகளில் பூரணமற்ற நிலை காணப்படுவதனால் இந் நாடுகளின் சந்தைகள் சரியான விலை சமிக்ஞைகளை வெளிப்படுத்தக் கூடியன என எண்ணுவது அவாக் கொண்ட சிந்தனையே ஆகும். உண்மையில் சந்தை உறுதிப்பாடின்மையால் ஏற்படுத்தப்படும் பேதலிப்புகளை நீக்குவதற்காக மட்டுமே அரசின் தலையீடு வரவேற்கப்படுகின்றது.

தமது வளக் கொடைகளைக் கருத்திற் கொண்டு கிடைக்கக் கூடிய வளங்களை மிகத் திறமையாகப் பயன்படுத்துவதன் மூலம் மட்டுமே கைத்தொழில் மயமாக்கத்தை எய்துவதாக தென்னாசிய நாடுகளின் கைத்தொழில், தொழில்நுட்பக் கொள்கைகள் அமைந்திருத்தல் வேண்டும். இறக்குமதிப் பிரதியீட்டுக்கோ ஏற்றுமதி மேம்பாட்டுக்கோ வழங்கப்படும் முக்கியத்துவம் உள்நாட்டுச் சந்தையின் அளவைப் பிரதானமாக உள்ளடக்கிய பல்வேறு பொருளாதாரக் காரணிகளினால் நிர்ணயிக்கப்பட வேண்டுமென்பது வெளிப்படை. இந்தியாவின் கைத்தொழில் மயமாக்கல் முறையானது அதன் அளவு, பன்முகத்தன்மை என்பவற்றைப் பொறுத்து தேர்ந்தெடுக்கப்பட்ட இறக்குமதிப் பிரதியீட்டு வாய்ப்புக்களில் தங்கியிருக்க வேண்டியுள்ளது. தென்னாசியாவின் எஞ்சிய சிறிய அளவிலான நாடுகள் ஏற்றுமதி மேம்பாடு தழுவிய கொள்கைகளை உள்ளடக்கிய கைத்தொழில் அபிவிருத்தி உத்திகளைக் கைக்கொள்ள வேண்டியுள்ளது. வெளிநாட்டு முதலீடுகள் கிடைக்கக் கூடியனவாக இருந்த போதிலும் சிறிய நாடுகள் பாரிய கைத்தொழில் வலயங்களை மேற்கொள்வது இவற்றுக்குச் செலவு மிக்கதாக அமைந்துவிடும். ஏனெனில் இவற்றில் பயிற்றப்பட்ட தொழில்நுட்ப மற்றும் முகாமைத்துவ ஆற்றல் கொண்டோர் போதியளவில் காணப்படாமையாலும் கைத்தொழில் மய நாடுகளில் கூட மூலதனப் பொருள் கைத்தொழிற்களின் தொழில்நுட்பங்கள் வேகமான மாற்றங்கட்குட்பட்டு வருவதனாலும் இவை சிறிய நாடுகட்குப் பெருந்தடையாக அமைந்துவிடும். இந்தியாவில் இறக்குமதிப் பிரதியீட்டுக்கும் தொழில்நுட்பத்தைத் தரமுயர்த்துவதற்கும் வழங்கப்பட்டுவரும் தொடர்ச்சியான அழுத்தம் ஏற்றுமதிச் சந்தைகளில் போட்டி அடிப்படையிலமைந்த உறுதியான அபிவிருத்தி நோக்கிய மாற்றமுறும் கட்டமாகவே கொள்ளப்படல் வேண்டும்.

தென்னாசிய நாடுகளின் சனத்தொகை அடர்த்தி அதிகமாகக் காணப்படுவதுடன் அங்கு மூல வளப் பற்றாக்குறையும் நிலவுகின்றது. எனவே அவை கைத்தொழில் நாடுகளின் கைத்தொழில்மய மற்றும் நகரமயமாக்கல் மாதிரிகளைப் பின்பற்றுவது தவறானதாகும். கைத்தொழில் நாடுகள் வலு, கனிப்பொருட்கள், காட்டு வளங்கள், ஏனைய இயற்கை வளங்கள் என்பவற்றை அதிகளவிற் பயன்படுத்தி வருகின்றன. நுகர்வை நாட்டங்கொண்ட சமூகத்தின் தேவைகளை ஈடுகட்டுவதற்காக இப்படி முறையின் விளைவாக அவை பல வகைப்பட்ட சூழற் பிரச்சினைகளையும் உருவாக்கியுள்ளன. நீடித்த வளர்ச்சியை ஏற்படுத்துவதற்காக சூழல் சமநிலையை நிலைநிறுத்தக் கூடியதும் தமது வளக் கொடைக்கு ஏற்புடையனவுமாகிய கைத்தொழில் முறையொன்றினைத் தேர்ந்தெடுப்பது தென்னாசிய நாடுகளுக்கு உகந்ததாகும். நெறிப்படுத்தப்படாத சந்தைப் பொறிமுறை இத்தேவையை ஈடு செய்ய மாட்டாது என்பது கைத்தொழில் நாடுகளிற் கூடத் தற்போது தெளிவாக ஏற்கப்பட்டுள்ளது. எதிர்காலத்துக்கான கைத்தொழிற் கொள்கைகளை வகுக்கும் போது தென்னாசிய நாடுகள் இவ்விடயத்தை நன்கு மனதிற் பதித்துக் கொள்ளல் வேண்டும்.

அண்மைக் காலம் வரையிலாவது இலங்கை தவிர்ந்த ஏனைய தென்னாசிய நாடுகள் சமூக அபிவிருத்தி நடவடிக்கைகள்பால் பெரிய அக்கறை செலுத்தவில்லை. அவர்களது முழுமையான அபிவிருத்தி உத்திகளில் மனிதவள அபிவிருத்தி முக்கிய கூறாக அமைதல் வேண்டும். குறுகிய காலத்தில் பிற்பட்ட பகுதிகளில் தேவைக்கதிகமான தொழிலாளர் காணப்படும் நிலையை இது அகற்றிவிடும். நீண்ட காலத்தில் அமைப்பு முறையான மாற்றங்களை ஏற்படுத்தவும் இது வழி வகுக்கும்.

வங்காளதேசம், பாக்கிஸ்தான், இலங்கை ஆகிய நாடுகளின் அபிவிருத்தி தொடர்பான முக்கிய பிரச்சினை அந்நாடுகளின் உள்நாட்டுச் சேமிப்புப் பற்றாக்குறையாகும். இது வரை காலமும் உள்ளூர்ச் சேமிப்புகளை விட அந்நியச் செலாவணியைப் பெற்றுக் கொள்வதிலுள்ள பிரச்சினைகளே பொருளாதார வளர்ச்சியைப் பாதித்த காரணிகளாக அமைந்தன. ஒரு புறத்தில் மிக அவசியமாகத் தேவைப்படும் இறக்குமதிகளைச் செய்வதற்கான பணத்தைத் தமது ஏற்றுமதி வருமானங்களினூடாக அவற்றால் பெற்றுக் கொள்ள முடியாதிருந்தது. மறுபுறத்தில், தொடர்ந்த அபிவிருத்திக்குத் தேவையான அதிகரித்த முதலீடுகளைச் செய்வதற்கு போதிய அளவினதாக உள்ளூர்ச் சேமிப்பு வீதம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள் நீண்ட காலத்தில் அபிவிருத்தியடைந்திருக்கவில்லை. இது வெளிநாட்டுக் கடன் பளுவையும், கடன் சேவைச் செலவினங்களையும் அதிகரிப்பதற்கு ஏதுவாக அமைந்தது.

மொத்தத் தேசிய உற்பத்தியின் விகிதாசாரமாக நீண்ட காலக் கடன் சேவை 1985ல் பாகிஸ்தானில் 3.2 சதவீதமாகவும், இலங்கையில் 4.1 சதவீதமாகவும் அமைந்திருந்தது. இந்நாடுகளுக்குத் தொடர்ச்சியாகப் பாயும் வெளிநாட்டு மூலதனம் பாரிய பிரச்சினைகளை ஏற்படுத்தக் கூடியதாகும். இவை உள்நாட்டுச் சேமிப்புகளை அகற்றி விடும் எனச் சிலரும், அவற்றை இவை தூண்டிவிடும் என வேறு சிலரும் கருதுகின்றனர். மூலதன வளமானது இறக்குமதிச் சேமிப்புகளை ஏற்படுத்தாததாக அல்லது ஏற்றுமதி வருமானங்களை ஏற்படுத்துவனவாக அமையாது போகுமென்றால் வெளிநாட்டு மூலதனத்தில் அதிகரித்த உட்பாய்ச்சல் நிலைத்து நிற்கக் கூடிய அபிவிருத்தியை ஏற்படுத்த முடியாது.

மேலும் வெளிநாட்டு மூலதனத்தின் அதிகரித்த உள்வரவு அதன் மீது தொடர்ச்சியாகத் தங்கியிருக்கக் கூடிய நிலையையும் ஏற்படுத்தக்கூடும். இது புதிய தேசிய இலட்சியங்களுக்கு முரண்பட்டதாகவும் அமையும். எனவே வங்காள தேசம், பாகிஸ்தான், இலங்கை போன்ற நாடுகளின் பொதுக் கொள்கைகள் உள்ளூர்ச் சேமிப்புகளைத் திரட்டுவதற்கு முக்கியத்துவமளிப்பது அவசியமானதாகும். உற்பத்தி விளைவுகளை அதிகரித்தல், குறிப்பாகச் செல்வந்த வகுப்பினரிடையே நுகர்வைக் கட்டுப்படுத்தல் என்பவை நிறுவனமைப்பு [illegible], பொருத்தமான பணவியல், இறையியல் கொள்கைகளைக் கடைப்பிடித்தல் என்பனவற்றில் கணிசமான வழிமுறையை நாடி நிற்கின்றது. இந் நாடுகளின் எதிர்கால வளர்ச்சிப் படிமுறையில் அத்தியாவசிய நுகர்வுப் பொருட்களையும், சேவைகளையும் உள்ளூர்ச் சந்தை விநியோகம் காணல் முக்கிய பங்கினை வகித்தல் வேண்டும்.

(44-ம் பக்கத் தொடர்ச்சி)

கைவசம் தரம் கொண்ட பொருட்களில் நாட்டம் காட்டுவர். தமது தேவைகளுக்கு நியாயமான ஆதாரவைப் பெற்றுக் கொள்ளக் கூடும் எதிர்காலத்தில் தொழில் விசேடங்களுக்கு செல்லக் கூடும் ஏற்ற வகையில் உற்பத்திப் பொருட்களின் ஆக்கச் செலவு எத்தகையதாக இருத்தல் வேண்டும் போன்றவற்றை இவர்கள் அறிந்திருக்கமாட்டார்கள். ஆகையால் மூலதனம் இட்டவர் இத்தகைய தகவல்களைப் பெறுவதற்கு உதவும் வகையில் அரச ஆதரவுடனான பயனுள்ள அமைப்பொன்று உருவாக்கப்படல் வேண்டும். கைக்கொள்ளப்பட வேண்டிய தொழில்நுட்பம், பயன்படுத்தப்பட வேண்டிய ஏனைய வசதிகள் என்பனவும் இத்தகைய தகவல்களிலேயே தங்கியுள்ளன. உள்ளமைப்பு சந்தைப்படுத்தல் உதவி என்பனவும் இதனுடன் சேர்க்கப்பட வேண்டியவையே.

உற்பத்திப் பொருட்களைப் பற்றியும் தொழிலறிவு, சந்தைப்படுத்தல் என்பவை பற்றியும் போதிய அறிவைப் பரப்புவதற்கு விசேட பயனுள்ள வழி சிறிய முயற்சிகட்கும் ஒழுங்குபடுத்தப்பட்ட ஆக்க முயற்சிகட்கும் தொடர்பினை ஏற்படுத்துவதாகும். இந்த முறை தாய்வான், கொரியா, அண்மையில் தாய்லாந்து ஆகிய நாடுகளில் வெற்றி கண்டுள்ளது. இலங்கையிலும் பாட்டா, சிங்கர் [illegible] போன்ற பெரிய நிறுவனங்கள் இத் துறையில் மேற்கொண்ட பரிசோதனைகள் வெற்றி கண்டுள்ளன. இத்தகைய தொடர்புகளை மேலும் விரிவுபடுத்துவதே இன்றைய தேவைப்பாடாகும்.

## முடிவுரை

பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்துவதற்கும் எதிர்கால வருமான மற்றும் தொழில் வாய்ப்புக்களை உருவாக்கு செய்யவும் தேவையான சிறு கைத்தொழில் அபிவிருத்தித் திட்டத்தின் முக்கியமான அம்சம் என்ற வகையில் இக் கட்டுரையின் ஜனசக்தி நிகழ்ச்சித் திட்டம் சிந்திக்கப்படவில்லை. இக் கட்டுரையில் குறிப்பிட்டுள்ள இத் திட்டத்தினை வெற்றி அடைய நிறைவேற்றச் செய்யும் வழிமுறைகளிலும், திட்டம் செயற்படுத்தப்படும் விதத்திலும் தங்கியிருக்கும்.

கைக்கொள்ளப்படும் வழிமுறைகளைப் பொறுத்து பணவீக்க மற்றும் சென்மதி நிலுவைப் பிரச்சினைகளை எதிர்கொள்ள நேரும். மேற் குறித்துரைக்கப்பட்ட மேலதிக நடவடிக்கைகள் பொருளாதாரத் தாக்கங்களை மட்டுப்படுத்த உதவக் கூடியன. எனினும் பணவீக்க மற்றும் சென்மதி நிலுவைப் பிரச்சினைகளை முற்றாகத் தவிர்ப்பது இயலாத காரியமாகும்.

பணவீக்கத்தைக் குறைந்த மட்டத்தில் வைத்திருப்பதற்கு மூலவளம் ஈடுகட்டப்படும் அதே வேளையில் ஜனசக்தி நிகழ்ச்சித் திட்டத்துக்கு தேவையான உண்மை வளங்கள் கிடைக்கப் பெறுவிட்டால் பணவீக்கமானது ஒரு பாதுகாப்பு அளவோடு அமையும் என்பதையும் மனதிலிருத்தல் வேண்டும். இந்த வகையில் குறுங் காலத்தில் கொடையாளிகளின் ஆதரவு முக்கியத்துவம் பெறுகின்றது. எதிர்பார்க்கப்படும் கொடை வள மாற்றங்கள் இடம்பெறாதவிடத்து மறுபக்கவின் துர்விளைவுகளான தட்டுப்பாடுகள், மேலதிக - சமநிலை விலைச் சுருக்கங்கள் என்பனவற்றை இல்லாதொழிப்பதற்கும் பணவீக்கம் கட்டாயமானதாகவும் தவிர்க்க முடியாததாகவும் அமையலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நம்பிக்கைக் கூறுகளின் (Unit Trusts) குறிக்கோள்களும் தொழிற்பாடுகளும்

எ. பி. பி. விஜயரத்ன

நம்பிக்கைக் கூறுகள் (Unit Trusts) [illegible]

பல் வேறு கம்பனிகளின் பங்குகளை அவர்களின் நலன் கருதி பல்வேறு வகையான பிணைகளில் முதலீடு செய்வதற்காக நம்பிக்கைக் கூறுகள் தாபிக்கப்படுகின்றன. பிணையானது ஆதனம் ஒன்றின் மீதான உரித்தைப் பிரதிநிதித்துவம் செய்யும் சட்டரீதியான பத்திர அடிப்படையில் வரையறுக்கப்படலாம். அதாவது, ஒரு சொத்தின் மீதான கோரிக்கைகளையும், அச்சொத்து எதிர் காலத்தில் உருவாக்கக் கூடிய பணப்பாய்ச்சலையும் பிரதிநிதித்துவம் செய்வதாகப் பிணை அமைகின்றது. பிணையானது முதலீட்டாளரின் உரித்துக்களையோ கோரிக்கைகளையோ வழமையாக எடுத்துக்காட்டும் ஆவணமாகும். பங்குகள், நிலையான வைப்புக்கள், ஏனைய வகையான சேமிப்புச் சான்றிதழ்கள் என்பவையே பிணை எனும் போது வழமையாக மனது ஞாபகத்திற்கு வருபவையாகும். ஒரு நிலையான வைப்பு அல்லது சேமிப்புச் சான்றிதழானது குறிப்பிட்ட காலத்தில் குறித்த தொகை கொண்ட முதலையும் அதற்குரிய வட்டியையும் பெற்றுக் கொள்ளும் உரித்துரிமையைக் காட்டும் ஒரு ஆவணமாகும். பங்குச்சான்றிதழானது, குறித்த கம்பனியில் ஒருவர் குறித்த தொகைப் பங்குகளை உடைமை கொண்டுள்ளார் என்பதையும் அதன் வாயிலாக பண இலாபப் பங்கீட்டுக் குறித்த விகிதாசாரத்தையும், கம்பனியின் பங்குதாரருக்கு வழங்கப்படும் ஏனைய சலுகைகளையும் கோரிக்கை செய்யும் உரித்துரிமையைக் காட்டும் ஆவணமாக அமைகின்றது. முதலீட்டுத் துறையில் சிறப்பியல்பு கொண்ட கம்பனி ஒன்றுக்கு நம்பிக்கைக் கூறுகள் குறித்த தொகைக் கட்டணத்தைச் செலுத்துகின்றன. தனியாட்களுக்குப் பங்குகளை விற்பனை செய்வதன் மூலம் பெற்றுக் கொள்ளப்படும் நம்பிக்கைக் கூறுகளின் நிதிகளை இந்த உயர் தொழிலர் முகாமைப்படுத்துவர்.

முதலீட்டாளருக்கு நம்பிக்கைக் கூறுகள் பல அனுகூலங்களை வழங்குகின்றன. சிறிய முதலீட்டாளரால் பாரிய பருமன் கொண்ட திரட்சிகளில் பிணைகளைக் கொள்வனவு செய்ய முடியாது இருக்கலாம். பல்வகைப்பட்ட பிணைகளைக் கொள்வனவு செய்வதற்கு அவர்கட்கு நம்பிக்கைக் கூறுகள் ஒரு சந்தர்ப்பத்தை வழங்குகின்றன. மேலும் அலகுகளைச் சந்தைப்படுத்தல் மிக எளிதானதாகும். அத்துடன் நம்பிக்கைக் கூறுகள் தாமே அலகுகளை மீளவும் வாங்குகின்றன. இதனால் நம்பிக்கைக் கூறுகளின் முதலீட்டாளருக்கு அதிகளவு திரவத்தன்மையை அவை வழங்குகின்றன. இறுதியாக முதலீட்டு முகாமையைப் பொறுத்த வரை உயர் தொழிலரின் முழுநேரப் பணியைப் பெற்றுக் கொள்ளக் கூடிய வாய்ப்பு இவற்றால் முதலீடு செய்வோருக்கு கிட்டுகின்றது. தனிப்பட்ட முதலீட்டாளரால் உருவாக்கப்படக் கூடியதை விட மேலான சாதனையை இதனால் இவர்களால் பெற்றுக் கொள்ள முடிகின்றது.

நம்பிக்கைக் கூறுகளின் பங்குகளைக் கொண்டுள்ள முதலீட்டாளருக்கு மூன்று வகையான வருமானங்கள் கிடைக்கின்றன. அவையாவன:-

1. பணப் பங்கிலாபம் அல்லது வட்டிப் பகிர்வுகள்

2. மூலதன ஆதாயப் பங்குகள்

3. மேற்கூறிய இரண்டு வகைகளிலும் உள்ளடக்கப்படாத [illegible] இவை மூலதன ஆதாயத்தாலும், பங்குதாரருக்குப் பகிரப்படாத பணப்பங்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லாபங்களும் பங்கு ஒன்றின் பெறுமதியில் ஏற்படும் நிகர சொத்து மாற்றத்தின் விளைவான வருமானங்களாகும்.

நம்பிக்கைக் கூறுகள் சேமிப்புகளை முதலீடுகளாக மாற்றஞ் செய்யும் தொடர்புச் சாதனங்களாகும். பல மக்களின் சேமிப்புகளை நம்பிக்கைக் கூறுகள் ஒன்றிணைத்து ஒரு பெரிய, பன்முகப்படுத்தப்பட்ட மூலதனத் திரளையாக அவற்றை மாற்றஞ் செய்கின்றன. ஆனால் தனிப்பட்ட எந்த முதலீட்டாளரும் நம்பிக்கைக் கூறின் குறிப்பிட்ட எச்சொத்தையும் உடைமை கொண்டவராக மாட்டார். அதற்கீடாக, நம்பிக்கைக் கூறுகளின் மொத்தப் பங்குகளின் குறித்த விகிதாசாரத்தைக் கொள்வனவு செய்த ஒருவர், அந்நம்பிக்கைக் கூறின் உடைமையாகவுள்ள சொத்துக்களினதும் அதன் பொறுப்புக்களினதும் அதே விகிதாசாரத்தை உடைமை கொண்டவராகக் காணப்படுவார்.

நம்பிக்கைக் கூறுகளை அடிப்படையில் இரண்டு வகைகளாக வகுக்கலாம். விரிவான இறுதிநிலை நம்பிக்கைக் கூறுகள், முற்றுத இறுதிநிலை நம்பிக்கைக் கூறுகள் என்பனவையே அவைகளாகும். விரிவான இறுதிநிலை நம்பிக்கைக் கூறில் வழங்கப்பட்ட பங்குகளின் எண்ணிக்கை வரையறுக்கப்பட்டிருப்பதில்லை. மேலும் இத்தகைய நம்பிக்கைக் கூறுகளின் பங்குகட்கும் பிணை மாற்றகம் விலைக் குறிப்பை வழங்குவதுமில்லை. ஆனால் நிதியத்தை முகாமைபுரிவோர் நம்பிக்கைக் கூறின் பங்குகளைக் கொண்டும் கொடுத்தும் வருவர்.

முதலீட்டாளர் தாம் விரும்பும் நேரங்களில் தமது பெயர்களிலுள்ள பங்குகளைப் பணமாக மாற்றிக் கொள்ளலாம். அன்றைய தினத்தில் நிலவும் 'நிகரச் சொத்துப் பெறுமதி'யின் அடிப்படையில் பணமாக மாற்றப்படக்கூடிய பங்குகளின் விலைகள் நிர்ணயிக்கப்படும். நம்பிக்கைகளின் மொத்தச் சொத்துப் பெறுமதியிலிருந்து அவற்றின் பொறுப்புக்களைக் கழித்துத் தொகையை அன்றைய தினத்தில் வெளிநிற்கும் பங்குகளின் எண்ணிக்கையால் வகுப்பதன் மூலம் குறித்த நாளின் 'ஒவ்வொரு பங்குக்குமான மொத்த ஆதனப் பெறுமதி' கணிக்கப்படுகின்றது. எனவே சொத்துக்களின் சந்தை விலைகளில் மாற்றம் ஏற்படும். ஒவ்வொரு தடவையும் ஒவ்வொரு பங்குக்குமான சொத்துப் பெறுமதிகளும் பலனடையும்.

வளர்ச்சி நிதிகள்

பாரிய மூலதன ஆதாயங்களை ஈட்டித்தரக்கூடியவை என எதிர்பார்க்கப்படும் பங்குத்துறைகள் சில இடர்களையும் தம்மகத்தே கொண்டனவாகக் காணப்படும். அத்தகைய கம்பனிகளில் முதலீடு செய்யப்படும் நிதிகளே வளர்ச்சி நிதிகளாம்.

வருமான நிதிகள்

உயர்வான பங்கிலாபங்களை வழங்கும் தொகுதிகள், உயர்வான வட்டிக் கூப்பன்களைக் கொண்ட பல்வேறு வடிவச் சேமிப்புகள் என்பவற்றில் முதலீடு செய்வது வருமான நிதிகளின் குறிக்கோளாக இருக்கும். அதிக மூலதன ஆதாய வாய்ப்புக்களை வழங்குமெனவும் அதே நேரத்தில் இடர்களை உள்ளடக்கியனவுமாகிய உயர் தொகுதிப் பங்குகளில் முதலீடுகளைச் செய்வதை இவ்வகைநிதிகள் தவிர்த்துக் கொள்கின்றன.

சமனாக்கப்பட்ட நிதிகள்

நன்கு நிறுவப்பட்ட கம்பனிகளின் பங்குகள் குறைந்த அளவிலான இடர்களை மட்டுமே கொண்டவையாக இருக்கும். இவற்றுக்கும் நிலையான வருமானங்களை ஈட்டித்தரும் பிணைகளுக்குமிடையே நன்கு பன்முகப்படுத்தப்பட்ட பிணைச் சேர்ப்பைத் தேர்ந்தெடுத்து இத்தகைய நிதிகள் முதலீடுகளைச் செய்கின்றன.

குறிப்பான கைத்தொழில்கட்கான நிதிகள்

வெளிப்படையாகக் குறிப்பிடப்படும் தேர்ந்தெடுக்கப்பட்ட கைத்தொழில்களான வங்கியியல், உடனலவியல், இயற்கை வளங்கள், காப்புறுதிக் கம்பனிகள் என்பவற்றில் இத்தகைய நிதிகள் முதலீடுகளைச் செய்கின்றன.

திரவத்தன்மை கொண்ட சொத்து நிதிகள்

இவற்றைப் பணச்சந்தை நம்பிக்கைக் கூறுகள் எனவும் கூறுவர். ஏனெனில் இத்தகைய நிதிகள் குறுகிய தவணை கொண்டனவும், குறைந்த இடரும்முறைக் கொண்டனவுமான பிணைகளில் மட்டுமே முதலீடுகளை மேற்கொள்கின்றன. இத்தகைய பிணைகளை வங்கிகளும் வேறுசில கம்பனிகளும் மட்டுமே வழங்குகின்றன. திறைசேரி உண்டியல்களும் இவ்வகையுட் சேர்க்கப்படக்கூடியனவையே.

முற்றுத இறுதிநிலை கொண்ட நம்பிக்கைக் கூறுகள் விரிவான இறுதிநிலை கொண்ட நம்பிக்கைக் கூறுகளிலிருந்து பலவகைகளில் வேறுபட்டவனவாக அமைகின்றன. முதலாவதாக ஆரம்ப வழங்கலின் பின்னர் இத்தகைய கூறுகள் மேலதிகப் பங்குகளை விற்பனவு செய்ய முடியாது. இந்த வகையில் இத்தகைய நம்பிக்கைக் கூறுகளின் அளவு வரையறுக்கப்பட்டதாக இருக்கும். இரண்டாவதாக, விரிவான நிலை நம்பிக்கைக் கூறுகளிற் காணப்படுவதைப்போல முற்றுத இறுதிநிலை நம்பிக்கைக் கூறுகளின் பங்குகளை அவற்றின் நிகரச் சொத்துப் பெறுமதியின் அடிப்படையில் மீளப் பெற்றுக் கொள்ள முடியாது. ஆனால் இவற்றுக்கீடாக முற்றுத இறுதிநிலை கொண்ட நம்பிக்கைக் கூறுகளின் பங்குகள் பிணை மாற்றகத்தில் விலைக் குறிப்பைப் பெற்றுக்கொள்கின்றன. இவ்விலைகள் அவற்றின் நிகரச் சொத்துப் பெறுமதிகளைவிட உயர்ந்தவை

(64-ம் பக்கம் பார்க்க)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரிசிகுற்றல் - தனியார் ஆலைச் சொந்தக்காரர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள்

எச். என். ஹேமச்சந்திரா

இலங்கையின் பிரதான உணவான அரிசி நாட்டில் உற்பத்தி செய்யப்படும் விவசாயப் பண்டங்களுட் பிரதானமானதாகும். கடந்த கால்நூற்றாண்டுகளில் நாட்டின் நெல் உற்பத்தி நான்கு மடங்குக்கு மேலாக அதிகரித்துள்ளது. 1952ல் 0.63 மில்லியன் மெற்றிக் தொன்னாக இருந்த உற்பத்தி 1986ல் 2.58 மில்லியன் மெற்றிக் தொன்னாக உயர்ந்துள்ளது. மிக அதிகளவு நிலங்களில், பிரதானமாக நீர்ப்பாசன வசதி கொண்ட நிலங்களில் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டமை இதற்கு காரணமாகும். திருந்திய பயிர்ச்செய்கை முறைகளை கடைப்பிடித்தமையும், தொகுதிப்படுத்தப்பட்ட உள்ளீடுகளைப் பயன்படுத்தி ஏக்கருக்கான சராசரி விளைவைப் பெருக்கியமையும் இதற்கான பிறிதொரு காரணமாகும். அண்மைய ஆண்டுகளில் சுய தேவைப் பூர்த்தியை நோக்கி நெற் செய்கை நகர்ந்து செல்வதால் எதிர்காலத்தில் அரிசி இறக்குமதி செய்யப்பட வேண்டிய தேவை இல்லாது போகவும் கூடும்.

நெற் செய்கை (உற்பத்தி) யின் உடனடி முன்னிலையாக இருப்பது நெல் குற்றும் கைத்தொழிலாகும். நெற்குவியத்திலிருந்து உமியை அகற்றுதல் முழுமையாகவோ அல்லது ஓரளவுமட்டுமோ அரிசியைத் தீட்டுதல் என்பவை இப்படி முறையில் அடக்கப்படுகின்றன. நெல் உற்பத்தியின் முழுமையான வாய்ப்பினைப் பெற்றுக் கொள்வதற்கு பல்லுறுதியுள்ள ஆலைக் கைத்தொழில் அவசியமானதாகும். நெல் உற்பத்தி அதிகரிப்புடன் இணைந்து நெல்லாலைகளும் விஸ்தரிக்கப்பட்டுள்ளதுடன் அவற்றில் பல மாறுதல்களும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. 1988 அளவில் நெல்லாலைத் தொழில் அநேகமான பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொள்ள நேர்ந்த போதிலும் நன்கு நிறுவப்பட்ட ஆலைகள் மிகக் குறைந்தளவு கஷ்டங்களை மட்டுமே எதிர்கொண்டவையாக இருந்தன.

1977 வரை நெற்கொள்வனவுக்கோ, இடநகர்த்தலுக்கோ தனியார் துறைக்கு அனுமதி வழங்கப்படவில்லை. நெல் சந்தைப்படுத்தும் சபை மட்டுமே நெற் கொள்வனவுக்கான ஆற்றலைப் பெற்றதாக இருந்தது. இச் சபையால் கொள்வனவு செய்யப்பட்ட நெல்லின் ஒரு பகுதியானது சொந்த ஆலைகளில் குற்றப்பட்டது. எஞ்சியவை பங்கீட்டடிப்படையில் தனியார் ஆலைகட்கு வழங்கப்பட்டன. இவற்றுக்கு நெல் குற்றுவதற்கும் இடநகர்த்துவதற்கும் கட்டணம் வழங்கப்பட்டது. சபையின் ஆலைகளிலும் தனியார் ஆலைகளிலும் குற்றப்பட்ட நெல் உணவு ஆணையாளரிடம் ஒப்படைக்கப்பட்டது. அவர் பங்கீட்டு அடிப்படையில் பகிர்ந்தளிப்பதற்காக அதனை கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கி வந்தார்.

1977ன் பின்னர் தாராள பொருளாதாரக் கொள்கைகள் அறிமுகஞ் செய்யப்பட்ட பின்னர் இம்முறையில் மாற்றம் ஏற்படத் தொடங்கியது. 1978 ஜனவரியில் குடித்தொகையின் ஏறத்தாழ அரைப்பங்கினருக்கு வழங்கப்பட்டு வந்த அரிசிப்பங்கீடு நிறுத்தப்பட்டது. 1979 செப்டம்பரில் அரிசிப் பங்கீட்டு முறைக்குப் பதிலாக உணவு முத்திரைத் திட்டம் கொண்டு வரப்பட்டது. இவை சபையின் நெல் கொள்வனவிலும் அரிசி உற்பத்தியிலும் பாரிய வீழ்ச்சியை ஏற்படுத்தின. அத்துடன் உணவு ஆணையாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கிய அரிசியின் அளவும் குன்றவுற ஏதுவாயிற்று. சாதாரணமாக நாட்டில் மொத்த நெல் உற்பத்தியின் 30 சதவீதத்தை 1978ல் சபை கொள்வனவு செய்தது. இது 1981ல் 6 சதவீதமாக வீழ்ச்சியுற்றது. உணவு ஆணையாளர் 1978ல் 573000 மெற்றிக் தொன் அரிசியை கூட்டுறவு சங்கங்களுக்கு வழங்கி இருந்தார். இது 1981ல் 73 சதவீதத்தால் குறைவுற்று 152000 மெற்றிக் தொன் மட்டுமே வழங்கப்பட்டது.

இதனால் அரிசிக்கு வெளிச் சந்தை ஒன்று உருவாகலாயிற்று. இச் சந்தை 1970 களின் இறுதிப் பகுதியிலும் 1980 களின் ஆரம்பத்திலும் வேகமாக விரிவடைந்தது. மறுபுறத்தில் நெல் குற்றும் கைத்தொழிலைத் தொடங்குமாறு அரசாங்கம் தனியார் துறை முனைவோருக்கு அழைப்பு விடுத்தது. அத்துடன் நிறுவன ரீதியான கடன் வசதிகள் வரி விடுமுறைகள் போன்ற ஊக்குவிப்புகளையும் வழங்கியது. மேலும் இக்கைத்தொழில் வேறு பல அனுகூலங்களையும் கொண்டதாக இருந்தது. மிகத் தாழ்வான தொழினுட்பத்துடன் இக் கைத்தொழிலை மேற்கொள்ளலாம். பல்வேறு அளவு ஆக்கக் கூறுகளை கொண்டதாக இருப்பதற்கு இக் கைத்தொழில் பொருத்தமானது. தாராளக் கொள்கைகளின் பின்னர் இயந்திரங்களையும் உதிரிப்பாகங்களையும் இலகுவாக இறக்குமதி செய்யக்கூடியதாக இருந்தது. இக்கைத் தொழிலுக்குத் தேவையான மூலப் பொருள் பரவலாக எங்கும் கிடைக்கக் கூடியதாக உள்ளது. உற்பத்தி செய்யப்பட்ட அரிசிக்கு உடனடி சந்தைப்படுத்தல் வசதியும் காணப்படுகின்றன. இத்தகைய அனுகூலங்களால் கவரப்பட்ட தனியார் துறை முனைவோர் பலர் இக் கைத் தொழிலில் ஈடுபடலாயினர். இச் சூழலில் நெல் குற்றும் தொழிலிலும், அரிசி வர்த்தகத்திலும் தனியார் துறையின்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடுமாறு 1970 களின் பிற்பகுதியில் வெகு வேகமாக அதிகரித்தது.

நாட்டின் மொத்த நெல் உற்பத்தியில் விதை நெல் தேவைகட்கும் அறுவடைக்குப் பிந்திய இழப்புகட்குமாக 20 சத வீதம் ஒதுக்கப்பட வேண்டுமென மதிப்பிடப்பட்டுள்ளது. எஞ்சும் 80 சத வீதம் அரிசியாக குற்றப்படுவதற்கு கிடைக்கின்றது. அரிசியாக குற்றப்படுவதற்கான நெல்லில் 75 சதவீதம் அவித்தரிசியாகவும் 25 சதவீதம் பச்சை அரிசியாகவும் குற்றப்படுகின்றது. நெல்லாலைகள் நாடெங்கும் பரந்து காணப்பட்ட போதிலும் நெல் உற்பத்தி அதிகமாக உள்ள இடங்களில் இவை அதிகமாக குவிந்திருப்பதையும் காணலாம்.

இலங்கையின் உள்ள நெல்லாலைகளை இரண்டு வகையாக வகுக்கலாம். வர்த்தக ரீதியான ஆலைகள் ஒரு வகையிலும் கிராமிய ஆலைகள் அடுத்த வகையிலும் அடங்குவனவாகும். வர்த்தக ரீதியான ஆலைகள் ஒப்பீட்டளவில் பெரியனவையாகும். ஒரு மணித்தியாலத்தில் 0.7 மெற்றிக் தொன் நெல்லைக் குற்றும் தகைமையை அவை கொண்டவை. ஏறத்தாழ 1600 இத்தகைய ஆலைகள் காணப்படுகின்றன. இவற்றின் உடைமையாளரை மூன்று பிரிவினுள் வகுக்கலாம். அவையாவன: நெல் சந்தைப்படுத்தும் சபை (10%), கூட்டுறவுச் சங்கங்கள் (5%) தனியார் துறை (85%).

சபையின் ஆலைகள் விவசாயிகளிடமிருந்து நேரடியாகச் சபையால் கொள்வனவு செய்யப்பட்ட நெல்லை மட்டுமன்றி கூட்டுறவுச் சங்கங்களாலும் விவசாய சேவை நிலையங்களாலும் கொள்வனவு செய்யப்பட்ட நெல்லையும் பதனிடுகின்றன. குற்றப்படுவதற்காகக் கிடைக்கக் கூடிய நாட்டின் மொத்த நெல் உற்பத்தியில் 8 சதவீதமானவை மட்டுமே சபையின் ஆலைகளில் குற்றப்படுகின்றன.

செயற்பாட்டு வகையைப் பொறுத்தவரை தனியார் துறையினராலும் கூட்டுறவுச் சங்கங்களாலும் உரிமை கொள்ளப்பட்ட ஆலைகளை இரண்டாக வகுக்கலாம். பங்கீட்டைக் கொண்ட ஆலைகள், அவ்வாறில்லாத ஆலைகள் என்பனவே இவ்விரு பிரிவுகளுமாகும்.

நாட்டில் ஏறத்தாழ 1452 பங்கீடற்ற ஆலைகள் காணப்படுகின்றன. ஆனால் பங்கீட்டைப் பெற்ற ஆலைகளுட் பெரும்பாலானவை பங்கீட்டடிப்படையில் வழங்கப்படும் நெல்லுக்கு மேலதிகமாக பங்கீடற்ற நெல்லையுங் குற்றி வருகின்றன. பங்கீடற்ற ஆலைகள் விவசாயிகளிடமிருந்து நேரடியாகவோ நெல் வியாபாரிகளிடமிருந்தோ அல்லது நெல் சேகரிக்கும் முகவர்களிடமிருந்தோ நெல்லைப் பெற்றுக் கொள்கின்றன. குற்றப்படுவதற்காகக் கிடைக்கும் மொத்த நெல்லில் 75 சத வீதமானவை இம்முறையின் கீழ் பதனிடப்படுகின்றன. அவர்களின் உற்பத்தியின் பெரும் பகுதி கொழும்பிலுள்ள மொத்த விற்பனைச் சந்தைக்கும் சிறு பகுதி மாகாணங்களிலுள்ள மொத்த விற்பனைச் சந்தைக்கும் சில சமயங்களில் கூட்டுறவுச் சங்கங்கட்கும் விற்பனை செய்யப்படுகின்றன. எனினும் சிறிய ஆலைகளால் உற்பத்தி செய்யப்படும் அரிசி சிறிய அளவிலான மொத்த விற்பனைச் சந்தைக்கும் சில இடங்களில் காணப்படும் விற்பனை நிலையங்கட்கும், சில்லறை வியாபாரிகட்கும் விற்பனை செய்யப்படுகின்றது.

ஏறத்தாழ 160 பங்கீடு கொண்ட ஆலைகள் தொழிற்பட்டு வருகின்றன. இவை சபையின் களஞ்சியங்களிலிருந்து நெல்லைப் பெற்று அரிசியாக்கி அவற்றை உணவு ஆணையாளரின் களஞ்சியசாலைகட்கோ சில சமயங்களில் சபையின் நெல் களஞ்சியத்துக்கோ வழங்குகின்றன. ஆலையாளர்களுக்கு நெல் குற்றும் கட்டணத்தையும் இடைநகர்த்தல் கட்டணத்தையும் சபை செலுத்தி வருகின்றது. பங்கீட்டு முறையில் குற்றுவதற்காக கிடைக்கும் நெல்லின் நான்கு சத வீதத்தை இவை தற்போது பதனிட்டு வருகின்றன. முன்னர் கூறியவாறு இவை பங்கீட்டு அடிப்படையில் வழங்கப்படும் நெல்லுக்கு மேலதிகமாக அவ்வாறற்ற நெல்லையும் குற்றி வருகின்றன.

தனியாரால் உடைமை கொள்ளப்பட்ட (ஒரே ஒரு உமி போக்கும் பொறியை மட்டும் கொண்ட) பாரம்பரிய சிறிய அளவிலான ஆலைகளே கிராம ஆலைகளாகும். நெல் உற்பத்தியாகும் பிரதேசங்களில் உள்ள கிராமங்களில் இவை அமைந்துள்ளன. 5000 க்கும் மேற்பட்ட ஆலைகள் நாட்டில் காணப்படுகின்றன. இவற்றின் சராசரி இயலளவு மணிக்கு 0.2 மெற்றிக் தொன் ஆகும். விவசாயிகளாலும், கிராமவாசிகளாலும் கொண்டு வரப்படும் நெல்லையே இவை பிரதானமாகக் குற்றிக் கொடுக்கின்றன. 21 கிலோ கிராம் கொண்ட ஒரு புசல் நெல்லைக் குற்றுவதற்கு ஏறத்தாழ 8 ரூபா கட்டணத்தை அறவிடுகின்றன. குற்றப்படுவதற்காக நாட்டில் கிடைக்கும் நெல்லின் ஏறத்தாழ 20 சத வீதத்தை இவை பதனிடுகின்றன.

தனியார்துறை ஆலையாளர்களால் எதிர் கொள்ளப்படும் பெரிய பிரச்சினைகளை அளவிடும் எத்தனமாக இக் கட்டுரை அமைகின்றது. தனியார் துறையில் உள்ள ஒவ்வொரு வகை ஆலையாளரும் வெவ்வேறு வகையான பிரச்சினைகளை எதிர்கொண்ட போதும் அவற்றுள் சில அனைவர்களாலும் எதிர்கொள்ளப்படுவனவாக உள்ளன. பொதுவாக பிரச்சினைகளுட் சில அவர்களை வெவ்வேறு வழிகளில் பாதித்து வருகின்றன. பங்கீட்டைப் பெற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறிய ஆலையாளர்களின் குறிப்பான பிரச்சினைகளுட் பல மூலப்பொருள் (நெல்) சந்தையுடனும் அரிசி சந்தையுடனும் தொடர்புபட்டவையாக உள்ளன.

நெல்லைக் கொள்வனவு செய்து களஞ்சியப்படுத்தி வைப்பதற்கு போதியளவு தொழிற்படு மூலதனம் கொண்டிராமை இத்தகையோரால் எதிர்கொள்ளப்படும் முக்கிய பிரச்சினைகளில் ஒன்றாகும். அறுவடையைத் தொடர்ந்து நெல்லினதும் அரிசியினதும் விலை வீழ்ச்சியுறும் போதகாலத்தின் பின்னர் (வழமையாக ஆண்டின் இறுதி மாதங்களில்) விலைகள் அதிகரிக்கும். போதியளவு தொழிற்படு மூலதனத்தைக் கொண்டுள்ள ஆலையாளர் அறுவடையைத் தொடர்ந்து பெருந்தொகையான நெல்லை மலிவான விலையில் கொள்வனவு செய்து அதனை ஆண்டு முழுவதிலும் பகுத்திடுவர். அரிசியை (போகமற்ற காலத்தில்) உயர்ந்த விலைக்கு விற்பதன் மூலம் அவர்கள் நல்ல இலாபத்தை ஈட்டிக் கொள்கின்றனர். விலை குறைவாகக் காணப்படும் வேளையில் பெருந்தொகையாக நெல்லைக் கொள்வனவு செய்வதற்கு பெரும்பான்மையான ஆலையாளரிடம் போதிய பணவசதியோ கடன் வசதிகளோ கிடையாது. இதனால் போகமற்ற காலத்தில் உயர்ந்த வருமானங்களை ஈட்ட முடிவதில்லை. நெல்லின் விலை உயர்வாக இருப்பதினாலும் இத்தகைய ஆலையாளருட் சிலர் ஆண்டின் சில மாதங்களுக்கு தமது ஆலையை மூடி விடுகின்றனர். மூலப்பொருளை போதியளவில் பெற்றுக் கொள்ள முடியாதிருப்பது இவர்கள் எதிர் கொள்ளும் மற்றுமொரு பிரச்சினையாகும். நாளொன்றுக்கு 8 மணித்தியாலமும், மாதமொன்றுக்கு 22 நாட்களும் தொழிற்பாடு ஆண்டின் 12 மாதங்களிலும் நெல் குற்றப்படுகின்றது என அனுமானித்தால் வர்த்தக ரீதியான பதனிடுவதற்குக் கிடைக்கக் கூடிய நெல் இத்தகைய ஆலைகளின் இயலளவில் 70 சத வீதத்தை பூர்த்தி செய்ய மட்டுமே போதுமானதாக இருக்கும். அதாவது நெல் கிடைக்காமையால் ஆண்டின் 3½ மாதங்களுக்கு ஆலைகள் மூடப்பட்டிருத்தல் வேண்டும். இவ்வாறு மூடப்பட்டிருக்கும் காலத்தில் வருமானம் எதுவும் பெறாது மேந்தலைச் செலவுகளிற் சிலவற்றை இறுக்க வேண்டியும் இருக்கும்.

ஆலைகளின் எண்ணிக்கையும் இயலளவும், 1970 களின் பிற்பகுதியில், நெல் உற்பத்தியை விட அதிகமாக அதிகரித்ததனாலேயே இந்நிலை தோன்றியுள்ளது. 1978 இல் 875 ஆகக் காணப்பட்ட ஆலைகளின் எண்ணிக்கை 1987ல் 1600 ஆக அதிகரித்தது. இது 83 சதவீத அதிகரிப்பாகும். ஆனால் நெல் உற்பத்தி 1978இல் 1.9 மில்லியன் மெற்றிக் தொன்னிலிருந்து 1987 இல் 2.6 மெற்றிக் தொன்னாக மட்டுமே அதிகரித்தது. இது 37 சதவீத வளர்ச்சியாகும்.

நாட்டின் பலபகுதிகளிலிருந்தும் சந்தையில் கிடைக்கும் நெல் சிறந்த தரத்தைக் கொண்டதல்ல. இது கலக்கப்பட்ட ரகத்தைச் சேர்ந்தது. 5 முதல் 10 சதவீதம் வரையிலான முதிர்ச்சியடையாத 'சப்பி'யை உள்ளடக்கியதுடன், சிறுகற்கள் போன்றவையும் இதனுடன் கலந்திருக்க காணப்படும். தேவையான அளவான 14 சதவீதத்துக்கு மேற்பட்ட ஈரலிப்பையும் கொண்டதாக இருக்கும்.

உயர்ந்த ஈரலிப்புத் தன்மை கொண்ட நெல்லைக் களஞ்சியப்படுத்தி வைத்தால் அதில் ஒட்டுண்ணிகள் தோன்றும். எனவே அதன் ஒரு பகுதி சேதமாக்கப்பட்டு விடும். அத்துடன் இதிலிருந்து பெறப்படும் அரிசியும் நிறமிழந்து காணப்படும். அழுக்குகளை பல்வேறு வகையான முதிர்ச்சியடையாத நெல்லின் கலவையையுங் கொண்ட நெல்லைப் பதனிடும் போது குறைந்த விகிதாசாரமான முழு அரிசியை மட்டுமே ஆலையாளரால் பெறக்கூடியதாக இருக்கும். உடைந்த அல்லது சேதப்படுத்தப்பட்ட அரிசியின் விகிதாசாரம் அதிகமாகக் காணப்படும். அநேக சந்தர்ப்பங்களில் ஆலையாளரால் இந்த அரிசியைத் தரப்படுத்த முடியாது போய்விடும். எனவே இது தரமற்ற அரிசி என்ற வகையைச் சேர்ந்ததாகி விடும்.

அரிசிக்கான மொத்த விற்பனை சந்தையில் கமிஷன் வியாபாரிகள் காணப்படுகின்றனர். புறக்கோட்டையில் உள்ள கமிஷன் வியாபாரிகள் (80 கிலோகிராம் கொண்ட) ஒரு மூடை அரிசிக்கு அழுமையாக ஆலையாளரிடமிருந்து 10 ரூபா தரகுப் பணமாக அறவிடுகின்றனர். விற்பனைப் பெறுமதியின் எஞ்சிய தொகையே ஆலையாளர்க்கு வழங்கப்படுகின்றது. மொத்த வியாபாரியின், கமிஷன் வியாபாரியின் வர்த்தகரின் கடையில் அரிசியை ஒப்படைத்தவுடன் இப்பெறுமதியின் 75 சதவீதம் செலுத்தப்படுகின்றது. எஞ்சிய தொகை அரிசி விற்பனையான பின்னர் ஒரு கிழமை அல்லது 10 நாட்களின் பின்னரே கொடுக்கப்படும். அரிசியின் விற்பனை விலையை கருத்திற் கொண்டு மொத்த விற்பனைப் பெறுமானத்தைக் கணித்த பின்னரே இப்பணம் செலுத்தப்படுகின்றது. அநேக சந்தர்ப்பங்களில் மொத்த விற்பனைச் சந்தையில் தொழிற்படும் கமிஷன் முகவர்கள், வர்த்தகர்கள் ஆலையாளர்களுக்கு உண்மையான சந்தை விலையை தெரிவிப்பதில்லை, தாம் கூறும் குறைந்த விலைகளே அரிசியின் சந்தை விலை என ஆலையாளர்களை நம்பச் செய்கின்றனர். அவர்களும் வேறு வழியின்றி அவ்விலைக்கு அரிசியை விற்க வேண்டி நேர்கின்றது. உண்மையில் ஆலையாளரைச் சென்றடைய வேண்டிய இந்த அவு கமிஷன் முகவர், வியாபாரியைச் சென்றடைகின்றது. பொதுவாக விற்பனை வருமானத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சதவீதத்துக்கும் சமமானதாக இருக்குமாறு அமைந்திருக்கும்.

பயிரிட்டு ஆலையாளர்களால் எதிர்கொள்ளப்படும் பிரச்சினைகளுட் பல நெல் சந்தைப்படுத்தும் சபையுடன் தொடர்பானவையாகக் காணப்படுகின்றன. உதாரணமாக, சபை செலுத்தும் நெல் குற்றும் கட்டணம், இடநகர்த்தும் கட்டணம் என்பவை போதிய அளவினவானதாக இல்லாமையால் ஆலையாளர் இதனால் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். 100 கிலோ கிராம் எடை கொண்ட நெல்லை குத்தரிசியாக பதனிடுவதற்கு 36 ரூபாவும் பச்சை அரிசியாகப் பதனிடுவதற்கு நெல் சந்தைப்படுத்தும் சபையால் வழங்கப்படுகின்றது. பெரும்பான்மையான ஆலையாளர்கள் இக்கட்டணங்களின் வாயிலாக நியாயமான இலாபத்தை பெறமுடியாதுள்ளனர். குறிப்பாக வங்கிக் கடன்களை பெற்று புதிய ஆலைகளை அமைத்த பங்கீட்டைக் கொண்ட ஆலையாளர்கள் கடன் தவணைப் பணத்தையும் வட்டியையும் செலுத்திய பின்னர் நியாயமான இலாபத்தை பெற முடியாதுள்ளனர்.

சபையின் களஞ்சியங்களிலிருந்து ஆலைக்கு நெல்லையும், ஆலையிலிருந்து உணவு ஆணையாளரின் களஞ்சியங்கட்கு அரிசியையும் இடமாற்றுவதற்காகச் செலுத்தப்பட்டு வரும் கட்டணமும் வெளிச்சந்தையில் நிலவும் போக்குவரத்துக் கட்டணங்களை விடக் குறைவானவையாகவே உள்ளன. ஆலையாளர்கள் குறிப்பாகச் சொந்த வாகனங்களைக் கொண்டிராதோர், நெல், அரிசி என்பவற்றை இடநகர்த்துவதனால் நட்டங்களையே ஈட்டி வருகின்றனர்.

சபையின் களஞ்சியங்களில் போதியளவு நெல் கையிருப்பில் இல்லாதிருத்தல் நாட்டின் சில பகுதிகளில் ஆலைகளின் சமமான தொழிற்பாட்டுக்குத் தடையாக உள்ளது. நெல் சந்தைப்படுத்தும் சபையின் கொள்வனவு நடவடிக்கைகள் குறைந்த அளவில் மட்டுமே தொழிற்படுத்தப்பட்டமையால் சபையின் களஞ்சியங்களில் அண்மைக் காலத்தில் இப்பகுதிகளில் இருப்பு கணிசமாக குறைவடைந்தது. குறிப்பாக கிழக்கு மாகாணத்தில் இந்நிலை அண்மைய ஆண்டுகளில் நிலவி வருகின்றது. இத்தகைய களஞ்சியங்களிருந்து நெல்லை பெற்று வந்த பங்கீடு கொண்ட ஆலையாளர் பதனிடுவதற்கு நெல் கிடைக்கப்பெறாத பிரச்சினையை எதிர் கொண்டு வருகின்றனர். மேலதிக இடநகர்த்தல் கட்டணங்களைச் செலுத்த வேண்டும் என்பதால் இந்த ஆலையாளர்கட்குத் தூர இடங்களிலுள்ள களஞ்சியங்களிலிருந்து நெல்லை வழங்குவதற்கு சபை தயங்கியது. மறுபுறத்தில் போக்குவரத்தால் ஏற்படும் நட்டங்கள் அதிகரித்துவிடும் என்பதனால் ஆலையாளர்களும் தூர இடங்களிலிருந்து நெல்லை பெற்றுக் கொள்வதற்குத் தயங்கினர். எனவே பங்கீடற்ற நெல் குற்றும் வேலையை மட்டும் மேற்கொள்ள அல்லது ஆலையை மூடிவிட இவர்கள் நிர்ப்பந்திக்கப்பட்டனர்.

சபையின் களஞ்சியங்களில் கிடைக்கும் மூலப்பொருட்களின் குறைவான தரம் இந்த ஆலையாளர்களின் மற்றுமொரு பிரச்சினையாக காணப்பட்டது. ஈரலிப்பு, அழுக்குகள் பல்வேறு இனங்கள் கலக்கப்படுதல், சேதம், நிறமிழத்தல் போன்றவற்றில் நிர்ணயிக்கப்பட்ட தரம் கொண்ட நெல்லை மட்டுமே சபையின் களஞ்சியங்கள் கொள்வனவு செய்யவேண்டும் என்ற விதி காணப்பட்ட போதிலும் கொள்வனவு நிலையங்களில் காணப்படும் முறைகேடுகளின் விளைவாக அநேக சந்தர்ப்பங்களில் குறைந்த தரமுள்ள நெல்லையே சபை கொள்வனவு செய்துள்ளது. இத்தகைய குறைந்த தரம் கொண்ட நெல் வழங்கப்படும் ஆலையாளர் தேவையான தரம் கொண்ட அரிசியை உற்பத்தி செய்வதில் கஷ்டங்களை எதிர்நோக்குகின்றனர். அரிசி குறைந்த தரம் கொண்டதாக இல்லாதவிடத்து அது உணவு ஆணையாளரின் களஞ்சியங்களால் (அல்லது சபையின் களஞ்சியங்களால்) ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை. இத்தகைய சந்தர்ப்பங்களில் இந்த அரிசியை வெளிச்சந்தையில் விற்பனை செய்து சபைக்கு பங்கீட்டு நெல்லின் பெறுமானத்தைச் செலுத்துவதற்கு அவர் நிர்ப்பந்திக்கப்படுகின்றனர். இதனால் சிரமங்கள் ஏற்படுவது மட்டுமின்றி சில வேளைகளில் நட்டங்களையும் கூறவேண்டி நேரிடுகின்றது. சில சமயங்களில் தேவைப்படுத்தப்பட்ட விகிதாசார (66%) அரிசியை உற்பத்தி செய்யவும் இவர்களால் இயலாது போனதுடன் பல சந்தர்ப்பங்களில் அரிசியின் தரமும் மிகமோசமானதாக இருக்கின்றது.

ஆலையாளர் நெல்லை பெற்றுக் கொள்ள வேண்டிய சபையின் களஞ்சியங்களிலும் அரிசியை ஒப்படைக்கவேண்டிய உணவு ஆணையாளரின் களஞ்சியங்களிலும் ஊழலும் முறைகேடுகளும் பெருமளவில் இடம் பெற்றுள்ளமையை அறியக்கூடியதாகவுள்ளது. இரு இடங்களிலும் பல்வேறு கட்டங்களில் இலஞ்சம் என்ற வடிவில் ஊழல் காணப்பட்டது. இத்தகைய முறைகேடுகளால் ஆலையாளருக்கு குறைந்த தரமும் குறை எடையும் கொண்ட நெல் சபையின் களஞ்சியங்களிலிருந்து வழங்கப்படுகின்றது. உணவு ஆணையாளரின் களஞ்சியங்கள் அரிசியை உரிய காலத்தில் ஏற்காது தாமதம் விளைவிக்கின்றன. தேவையற்ற காரணங்கட்காக சில சமயங்களில் அரிசி நிராகரிக்கப்படுவதுமுண்டு. இந்த முறைகேடுகளிலிருந்து ஆலையாளர்களைக் காப்பதற்கு ஒழுங்கு விதிகள் காணப்பட்ட போதிலும் நடைமுறையில் தற்போது காணப்படும் முறைகளை உடைக்கக்கூடிய நிலையில் அவர்கள் இல்லை.

இந்த குறிப்பான பிரச்சினைகட்கு மேலதிகமாக பங்கீட்டைப் பெற்றவர்களும் அல்லாதவர்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனேகமான ஆலையாளர்கள் இக் கைத்தொழிலின் இலாப வாய்ப்பை பாதிக்கக் கூடிய பொதுவான சில பிரச்சினைகளையும் எதிர்கொள்கின்றனர்.

நெற்களஞ்சியம், ஊறவைக்கும் - கொதிக்க வைக்கும் தொட்டிகள், உலரவைக்கும் முற்றம் போன்ற உள்வீட்டு வசதிகளின் இயல்வளவுகள் போதாதிருக்குமாயின் பொறிகளின் பூரண இயலளவை ஆலையாளர்களால் பயன்படுத்த முடியாது போய்விடுவதனை இதற்கு உதாரணமாகக் காட்டலாம். நிறுவன ரீதியான கடன்திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட ஆலைகளுள் 75 சதவீதத்துக்கு மேற்பட்டவை இந்த வகையைச் சேர்ந்தனவாகவே காணப்படுகின்றன. உள்வீட்டு வசதிகள் போதியளவில் காணப்படாமை காரணமாக தொழிற்படும் பருவகாலங்களில் பாரிய வேலைச்சுமையை மேற்கொள்ள முடியாமல் இவர்களின் நடவடிக்கைகள் தடைப்படுகின்றன.

பொருத்தமில்லாத தொழில் நுட்பம், பழைய இயந்திரங்கள் பயன்படுத்தப்படல் என்பவை பிரச்சினைகளை உருவாக்கும் பிறிதொரு துறையாக உள்ளன. வர்த்தக ரீதியான மொத்த ஆலைகளுள் 71 சதவீதம் அல்லது 1,140 ஆலைகள் உமியை நீக்கும் யந்திரங்களை மட்டும் கொண்டவையாக, பாரம்பரிய ஆலைகளாகக் காணப்படுகின்றன. ஏனைய 29 வீதமானவை அல்லது 470 ஆலைகள் நவீனமானவை அல்லது ஓரளவு நவீனமானவை என்ற வகையில் அடக்கப்படக் கூடியவை. இவற்றுள் முதல் வகையைச் சேர்ந்த ஆலைகளுட் சில இடைத்தர மட்டத்திற் செயற்பட்டு மொத்த விற்பனைச் சந்தைகளுக்காக உற்பத்தியை மேற்கொண்டு வருகின்றன. உருளைகள், தவிட்டுத் துப்புரவு செய்யும் சாதனங்கள்போன்ற, செலவு குறைந்த சாதாரண வழிமுறைகள் மூலம் இவற்றை நவீனமாக்கக் கூடியதாக இருக்கும். குறைந்த செலவில் நவீனப்




படுத்தல் உற்பத்திகளின் தரத்தை உயர்த்துவதுடன் அதன் வழி இந்த ஆலைகளின் இலாப அளவுகளையும் அதிகரிக்க உதவும்.

கணிசமான ஆலைகள் மிகப் பழமையானவை. அவற்றின் வினைதிறனும் உற்பத்தி செய்யப்படும் பொருட்களின் தரமும் குறைந்த அளவினதாகவே காணப்படுகின்றது. வினைதிறனையும் உற்பத்திப் பொருட்களின் தரத்தையும் அதன் வழி ஆலைகளின் இலாபத்தன்மையையும் பெருக்குவதற்கு இந்த ஆலைகளில் புதிய பொறிகளைப் பொருத்துதல் வேண்டும். (சில பழைய ஆலைகள் வாடகைக்கு விடப்பட்டுள்ளன. இவற்றை நடத்துவோர் இயந்திரங்களை திருத்துவதோ அல்லது புதிய புதிய இயந்திரங்களை அமைப்பதோ ஆலை உரிமையாளரால் மேற்கொள்ளப்பட வேண்டிய பணியெனக் கூறுகின்றனர். ஆனால் ஆலை உரிமையாளர் ஏதோ காரணங்கட்காக இவற்றை புறக்கணிக்கின்றனர்.

முதலீட்டு மூலதனப் பற்றாக்குறை மற்றுமொரு பொதுவான குறைப்பாடாகும். ஆலைத்தொழிலில் வெற்றியை எதிர்நோக்கிய சிலர் இயந்திரங்களின் இயல்வளவுகளை அதிகரிக்கவோ உள்வீட்டு வசதிகளைப் பெருக்கவோ விரும்புகின்றனர். வேறுசிலர் பழைய இயந்திரங்களை அகற்றி அவற்றினிடத்தில் புதியவற்றைப் பொருத்தவும் அவர்கள் விரும்புகின்றனர். வேறொரு பாலார் தமது உற்பத்தி அளவுக்கும் சந்தைக்கும் இசைவான பொருத்தமுள்ள தொழில்நுட்பங்களை அறிமுகஞ் செய்யவும் விரும்புகின்றனர். ஆனால் இவர்களிடம் இவற்றைச் செய்வதற்கு சொந்த மூலதனம் இருப்பதில்லை. இவர்களுள் சிலர் வங்கிக் கடன்களைப் பெறுவதற்கு முயற்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்வதில்லை. வேறுசிலர் பெற்றுக்கொள்ளக் கூடிய ஆக்ககூடிய கடன்களை ஏற்கனவே பெற்றுவிட்டதனால் மேற்கொண்டும் கடன்களைப் பெற்றுக் கொள்ள இயலாதிருக்கின்றனர். இன்னுமொரு வகை ஆலையாளர்கள் கடன்களைப் பெறும் தகைமை கொண்டவர்களாக இருந்த போதிலும் ஏதேதோ காரணங்கட்காக மேலும் கடன்களைப் பெற்றுக் கொள்ள விரும்புவதில்லை.

திறனற்ற முகாமை திட்டமிடல் என்பவற்றால் உருவாகும் பிரச்சினைகளை மூன்று வகையினதாக வகுக்கலாம்.

(1) உற்பத்தி, சந்தைப்படுத்தல் நடைமுறைகளை நெருக்கமாக மேற்பார்வையிட்டால் மட்டுமே அரிசி ஆலைத் தொழிலில் வெற்றி காணக் கூடிய இயல்பை அக் கைத் தொழில் தனது இயல்பாக கொண்டுள்ளது. தமது கைத்தொழிற் செயற்பாடுகளை பல நெல்லாலை உரிமையாளர்களால் நெருக்கமாக மேற்பார்வையிட முடியாதிருப்பது அவர்களின் தோல்விக்கான பிரதான காரணங்களுள் ஒன்றாகும்.

(2) நிதித்துறையில் ஒழுக்கத்தைப் பின்பற்றாதிருத்தல் இவர்களின் மற்றுமோர் பிரச்சினையாகும். தமது வருமானங்களை உரிய முறையில் பாதுகாப்பதற்கு ஆலையாளர் தவறுவது அவர்களது தொழிற்படு மூலதனத்துக்குத் தட்டுப்பாட்டை ஏற்படுத்துகின்றது. குறித்த காலப்பகுதியில் தாம் உழைக்கும் இலாபங்களின் ஒரு பகுதியை கைத்தொழிலில் மறுமுதலீடு செய்ய இவர்கள் தவறுவதினால் மூலதன முதலீட்டுப் பிரச்சினைகள் மேலும் மோசமடைகின்றன.

(3) தமது உற்பத்தி அளவுத் திட்டத்திற்கு உகப்பான தொழினுட்ப மட்டங்களையோ நவீனமாக்கலையோ தெரிவு செய்ய இவர்களால் இயலாதிருப்பதினாலும் இயந்திரங்களின் இயலளவுக் கேற்ப உள்ளீடுகளின் இயலளவை திட்டமிட இவர்களால் இயலாதிருப்பதனாலும் இவர்களது தொழிற் சாதனைகள் தடைகளை எதிர் நோக்க வேண்டி நேர்கின்றது.

இவற்றைவிட, போதிய தொழிலாளர் கிடைக்காமை, அளவுக்கதிகமான மழை என்பனவையும் இவர்கள் எதிர் கொள்ளும் பொதுப்பிரச்சினைகளில் ஒன்றாகும். பெரிய நெல் உற்பத்திப் பிரதேசங்களிற் தொழிற்படும் ஆலையாளர் தமக்கென தனியான தொழிலாளர்களைக் கொண்டிராதவிடத்து நெற் செய்கை மற்றும் அறுவடைக் காலங்களில் தொழிலாளர் தட்டுப்பாட்டை எதிர் கொள்ள நேர்கின்றது.

இதனால் பொதுவாக வேலை செய்யவோ அல்லது ஆலைகளைத் தற்காலிகமாக மூடிவிடவோ இவர்கள் நிர்ப்பந்திக்கப்படுகின்றனர்.

(குத்தரிசியைப் பதனிடும்படி முறையில் உலர வைப்பது மிகவும் முக்கியமானதாகையால்) வடகிழக்கு பருவப் பெயர்ச்சிக் காற்று காலப்பகுதியில் அதிகமான மழை பெய்வதனால் நெல்லை அவித்தல், உலர்த்துதல் போன்ற நடவடிக்கைகள் அதிகமாக நெல் உற்பத்தி செய்யப்படும் பிரதேசங்களில் தடைப்படுகின்றன.

கிராமமான ஆலையாளர்கள் இயலளவின் குறைவான பயன்பாடு, முதலீட்டு மூலதனப் பற்றாக்குறை என்ற இரு பெரும் பிரச்சினைகளை எதிர் நோக்குகின்றனர். ஆலைகளை முழுமையாக எடுத்துப் பார்க்கும் போது அவற்றின் சராசரி இயலளவுப் பயன்பாடு மிகக் குறைந்ததாக மட்டுமே இருந்ததை அவதானிக்க முடிகின்றது. இந்த உயர்ந்த குறைப்பயன்பாட்டுக்கான மிகமுக்கிய காரணம் வாடிக்கையாளரின் எண்ணிக்கையை விட மிக அதிகமான அளவில் கடந்த ஐந்து வருடங்களாக கிராமமான ஆலைகள் அதிகரித்திருப்பதேயாகும்.

ஒப்பீட்டளவில் பெரிய உமியை அகற்றும் இயந்திரங்களை (அளவு இலக்கம் 7) கொண்டுள்ள இத்தகைய ஆலையாளர்களிற் சிலர் கிராமமான நெல் குற்றும் தொழிற்பாட்டுக்கு மேலாக வர்த்தக ரீதியான தொழிற்பாடுகளை மேற்கொள்ள முயற்சிக்கின்றனர். சிறு வீதாசாரமான கிராமமான ஆலையாளர்கள் இத்தொழிற்பாட்டை ஏற்கனவே ஆற்றி வருகின்றனர். அளவில் மிகச்சிறிய நுணைவார்த்தக நெல்லாலையாகக் கிராமமான ஆலைகளை மாற்றி அமைப்பதற்கு மூலதனச் செலவினம் தேவைப்படுகின்றது. உலர்த்தும் முற்றம் குத்தரிசி ஆலையாக மாற்றுவதெனில் கொதிக்கவைக்குந் தொட்டி போன்ற உள்ளமைப்பு வசதிகளை அமைப்பதற்கு 30,000 முதல் 40,000 ரூபா வரையிலான மூலதனம் தேவைப்படும். தற்போது இவர்களிடம் தேவையான மூலதனம் பற்றாக் குறையாகவே உள்ளது.

வெவ்வேறு வகையான ஆலையாளர் வெவ்வேறு விதமான பிரச்சினைகளை எதிர் கொண்ட போதிலும் குறித்த வகை ஆலையாளர் இப்பிரச்சினைகளால் ஒரே வகையான பாதிப்புக்குள்ளாவதில்லை. அவர்களின் பிரச்சினைகளின் செறிவு வேறுபட்டதாகவே இருக்கின்றது. பல்வேறு பிரச்சினைகள் காணப்பட்ட போதும் ஆலையாளர்களுட் பெரும்பாலானோர் பெரிய நெருக்கடிகளை எதிர் கொள்ளாது தொடர்ந்தும் தொழிற்பட்டு வருகின்றனர்.

ஆலையாளர்களுள் சில பகுதியினர் ஏனையவர்களை விடச்சிறப்பாகச்செயலாற்றி வருகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிக்கு 0.4 மெற்றிக் தொன் நெல் குற்றும் இயலளவைக் கொண்ட சிறிய அளவு வர்த்தகரீதியிலான ஆலையாளர் மணிக்கு 0.9 மெற்றிக்தொன் நெல் குற்றும் இயலளவு கொண்ட இடைநிலை வர்த்தக ஆலையாளர்களுடன் சில சமயங்களில் போட்டியிடக் கூடியவர்களாகக் காணப்படுகின்றனர். இதற்குப் பல காரணங்கள் உள்ளன. அவற்றுட் சில;

(1) அவர்கள் குடும்ப ஊழியத்தை அதிகமாக பயன்படுத்துகின்றனர். கூலி ஊழியத்தை குறைவாகவே பெற்றுக் கொள்கின்றனர்.

(2) அவர்களின் மேந்தலைச் செலவுகள் குறைவானவை.

(3) அவர்கள் குறைந்த எண்ணிக்கையான இயந்திரங்களை மட்டுமே பயன்படுத்தி குறைந்த வருமான வகுப்பினருக்குத் தேவைப்படும் குறைந்த தரத்தை கொண்ட அரிசியை மட்டுமே உற்பத்தி செய்து வருவதனால் ஒப்பீட்டளவில் அவர்கள் மூலதனச் செலவுகள் குறைவானவையாக உள்ளன.

(4) மாகாண நகரங்களில் காணப்படும் சிறிய அளவிலான மொத்த விற்பனைச்சந்தை, மாதகூறை போன்ற மொத்த விலைவிற்பனை நிலையங்கள், சில்லறை கடைகள் போன்றவற்றுக்கு இவர்கள் தாம் பதனிடும் அரிசியின் ஒரு பகுதியை விற்பனை செய்கின்றனர். உற்பத்தியின் வேறொரு பகுதி ஆலையிலேயே விற்பனை செய்யப்பட்டு விடுகின்றது.

(5) குறைந்தவருமானவகுப்பினருக்கு குறைந்த விலையில் எனி போதும் அவர்களால் அரிசியை விற்பனை செய்யமுடிகின்றது.

கடன்களைப் பெறாது ஆலைகளை அமைத்தோர் வங்கிக் கடன்களைப் பெற்று ஆலைகளை அமைத்தவர்களை விடக் குறைந்தளவு கஷ்டங்களையே எதிர்நோக்குகின்றனர். வங்கிக் கடனைப் பெற்றவர் தனது இலாபத்திலிருந்து கடன் தவணைப் பணத்தையும் வட்டியையும் செலுத்த வேண்டியிருப்பதனால் அவர்களது உண்மையான இலாப அளவு ஒப்பீட்டளவில் குறைவானதாகவே உள்ளது.

முன்னர் குறிப்பிட்டவாறு கிராம ஆலைகள் மிக உயர்வான குறை இயலளவில் செயற்பட்டு வருகின்ற போதிலும் அவர்கள் அதை ஒரு பாரிய பிரச்சினையாகக் கருதுவதில்லை. ஏனெனில் கிராம ஆலைகளிலிருந்து அவர்கள் பெற்றுக் கொள்ளும் வருமானம் அவர்களது சாதாரண வருமானத்துக்கு மேலதிகமாக அமைவதாலாகும். மேலும் இந்த வருமானமானது அவர்களது குடும்பங்களின் நுகர்செலவில் பெரும் பகுதியை ஈடுகட்டுவதற்காகப் பயன்படுத்தப்படுவதாகும். குடும்ப உறுப்பினருள் ஒருவரே இந்த ஆலைகளின் தொழிற்பாட்டில் ஈடுபடுகின்றார். அதே நேரத்தில் எவ்வித தடையுமின்றி அவர் தனது ஏனைய தொழில்களை தொடர்ந்து செய்தும் வருகின்றார். ஆண்டின் சில மாதங்களில் மட்டும் ஆலையில் வேலை அதிகமாக இருக்கும். அவ்வேளைகளில் இவரது ஏனைய தொழில்கள் தடைப்படக் கூடும். அத்துடன் ஆலையாளருட் சிலர் (சிறு விகிதாசாரத்தினர்) வர்த்தக ரீதியான ஆலைத் தொழிலையும் அதே நேரத்தில் மேற்கொள்கின்றனர். ஆனால் இத்தகைய தொழிற்பாடானது மிகச் சிறிய அளவிலேயே மேற்கொள்ளப்பட்ட போதும் கணிசமான நல்ல வருமானத்தை அவர்கள் இதன் மூலம் உழைக்கின்றனர்.

மேற்கூறிய பிரச்சினைகளும் அவற்றால் கைத்தொழிலுக்கு ஏற்படும் பிரச்சினைகளும் பின்வரும் வழிகளில் குறைக்கப்படலாம்.

1) தொழிற்படு மூலதனத்தையும் காலத்துக்கொவ்வாத இயந்திரங்களைக் கொண்ட ஆலைகளை நவீனத்துவப்படுத்துவதற்கு முதலீட்டு மூலதனத்தையும் வழங்குதல்.

(2) அறுவடையின்பின் உயர்தரங்கொண்ட நெல்லை உற்பத்தி செய்வதற்கு விவசாயிகளை ஊக்குவித்தல். அத்துடன் நெல்சந்தைப்படுத்தும் சபையும் உயர்தரம் கொண்ட நெல்லைக் கொள்வனவு செய்வதற்கு ஊக்குவித்தல்.

(3) பங்கீட்டை கொண்ட ஆலையாளர்கட்கு வழங்கப்படும் கட்டணத்தை (50 சதவீதத்துக்கு மேற்பட்ட வகையில்) அதிகரித்தல்.

(4) நிறுவனரீதியான சந்தைப்படுத்தும் அமைப்பிற் காணப்படுவதாகக் கூறப்படும் முறையீனங்களைக் குறைத்தல்.

(5) உற்பத்தி நடவடிக்கைகள், இயந்திர தேவைப்பாடுகள், நிர்வாகம் என்பவற்றில் நெல்ஆலை உடைமையாளருக்குப் போதிய அறிவைப் புகட்டல்.

இந்த முறையினுள் மிக உயர் மட்டம் கொண்ட இயலளவு காணப்படுவது போல் தோன்றுவதனால் திருப்பத்தக்கவை எனக் கருதப்படும் இடங்களில் மட்டுமே நெல் ஆலைகளை அமைப்பதற்கான புதிய முதலீடுகள் ஊக்குவிக்கப் படல் வேண்டும். அடுத்த சில ஆண்டுகளில் நெல் உற்பத்தியைப் பெருக்கும் தன்மை எமது நாட்டுக்கு உண்டா என்பது கேள்விக்குரியதே. அண்மைய எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய மிகச் சிறிய அதிகரிப்பை ஈடுகட்டுவதற்கு தற்போதுள்ள ஆலைகளின் இயலளவு போதுமானதாகக் காணப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் பங்குச் சந்தையின் செயற்பாடு

இன்றுள்ள பங்குச் சந்தை மதிப்பீட்டினை மேற்கொள்வதற்கும், அத்தகைய மதிப்பீட்டினை மேற்கொள்ள முயலுவதற்கும் ஒரு ஆரம்பப்புள்ளி தேவைப்படுவதுடன், குறிப்பிட்ட காலப்பகுதியில் சந்தையின் வளர்ச்சியை சீராகவும் சரித்திர சட்டவரம்பும் அவசியமாகின்றது. 1977 ஆம் ஆண்டு வரை இந்நாட்டின் மூலதனச் சந்தை அரசாங்கக் கொள்கை காரணமாகவும், தனியார் துறைபற்றிய அன்றைய கருத்துக்கள் காரணமாகவும், மங்கியுற்றமை நினைவுபடுத்தற்குரியதாகும். காலப்போக்கில் அரசாங்கத்தால் தெரிவு ஆதரவுகள் ஏற்றுமதி சார்பான கைத்தொழில்களுக்கும், இரத்தினக் கற்கள் துறைகளுக்கும் வழங்கப்பட்ட போதிலும், பங்குச் சந்தையின் வளர்ச்சி குன்றி, அது நிறுவன மூலங்கள் அல்லது ஆதாரங்களின் அக்கறையை மட்டுமன்றி தனியார் துறையினது அக்கறையையும் மிகக் குறைந்தளவில் பெறலாயிற்று. காணி சீர்திருத்தத்தின் அறிமுகத்துடனும், கைத்தொழில், வர்த்தகமென்பவற்றில் அரசின் அதிகரித்த பங்குபற்றலுடனும், கூட்டிணைந்த துறை அல்லது இல்லாத் துறையாயினும் முக்கிய பங்கு பெறும் மூலதனச் சந்தையொன்றினைக் கட்டியெழுப்பும் அடிப்படைக் காரணமொன்று இல்லாதொழிந்தது. இலங்கையின் ஆட்புலத்தினுள் பணத்தை சேமிக்கவோ அல்லது சேமிக்கவோ மக்களுக்கு ஆர்வமிருக்கவில்லை. அத்தகைய சேமிப்பிற்கான போதியளவு பணமுமிருக்கவில்லை. 1960 ஆம் 1970 ஆம் ஆண்டு காலப்பகுதியில் உருவாகிய தனியார் மூலதனம் அனுகூலமாக இருந்ததெனக் கூறுவதிலும் பார்க்க பிரதிகூலமாக அமைந்ததென்றே கூறலாம். ஆகவே, 1977 இல் ஆரம்பித்த ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியானது, தனியார் முயற்சிக் கருதுகோளினிற்கு புத்துயிர் அளித்ததுடன், அரசு நிர்வகிக்க வேண்டிய துறைகள் யாவை, தனியார் துறையினரிடம் விடப்பட வேண்டியவை யாவை என்பதையும், நியாயமான, யதார்த்தமான அணுகு முறையையும் எடுத்துக் காட்டியது. பொதுப் பயன்பாடுகள் போன்ற துறைகளிலும், கப்பற்துறைமுகங்கள், வானூர்தி நிலையங்கள், வானொலி தொலைக்காட்சி போன்ற முக்கிய அல்லது கேந்திர முக்கியத்துவமுடைய துறைகளிலும் தனியாரிலும் பார்க்க அரசாங்கத்தினுள் கட்டுப்படுத்தப்பட்ட ஏகபோகவுரிமை நிலவி வருவதை நன்கு காணமுடிகின்றது. இவை பாதுகாப்பு காரணங்களுக்காகவும், தேசிய பாதுகாப்பிற்காகவும் இவ்விதம் அரசிடம் விட்டுவைக்கப்படுகின்றன. மறுபக்கத்தில், போக்குவரத்து, விவசாயம், கைத்தொழில் போன்றவை நீண்டகால பெறுபேறு அல்லது மூலதன முதலீடு அதி உயர்வாக இருப்பதன் காரணமாக தனியார் முயற்சிகளினால் மேற்கொள்ள முடியாதவையாகவுள்ள துறைகளில் அரசு தொடர்ந்தும் முக்கிய பங்கினை, சில விடயங்களில் தனிப்பங்கினை ஏற்று வந்தது. மறுபுறம் அரசு தான் பொறுப்பெடுக்க விரும்பாத சில பாத்திரங்களை, உள்ளூர் முதலீட்டாளர், வெளிநாட்டு முதலீட்டாளருடன் ஒருங்கிணைந்து மேற்கொள்ளக்கூடியவாறாக, வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு ஊக்குவிப்புகளை வழங்கி அத்தகையதொரு சூழ்நிலையை உருவாக்கலாம், எவ்வாறெனினும், உள்ளூர் முயற்சிகளில் பங்குபற்றுவதன் மூலம் வெளிநாட்டு ஆக்கிரமிப்பு அதிகரிக்குமெனும் அரசியல் தத்துவம், அடுத்துவந்த இலங்கை அரசாங்கங்களுக்கிருந்தமை காரணமாக நாட்டிற்குள் தனியார் வெளிநாட்டு மூலதனத்தைக் கொண்டு வருவது ஆதரிக்கும் திடமான நடவடிக்கைகளை எடுப்பது தடுக்கப்பட்டது. தடையற்ற வர்த்தக உபாயத்தினை நிர்மாணித்தமை இந்தக் கருத்திற்கு எதிராக அமையவில்லை, ஏனெனில், இந்த இடங்களில் நிறுவப்பட்டவை வெளிநாட்டவர் உரிமை இடத்தைக் கொள்வனவு செய்தல் மூலம் அல்லது நிலையான வேரூன்றல் மூலம் பொருளாதாரத்தைக் கட்டுப்படுத்தும் வாய்ப்பினை வழங்காத முறையில் எங்கள் பொருளாதார அமைப்புள்ளது.

பின்வரும் மீளாய்வு 1977 இற்குப் பிற்பட்ட காலப்பகுதியுடன் தொடர்புபடுத்தப்பட வேண்டியது. அரசாங்கத்தின் அடுத்து வந்த வரவுசெலவுத்திட்ட உரைகளில் அறிவிக்கப்பட்ட நோக்கங்களை கவனத்திற்கெடுத்தல் வேண்டும். தனியார் மூலதன உருவாக்கத்துக்கு ஆதரவாக எத்தகைய நிதி ஊக்குவிப்புகள் வழங்கப்பட்டன என்பதைக் கருதவேண்டும். வங்கி வைப்புகள் போன்ற விடயமும் உள்ளது. வங்கி நிதிப்படுத்தலும், ஒப்புரவு நிதிப்படுத்தலுமே கம்பனிக்கான நிதிப்படுத்தலின் முக்கிய மூலங்களெனக் கருதப்பட்டவிடத்து ஒப்புரவு நிதி வட்டியற்றதாக வழங்கப்படின் அதுவே மிக வளர்ச்சியான நிதி மூலமாகத் தென்படும். மறுபுறம் மிகையான பணம் வைத்திருக்கும் முதலீட்டாளர், குறைவான ஆபத்துக்களுடனும், நியாயமான வருவாயைத் தரக்கூடியதுமான முதலீடு ஒன்றில் பணத்தை ஈடுபடுத்துமுன் தமது பணத்திற்கான பாதுகாப்பினை முதலிலும், அடுத்து அரசாங்கத்திடம் அதாவது திறைச்சேரி உண்டியல்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்றவற்றில் அல்லது வங்கித் துறையில் அல்லது ஒப்புரவு சந்தையில் இவற்றில் எதில் முதலீடு செய்வதன் மூலம் சிறந்த வருவாயைப் பெறலாமென்பதையும் கவனிப்பார்கள்.

மேலும், வட்டி வீதங்களுக்கும், ஒப்புரவு வருவாய்க்கும் இடையேயுள்ள தொடர்பினையும் கருத்திற்கொடுத்தல் வேண்டும். ஒப்புரவுகள் பங்கிலாபத்தையும், மூலதன இலாபத்தையும் வழங்குகின்றன. பொருளாதாரத்தின் ஏதேனும் துறையில் கட்டுப்பாட்டினைப் பெறும் நோக்கிலிருந்து தங்கள் மூலதனங்களைப் பார்வையிடுபவர்கள் மிகச் சிலரேயாகும். குறிப்பிட்ட சில தனிநபர்கள் அல்லது தனிநபர் குழுவினர் கட்டுப்பாட்டினைப் பெறும் நோக்குடன் கம்பனியொன்றினில் தங்கள் பணத்தை முதலீடு செய்யும் எண்ணத்தையுடையவராக இருக்கலாம். எனினும், இவர்கள் இறுதியில் பெறுபேறுகளை அதிகரித்தலில் அல்லது அப்பணத்தை வேறுதுறையில் முதலீடு செய்து அதிகரித்த வருவாயைப் பெறுதலில் அல்லது சொத்துக்கள் மீதான கட்டுப்பாட்டினை பெறும் அனுகூலத்தைப் பெறுவதில், அல்லது எதிர்காலத்தில் அந்த சொத்துக்களை கையுதிர்ப்பதிலுள்ள இறுதி நலன்களைப் பெறுவதில் கவனமுள்ளனர். ஆகவே, தனியார் முதலீட்டாளரொருவரின் நோக்கிலிருந்து கருதப்படும் பிரதியயனானது எதிர்கால இலாபங்களுக்காக நிகழ்கால நுகர்வினை பிற்போடுவதற்கு அவர் விரும்புவதாகும். எதிர்கால இலாபமென்பது பங்கிலாபங்களாக அல்லது மூலதனக் கொள்வனவாக அமையலாம்.

வங்கித்துறையிலிருந்தும், மூலதனச் சந்தையிலிருந்தும் பணத்திற்கு ஏற்படும் போட்டித்தேவைகளானவை வட்டி வீதங்களில் பிரதிபலிக்கின்றன. வேறுவிதமாகக் கூறுவதாயின், பணத்தின் விலையில் தெரிகின்றது.

ஒருவரது பணத்தை வைப்புச் செய்யக்கூடிய பாதுகாப்பான இடமாகக் கருதப்படும் வங்கிகள் உயர்வட்டி வீதத்தை வழங்கும் வரை ஒப்புரவு சந்தையின் வளர்ச்சி குறைகின்றது. வங்கிகள் இலங்கையில் நல்ல நிலைமையில் இருப்பதாலேயே வங்கிப் பங்குகள் அதிகரிப்பினைப் பெறும் நிலையிலுள்ளன. கடந்த ஆண்டு நிறுவப்பட்ட இரு புதிய வங்கிகள் காரணமாக பங்குச்சந்தை ஆதரவினைப் பெருமளவில் பெற்றது. இதற்கான காரணம் தனியார் முதலீட்டாளர் வங்கித் தொழிலை இலாபகரமானதாக மட்டுமல்லாது இதிலீடுபடுவதால் குறைவான ஆபத்துக்கள் எதிர்பார்க்கப்படுவதோடு, பங்குச் சந்தையில் இத்தகைய முயற்சி உயர் பங்கிலாபங்களையும், நியாயமான மூலதன இலாபங்களையும் தருமெனவும் கருத்துக் கொண்டுள்ளனர். மறுபக்கத்தில், பொருளாதார நிலையிலேற்பட்ட மாற்றம் காரணமாக அதிக கட்டுப்பாடின்றி நாட்டிற்குள் கொண்டுவரப்படும் வெளிநாட்டுப் பொருட்களின் வருகையும், உள்ளூர் பொருட்கள் கிடைக்கக்கூடிய இடங்களில் வெளிநாட்டு போட்டிக்கு எதிராக உற்பத்தியை அதிகரித்து வளர்ச்சியடைந்த உள்ளூர் கைத்தொழில்களின் இலாபகரத் தன்மையும், வளர்ச்சியும் ஊக்கத்தை இழக்கச் செய்வனவாக செயற்பட்டதுடன் அத்துறைகளில் புதிய முயற்சிகளின் வளர்ச்சியை வீழ்ச்சியடையச் செய்தது. பல தொழில்கள் மீளவெழ முடியாத நிலைக்கு வீழ்ச்சியடைய வேண்டியிருந்ததெனலாம். ஏனெனில் நுகர்வோர், உள்ளூர் பொருட்களைவிட வெளியூர்ப் பொருட்களை, அத்தகைய பொருட்களின் விலைகள் அதியுயர்வாக இருந்தும் அல்லது தன்மையளவு வேறுபாடு அதிகமாயிருந்தும் கூட அவற்றையே நுகர விரும்பினர். ஓரளவு கலாச்சார பிரச்சினை காரணமாகவும், வெளியூர்ப்பொருள் எந்த அளவிற்கு சிறந்ததென மதிப்பிடும் சரியான நோக்கியல் அல்லது தரவியல் இரும முறையொன்று இல்லாமையும் காரணமாகவும் இந்நிலை ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் உள்ளூர் கைத்தொழில்களுக்கு சர்வதேச பெயர்களுடன் போட்டியிடும் மூலதன ஆதாரமோ அல்லது அளவோ இருப்பதில்லையென்பதால் சுங்க வரி பாதுகாப்பு வழங்கப்படாத நிலையில் உள்ளூர் நிறுவனங்களின் உற்பத்திகள், வெளியூர் போட்டிகளை - எதிர்கொள்வ (அதுவும் குறிப்பாக உள்ளூர் உற்பத்தியாளரைப் பெருமளவு பாதிக்குமளவிற்கு தன்மையும், விலையும் இருப்பின்) ஒருபோதும் முடியாது.

இன்னுமொரு முக்கிய காரணமானது, தேசிய பொருளாதாரக் கொள்கையின் அடிப்படை நோக்கங்களாகவுள்ள வேலைவாய்ப்பு விரிவாக்கம், முதலீட்டுக்கான நிலையான வளர்ச்சிக்கு ஆதார முற்தேவையாகவுள்ள திடமான நிதியமைப்பாகுமென்பதும் கவனத்திற்குரியது. இந்த நோக்கங்களை பெறுவதன் பொருட்டு 1979 இன் பின்னர் பணச் சந்தையை அபிவிருத்தி செய்து நிதியமைப்பில் புதுமையை ஊக்குவிக்கவேண்டிய அத்தியாவசிய கொள்கை முறையொன்று மேற்கொள்ளப்பட்டது. முற்கூறப்பட்ட துறைகளின் நோக்கில், நிலைமையைப் பகுத்தாய்ந்து சாத்தியமான போக்குகளை பகுத்தறிய முன்னர் இவற்றின் நிலைவரத்தை மீளாய்தல் அவசியமாகின்றது.

முதலாவதாக, தனியார் மூலதன உருவாக்கம் தொடர்பான அரசாங்க கொள்கை இதனை அறிய 1978ஆம் ஆண்டினதும் அதனை அடுத்து வந்த ஆண்டுகளினதும் வரவுசெலவுத் திட்ட உரைகளைக் கவனிக்க வேண்டும்.

இரண்டாவதாக உள்ளூர் தொழில் முயற்சிகளின் வளர்ச்சியை ஆதரிக்கவென அறிமுகப்படுத்தப்பட்ட வரி, சுங்க வரி மாற்றங்கள் யாவை?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[illegible]

## இலங்கை: தொழில் உடைமையாளர் உயர்வர்க்கம் [illegible]

மூன்றாவதாக நாணயப்போக்கில் பண வைப்பாளர்களின் வளர்ச்சி யாது? அவற்றுடன் தனியார் சேமிப்புகளின் வளர்ச்சி யாது?

நான்காவதாக, பண வைப்பாளருக்கு வங்கிகளினால் வழங்கப்படும் வட்டி வீதங்கள் தனியார் சேமிப்புகளின் தொகையை எவ்விதம் பாதிக்கின்றது?

ஐந்தாவதாக, செலவிடக்கூடிய பணத்தைக் கவருவதற்கு இக்காலப்பகுதியில் எத்தகைய வங்கித் தொழில் அமைப்புகள் அறிமுகப்படுத்தப்பட்டன? உதாரணமாக,

மேலதிக பணத்தைக் கவரவென வைப்புச் சான்றிதழ்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. வைப்புச் சான்றிதழ்களுக்குள் அடக்கப்பட்ட பணத்தில் பெரும் பகுதி நிச்சயமாக வெளிப்படுத்தப்படாத வருமானமேயாகும்.

அடுத்து, இக்காலப்பகுதியில் எத்தகைய புதிய கம்பனிகள் பதிவு செய்யப்பட்டன. அதிகாரப்படுத்தப்பட்ட மூலதனத்தினதும், வழங்கப்பட்ட மூலதனத்தினதும், சராசரி அளவு யாது? இத்தகைய கம்பனிகள் பெரியனவா அல்லது சிறியனவா? அவை எத்தகையன கம்பனிகள்? அவை சேவைகள் வழங்குவனவா அல்லது கைத்தொழில் சார்ந்தனவா அல்லது வர்த்தக கம்பனிகளா? இத்தகைய புதிய கம்பனிகளில் எத்தனை, ஏற்கனவே இருந்து வந்த கம்பனிகளால் தோற்றுவிக்கப்பட்டன? வேறுவிதமாகக் கூறுவதாயின் பல கம்பனிகள் தம் கைவசம் ஏற்கெனவே இருந்து வந்த கம்பனிகளால் தோற்றுவிக்கப்பட்டன? வேறுவிதமாகக் கூறுவதாயின் பல கம்பனிகள் தங்களுக்கு ஏற்கெனவே இருந்து வந்த தொழிலை வாடகை [illegible] யில் கொண்டு நடத்த அல்லது அவை புதிய முயற்சிகளிலீடுபடும் ஒவ்வொரு முறையும் புதிய கம்பனிகளை உருவாக்க முயன்றன.

திடீரென பல கம்பனிகள், பகுதிகளின் அடிப்படையில் அதுவரை இயங்கி வந்த தங்கள் தொழிலைப் பிரித்து, அவற்றைத் தனித்தனி அமைப்புகளாக உருவாக்குவதன் மூலம் தம்மை தொகுதிக் கம்பனிகளென அழைக்கலாயின. ஆயினும், இவை யாவும் பொது உரிமையினாலும் ஒன்றிணைந்த முகாமைத்துவத்தினாலும், உரிமையாளர் கட்டுப்படுத்தலினாலும் ஒன்றாக்கப்பட்டிருந்தன. அடுத்து, 1977 முதல் ஆண்டு தோறும் இடம்பெற்ற புதிய வழங்கல்களின் மொத்தம் யாது? எவ்வளவு பணம் காலப்போக்கில் [illegible]லும், கம்பனிப் பங்குகளிலும் வழிப்படுத்தப்பட்டதென்பதை இது குறிப்பிட வேண்டும். இதன் பின்னர் இத் தொகையை வங்கி வைப்புக்களின் அதிகரிப்பு அல்லது குறைப்புடனும், அரச கடன்களில், திறைச்சேரி உண்டியல்களில் இவை போன்றவற்றில் அதிகரிப்பு அல்லது குறைப்புடனுமான தொகையுடன் ஒப்பிடலாம்.

அரச முதலீட்டிற்கு மாற்றீடாக தனியார் மூலதனத்தை உருவாக்கும் அரசின் எண்ணம் எவ்வளவு தூரம் வெற்றியடைந்த தென்பதைக் காண்பதே இதன் நோக்கமாகும். பொதுமக்கள் தனியார் அல்லது பொதுக் கம்பனிகளில் முதலீடு செய்வதன் தன்மையை, தங்கள் பணத்தை ஆபத்தெதுக்களற்ற வட்டி செலுத்தும், அரச பங்குத் தொழில்களில் அல்லது வங்கி வைப்புகளில் முதலீடு செய்வதற்கெதிராக எந்தளவுத் தில் கருதுகின்றார்களென்பதையும் இது எடுத்துக் காட்டுமென நாம் [illegible] இத்தரவுகளில் சிலவற்றைப் பெற்றுக் கொண்டதன் பின்னர் கம்பனித்துறையின் பல பிரிவுகளை, அவற்றின் வளர்ச்சி அல்லது வீழ்ச்சிக்காக ஆராய்ந்து பின்வருவனவற்றினடிப்படையில் சில விளக்கங்களை வழங்க முயலலாம்,

1. அரசியல் சூழ்நிலை
2. அத்தகைய முதலீட்டின் ஆபத்தெதுக்கள், பலாபலன் வல்லமை பற்றிய சந்தை அறிவு.
3. மூலவளப் பயன்பாடு நியதிகளில் இந்த அலகுகளின் திறன்
4. அவற்றின் எழுச்சிக்கும் வீழ்ச்சிக்குமான காரணங்கள்.

ஒருவேளை இலாபத்திற்குப் பொறுப்பாக பிழையான முகாமைத்துவம், வழக்கிலில்லாத எந்திரவகை, தரமற்ற உற்பத்தி அல்லது மாதிரி அல்லது பயன்பாடு அல்லது விலை மலிவற்ற நிலையடிப்படையிலான போட்டித் திறனற்ற உற்பத்திகள் போன்ற இயற்கைக் காரணங்களும், வெளிநாட்டு போட்டி, அரசாங்கக் கொள்கை, உதாரணமாக உயர் வரிவிதிப்பு, உத்தரவுச் சீட்டு பெறமுடியாத நிலை, பாதுகாப்பற்ற நிலை போன்ற வெளிக் காரணங்களும் இருக்கலாம். இக்காரணிகள் அடையாளங் காணப்படின் கம்பனிகளின் பரந்த அடிப்படையில் மதிப்பிடும் நிலையில் நாமிருக்க முடியும்.

(64-ம் பக்கத் தொடர்ச்சி)

வாகவோ, தாழ்ந்தனவாகவோ அமைந்திருக்கலாம். இந்த இருவகைக் கூறுகட்கும் இடையேயான இந்த இருவேறுபாடுகளையும் கொண்டு முற்றாக இறுதி நிலை நம்பிக்கைக் கூறுகளை வரைவிலக்கணஞ் செய்வது கடினமாகும். மேலும் விரிவான இறுதி நிலை நம்பிக்கைக் கூறுகளைப் போலன்றி, முற்றாக இறுதி நிலை நம்பிக்கைக் கூறுகள் பன்முகப்படுத்தப்பட்டனவாகக் காணப்படும். அத்துடன் அவற்றின் குறிக்கோள்கள் விரிவான இறுதி நிலை நம்பிக்கைக் கூறுகளின் முதலீட்டுக் குறிக்கோள்களை விடப் பரந்த அளவில் மாறுபட்டனவாகவும் அமைந்திருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavahaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமைத் தபாற் கந்தோரில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது.

மக்கள் வங்கி ஒரு சமூகப்பணித் திட்டமாக "பொருளியல் நோக்கை" வெளியிடுகின்றது. பாரபட்சமற்ற பரிசீலனைகள், கருத்தாழமிக்க கலந்துரையாடல்கள் என்பன மூலம் பொருளாதாரத்திலும் பொருளாதார அபிவிருத்திப் படிமுறையிலும் ஆர்வத்தினை உண்டாக்கி அறிவினை வளர்ப்பதே எமது குறிக்கோளாகும். நாட்டின் மிக முக்கியமான சமூக, கலாசாரத் தேவைகள் குறித்து வங்கியின் வளங்கள் பயன்படுத்தப்படும் பல்வேறுபட்ட திட்டங்களில் இதுவும் ஒன்றாகும்.

மேலும், மக்கள் வங்கி, நாடெங்கணும் சிதறிக் காணப்படும் 300 க்கும் அதிகமான அதன் கிளைகள் மூலமும், சுமார் 800 கூட்டுறவுக் கிராமிய வங்கிகள் மூலமும், கடற்றொழில் வங்கிகள் மூலமும் விரிவான சகல வங்கிச் சேவைகளையும் வழங்கி வருகின்றது. உலகெங்கணுமிருக்கும் முகவர்கள், பிரதிநிதிகள் என்போரின் உதவியுடன் சர்வதேச வர்த்தகம், கொடுப்பனவுகள் என்பன குறித்த சகல அம்சங்களையும் வங்கி மேற்கொண்டு வருகின்றது.

பிரதி விலை
ரூ. 7.50 ரூ 15. 00
வருட சந்தா விலை
ரூ. 90.00

# பொருளியல் நோக்கு

## மக்கள் வங்கியின் ஆராய்ச்சிப் பகுதி வெளியீடு

283, கே. சிறில் சி. பெரேரா மாவத்தை, கொழும்பு 13. ல் உள்ள ஐ.ஜீ.எம் லிமிட்டெட் அச்சுயந்திரசாலையில் அச்சிடப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org